
# இராஜராஜசோழன் சதயவிழா நினைவுமலர்

483



பெரியகோயில் நந்தி

தஞ்சாவூர்

1972

KC

84374

தென்னுடுடைய சிவனே போற்றி !　　எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி !

" திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்,
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம். "

# " பதிப்புரை "

மனிதனுடன் பிரியாமல் இருப்பவை இரண்டு. ஒன்று நிழல், மற்றொன்று புகழ். உடல் மறைந்தால் நிழல் மறையும். ஆனால் உயிர் மறைந்தாலும் புகழ் மறையாது. இது விளக்கை மாற்றியபின் சுடர்ஒளி ஒளிபடர்வதற்கு ஒப்பாகும். அந்தப் புகழைப்பற்றித் திருவள்ளுவர் இந்த ஒன்றுத உலகத்தில் பொன்றாது இருப்பது புகழே என்றார். அத்தகைய புகழ் பெரும்பாலும் மனிதர்களுக்கு ஒரு துறையில் ஒருவகையில்தான் ஏற்படும். முற்றும் புகழ்; ஏற்றும்புகழ்; என்பது ஒரு சிலருக்கே, அத்தகைய மங்காத புகழ் படைத்த மன்னர்களுள் மாமன்னரே இராசராசனுவான். பாட்டிற்கு ஒரு புலவன் பாரதி என்றால் நாட்டிற்கு ஒருகாவலன் அந்த மெய்க்கீர்த்தி மன்னரே. 'காவல்' என்ற தமிழ்ச் சொல்லிற்கு பாதுகாப்பு, வேலி, பரன், மதில், சிறை, காவலான் என்று பொருளாகும். இந்த மாமன்னர் இப்பொருள் யாவற்றிற்கும் முழு இலக்கியமாகத் திகழ்ந்தார் எனலாம். இவர் ஆயகலைகளுக்கும், தெய்வநெறிக்கும், ஒருபாதுகாப்பு. மக்களுக்கும், நாட்டிற்கும் பாதுகாக்கும் வேலி. பிற்காலச் சோழர்களின் கீர்த்திக்கு ஒருபரன். அஞ்சா நெஞ்சிற்கும் அளவுள்ள போர்த்திறனுக்கும் பெரும் மதில். மக்களின் நன்மதிப் பிற்கும் பற்றுதலுக்கும் சிறை. தமிழ்மொழிக்கும், தமிழர் பண்பாட்டிற்கும் காவலான் எனலாம். பன்னிரு பாட்டியலில் காட்டிய:

" சீர் நான்காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன் வரலாறு சொல்லியும்
அவனுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர் பின்னர்ச் சிறக்கயாண் டெனத்
திறம்பட உரைப்பது சீர் மெய்க்கீர்த்தி " பாவின்

இலக்கணமான மெய்க்கீர்த்தி மன்னரே "அருண்மொழிவர்மனுகிய இராசராசன்" இவருடைய தந்தையே சுந்தரச் சோழன் என்பவர். தாய் வானவன்மாதேவி. தமையன் ஆதித்த காலன். பெரிய பாட்டனார் கண்டராதித்தசோழர். பெரிய பாட்டியாரும், இவரைச் சிறுவயதில் எடுத்து வளர்த்தவரும் செம்பியன்மாதேவி யார். தமக்கைக் குந்தவைப் பிராட்டியார். பட்டத்து அரசி தந்தசக்திவிடங்கியள். தவமைந்தன் இராசேந்திர சோழன். இவர் ஆட்சி கி. பி. 985 முதல் 1014 வரை உள்ள சுமார் 29 ஆண்டுகள். தஞ்சைப் பெருநகரே இவர் அரசிருக்கை. இவ்வாறு பிறப்பால் கருவிலே திருவுடன் தோன்றிய இவர் மாபெரும் வீரனுகத் திகழ்ந்தார்.

# பிறந்த நாள்

"கவிஞர்கோ" கோவை – இளஞ்சேரன்.

சேலத்து இரும்பு செருமனிக்குப் போய் ஒலிபெருக்கியாக உருப்பெற்று, மெருகு ஏறிப் 'பள பள' என்று சேலத்திற்கே வரும். அதன் கோலத்தைக் காணும் சேலத்தார் அதற்குள் சேலம் இருப்பதை அறியார். அந்தக் கோலத்தின் மூலம் சேலம் என்பதை நினையார்.

குருதிக் கொதிப்பு நோய் போக்க அமெரிக்க நாட்டிலிருந்து வந்திறங்கும் "செர்ப்பசில்" மருந்தில் "சருப்பகந்தி" என்னும் நம்நாட்டு மூலிகை இருப்பதை நாம் நினைத்தும் பார்த்ததில்லை.

இவைபோன்றே, நம் நாட்டுப் பொருள்கள் பல மேலை நாடுகளுக்குச் சென்று உரு மாறி வந்தாலும் கரு மாறாமல் உள்ளன. அவற்றை நாம் மேலைநாட்டுப் பொருளாகவே கருதுகின்றோம். மேலைநாட்டுப் பொருள் என்பதால் பேரார்வமுடன் பெற்று அந்நாடுகளின் பெருமை பேசிப் பேசி மகிழ்கின்றோம். "நான் பயன்படுத்துவது தாழ்வான நம் நாட்டுச் சரக்கன்று; உயர்ந்த மேலைநாட்டுப் பொருள்" என்று கூறித் தனி மதிப்பு வந்து விட்டதாகக் களிக்கின்றோம்.

இவ்வாறே, நம் தமிழகத்தில் பண்டைக் கால மரபுகள் பழக்க வழக்கங்கள் பல, மேலை நாடு சென்று மெருகுடன் மீண்டுள்ளன, மேலைநாட்டார் நம் மரபுகளைக்கண்டு உவந்தனர். அவற்றின் வாழ்வியல் பயனையும் நலத்தையும், சிறப்பையும் அன்னார் உணர்ந்தனர். தாமும் கடைப் பிடித்துத் தம் நாட்டின் வழக்காக்கிக்கொண்டனர். தம் மரபாகவே கருதினர். நம்மிடமிருந்து எடுத்துச் செல்லப் பட்டவை அன்னார் மூலமாக நம் நாட்டை அடையும்போது அவற்றின் நலத்தையும் பெருமையையும் நாம் ஒரு புதுமையாகவே காண்கின்றோம். அப்புதுமைக்குள் நம் பழமை ஒளிந்துகொண்டிருப்பதை அறிவதில்லை. அப் பழக்கம் மேனாட்டாருடையது என்பதில் ஒரு கவர்ச்சி; அவரைப்போன்று கடைப்பிடிக்கின்றோம் என்பதில் ஒரு பெருமை எனும் நிலையில் அவற்றை மேற்கொள்ளுகின்றோம்.

அவற்றுள் ஒன்று பிறந்த நாள் கொண்டாட்டம்.

இக்காலத்தில் பிறந்தநாள் கொண்டாடுவது என்பது மேனாட்டுப் பழக்கமாகவே கருதப்படுகிறது. மேலைநாட்டுக் கிறித்துவ மதத்தைப் பின்பற்றும் நம்நாட்டவரும், மேலைநாட்டு நாகரீகத்தைப் பின்பற்றுவோரும், சிறுபான்மையினராகப் பிறரும் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். மேலைநாட்டு மரபாகவே கருதி, அப்பாங்கிலேயே கொண்டாடுகின்றனர்.

நம் நாட்டு மரபாகக்கொண்டு கொண்டாடுவதும் அற்றுப்போய் விடவில்லை, அருகிக்காணப்படுகின்றது.

**பிறந்தநாள் பொதுவிழா :**

ஒருவர் பிறந்த நேரத்திற்கு உரிய விண்மீனை அறிந்து அவ்விண்மீன் வரும் நாளில் பிறந்தநாளைக் கொண்டாடுதல் நம் நாட்டு மரபு. அந்நாள் அந்த விண்மீன் பெயராலேயே வழங்கப்படும்.

திருவனந்தபுரத்து மன்னர் ஒருவரது பிறந்தநாள் அவர் பிறந்த விண்மீனாகிய சுவாதி விண்மீனின் பெயரால் 'சுவாதித் திருநாள்' என ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றது.

தஞ்சாவூர் மாமன்னன் முதல் இராசராசன் பிறந்த நாள் அவன் பிறந்த விண்மீனும் சதயத்தின்பெயரால் 'சதயத் திருவிழா'வாகக் கொண்டாடப்படுகிறது.

இவைபோன்று கடவுளர்க்கு உரிய விண்மீன்களைக்கொண்டு திருவாதிரைத் திருநாள் சிவபெருமானுக்கும், திருவோணத் திருநாள் திருமாலுக்கும் கொண்டாடப்படுகின்றன.

இக்காலத்தும் அண்ணல் காந்தியடிகள், அறிஞர்பெருந்தகை அண்ணா முதலியோர் நினைவாக அவரவர் தம் பிறந்த நாள்கள் பொதுவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவைகளெல்லாம் இறந்த சான்றோர் நினைவாகவும், கடவுள் அருள்பெறும் நோக்காகவும் கொண்டாடப்படும் திருவிழாக்கள். இவையன்றித் தனித்தனி மாந்தர்க்கு இல்லங்கள்தோறும் - குடும்பந்தோறும் பிறந்த நாள் விழாக்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

கிறிஸ்துவ மதத்தார் ஏசுபெருமான் பிறந்தநாளைக் "கிறித்துமசு" என்று ஆண்டு தோறும் கொண்டாடத் துவங்கினர். அப் பழக்கத்தை விரிவுபடுத்தித் தனி மாந்தரும் தத்தமக்கும் பிறந்தநாளை இல்ல விழாவாகக் கொண்டாடத் துவங்கினர்.

முகமதிய மதத்தாரும் நபிபெருமான் பிறந்தநாளை "மிலாடி நபி" எனக் கொண்டாடுகின்றனர். ஆயினும், தத்தமக்கு உரிய பிறந்தநாளை இல்ல விழாவாகக் கொண்டாடுவதில்லை.

**பிறந்த நாள் உருவும் கருவும் :**

தமிழ் மக்கள் பிறந்தநாளைத் தம் வாழ்வியல் பெருநாளாகக் கொண்டாடினர். அக் கொண்டாட்டம் தனி மாந்தர்க்கு இல்ல விழாவாகவும், மன்னன், சான்றோர் முதலிய தலைமக்களுக்குப் பெருந் திருவிழாவாகவும் அமைந்திருந்தது. ஆனால் தனி மாந்தர்க்குக் கொண்டாடும் மரபை காலப்போக்கில் கை கழுவிவிட்டனர்.

தனி மாந்தருக்குப் பிறந்த விண்மீன் வரும் நாளன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்து, விளக்கேற்றி, நெல்லும் மலரும் தூவி வழிபட்டு, விருந்தளித்து, வாழ்த்துப்பெற்று மகிழ்ந்தனர்.

இக்காலத்தில் மேலைநாட்டுப் பாங்கிலும், பிறந்தநாளன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்து, மெழுகுவர்த்தி ஏற்றி உரொட்டித்துண்டு வெட்டி வழங்கி, வாழ்த்தும் பரிசும் பெற்று மகிழ்கின்றனர்.

மேலே குறிக்கப்பட்ட இரண்டையும் இணைத்துப் பார்த்தால் இரண்டிற்குமுள்ள பொருத்தம் புலனாகும்.

**தமிழ்ப்பாங்கு :**

நீராடல், வெண்ணிறப் புத்தாடை உடுத்தல், மாலை சூடல், விளக்கேற்றல், பெருஞ்சோறு வழங்கல், அறஞ்செய்தல், பரிசு வழங்கல், வாழ்த்துப்பெறல்.

**மேலைநாட்டுப் பாங்கு :**

நீராடல், வெண்ணிறப் புத்தாடை அணிதல், மாலை சூட்டல், மெழுகுவர்த்தி ஏற்றல், உரொட்டித்துண்டு வழங்கல், அறக்கட்டளை நிறுவுதல், பரிசுபெறுதல், வாழ்த்துப்பெறல்.

இப்பொருத்தத்தில் பண்டைப் பிறந்த நாள் உருமாறியுள்ளதே யன்றிக் கரு மாறவில்லை என்பதைக் காண்கின்றோம்.

இக்கரு தமிழ்க்கருவாகும்,
எவ்வாறு?

தமிழகத்துப் பிறந்தநாள் மரபு நீண்ட பெரும் வரலாற்றைக்கொண்டது. அவ்வரலாற்றின் துவக்கம் நமக்குக் கிடைக்கிற அளவில் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம்.

**பிறந்த நாள் இலக்கணம் :**

சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்.

—தொல்—பொருள்—91.

"பிறந்தநாள், பெருமங்கலநாள் எனப்படும். பிறந்த நாள் வருங்காலம் போர் நிகழுங்காலமாயின் சினம் நீக்கிப் போரை நிறுத்தச் செய்வர்; மக்களுக்கு வரி நீக்கம் செய்து ஈகை புரிந்து அறஞ்செய்வர். சிறை வீடு செய்வர். வெண்ணிறப் புத்தாடை உடுத்துப் பல்லோர் வாழ்த்தப் பெருமங்கலம் பெறுவர்.

இவ்வாறு தொல்காப்பியம் பிறந்த நாளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. தொல்காப்பியம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல் என்று கருதப்படுகின்றது.

மக்களின் கண்ஒளியாய்த் திகழ்ந்தவர். சிறந்த சைவப் பற்று உடையவர் என்பது பாலுடன் சர்க்கரை கலந்ததை ஒக்கும். ஆயினும் மற்ற சமயங்களையும் சிறிதும் வெறுப்பின்றி, தாழ்ப்பின்றிப் போற்றிய அரும் குணசீலர். இவருடைய மற்றைய அரும்பெரும் பண்புகளும் சிறப்பும் ஏட்டளவாக இருக்க இவரது சைவப்பற்றும், கலைப்பற்றும் இன்றும் நம்முன் காண காட்சியளவில் எடுத்தியம்பும் வகையில் நின்று நிலவுவது அவர்கட்டிய மாபெரும் திருக்கோயிலாகிய தஞ்சை இராசராசேச்சுரமே. இவரது தெய்வப்பணிக்கு முதல் எடுத்துக்காட்டே இவர்செய்த திருமுறை வகுப்பு.

மனிதனுக்குப் பசி என்பது அன்றாடம் ஏற்படும் ஒரு நோய். அந்த நோய் தீர உணவைச் சமைத்து இருப்பவள் தாய். அவ்வாறே மனிதன் உயிர்க்கு வேண்டியது மறுபடியும் பிறவாத பெரும் பேறாகும். அதனைப் பெறப் பாங்குடன் தெய்வ நெறியை நன்கு சமைத்து அளிக்கும் பெரியோர்களே மனிதனுக்கு இட்டுப் பிறந்த பெரும் துணையாகும். ஒளியில்லாவிட்டால் புற இருள் விலகாது என்றபடிக்கு, அருள் விளக்கும் ஞானஒளியுமின்றேல் மனிதனது இருள் மாளாது. ''புல் வரம்பாய பலதுறை பிழைத்தும் தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி என்று திருவாதவூரடிகள் அருளியதற்கிணங்க எவன் உள்ளத்தில் தெய்வநெறியும், தெய்வப்பற்றும், தளைக்கின்றனவோ, அவரே அத்தகைய ஞான ஒளியைப் பெற இயலுவார். நோயுற்றவனுக்கு மருந்தளித்து, பத்தியம் வகுக்கும் மருத்துவன்போல், மக்களுக்கு அரும்பெரும் ஞானாசிரியர்களே நெடுங்காலமாய் மண்டி இருக்கும் மலப்பிணக்குக்கு மருந்து தந்து உதவுவார்கள். இத்தெய்வ நெறியைப் பகுத்தளித்து நம்வாழ்விற்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கும் சமயங்களில் சைவ சமயம் ஒரு வகையில் சிறப்புற்றதே. சிவத்தின் தொடர்புள்ளது சைவம். பதி-பசு-பாசம் என்ற உண்மை விளக்கமே சைவம். இச்சைவநெறியின் ஏற்புடைத்துறைகள் இரண்டென்பர். ஒன்று சாத்திர வகை. மற்றொன்று தோத்திரவகை. தோத்திர வகையின்கண் பட்டதே சைவ திருமுறைகளாகும். சாத்திர நூல்கள் பதினான்கு என்பர். கலந்திருந்த தோத்திர நூல்களே பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இத்திருமுறைகளில் கடவுள் உண்மை. நமக்கும் கடவுளான சிவபெருமானுக்கும் உள்ள தொடர்புகள் இவற்றைக் கேட்பவர்க்கும், கற்பவர்க்கும் உள்ளத்தே பக்திச் சுவை ததும்ப இறைவன் தன்மையை வெளியிடுதல் முதலாய பல அரும்சுவை கருத்துக்கள் நிரம்பியுள்ளன. முடித்துக் கூறல், பதி, பசு, பாசத் தொடர்பு சொல்லல், நியதி நிகழ்த்தல், நெறிகாட்டல், கிரமம் கிளத்தல், ஆன்மவகை அறிவித்தல், தரம் தெரிவித்தல், பழமை பகரல், வேதாகமக் கொள்கைக்கு இடமளித்தல், காலமுறைக் கழறுதல், விண்ணப்ப நெறி விளம்பல், இறையடியின் புகழ்ச்சி என்பன பன்னிரு பனுவல்களே இப்பன்னிருத் திருமுறையில் கூறப்பட்டுள்ளன என்பர் சைவப் பெருமக்கள். பன்னிருத் திருமுறைகளும் ஒரு வற்றாத அறிவுக் கடல். இவைகளின் காலம் கி. பி. 3100 முதல் 12 நூற்றாண்டுவரை என்றும் பெரியார் பகருவர். முதல் திருமுறையின் முதல் எழுத்து ''ஓ''-ம் காரமாகும். பன்னிரண்டாம் திருமுறையின் கடைசி எழுத்து மகரமெய்யாகும். இவ்விரண்டெழுத்துக்களையும் சேர்த்தால் ''ஓம்''கார பிரணவமாகும். ஆதலால் இப்பன்னிரு திருமுறைகளும் ''ஓம்''காரப் பிரம்மத்தின் விளக்கமேயாகும் என்பர். சைவப் பெருஞ் சமயமே ஒரு அகன்ற வானவெளி என்றால், இவ்வெளியின் கதிரவனே சிவனாகும்.

அச்சிவனிடம் உபதேசம் பெற்ற திருநந்திதேவரே சந்திரனாவார். வான வெளியில் பன்னிரு ராசிகள் இருப்பனபோல் இச்சைவ நெறியாய பெரும் வானத்திலும் பன்னிருதிருமுறைகளும் பன்னிருராசிகளாகும். வானத்தில் 27 நட்சத்திரங்கள் தென்படுவதுபோல் இந்தத் திருமுறைவானில் இந்நூல்களை வெளியிட்டருளிய 27 பேர்களும் மங்காத பெரும் நட்சத்திரங்களாவர் என்பர். இத்தகைய

திருமுறையில் ஒன்பதாம் திருமுறை ஒன்பது ஆசிரியர்களால் பாடப்பட்டது. 29 பதிகங்கள் 365 பாடல்கள் கொண்டது. ஆனால், இப்பொழுது கிடைப்பவை 301 பாடல்களே. இதில் வரும் திருவிசைப்பாவை அருளியவரான கருவூர்த் தேவரால் புகழப் பெற்ற மன்னரே நம் இராசராசன். அத்துடனின்றி, அந்தக் கருவூர்த் தேவரை அழைத்தே தஞ்சைப் பெரிய கோயில் பெருவுடையார் படிமத்தை அஷ்டபந்தனம்செய்து மன்னர் அமைத்தார். கருவூர்த்தேவரின் அருளுரைகளும், ஆசியுரைகளுமே இப்பேரரசனைப் பெருமன்னராக்கியது, என்றும் கூறுவர். ''திருமுறை'' என்றால் நல்லநூல் எனப்படும். இப்பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர்பாடிய திருக்கடைக்காப்பாகும். 4 முதல் 6 முடிய அப்பர் பெருமான் பாடி அருளிய தேவாரமாகும், 7-ம் திருமுறை திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பாட்டாகும். 9-ம் திருமுறை திருமாளிகைத்தேவர் முதலாய சேதிராயர்வரையுள்ள ஒன்பதுபேர் பாடியதாகும். 10-ம்திருமுறை திருமூலர் பாடிய திருமந்திரமாகும். 11-ம் திருமுறை திருவாலவாயுடையார் (இறைவன்) முதல் நம்பியாண்டார் நம்பிவரை 12 பேர்கள் அருளியதாகும். 12-ம் திருமுறை திரு சேக்கிழார்ப்பெருமான் பாடி அருளிய திருத்தொண்டர் புராணமாகும். இத்திருமுறைகளை திரு நம்பியாண்டார்நம்பிகளின் உதவி கொண்டு பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெற்று, பெற்ற பழம் திருமுறைகளை தில்லைவாழ் அந்தணர்களின் அனுமதிபெற்று வெளிக்கொண்டு வகுத்தளிக்க வகை செய்தனர். ''கையிரண்டும் உச்சிமேல் ஏறக்கண்ணீர் கரைந்தோட மெய்ம் முழுதும் புளகம் போர்ப்ப'' என்ற தேவார அருட்செயல்களே இராசராசனை இப்பணி செய்ய அருள்பாலித்தது என்பர். பின்பு ''நல்லிசை யாழ்ப்பாணனார் நன்மரபின் வழிவந்த வல்லி ஒருத்தியின்'' மூலம் தேவாரங்கள் அனைத்திற்கும் பண் அமையச் செய்தார். இத்திருமுறைகள் தெய்வத்தன்மை வாய்ந்தவை என்பதைப் பொல்லாப்பிள்ளையாருடைய அருட்திருவாக்கால் அறியலாம்:—

''அருமையைச் சிச்சிலி பண்ட ருந்ததேடும்
அதுபோலன்றிது என்றும்உளதாம்
உண்மைப்பரபதமும் தற்பாடும்பரனே
அன்றிப் பலரில்லை என்றெழுதும்பனுவல்
பாரின்எரியிடை வேவாது ஆற்றெதிரே
யோடும்என்புக்கும் உயிர் கொடுக்கும் இருநஞ்சாற்றும்
கரியை வளைவிக்கும்கல்மிதக்கப்பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங்காணே ''

என்பதே அப்பாடலாகும்.

முன்பே இத்திருமுறைகளின் பல பகுதிகள் ஆங்காங்கு திருக்கோயில்களில் பாடப்பட்டு வந்தாலும் இராசராசனுக்குப் பிறகுதான் ஒருமுறையாக அன்றாடம் ஆலயங்களில் நெறிதவறாது திருமுறை ஓதுதல் வழக்கமாயிற்று. நமது திருமுறை கண்ட இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலில் 48 பிடாரர்களை வைத்துத் தினமும் இறைவன் திருமுன் திருமுறை விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்தார். இந்தப் பிடாரர்களுக்குப் பட்டப் பெயர் ஞானசீலன் என அமைந்தது. இவ்வாறு இன்று வளம் பெற்று விளங்கும் பன்னிருதிருமுறைகளை வகுத்தளிக்க வகை செய்த அரும் குணக் கடலாகிய இராசராச மாமன்னரது பிறந்த நாளாகிய ஐப்பசி சதய விழா நம் தஞ்சைப் பெரியகோயிலில் கடந்த நான்கு ஆண்டுகளாகப் பொதுமக்களின் ஆதரவும், நம் தமிழக அரசின் ஊக்கமும், நேரிடைப் பணியாளர்களின் உழைப்பாலும் முடிவாக எல்லாம் வல்ல பெருமான் பெருவுடையாரின் திருவருள்பாலிப்

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண மரபும் ''பிறந்தநாட் சிறப்பு உரைத்தலை'' இலக்கணமாக அமைந்துளது.

அறந்தரு செங்கோல் அருள் வெய்யோன்
பிறந்தநாள் சிறப்பு உரைத்தன்று.
—புறப்பொருள் வெண்பாமாலை.

இவை தமிழகத்தில் பிறந்தநாள் கொண்டாடும் பழக்கம் மிகத் தொன்மைக் காலத்தில் துவங்கித் தொடர்ந்து நடைமுறையில் இருந்ததை அறிவிக்கின்றன. ஆழ்ந்து நோக்கின் இக்கொண்டாட்டம் தமிழகத்தின் தனித்தன்மை கொண்டது என்பதை உணரலாம்.

இனிப் பிறந்தநாளைக் குறிக்கும் பிற சொற்களைக் காணலாம்.

**வெள்ளணி நாள் :**

மங்கல நாள்களில் பிறந்தநாள் பெருமைக்குரிய மங்கலநாள் என்னும் கருத்தில் 'பெருமங்கலம்' என்று பெயர்பெற்றது.

வாழ்நாளில் பிறந்த நாள் ஒரு பெருமைக்குரிய நாள் என்னும் கருத்தில் 'பெருநாள்' என்றும் குறிக்கப்பட்டது. (இவ்வழக்கையே முசுலீம் மதத்தார் நபி பெருமானின் பிறந்த நாளைக் குறிக்க ஏற்றுப் 'பெருநாள்' கொண்டாடுகின்றனர்.)

பிறந்த நாள் தூய்மையான நாள் என்பதன் அறிகுறியாய் வெண்ணிறம் வாய்ந்த புத்தாடை அணியப்பட்டது. இதுகொண்டு பிறந்த நாள் 'வெள்ளணி' என்று பெயர் பெற்றது.

வடநாட்டினின்று சேரன் செங்குட்டுவன் பிறந்த நாளில் தன் நகரில் தங்க வேண்டும் என விரைந்து வந்தான். அதனைப்பாடும் உழவர்.

குடவர் கோமான் வந்தான் நாளைப்
படுநுகம் பூணும் பகடே; மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணி யாமெனும்
தொடுப்போர் உழவர் ஓதைப் பாணியும்
சிலம்பு - நீர்ப்படைக்காதை.

இதில் 'மன்னர் அடித்தளை நீக்கும் வெள்ளணி நாள் என்றனர். இதுபோன்றே பல இலக்கியங்களும் 'வெள்ளணிநாள் எனக் குறித்தன.

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவனுக்குக் குழந்தை பிறந்த செய்தியை அறிவிக்க விரும்பும் தலைவி தன் தோழியை வெண்ணிற ஆடை உடுக்கச்செய்து அனுப்புவாள். அத்தலைவன் வெள்ளணியைக் கண்டதும் அது குழந்தை பிறந்ததன் அறிகுறி என்று உணர்ந்து தலைவிக்குத் தன் வருகையைத் தூது மூலம் அறிவிப்பான்.

வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்
-நம்பியகப்பொருள் 206.

இவ்வாறு இலக்கணமும் காரணப்பெயர்களும் பெற்ற பிறந்தநாள் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் சிறப்பான இடம் பெற்றுள்ளது.

**பிறந்த நாள் இலக்கியம் :**

பிறந்தநாள் கொண்டாட்டம் அரசர்க்கெனச் சிறப்பாகத் தொடங்கித் தலை மக்களுக்குத் தொடர்ந்து நன்மக்களுக்கும் வளர்ந்தது. இவற்றால் பிறந்தநாள்பற்றிய செய்திகளும் வழக்குகளும் பெருகின. அஃது ஒரு தனிப்பொருளாக இலக்கியங்களில் இடம் பெறும் அளவு பெருகியது. பிறந்த நாளுக்கெனத் தனி இலக்கியம் அமையலாயிற்று.

பிற்காலத்தில் எழுந்த சிறு சிறு இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்) எனப் பெயர்பெற்றன. அவை 96 வகையாகப் பகுக்கப்பட்டன. அவற்றுள் ''பெருமங்கலம்'' என்பது ஒருவகை இலக்கிய நூல். இஃது ஒருவனது பிறந்தநாள் சிறப்பைமட்டும் பாடும் ஒரு தனி நூல். பிறந்தநாள் பெற்ற தனி இலக்கியம் இது.

**விண்மீனாற்பெயர் :**

பிறந்த நாள் விண்மீன் பெயரால் வழங்கப்படுவது முன்னர் குறிக்கப்பட்டது. பிறந்த வரும் அவ்விண்மீனால் பெயர் பெறுவதும் வழக்காயிற்று.

உத்திரட்டாதியான், பரணியான், ஆதிரையான், என இலக்கண நூல்களில் விண்மீனால் பெற்ற பெயர்கள் காட்டப்படுகின்றன.

பிறந்த விண்மீனால் பெயர்பெற்ற புலவர்களைச் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். மூல விண்மீனில் பிறந்தவர் மூலம் + கிழார் = மூலங்கிழார் எனப்பெயரிடப் பெற்றார். ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார் என இருவர் புறநானூற்றில் விளங்குகின்றனர். இடைக்காலத்தில் திருமந்திரத்தை எழுதிய சைவப் பெரியார் மூல விண்மீனில் பிறந்த குறிப்பில் திருமூலர் எனப்பெயர் பெற்றார்.

மாந்தர் விண்மீனால் பெயர்பெற்றமை போன்று கடவுளரும் அவரவர்க்கு என அமைந்த விண்மீனால் குறிக்கப்பட்டனர்.

'' ஆதிரையான் ஆதிரையான்
என்றே அயருமால்
ஊர்திரை நீர் வேலி உலகு''

என்று முத்தொள்ளாயிரக் கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானை ஆதிரை விண்மீனால் குறிக்கிறது.

மதுரைக் காஞ்சி என்னும் சங்க நூல்,
''கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் ''

என்று திருமாலை ஓணம் விண்மீனால் குறிக்கிறது. இவ் வடிகள் திருமாலுக்குத் திருவோண விண்மீன் நாளில் பிறந்த நாள் கொண்டாடப்பட்டதை அறிவிக்கிறது.

கடவுள் பிறப்பு, இறப்பு இல்லாதவர் என்பர். அவரே விண்மீன் முதலியவற்றைப் படைத்தார் என்பர். அக்கடவுளுக்கும் பிறந்தநாளாக விண்மீன்கண்டு பிறந்தநாளும் கொண்டாடினர் தமிழர்.

**பிறந்த நாளின் தனித் தகுதி:**

தமிழ் மக்கள் வாழ்வியலில் பிறந்த நாளுக்குத் தனித்தகுதி ஒன்றை வைத்திருந்தனர். எந்நாளினும் பிறந்த நாள் சிறந்தது. அந்நாளில் பெரு நலம் செய்ய வேண்டும் என்பது தமிழர்தம் கொள்கை.

'' எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரோ;
குலோத்துங்க சோழனைப் பாடீரோ!

''எந்தப் பகலையும்விடப் பிறந்த நாள் பகல் சிறந்தது. அன்று மன்னனது வெண்கொற்றக் குடை தனி அருளின் சின்னமாக மிளிரும். மக்கள் அக்குடையினைப் பாடுக'' என்று கலிங்கத்துப்பரணி குலோத்துங்க சோழன் பிறந்தநாளைப் போற்றுகின்றது.

'' வெள்ளணி அணிந்த ஞான்றே
வேந்தர்தம் முடியிற் கொண்ட
கள்ளணி மாலை மோந்து
கனைகழல் இலங்கு நோன்றாள்''
—சீவக சிந்தாமணி 614

சீவக மன்னன் மிக இளமையிலேயே போர் மேற்கொண்டு பகையை வென்றான் என்பதைக் குறிக்கும் சீவக சிந்தாமணி, ''பிறந்தநாளில் வெள்ளணி அணிந்தபோதே பகை மன்னர் முடியிலணிந்த மாலையைத் தன் காலடியில் கண்டான்'' என்று பிறந்த நாளை வைத்துப் பெருமையைக் குறிக்கிறது.

**பிறந்த நாள் நலம் :**

பிறந்த நாளில் இல்லங்கள் தூய்மை செய்யப்படும்; மங்கலப் பொருள்களால் இல்லத்தை ஒப்பனைசெய்வர்; இல்லத்தில் சிலந்திகள் கட்டியுள்ள கூடாம் ஒட்டடைகளை அடித்து நீக்குவர்; என்பதை முத்தொள்ளாயிரம் நயத்தோடு அறிவிக்கின்றது.

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார்! நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்
— (எந்தை)
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு
— முத்தொள்ளாயிரம் 82

"சோழமன்னன் கிள்ளி பிறந்த ரேவதி நாள் ஒரு வகையில் ஓரவஞ்சம் கொண்டது. இந்நாளில் அந்தணர் ஆவொடு பொன்னும் பரிசாகப் பெற்றார். நாவன்மை மிக்கவர் மலைபோன்று சிறந்த களிற்றைப் பரிசாகப் பெற்று அதன்மீது ஏறிச் சென்றார். ஆனால், அதே பிறந்த நாள் சிலந்தி கட்டிய கூட்டை இழக்கச் செய்ததே என்று பலரைப் பெற வைத்துச் சிலரை இழக்க வைத்ததாகக் குறிக்கிறது.''

பிறந்த நாளில் பல்வகை நற்செயல்கள் விளைந்தன. மன்னர் அன்று சிறையில் இருந்தோரை விடுதலை செய்தனர்.

'' மலைச்சிறைதீர் வாட்கண்டன்
வெள்ளணியை வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம் ''

என்றொரு பழம் பாடல் பேசுகின்றது. பல இலக்கியங்களிலும் இது போன்ற செய்தி காணப்படுகின்றது. முத்தொள்ளாயிரம்,

பாலும் மிகவும் நல்ல முறையில் நானிலமும் களிகூற நடந்துவந்தன. அவ்வண்ணமே அத்திருவிழா இந்த ஆண்டும் ஐப்பசி மாதம் 30ந் தேதியும், கார்த்திகை மாதம் முதல் தேதியுமாக (15—11—72 புதன் 16—11—72 வியாழன்) இரண்டு நாட்கள் அப்பெரியநாயகி பெருவுடையார் இவர்களின் இன்னருள் துணைகொண்டு சிறப்புற நடக்கிறது. அன்று சென்னை இந்துசமய அறநிலைய ஆணையர் மதிப்புமிக்க திரு. கே. என். நரசிம்மன் பி. ஏ. பி. எல்., ஐ. ஏ. எஸ். அவர்கள் சதயவிழா சிறப்பு மலரை வெளியிட்டு ஆசியுரை கூறுவார்கள். அன்று நம் பெருவுடையாருக்கும், அம்மன் முதலியவர்களுக்கும் சிறப்புறப் புனித நீராட்டம், வழிபாடு, புறப்பாடு முதலியன நடைபெறும்.

இந்த அரும்பெரும் பணியில் எங்களுடன் பங்குகொண்டு எங்களுக்கு மேலும் ஊக்கமும் ஆக்கமும்தரும்வகையில் உதவிபுரியும் அனைவருக்கும், இவ்விழாவில் பெரும் பங்குகொண்ட எங்கள் ஆட்சித்துறை தஞ்சை மாவட்ட உதவி ஆணையர் அவர்களுக்கும், தஞ்சைமன்னர் பரம்பரை அறங்காவலர், ஸ்ரீமத் ராஜாராம்சாகிப் அவர்கள், பொருளாளர், குழுவில் உறுப்பினர், மலர் ஆய்வுக்குழுவில் உறுப்பினர், மற்றுமுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் விழாக்கமிட்டியின் சார்பில் அடியேனது பணிவுகலந்த நன்றி.

“எல்லாம் அவன் செயல்” என்ற பழவழக்கிற்கிணங்க இவ்விழாவினை இதுகாறும் இடையூறின்றி அருள் மலர்க்கண் காட்டி நடத்திவைத்த - நடத்திவைக்கும் - நடத்திவைக்கப்போகும் தஞ்சைப் பெருவுடையார் பெரியநாயகி அம்மன் பொன்மலரடிக்கும் அடியேனது வணக்கம்.

மன்னர் இராசராசன் பெரும்புகழ் வாழ்க.

| | |
|---|---|
| தஞ்சாவூர்,<br>10-11-1972. | **வி. சௌ. கோதண்டபாணி,**<br>துணைத்தலைவர், ராஜராஜன் சதயவிழாக்குழு, தஞ்சாவூர்.<br>துணைஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர். |

# இராசராசசோழன் சதயவிழாச் செயற்குழு

## தஞ்சாவூர்

புரவலர் :

**திரு. ராஜஸ்ரீ ராஜாராம்ராஜாசாகேப் அவர்கள்**

*(பரம்பரை அறங்காவலர், அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்)*

தலைவர் :

**திரு. V. S. கோதண்டபாணி B. Sc., B. L., அவர்கள்**

*(துணை ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்)*

துணைத்தலைவர்கள் :

**திரு. R. அர்ச்சுனன் B. A., அவர்கள்**

*(உதவி ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, கும்பகோணம்)*

**திரு. N. சீனிவாசன் B. A., B. L., அவர்கள்**

*(உதவி ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, நாகபட்டினம்)*

**திரு. D. இராமச்சந்திரன் B. A., B. L., அவர்கள்**

*(உதவி ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்)*

செயலாளர் & பொருளாளர் :

**திரு. A. N. பார்த்தசாரதி B. Sc., அவர்கள்**

*(பொருளாளர் மற்றும் மேலாளர், அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்)*

துணைச்செயலாளர் :

**திரு. V. K. கண்ணபிரான் B. A., அவர்கள்**

*(மேலாளர், ஸ்ரீ பங்காரு காமாக்ஷியம்மன் கோயில், தஞ்சாவூர்)*

" தேர்வேந்தன் தென்னன்
திருஉத் திராடநாள்
போர்வேந்தன் பூசல் இலன் "

என்று பிறந்த நாளில் போர் ஒழிந்ததை அறிவிக்கின்றது.

பிறந்த நாளில் உண்மைப் போர் ஒழிந்தாலும் பொய்ப்போர் விழாவாக வீரர் தம் சேரியிலே நிகழும். இஃது விளையாட்டுப் போட்டியாக நிகழும் போர். விளையாட்டுப் போராயினும் வீரம் வழுவாது போரிடுவர். போர்ப்புண்பெற்று வடுப்பெறுதலும் உண்டு. அவ்வடுவையும் விழா மகிழ்ச்சியாகக் கொள்வர்.

திருவோண நன்னாளில் ஊரிலுள்ளார் திருமாலுக்கு எடுத்த பிறந்த நாள் விழாவில்,

" மறங்கொள் சேரி மாறுபடு செருவில்
மாறுது உற்ற வடுபடு நெற்றி "

என்று மதுரைக்காஞ்சி பாடுகின்றது.

நன்னன் என்ற தலைவனது பிறந்தநாள் விழாவினும் இச்சேரிப் போர் ஆரவாரத்தோடு நிகழ்ந்ததாக மதுரைக்காஞ்சி குறிக்கின்றது.

மன்னர் விழாவில் மட்டுமன்றிக் கடவுளர் திருநாள் விழாவிலும் இச்சேரிப்போர் நிகழ்ந்ததைத் திருஞானசம்பந்தர் தேவாரம்

"கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரி
கார்தரு சோலைக் கபாலீச் சுரமமர்ந்தார் [யில்
ஆதிரை நாள் காணுதே போதியோ பூம்பா
[வாய்"

என்று அறிவிக்கின்றது.

யாவற்றிற்கும் மேலாக மன்னனையோ நெடுநாள் வாழவேண்டுமென்று வாழ்த்தும் முறைகளுள் ஒன்று அவரவர் 'பிறந்தநாள் விண்மீன் நிலைத்திருப்பதாக' என்று கூறி வாழ்த்துவதாக இருந்தது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வாழ்த்தும் மாங்குடி கிழார்,

" நின்று நிலைஇயர் நின் நாள்மீன் "

(புறநானூறு 24) என்று அவன் பிறந்த விண்மீனை வாழ்த்தி உள்ளார். இவ்வாறு வாழ்த்துக்கும் பிறந்தநாள் பயன்பட்டது.

இத்துணைப் பெருமைகளையும் நலன்களையும் விளைவிக்கும் பிறந்தநாள் ஏதேனும் ஒரு குறை இல்லாதிருந்தால் கண்ணேறு பட்டுவிடும் அன்றோ? அதற்கும் ஒரு குறை உண்டு.

நோய்வாய்ப் பட்டவருக்குப் பிறந்த நாளில் நோய் மிகுமாம். இதனை முத்தொள்ளாயிரம் அறிவிக்கின்றது.

" பிணிகிடந்தார்க்குப் பிறந்தநாள் போல
அணியிழை அஞ்ச (வாடைக்காற்று
சீறிக்கொண்டு) வரும்"

என்பது அப்பாட்டு.

தமிழ் மருத்துவ நூல்களும் பிறந்த நாளில் சில மருந்துகளைக் கொள்ளக் கூடாது என்று தடைவிதிக்கிறன.

இப்பெரும் வரலாற்றுடன் தமிழகத்தில் பிறந்தநாள்: 5000 ஆண்டுகளுக்கு முன்னர் கருக்கொண்டு, இலக்கணத்தில் இயைந்து, இலக்கியத்தில் இசைபெற்று, மங்கலத்தில் மலிந்து, விண்மீனில் விளங்கி, இல்லம் அழகு பெற, உள்ளம் உவகைபெற, வெள்ளணி அணிந்து, கள்ளணிமாலை சூடி, அறுசுவை விருந்தளித்து, சிறைக்கதவைத் திறந்து, செருவெல்லாம் துறந்து, சேரிப்போர் நிகழ்த்தி, வாரிப் பரிசு வழங்கி, வாழ்த்தில் ஒளிர்ந்து, வளத்தில் மிளிர்ந்தது.

நம் நாட்டுப் பண்டைப் பாடல்கள் முடியுடை மன்னர், குறுநில மன்னர், நிலப் பெருஞ்செல்வர், மேம்பட்ட சான்றோர் ஆகியோர்மேல் பாடப்பட்டனவாகவே உள்ளன. எனவே, பிறந்த நாட்செய்திகளும் அவர்களைப் பற்றியனவாகவே கிடைக்கின்றன. வழிவழிவந்த தமிழ் மக்கள் பிறந்த நாள் கொண்டாட்டத்தை இதனால் வளம்படைத்தோர்க்கே உரியதெனக் கருதினர் போலும். தனிமாந்தர் விழாவாகக் கொண்டாடுவதை விட்டனர்.

ஆயினும் இன்றும் நாட்டுத் தலைமக்களுக்கு நாம் பிறந்தநாள் விழா எடுக்கின்றோம் அவ்விழாவையும் பொதுநலத்தில் வைக்கின்றோம்.

அண்ணல் காந்தியடிகள் நாள் ...
சருவோதய விழா :

அறிஞர் அண்ணு நாள் ...
எளியோர் வாழ்வு விழா;

பண்டித நேரு நாள் ... குழந்தைகள் விழா;

டாக்டர் இராதகிருட்டினனூர்நாள் ...
ஆசிரியர் விழா

டாக்டர் கலைஞர் நாள்...கண் வழங்கும் விழா என்றெல்லாம் பிறந்த நாளைப் பொதுநல நாளாய்க் காண்கிறோம்.

## 2000 ஆண்டுகளுக்குமுன் "சதய விழா" :

தஞ்சையிலிருந்து சோழ நாட்டைப் புகழுடன் ஆண்ட மாமன்னன் இராசராச சோழன் பிறந்த நாளாம் சதய நாள் விழா கடந்த சில்லாண்டுகளாகத் தஞ்சையில் விரிவாகக் கொண்டாடப்படுகின்றது.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னும் ஒரு சதய விழா நிகழ்ந்தது. அது தஞ்சையில் அன்று; தொண்டியில் நிகழ்ந்தது. சோழனுக்கன்று சேரனுக்குநிகழ்ந்தது. இராசராசனுக்கன்று; சேரமான் கோக்கோதை மார்பனுக்கு நிகழ்ந்தது.

கோக்கோதை மார்பன் பிறந்த நாள் சதய நாள். அந்நாளில் அவன் வெள்ளணி அணிந்தான். அமைதியின் சின்னமாக அதனைக் கொண்டான். முரசுமுழங்கிப் பின் வருமாறு குரல் கொடுத்ததாம்;

மன்னர்காள் !
இன்று கோக்கோதை மார்பன்
பிறந்த நாள் !
இது சதயத் திருவிழா நாள் !
இன்பத்தைச் சுவைப்பீராக !
கவலையின்றிக் கண்படுப்பீராக !

இக் கருத்தை ஒலிக்கும் பழம்பாடல் இதோ:

ஏமாரு மன்னீர் எயில்திறமின்; எங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநாள் — ஆமாறு
"காமம் நுகருமின் கண்படுமின்" என்னுமே
ஏம முரசின் குரல்.

இன்றையச் சதயநாள் விழாவும் இன்பம் நல்கிக் கவலை நீக்கி வளர்க.

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் :

திரு. S. நடராசன் அவர்கள், M. L. A. தஞ்சாவூர்.

,, S. பெத்தண்ணன் அவர்கள்,
(நகர் மன்றத்தலைவர், தஞ்சாவூர்)

,, G. இளங்கோவன் M. L. A. அவர்கள், திருவையாறு.

,, L. கணேசன் M. L. A. அவர்கள், ஒரத்தநாடு.

,, கோ. சி. மணி M. L. C. அவர்கள், ஆடுதுறை.

,, S. R. R. நாயுடு அவர்கள், வடுகச்சேரி - நாகபட்டினம்.

,, Ry. சிவாஜிராஜா பான்ஸ்லே அவர்கள், தஞ்சாவூர்.

,, ந. மு. கோவிந்தராய நாட்டார் B. A., L. T., அவர்கள், தஞ்சாவூர்.


,, கி. கோதண்டபாணி M. A., B. O. L. அவர்கள்,
(துணைப்பேராசிரியர், அ. வீரையா வாண்டையார் நினைவு புட்பம் கல்லூரி, பூண்டி.)

,, ஜி. ஜானகிராம் நாயுடு அவர்கள், தஞ்சாவூர்.

,, T. K. இராசகோபால் பிள்ளை அவர்கள், தஞ்சாவூர்.

,, B. கிருஷ்ணசுவாமி அவர்கள், நிர்வாக அதிகாரி
(ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர்.)

,, சு. சீனிவாசன் அவர்கள், நிர்வாக அலுவலர்
(ஸ்ரீ சொக்கநாதசுவாமி கோயில், மன்னார்குடி.)



தஞ்சை ஸ்ரீ பெருவுடையார்

# குருதேவராய்த்திகழ்ந்த கருவூர்த்தேவர்


வித்துவான் G. M. முத்துசாமி பிள்ளை I. A. S.

(முன்னாள் மாவட்டக்கலெக்டர்)


இந்து சமயத்தின் அடிப்படை கோட்பாடு யாதெனத் தத்துவஞானி ஒருவர் விடுத்த வினாவிற்கு, 'நிவர்த்தி' 'பிரவர்த்தி' என்னும் இரண்டு சொற்களாலே அறிஞர் ஒருவர் விடையளித்ததாகக் கூறுவர். இவ்விரு சொற்களில், நுண்ணிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. மக்கள் சமுதாயத்தில் இல்லறம் மேற்கொள்பவர் பெரும்பான்மையினர். இத்தகையோர் உண்டுடுத்து 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என உலகவாழ்க்கையிலே திளைத்து நின்றுவிடாமல், உயிருக்கு உறுதிதேடும் வகையில், தெய்வ வழிபாட்டிலும் ஞானமார்க்கத்திலும் ஈடுபடவேண்டும் என்பது நிவர்த்தியாகும். அவ்வப்போது, மானிட வடிவில் தோன்றிய மெய்ஞ்ஞானிகள், தனித்திருந்தே, தவம் புரிந்து தமக்கென்றே வாழ்ந்து விடாது உலக மக்களுடனும் கலந்து அவர்களுக்கு நல்வழி காட்டும் வகையில் உலகினில் அவர்கள் நடமாடுவது பிரவர்த்தியாகும். இவ்வழியில் அரும்பணியாற்றிய தவயோகிகளுள், கருவூர்த் தேவரும் ஒருவராவார். தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டி முடித்து இறவாப் புகழ் எய்திய இராசராசசோழன் காலத்திலும் "மகனறிவு தந்தையறிவு" என்றவாறு தன் தந்தை இராசராசசோழன் கட்டிய தஞ்சைக் கோவிலின் அமைப்பிலே கங்கை கொண்ட சோளேச்சரத் திருக்கோயிலைக் கட்டி முடித்த கங்கை கொண்ட சோழன் காலத்திலும் வசழ்ந்தவர் கருவூர்த் தேவர். அவ்விருவருக்கும் நற்குருவாக நல்லுபதேசம் செய்ததுமன்றி, அக்காலத்து மக்கள் உள்ளத்தில் சிவநெறி தழைத்தோங்குமாறு செயலாற்றியவர் கருவூர்த் தேவர். இப்பேரரசர்களிடம் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தும், உலகியல் வாழ்க்கையில் தம்மைப் பிணைத்துக் கொள்ளாது, கையில் ஓடேந்தி, ஊர் தோறும் பிச்சையேற்று உண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் தேவர் எனில், அவரது பெருமையை எவ்வாறு எடுத்துக் கூறுவது?

## 1. காலத்திற்கேற்ற அரும்பணி ஆற்றிய சிலர் :

இத்தகைய அரும்பணி கருவூர்த்தேவர் காலத்திற்கு மிகமிகத் தேவைப்பட்டது. முழுமுதற் பொருளாகிய இறைவனையோ பிற தெய்வங்களையோ ஒரு வடிவில் வழிபாடு செய்துவரும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்தது. சங்க காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சியில் இத்தெய்வக் கொள்கை மங்கத் தொடங்கியது. எனினும். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் போன்ற சமய ஆசிரியர்களின் அருள் ஆற்றலால் அக்காலத்து மன்னர்கள் சைவரானார்கள்; நாடும் சிவமயமாயிற்று. ஆனால் சில நூற்றாண்டுகளுக்குள் இந்நிலை மாறிற்று. தத்துவ ஆராய்ச்சிகளும் சூத்திர விளக்கங்களும் தலை தூக்கின. அன்பினாலும் தவத்தினாலும் இறைவன் அருளைப் பெறலாம் என்னும் கொள்கை தளர்வெய்தியது. இச்சூழ் நிலையிலே ! கருவூர்த் தேவர் இராசராச சோழனுக்கு உறுதுணையாக நின்று சைவம் பெருக்கும் பெருஞ்சீலராக விளங்கினர். திருக்கோயில் வழிபாட்டுக்குத் தனி மதிப்புக் கொடுக்கும் வகையில் கோயில் (சிதம்பரம்) திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர்மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம், திருப்புவனம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம் திருவிடைமருதூர் என்னும் பத்துத் தலங்களில் எழுந்தருளிய சிவமூர்த்தங்களைத் துதிக்கும் பத்துப் பதிகங்களில் 103 திருப்பாடல்களை இவர் அருளினர். இவரது பெருமையை உணர்ந்த கங்கை கொண்ட சோழனே அப்பெருமான் அருளிய பாடல்களை இறைவன் முன்னிலையில் ஓதித் தெய்வத் திருவருள் பெற்று வேந்தர்களுக்கு வேந்தராக விளங்கினன் என்பதைக் கருவூர்த் தேவரே,

"மங்கையோடிருந்தே யோகு செய்வானை
வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங்கடவுளைக் கங்கை
கொண்ட சோழேச் சரத்தானை
அங்கை யோடந்திப் பலிதிரி கருவூர்
அறைந்த சொன் மாலையால் ஆழிச்
செங்கை யோடுலகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே"

எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய தெய்வ ஆற்றல் வாய்ந்த திருப் பாடல்களில் அமைந்துள்ள நலங்களையும் தத்துவத்தையும் உணர்ந்து அவற்றை ஓதுதலினால் நன்மையடையலாம்.

## 2. கருவூர்த்தேவர் அருளிய பாடல்களின் அருமை :

கருவூர்த் தேவர் அருளிய பத்துப் பதிகங்களுள். ஒன்பது எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப் பாக்களாகவும், ஒன்று கொச்சகக் கலிப்பாவாகவும் உள்ளன. தேவாரப் பதிகங்கள் பண்பெற்றுள்ளன போன்றே. இந்தப் பதிகங்களுக்கும் பண் அமைந்துள்ளது. பத்துப் பதிகங்களுள். இருபதிகங்கள் புறநீர்மைப் பண்ணிலும், ஒன்று காந்தாரப் பண்ணிலும் மற்ற ஏழும் பஞ்சமப் பண்ணிலும் உள்ளன. இப்பாடல்களில் சொற்போக்கும் பொருட்போக்கும் ஒருங்கிணைந்து உள்ளன; ஆங்காங்கே அடைச் சொல்லடுக்கு, எதுகை முரண் தொடைச் சொல்லணிகள் அரிய உவமை ஆகியவை அப்பாடல்களுக்கு அணி செய்கின்றன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இவற்றிற்கெல்லாம் மகுடம்போல் காட்சியளிக்கின்றன.

சிவபெருமான் 'மங்கையோடிருந்தே யோகுசெய்வான்' அவ்வாறு இருந்தும் சிறியமனத்தில் புகுந்தது எளிமை எனவும் சிறிய உயிருக்கு இனியது காட்டிப்பேரருள் புரிவது அப்பெருமானது பெருமையெனவும் கருவூர்த் தேவர் விளக்குவது அப்பாடல்களை ஓதும்தோறும் இன்சுவை அளிக்கின்றது. நம் புறக்கண்கொண்டு காண முடியாத இறைவனுடைய திருவுருவத்தை நம் அகக்கண்முன் அவர் கொண்டுவந்து காட்டும் திறம் :

" பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவலா டரவம்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபால்
துடியிடை யிடமருங் கொருத்தி
அவளுமே யாகில் அவரிடங் களந்தை
அணிதிக ழாதித் தேச்சரமே"

என்பது போன்ற பாடல்களால் விளங்கும். இரக்கச் சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ள

" நையாத மனத்தினனை
நைவிப்பா னித்தெருவே
ஐயா நீ உலாப்போந்த
வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவிக்
கண்ணீரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத்
திரிலோக்கிய சுந்தரனே"

என்னும் பாடல் கோவில்களில் பாடப் பெறும் பஞ்சபுராணத்துள் (ஐந்து பாடல்களுள்) சேர்க்கப்பட்டுள்ளதிலிருந்து இதன் உருக்கம் தெளிவாகும்.

## 3. கருவூர்த் தேவர் காட்டும் சைவ சித்தாந்தம் :

அன்பினால் மேற்கொள்ளப்படும் வழிபாட்டாலும், தவத்தாலும் இறைவனின் அருள்பெறலாம் என அறிவுறுத்தியவர்கள் சமய ஆசிரியர்கள் நால்வரும். அவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர், இறைவனைப்பற்றிய ஆராய்ச்சி அளவுக்கு மேற்படக்கூடாது எனக்கூறும் வகையில்,

" ஏதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா
சுடர் விட்டுளன் எங்கள் சோதி"

என அறிவுறுத்ியுள்ளார்.



**தமிழக முதல்வர்**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள்

இவ்வாறு நம்நாட்டுச் சமய தத்துவங்கள் அனைத்தையும் ஆராய்ந்து அவற்றின் உண்மை நிலையினைச் சைவ சித்தாந்தமாகப் பன்னிரண்டே சூத்திரங்களில் விளக்கியவர் மெய்கண்ட தேவர். இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கெல்லாம் தலைசிறந்ததாகச் சிவஞான போதம் என்பதாகும். மெய்கண்ட தேவர் கருவூர்த் தேவருக்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றியவர். சிவஞானபோதச் சூத்திரங்களின் கருத்துக்கள் கருவூர்த்தேவர் அருளிய திருப்பாடல்களில் நுட்பமாய் அமைந்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

மிகமிகச் சுருக்கமாகக் கூறுமிடத்து, பசுக்களுக்கு (உயிர்களுக்கு) ப்பதியாக (தலைவராக) உள்ள இறைவன், உயிர்களில் இரண்டறக் கலந்திருப்பினும், பாசத்தின் (தளையின்) மறைப்பால் இறைவனை உயிர்கள் அறிய இயலாதிருக்கும்போதும், இறைவன் தம்மையடையுமாறு பக்குவமான உயிர்களுக்கு அருள்புரிய, அவ்வுயிர்களும் இறைவனை அடையும் எனச் சிவஞான போதத்தின் முதல் ஏழு சூத்திரங்களும் கூறுகின்றன. உலகப் பற்றை உயிர்விடுமானால், அது தன்னையும் அறிந்து இறைவனை நாட, இறைவன் சற்குருவாய் அறியாமையைப் போக்குவார் என எட்டாம் சூத்திரம் கூறுகிறது. இவ்வுண்மைகளைச் சிவஞான முனிவர் தாம் இயற்றிய சிவஞான பாடியத்தில், உயிர் தூல அறிவுடையது ஆதலால் தனக்கேற்ற முறையில் சிறிது சிறிதாக உணர, வளர்பிறையில் இருள் தேய்ந்து தேய்ந்துவிடுவது போன்று அறியாமையும் சிறிது சிறிதாக நீங்கும் எனவும், அவ்வகையில் உயிர்க்கு வெறுப்பு தோன்றுமாதலால் அதன் வழியாக வீடுபெறுவதற்கான விருப்பம் நிகழும் எனவும், அதற்கேற்பத் தக்க உபதேசம் கிடைக்கப்பெறுமெனவும், அதற்கேற்ப அனுபவஞானம் ஏற்படும் எனவும் விளக்கம் தருகின்றார். இவ்விளக்கத்திற்கு ஆதாரமாக, கருவூர்த்தேவர் அருளிய திருவிடைமருதூர்ப் பதிகத்தினுடைய ஆறாவது பாடலில் உள்ள "பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றேறி" என்னும் தொடரை எடுத்தாள்கின்றார்.

எனவே,

" பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்று சென்றேறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுறு வண்ணம்
எந்தையும் தாயும் யானும் என்றிங்ஙன்
எண்ணில் பல்லூழிகள் உடனாய்
வந்தணுகாது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவி டைமருதே"

என்னும் பாடல், உயிர் பாசத்தால் கட்டப்பட்டுள்ள நிலைமையையும் அதனை விடுத்து நீங்குவதற்கான நிலைமையும் அறிவிக்கும் ஞானநூல்களில் விதிக்கப்பட்ட நெறியில் படிப்படியாக மேம்பாடடைய, இறைவன் உயிருடன் கலக்கும் கலப்பை உயிர் அறியாதவாறு தந்தையாகவும் தாயாகவும் பலகாலம் மனத்துள் நிற்கிறார் என்னும் உயரிய சைவ சித்தாந்தக் கருத்தைக் கொண்டுள்ளது. இறைவன் குருவாக உபதேசிக்கும் முறையைக் கூறும் எட்டாம் சூத்திரத்தின் கருத்திற்கிணங்கி இருப்பதுபோன்ற நிலை.

"உன்கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த கங்கை கொண்ட சோளேச் சரத்தானே எனவும், உங்கை கொண்டடியேன் சென்னி வைத்தென்னை உய்யக்கொண்டருளினை" எனவும் கருவூர்த்தேவர் கூறுவதில் காட்சியளிக்கிறது.

காரிருள் நிறைந்த இருளில் பேய்கள் நடமாடும் தற்கொலை செய்து கொண்டவர்கள் தற்செயல் விபத்துக்கள் காரணமாகத் திடீரென மரணமெய்தியவர்கள் ஆகியோர்கள் தங்களுக்கென விதிக்கப்பட்ட ஆயுள் காலம் வரையில் ஆவியுடலில் அலைவார்கள் எனவும், அவ் ஆவி உடலுடன் திரிபவர்களுள் சிலர் உலகினில் வாழ்பவர்களின் மீது பொறாமை கொண்டு, அவர்களில் சிலருடைய உடலுள் புகுந்து பேய் வடிவில் அவர்களை ஆட்டி வைக்கிறார்கள் என்பது ஆவி உடல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இத்தகைய பேய்கள் நடமாடுவது நடு இரவில், இப்பேய்கள் உலாவும் போது இவற்றைக் காணும் ஆற்றல் பெற்றுள்ள நாய்கள் பேரிரைச்சலுடன் குலைக்கும்; ஆடு மாடுகள் மிரளும். இத்தகைய நடு இரவிலே மாணிக்க வாசகர் குறிப்பிடுவது போல், "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்" (இறைவன்) மெய்யடியார்களுக்கு உபதேசம் செய்து அருள்பாலிக்கிறார். எனவும் இவ்வாறு தமக்கு அருள் பாலித்தார் எனவும்

" எரிதருகரி காட்டிடு பிணம் நிணமுண்டு
ஏப்பமிட்டு இலங்கெயிற்று அழல்வாய்த்
துருகழல்நெடும்பேய்க் கணம்எழுந்தாடும்
தூங்கி ருள் நடுநல் யாமத்தே
அருள்புரி முறுவல் முகிழ் நிலா எறிப்ப
அந்தி போனது ஒளிர் திருமேனி
வரியரவு ஆட ஆடுமெம் பெருமான்
மருவிடம் திருவிடை மருதே"

என்பது போன்ற பாடல்களில் கருவூர்த் தேவர் குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகரும்

" தெருளிடத் தடியார் சிந்தையிற் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்
எங்கெழுந் தருளுவது இனியே" [தேன்

எனத் தெரிவித் திருப்பதும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். சிவஞான போதத்தின் ஒன்பதாம் சூத்திரம் இறைவன் ஞானத்தை விளக்கி ஞேயமாகிய தம்மையே அளிப்பார் எனக் கூறுகிறது. எனினும் இந்நிலைமை இடைவிடாது ஏற்பட "ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி ஓதுக" எனச் சிவஞான சித்தியார் அறிவுறுத்துகின்றது. அஞ்செழுத்தோதி இறைவன் அருளைப் பெறுவதுடன் மற்ற நலங்களையும் பெறுக எனக் கருவூர்த் தேவர்

" அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்துள் வைத்து
தொண்டருக்கு கண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும் பைம் பொன்மாளிகை
பவள வாயவர் பணை முலையும் [யும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங்காங்கே
கொண்ட சோளேச்சரத் தானே "

என உபதேசிக்கிறார்.

இறைவன் ஏகனாகி நிற்றலைப் பத்தாம் சூத்திரமும் அரன் மலரடிக்கீழ் இருத்தல் பற்றி பதினொன்றும் சூத்திரமும் கூறுகின்றன. பக்குவமடைந்த உயிர்கள் தம்முடைய தன்மைகளையே யடையுமாறு இறைவன் அருளுகிறார் என்பதை கருவூர்த் தேவர்

" முழங்குதீம்புனல் பாய்ந்திள வராலுகளும்
முகத்தலை யகத்தமர்ந்தடி யேன்
விழுங்கு தீங்கனியாயினிய வானந்த
வெள்ளமா யுள்ளமா யினையே "

எனக் காட்டுகிறார். சிவஞான போதத்தில்

" செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலய ந்தானு மரனெனத் தொழுமே "

என்னும் பன்னிரண்டாம் சூத்திரம் சைவ சித்தாந்தத்திற்குச் சிறந்த கொள்கையை வகுப்பதாகவுள்ளது. இதன் நோக்கை விளக்கமுற்பட்ட சிவஞானமுனிவர் "பற்றக் கழிந்ததும் மலங்கள் விளக்கற்றம் பார்க்குமிருள் போல, அறிவற்றம் பார்த்து நிற்பனவாகலான் அவற்றைப் பரிகரித்தலும் பரிகரித்தற்குத் துணையாகிய மெய்யன்பரோடு பயிற்றலும் பயிற்சிநிலை பெறும்படி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் அரனெனக்கண்டு வழிபடுதலுமுடையராய், இப்பேறு பெறமாட்டாரது சிறுமையையும் பெற்றாரது பெருமையையும் நோக்கிக் கணித்து வாழ்தல் சீவன் முத்தர்க்குரிய இயல்பு" எனக்கூறுகிறார். இவ்வகையில் பாசத்தை விலக்குதல், சிவனடியார்களுடன் கூடுதல், திருக்கோயிலையும் திருவேடத்தையும் வழிபடுதல் ஆகியவையாம்.

இத்தகைய ஞானகுருவின் திருவுருவமும் சீடராம் இராசராச சோழன் திருவுருவமும் நிற்கும் நிலையில் தஞ்சை இராசராசேச்சரத்தின் சுவரில் திரிபுராந்தகரது திருவடிவத்தின் அருகில், இன்றும் காணலாம். இப் பேரரசனுக்கு குருதேவராகத் திகழ்ந்த கருவூர்த்தேவர் இராசராசேச்சரத்தில் வடமேற்கில் உள்ள கோவிலில் மெய்யடியார்களுக்கு மௌன உபதேசம் செய்வார்போல் இன்று அமர்ந்துள்ளார். இத்திருவுருவத்திற்கு நித்திய பூசையும் வழிபாடும் நடைபெருகின்றன. இவர் அருளிய பாடல்களை அன்பர்கள் ஓதி உணர்ந்து நன்மையடைய இயலுமாறு இவற்றை இக் கோயில் திருமதிலில் பொறிக்கப் படுதல் பொருத்தமாக இருக்கும்.



அறநிலைய அமைச்சர்

மாண்புமிகு ப. கண்ணப்பன் அவர்கள்

# மனக்கோயில் குடிகொள்ள வா!


நா. நாகராசன் B. A.,
நிர்வாக அதிகாரி
ஸ்ரீ கச்சாலீசுவரர் திருக்கோயில் அரண்மனைத்தெரு சென்னை-1


கண்ணில் காணும் கற்கோயிலெல்லாம் குடிகொண்ட இறைவா! என்றன் மனக் கோயிலில் குடிகொள்ள வா! இந்த நல்ல வரத்தினை என்றன் கற்ற அறிவால் கேட்கவில்லை; பெற்ற செல்வத்தாலும் கேட்கவில்லை; உற்ற உறவால் கேட்கின்றேன்.

ஐயனே! உனக்குக் கலைக்கோயிலில் கல் உரு வேண்டாம்; என்றன் கவிதை உள்ளத்தில் கருணை உருக்கொள். ஒவ்வொரு கோயிலாகத் தேடிவந்து நான் உன்னைச் சுற்றுவது என்றன் மனத்தைக் கோயிலாக்கிக் கொள்வதற்காகத்தானே! அதனால் அன்பு மனத்தின் ஆசைக் குரலால் கேட்கின்றேன்; என்றன் நினைவுகள் மணக்க நெஞ்சக் கோயிலில் குடிகொள்ள வா! இறைவா!

உலகுக்கெல்லாம் ஒருதலைவா! உன்றன் திருவடிமலர்கள் இல்லாது என்றன்நெஞ்சச் சோலை மணக்கவே மணக்காது ஐயா.! என் உள்ளம் இன்ப துன்பங்களின் மேடையே என்று அஞ்ச வேண்டாம். இன்ப துன்பம் இரண்டிலும் உன்னையே பாடுவேன்; ஆடுவேன்; உள்ளக்களிப்பில் மதுவுண்ட தேனீயாய் உலகெல்லாம் பறந்து திரிவேன். எல்லாரும் தம் தம் தவத்தின் வரத்தால் உன் சொர்க்க சுகம் அடைய, நான் என்றன்மாருத நினைவொன்றிலேயே உன்னை அடைவேன். நான் நிற்குமிடம் சொர்க்கமாவது நீ என்றன் நெஞ்சில் வந்து அமரும் நேரத்தில் தானே!

ஐயனே! நீயோ அருள் வடிவினன். உன்னை அடையாளம் கண்டுகொள்ள என்றன் ஆவல் உள்ளத்தால் தான் முடியும். அதனால் என்உள்ளத்திலேயே குடிகொண்டு விடு. என் உள்ளம் கலந்து நிற்கவேண்டும் என்பதற்காகத்தானே நீ பேரின்ப உணர்வின் வடிவெடுத்து நிற்கின்றாய். நீ அழியா ஓவியமாய் என்னுள்ளே பதிந்துவிட வேண்டும் என்பதற்காகத் தானே அழகின் திருவுருக்கொண்டு என் கண்களின்வழி உள்ளத்தில் நுழைகின்றாய்.

என்றும் அழியாப் பெரும் பொருளே! நீ என்றென்றும் அழியா உறவில் என்னை நாடினாய்; அதனால் தானே அழியா நினைவுப் பெட்டகமாய் என் உள்ளத்தில் கலந்தாய்; என் உயிரின் வழி சொந்தமாக வேண்டும் என்பதற்குத்தானே அடித்து வளர்க்கும் தந்தையாய் இருக்கும் நீ அணைத்துக்காக்கும் தாயாகவும் உறவுகொண்டாய்.

ஏ! வற்றா வானமே!! உன் அருள் வெள்ளத்தையெல்லாம், ஆசையால் எங்கும் பறந்த என்றன் உள்ளக் கடலால்தான் தாங்க முடியும். உன்றன் அருள் வேகத்தில் பொழியும் அமுதையெல்லாம் அள்ளியள்ளிப் பருக, என் உள்ளக் கோயிலிலேயே உன் பிரிவிலாப் பார்வையை வை. ஐயனே! உன்றன் திருவுருவே உன்னை எண்ணிய என்றன் பேரின்ப நினைவால், என் உள்ளத்தில் பிறந்த அமுதால் ஆனதுதானே! அப்படியிருக்க எப்படி உன்னால் என் உள்ளத்தை விட்டுப்பிரிந்துத் தனிஉரு கொள்ள முடியும்? பலர் தன் உடல் இன்பத்திற்காக உலகின்முன் தம் உடல், பொருள், ஆவி அத்தனையும் சமர்ப்பிப்பது போல என் உயிரே! உன் திருவடியில் என்னை நானே சமர்ப்பித்துக்கொள்ள என்னுள்ளத்தில்வா!


இறைவா! நீ என் மனத்தில் மறையா உருவாய் அமர்ந்ததால்தான், இருகரையிலும் பசுமை பூத்து நிற்கும் மரங்கள் விண்ணில் படரும் கரு மேகங்களையும் கடந்து உயர்ந்து நிற்க, ஆறு நிறைந்து கரை வழிந்தோடும் காவிரி வெள்ளத்தைப் பார்க்கும் பொழுதும், உன் திருக்கோயிலின் கோபுர உச்சியைப் பார்க்கும் பொழுதும் எனக்கு ஒன்று போலவே இருக்கின்றது. நெடிய வானத்தட்டின் வெள்ளிப் புள்ளிகளாம் விண்மீன்களுக்கும், உனக்கு அர்ச்சனை செய்த மலர்களுக்கும் ஒரே உவமை பிறக்கிறது. ஐயனே! பதவிக்கும், பொருளுக்கும் இடையில் போராடிக் கொண்டிருப்பது தான் எங்கள் வாழ்வு. என் உள்ளத்தில் தான் நான் நினைத்தபொழுதெல்லாம் உனக்கு பூசனை நடக்கும். மிருக இன்பங்களை எந்நேரமும் கற்பனை செய்துகொண்டிருக்கும் உடலால் நடக்காது. நீ மட்டும் என் உள்ளத்தில் அமர்ந்துவிட்டால் குடத்து நீரில் உனக்கு திருமுழுக்கு அல்ல; கண்ணின் முன் கடல் வெள்ளமாய் பெருக்கெடுத்தோடும் காவிரி நீரிலெல்லாம் உனக்குத் திருமுழுக்கு. உனக்கு மலர் அர்ச்சனை, ஒரு மலரை பல இதழ்களாகக் கிள்ளிக் கிள்ளி அல்ல; மனங்கொண்ட மட்டும் மண்ணில் மலர்ந்த மலர்களோடு, மனக்கண்ணில் மலரும் மலர்களிலும் உனக்கு அர்ச்சனை. தென்றல் தடவி தரும் தேன் தமிழில் உனக்குத் தெவிட்டாத போற்றிகள்.

ஐயனே! கனிந்த மரத்தில் கிளைக்குக் கிளை பறக்கும் பறவைகள் அந்த நீல வானில் பறக்கும் வெண் மேகங்களைப் பார்த்து என்ன பாடுகின்றன? வண்ண வண்ண வண்ணாத்திப்பூச்சிகள் வண்ணமலர்களிடம் தேனைத் தவிர வேறு என்ன கேட்கப் போகின்றது? ஏ! ஆலமரமே!! உன் திருவடியில் நிற்கும் நான் உன்றன் நீங்கா நிழலையன்றி வேறுஎன்ன கேட்கப்போகின்றேன்?

அதோ! அங்கே காற்றின் ஓட்டத்திற்கு ஏற்ற திசையில் மரங்கள் அசைகின்றன. நீர் சுமந்த கரு மேகங்கள் காற்றின் ஓட்டத்திற்கு ஏற்றபடி அசைகின்றதா? மரங்களின் அழைப்பிற்கு ஏற்றபடி அவைகளை நோக்கி அசைகின்றதா? அனைத்துப் பொருள்களையும் அசைவிக்கும் நீ தான் சொல்ல வேண்டும்.

என்னுடைய வாழ்க்கை நாடகத்தின் விருப்பு வெறுப்புக்களால் அவ்வப்பொழுது ஏற்படும் அவமானங்களையும், பெருந்துன்பங்களையும் மறைத்துத் தாங்கிக் கொள்ள என்மனதை நான் கல்லாக்கிக் கொள்வதுண்டு. ஆனால் ஐயனே? உன்றன் திருவடி மலர்களின் நினைவு என்றன் நெஞ்சில் பட்டுவிட்டால் என் மனம் மலர்... மலர் ...மலர். அப்பொழுதுதான் மலர்ந்த புத்தம் புதிய பொன்வண்ண மலராக என் மனம் இருக்கும் பொழுதுதான் அங்கே நீ வந்து அமர்வாய் என்று எனக்குத் தெரியுமே ஐயா.

இறைவா! நீமட்டும் என் மனதில் குடிகொண்டுவிட்டால் அது அமரர்களின் நாடு; இல்லாவிட்டால் அரக்கர்களினுடைய காடு. உடலின் ஆசையினாலே பிறந்து, உடலின் ஆசையினாலே வளர்ந்து, உடலின் ஆசையினாலே அழியும் ஒரு பிணத்தின் கதையாகி விடக்கூடாது என் வாழ்வு. எங்கள் மாளிகைகளில் நாங்கள் மரங்கள் வளர்ப்பது; நாங்கள் இன்னும் பசுங்காட்டின் நடுவே பாயும் புலிகளாகத்தான் வாழ்கின்றோம் என்று காட்டுவதற்காக அல்ல. ஐயனே! உனது திருவடிநிழலை நாங்கள் இன்னும் மறக்கவில்லை, என்று காட்டுவதற்காகத்



**கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.**
(ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.)

தான். நீமட்டும் என் உள்ளத்தில் அமர்ந்து விட்டால் வேறு சிம்மாசனம் எனக்கு என்னவேண்டும்? ஐயா!

என் தேவனே! என் வாழ்வு செல்வத்தில் உயராவிட்டாலும், செம்மையில் உயர வேண்டும். உடல் அழகின் மேடையாக வேண்டாம்; அன்பின் ஓடையாக வேண்டும்; அருளின் கடலாக வேண்டும். நீ ஒருவன் அங்கே இருந்தால்தான் அது நடக்கும். உன் கோயிலில் உனக்கு எத்தனை எத்தனை மலர் மாலைகள் சூட்டி தூபம் காட்டினாலும் பேரொளிப் பெரும் பிழம்பாம் திருவிளக்கின் உருவில் நீ அங்கே இல்லாவிட்டால் அழகின் ஒளி இருக்குமா? அந்த இடம் கோயிலாகுமா?

நீ எண்ணங்களால் உண்ணும் அமுதக் கனி. அன்பின் வடிவாய் என் உள்ளத்தில் அமர்ந்து விடு ஐயா! என் உடலெல்லாம் பொன் மாளிகையாக இருந்து, உள்ளம் மட்டும் சாக்கடைக் குழியாக இருந்து விட்டால், அதோடு எப்படி உன் கோயில் புகுவேன். என் நெஞ்சில் உன்றன் திருவடி நினைவுகள் இருந்தால் உன் உலகின் அறமும், என் கவிதையின் கற்பனைகளும் ஓர் இனம். இரண்டும் என்றுமே அழியாதது என்பது மட்டுமல்ல; என்றுமே அழியாத இன்பமும் தரும்.

கறுத்த வைரம்போல் மின்னும் கருங்கல்லில் கலையின் சிலையொன்று வடிக்கின்றான் தெய்வீகச் சிற்பி ஒருவன். சிற்ப சாத்திரத்தின் இலக்கணமும், இலக்கியமும் அங்கே ஒரு சேர மணக்கின்றது. இவ்வளவு இருந்தும், அந்த சிலையின் கண்கள்மட்டும் திறக்கப்படவில்லை. ஏன்? என்று கேட்கிறான் நண்பன். "இந்த சிலையின் முழு அழகையும் கண்டு, உள்ளத்தின் அதிசயத்தில் தானும் சிலையாகி நிற்கக் கூடிய இரசிகன் எப்பொழுது வருகிறானோ அப்பொழுதுதான் இந்த சிலைக்கும் கண் 'திறப்பேன்,' எனக்கு காண்பவன் முக்கியமல்ல; காணும் கண்கள் தான் முக்கியம்" என்கிறான், இறைவா! அதுபோல் நீ வந்து நின்றால்தான் என் உள்ளக் கதவுகள் திறக்கும்; உண்மையின் விளக்கொளியில் என் வாழ்வு தெளிவு பெறும்.

ஐயனே! உன்றன் விண்ணினைத் தொடும் அளவிற்கு உனக்காக நாங்கள் கண்ணாடியில் மாளிகைக்கட்டி வைத்தாலும், மண்ணின்தரையில் நடந்தபடி, எந்த ஏழையின் குடிசையில் உன்னை அழைக்கும் குரல் கேட்கிறது என்று தேடி அலையும் எளியவன் நீ. உன்றன் தூய மென்மலர்க் கரங்கள் தொடுவது பொன்னையும் பொருளையும் அல்ல. ஆற்றாத துயரால் அழுத ஏழைகளின் இதயத்தையே நீ தொட்டு அணைப்பாய். உன்றன் கருணை உள்ளத்தின் நினைப்பினால்தான், நான் கோயிலில் இருந்தாலும், சோலையில் நின்றாலும், பாலையில் அலைந்தாலும், ஒரு மலர்க்காடு என்றன் மனக்கண் முன்னே மலர்ந்து கிளைக்கின்றது. அதன் மலர்ச்சி என் புன்முறுவல் முகத்திலும் மலர்கின்றது.

அம்மையப்பா? உன்றன் திருக்கோயிலைக் கண்கள் கண்டு, கால்கள் வலம் வந்து, கைகள் உன்னைத் தொழுதாலும், உன்றன் திருவடி சுகத்தில் கலந்து நிற்பது என்றன் உள்ளம் தானே ஐயா! என்னைக் காத்து அருளும் உன்முன் நான் எப்படி நிற்க முடியும்? கண்ணில் நீர் மல்க; கருத்தின் மொழி அழிய. உள்ளத்தால் கலந்து நிற்க முடியுமே தவிர, வேறு எதனால் கலந்து நிற்க முடியும். ஐயனே! உன்றன் தத்துவமெல்லாம் அறிந்தேன். அதனால் இனிமேல் என் அறிவு எவ்வளவு வளர்ந்தாலும் உள்ளம் மட்டும் உன்னுடைய வளர்ப்புக் குழந்தையாகவே இருக்கும். நான் சாகும் பொழுதுகூட உள்ளத்தால் சிறுகுழந்தையாகவே சாவேன். உன் மலர்கள் எங்கே இருந்தாலும் அங்கே நின்று வேடிக்கைப் பார்ப்பேன். வானகத்து மீன்கள் ஆயிரமாயிரமாய் என் உள்ளத்தில் மலர்ந்த இன்பம் பெறுவேன்.

# மாவீரன் இராசராசன்

பேராசிரியர் - சி. கோவிந்தராசன்

கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கரந்தை, தஞ்சை.

முதல் இராசராசன் சிவபக்தியிலும் மக்களைக்காக்கும் மாண்பிலும் புகழ்பெற்று விளங்கினான் என்பதை, தஞ்சை இராசராசேச்சரமும் அதன் அங்கமாக வானளாவி எழுந்து நிற்கும் தட்சண மேருவெனும் விமானமும், பெரிய வடிவில் அமைந்துள்ள பெருவுடையாரும், பெரிய நந்தியும் உணர்த்துவவாயினும், ஆட்சித்துறையில் ஆண்மையும் பேராற்றலும் பெற்ற மாவீரனாகவும் இம்மன்னன் விளங்கினான் என்பதைக் கல்வெட்டுச் செய்திகளும் செப்பேட்டுச் செய்திகளும் உணர்த்துகின்றன.

முதல் இராசராசனுடைய விருதுப் பெயர்களாகக் கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் இராசகேசரிவர்மன், மும்முடிச்சோழன், சத்தியாசிரயகுலகாலன், சயங்கொண்ட சோழன், கீர்த்தி பராக்கிரம சோழன், தென்ன பராக்கிரமன், சிவபாத சேகரன் என்பனவாகும்.

இப்பெயர்களைக்கொண்டு இராசராசன் சிறப்பியல்புகளாக அவன் சிவப்பற்றோடு அவனுடைய ஆற்றலும் வீரமுமே மிகுந்துள்ள உண்மை புலனாகும். இராசராசன் பெருவலிபடைத்த மாவீரனாவான் என்பதனை அவன் நிகழ்த்திய போர்ச்செயல்களால் நன்கு அறிய முடிகின்றது.

இவனது ஆட்சியில், வலங்கை, இடங்கை வேளைக்காரப்படைகள், யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, விற்படை ஆகிய படைப்பதிகள் இருந்தன. அவற்றிற்கெல்லாம் தலைமைச் சேனாபதியெனும் மாதண்ட நாயகனாக பஞ்சவன் மாராயன் என்னும் விருதுப்பெயருடன் இராசராசனின் மகனான இராசேந்திரசோழனே விளங்கினான். மற்றும் வில்லவன் மூவேந்த வேளான்; சேனாபதிகுரவன் உலகளந்தானான ராசராச மாராயன்; சேனாபதியான ஸ்ரீ கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழப் பிரமமாராயன்; சேனாபதி அப்பிரமேயன் என்பவர்களும் படைத்தலைவர்களாக இருந்தனர்.

நிறைந்த வலிமையும், சிறந்த போர்ப் பயிற்சியும் பெற்றுச் சிறந்திருந்த படைகளையும் வீரமே உருவான சேனாபதிகளையும் ஆற்றல் மிகுந்த மகனையும் இராசராசன் பெற்றிருந்தானாயினும் தான் வாளாவிருந்து அவர்களுக்கு ஆணையிட்டு பகை நாட்டின் மீது போர் தொடுத்து அவ்வழியே வரும் வெற்றியினையே தான் அடைந்தானில்லை. பகைவரை ஒடுக்கும் செயலில் உறுதுணையாகவும், வெற்றிக்கு வித்தாகவும் தானும் போர்க்களத்தில் உடனிருந்து நிகழ்த்திய போர்கள் பலவாகும். ஒரு சில நாட்டில் நிகழ்ந்த போர்களிலேயே இராசேந்திர சோழன் தலைமையில் படைசென்று வென்று வந்துளது.

இராசராசன் கி. பி. 985-ல் சோழப் பேரரசை ஏற்றான். இவனுக்கு முன்னர்



**V. S. கோதண்டபாணி B. SC., B. L.,**

*துணை ஆணையர்,*

*அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை.*

ஏழாண்டளவில் அரசியல் நடத்திய இவன் சிற்றப்பன் உத்தமசோழன், தனது தாய் செம்பியன் மாதேவியின் நீங்கா விருப்பிற் கேற்ப அரசு பெற்றிருந்த நாட்களில் சோழ மண்டலத்தைச் சூழ்ந்திருந்த பகைநாட்டரசுகள், முன்னர் இரண்டாம் பராந்தகனின் பெருவலியால் ஒடுங்கிக்கிடந்த நிலையினின்றும் உயிர்ப்பெய்திப் படைவலியை நாளும் மிகுப்பவாயின. இந்நிலையினை ஒருவாறு உணர்ந்தும் செயலாற்ற வியலாதிருந்த இராசராசன், தான் கி. பி. 985-ல் அரசு பெற்றவுடன் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டதோடு அரண்களையும் திண்மை உடையவைகளாக முதற்கண் ஆக்கிக்கொண்டான். பின்னர்,

### இராசாச்ரயன் :

தக்கவகையில் பயிற்சி அளிக்கப்பட்ட படைகளும், கருதிய காலமும் கைகூடிய அளவில் கி. பி. 994-ல் சேரநாட்டின்மீது படைகள் செல்லுமாறு கட்டளையிட்டான். சோழப் பெரும்படைக்குத் தலைமை ஏற்று நடத்தினன் இராசேந்திர சோழன். போர், சேரநாட்டில் காந்தளூர்ச்சாலை, விழிஞம் ஆகிய இடங்களில் நிகழ்ந்தது. போரில் சேரனுக்குத் துணையாகப் பாண்டியரும் சேர்ந்தே போரிட்டாராயினும், போர்க்களத்தில் இராசராசன் நேரில் நின்று படைகளை ஊக்கப்படுத்திய சிறப்பினல், பாண்டியரும் சேரமானும் தோற்றனர். காந்தளூர்ச்சாலை எனும் கடற்றுறைப்பட்டினம் கைப்பற்றப்பட்டது. பகைவருடைய பெருநிதிகளை இராசராசன் கைக்கொண்டான். இதனை, "பாண்டியர்களையும் சேரமானையும் எறிந்து கொண்ட பண்டாரம்" என்று கூறும் தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டுச் செய்தியால் அறிய முடிகின்றது.

இம்முதற்போரில் பெருவெற்றியடைந்த இராசராசன் காந்தளூர்ச்சாலை எனும் சேர நாட்டுக் கடற்றுறையில், இருந்த பகைவரின் கப்பற்படையினைச் சிதைத்தொழித்து, நாகபட்டினத்திலிருந்து வங்கக்கடல் வழியாகக் குமரிமுனையைக் கடந்துவந்த தனது கப்பற்படை அத்துறையில் நிலைபெறுமாறு அருளிச்செய்தான். இதனை, "காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி" என்னும் இவனது மெய்க்கீர்த்திப் பகுதி உணர்த்துகின்றது.

### மலைநாட்டில் பிறந்தநாள் :

இவ்வாறு, தனது வலியைச்சேர நாட்டில் மிகுத்துக்கொண்ட இராசராசன், அந் நாட்டில் தன் ஆட்சியை நிலைபெறச்செய்ய ஆவன முயன்ற காலத்தில், தாம் பிறந்த ஐப்பசித்திங்கள் வந்துற்றதால், சேர நாட்டு, திருநந்திக்கரை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலுக்குத்தன் பிறந்தநாளாகிய ஐப்பசித் திங்கள் சதயநாளில், திருவிழா நிகழ 'முட்டம்' என்னும் ஊர் வருவாயினைத் தேவதான இறையிலியாக அளித்தனன். இச்செய்தியினை அக்கோயிற் கல்வெட்டு ஒன்று தெளிவாக அறிவிக்கின்றது.

சேரநாட்டுப் போரில் பாண்டியரும் சேரனும் இராசராசனல் வெல்லப்பட்டனர். பாண்டி மண்டலம் இராசராச மண்டலமென வழங்கப்பட்டது. இராசராசனும் 'தென்னவன் பராக்கிரமன்' என்னும் விருதினைப்பெற்றுன். இவ்வளவில், சேர சோழ பாண்டிய நாடுகட்கு மன்னனக விளங்கிய இராசராசன் 'மும்முடிச்சோழன்' என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றுன்.

### வினைத்திட்பம் :

மிக்கவலிமையுடன் சோழப்பேரரசை ஒழிக்கும் மாறுத வெறியோடு தொடர்ந்து செயல்பட்டு வந்த பகைவர் மேலைச்சளுக்கியரேயாவர். அவர்களோடு வழிவழியாகச் சோழ மன்னர்களும் தளராமல் போரிட்டு வந்துள்ளனர். இராசராசனது காலத்திலும் மேலைச்சளுக்கியர் பகை வலுத்தே நின்றது. எனவே, அவர்களைத் திட்டமுடன் அடக்கும் முயற்சியில் இராசராசன் ஈடுபடலானுன்.

மேலைச்சளுக்கியர்க்கு கீழைச்சளுக்கியர் உறவு முறையினர் ஆதலின், அவர்களின் இணைப்பால் மிக்க வலிமையடைந்திருந்த மேலைச்சளுக்கியரின் நிலையைப் பிரிக்கும் அரசியல் சூழ்ச்சியுடன், தன் மகன் இராசேந்திரனைக் கீழைச்சளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுமாறு செய்து, அந் நாட்டின் ஒரு பகுதியாகிய வேங்கிநாட்டைக் கைப்பற்றியதோடு சக்திவர்மன் என்னும் கீழைச்சளுக்கியனேடு நட்புக் கொண்டு, வேங்கியைத் தன்னரசுக்கு அடங்கி ஆளுமாறு பணித்தான். இராசராசனது ஆதரவால் அரசு பெற்று நட்புரிமையுடன் இருந்த சக்திவர்மனுடைய தம்பி விமலாதித்தனுக்கு இராசராசன் தன்மகள் குந்தவையை மணம் செய்து கொடுத்து, நட்பினை உறவாகவும் ஆக்கிக்கொண்டான். இவ்வருஞ் செயல்களால் கீழைச் சளுக்கிய நாடு மேலைச் சளுக்கியரோடு சேர்ந்திருப்பதினின்றும் பிரிந்து, சோழப்பேரரசின் சிறந்த உறுப்பாக விளங்கியது. இந்நிகழ்ச்சிகட்குப் பின்னரே, நிலைத்த பகைவராகிய மேலைச் சளுக்கியரை வென்றடக்கக் கருதினன் இராசராசன்.

### சத்தியாசிரய குலகாலன் :

சோழர்படை மேலைச்சளுக்கிய நாட்டின் மீது இராசேந்திரனுடைய தலைமையில் சென்றது. இராசராசனும் தனது ஒப்பற்ற குதிரைமீது போர்க்கோலம் பூண்டு படையுடன் சென்றுன்.

அப்பொழுது, மேலைச் சளுக்கிய நாட்டின் ஆட்சி சத்தியாசிரயன் என்னும் சளுக்கிய மன்னனிடம் இருந்தது. மிகுந்தபடையுடன் இருந்த சத்யாசிரயன் தன்படையுடன் சோழர்படையை எதிர்த்தான். ஒன்பது இலக்கம் போர்வீரரைக் கொண்ட படையுடன் இராசராசனும் இராசேந்திரனும் சத்தியாசிரயனேடு போரிட்டனர். போர் உச்சநிலையை அடைந்தபோது, சத்தியாசிரயனுக்கு வாணதிராயன் என்னும் அரசன் படையோடு வந்து துணை செய்தான். பகைவரின் வலிமை மிகுவதை நேரில் கண்ட இராசராசன்,

"ஒரு நொடியில் தான் ஒருவனகவே குதிரையில் ஏறிக்கொண்டு, மிக்க வேகத்துடன் வந்து கொண்டிருந்த சத்யாசிரயனுடைய படையை விண்ணினின்றும் வேகத்துடன் விழுகின்ற கங்கையைச் சிவபெருமான் சடையினல் தாங்கியதைப்போல விளையாட்டாகத் தனது ஒளிபொருந்திய கொடிபோன்ற வாளினல் எதிர்த்து நின்றுன்"

"பெருந்தோள் படைத்த இராசராசன் சத்யாசிரயனுக்குத் துணையாக வந்த வாணதிராயனைப் படைக்கலங்களால் அடியோடு அழித்து, அவனுடைய சேனபதி போகதேவன் தலையையும் வெட்டி உருட்டினன்."

"அந்நிலையில், சத்யாசிரயனின் சேனைத் தலைவன் கேசவன் என்பவன் எதிர்க்க, அவனை இராசராசன் தன் படைவலியால் வளைத்துபிடிக்கச்செய்து, சிறைசெய்தான்."

"பகைவருடைய படைகளை அழித்துக் கொண்டிருக்கும் அரசரேருகிய இராசராசன், ஊழிக்காலத்தில் சராசரங்களை ஒரு சேர அழிக்கும் பினகம் என்னும் வில்லையுடைய சிவபெருமானைப் போல விளங்கினன்."

"இராசராசனல் பகைவரின் படை அழிக்கப்பட்டபோது, ஆங்கு அவயவங்களில் இராசராசனது வாளால் வெட்டுப் படாத பகைவன் ஒருவனும் இல்லை."

"சத்யாசிரயனுடைய படையாகிற கடலைத் தனது புயங்களாகிய மந்தரமலையினல் வலிமையுடன் கடைந்து புகழாகின்ற மதியுடன் வெற்றித்திருமகளையும் இராசராசன் ஏற்றுக்கொண்டான்."

*(கரந்தைத் தமிழ்ச்சங்கம், முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள். மன்னர் மரபுப்புகழ்ச்சி (பிரசஸ்தி) உரை—29—34.)*

சத்யாசிரயனேடு இராசராசன் நேர் நின்று போர் புரிந்ததாக மேலே விளக்கப் பெறும் செய்திகள் கற்பனையல்ல. கி. பி. 1020-ல் முதல் இராசேந்திர சோழன் தன் தாய் திரிபுவன மாதேவியின் பெயரால் செய்த அறச் செயல்களைக் கூறும் அவனுடைய செப்பேடுகளின் முதற்பகுதியாகும் மன்னர் மரபுவழிப் புகழ்ச்சியுரையில் வடமொழிச் சுலோகங்களாகக் (பிரசஸ்தி) கூறப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புடைய செய்திகளேயாம்.

இவ்வாறு இராசராசன் குதிரை வீரனக வாளேந்தி, சத்தியாசிரயனேடு நேருக்கு நேர் போர் புரிந்தது பிற்காலச் சோழர் வரலாற்றில் புதிய செய்தியாகும்.



ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப்
சத்ரபதி சீனியர் பிரின்ஸ்.
தஞ்சை அரண்மனை தேவஸ்தானப்
பரம்பரை அறங்காவலர்

போரில் சத்யாசிரயன் தோற்றேடினன். மேலேச் சளுக்கியநாடு சோழ வீரர்களால் கொள்ளையிடப் பட்டும், தீயிடப் பட்டும் சிதைந்து நின்றது. அந்நாட்டுச் செல்வங்களை இராசராசன் கைப்பற்றிய வெற்றிச் சிறப்போடு கி. பி. 1007-ல் தஞ்சைக்கு மீண்டான். சேர பாண்டிய நாடுகளிலிருந்து கொண்டுவந்த பண்டாரங்களையும், சளுக்கிய நாட்டிலிருந்து கைப்பற்றிய பெரும் பொருளையும், தான் எழுப்பிக்கொண்டிருந்த இராசராசேச்சரத்தின் திருப்பணிக்குச் செலவிட்டான்.

மற்றும், மேலேச் சளுக்கிய மன்னன் சத்யாசிரயனை வென்றது தன் தோள் வலிமையாலன்று; சிவபெருமானின் திருவருளாலேயாம் என்ற உறுதிப் பாட்டுடன் தலைநகராகிய தஞ்சைக்கு வந்துற்ற இராசராசன் தான் பிரதிட்டிப்பித்த தட்சிணமேரு விடங்கரைப் பொற்பூக்களால் அருச்சித்து வழிபட்டான். இதனை, " சத்யாசிரயனை எறிந்து எழுந்தருளி வந்து, தட்சிண மேரு விடங்கர்க்கு ஸ்ரீ பாதபுட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற்பூ " என்னும் இராசராசேச்சரக் கல்வெட்டுப் பகுதி தெளிவாக உணர்த்துகின்றது.

மாவீரன் இராசராசன் :

இவ்வாறு இராசராசன் தன் தோள் வலிமையால் பகைவரைவென்ற மாவீரனுகத் திகழ்ந்தாலும், தான் என்னும் அகந்தையின்றி, எல்லாம் இறையருள் என்னும் தெய்வ நம்பிக்கை மிகுந்த மனத்தையுடைய இறைவனடியவனுக விளங்கிய பேரரசனுவானென்பதை இக்கட்டுரை நன்கு உணர்த்துவதாகும்.

மற்றும், இராசராசனுக்கு, தமிழகத்துச் சான்றேரும் மக்களும் படிமம் செய்தமைக்கக் கருதின், வனப்பும் வலிமையும் பொருந்திய போர்க்குதிரைமீது, வாளேந்திய நிலையில், பெருமிதத்தோடு இராசராசன் வீற்றிருக்கும் பாங்கில், மாவீரனுக (மா+வீரன்= குதிரை வீரன்) திகழச் செய்வதே உண்மை வரலாற்றுக்கு உரியதாகும்.

# ஸ்ரீ சார்ந்தாரைக்காத்த சுவாமி திருக்கோயில்

## தில்லையாடி — வள்ளியம்மை நகர்

இவ்வூர் மாயூரம் — தரங்கம்பாடி இருப்புப் பாதையில் உள்ளது. விக்கிரமசோழ மன்னனின் முதலமைச்சர் இளங்கார முனிவரால் இக்கோயில் எடுப்பிக்கப் பெற்றது. இறைவன் பெயர் சார்ந்தாரைக்காத்த சுவாமி. இறைவியின் பெயர் பெரிய நாயகி. திருமால் இரணியனைக் கொன்ற பழி நீங்குதற்காக சிவனை வழிபட்டு பேறுபெற்ற தலம்.

தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகளின் போராட்டத்தில் பங்குகொண்டு உயிர்நீத்து அமரத்துவம் எய்திய தியாகி வள்ளியம்மை தோன்றிய பெருமையும் இவ்வூருக்கு உண்டு.

**M. தங்கராசன்,**
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள் :

P. செல்லையன் (தலைவர்)
R. தீனதயாளன்
V. உலகநாதன்

# இராசராசன் திருவுருவச்சிலை திறப்பு விழா



தஞ்சைப் பெருவுடையார்கோவில் முன்புறம் அமைந்துள்ள இராசராசன் திருவுருவச்சிலை திறப்பு விழாவில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களும், கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்களும், அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்களும், உணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. நாராயணசாமி அவர்களும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்

## ஒழுகமங்கலம்

எருக்கட்டாஞ்சேரி — மாயூரம் வட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் திருக்கடையூருக்குத் தெற்கே 4 கல் தொலைவிலுள்ளது. இக்கோயில் மிகத் தொன்மையானது. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இத் திருக்கோயிலும் ஒன்று. தலவிருட்சமான வேப்பமரத்திலிருந்து பால் ஒழுகியிருந்தமையால் அந்த இடத்தில் 'சக்தி' வழங்கியதால் ஒழுகைமங்கலம் என்னும் பெயர் வழங்கியதாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

அம்பாளுக்கு ஆண்டு தோறும் பங்குனித் திங்களில் ஒருமாத காலம் பெருந்திருவிழா நடைபெற்று வருகிறது. ஷை திருவிழாவில் தேர், உதிரவாய், மஞ்சள்நீர் உற்சவம் ஆகிய நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால் காவடிகளும், பாடைகாவடிகளும் எடுத்து அம்பாளை வழிபட்டு அருள் பெறுகின்றார்கள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைதோறும் பிரார்த்தனைக்காக பக்தர்கள் பலரும் வந்து ஸ்ரீ அம்பாளின் சந்நிதியில் இரவு தங்கிச் செல்கின்றனர்.

ஒழுகைமங்கல பேசுந்தெய்வம் பெருவுடையாள். பத்திசெய் பக்தர்கள் எஞ்ஞான்றும் இடர்வாராமே ஏத்தித்தொழுது இன்பங்காண அன்னை தன்னையே அடைவர். இறைவன் என்ற சொல்தன்னைக் கடவுள் என்பர்.

எல்லையற்ற தன்மையுடையன் என்பதனையே இச்சொல் குறிக்கும். எல்லாவல்லமையையும் எல்லையற்று வழங்குகிற அன்னையும் அருங்கடவுளே யாவள். ஒழுகைமங்கலத்தில் எழுந்தருளி தன்னடைந்தார்க்கு இனியளாய், அருள் வெள்ளத்தை பாலித்துப் வருகின்றாள். பூ நாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவி கேட்ப நாநாளும் நவின்றேத்த வரும் அடியவர்கட்கு தன் கடைக்கண் வெள்ளத்தைப் பாலிப்பதனல் பக்தர்கள் தம் மூவினைத் துன்பத்தையும் போக்கியவர்கள் ஆகின்றனர்.

இத்திருக்கோயில் ரூ 1,25,000 செலவில் கருங்கல் திருப்பணி நடைபெற இருக்கிறது.

மேலாளர்
சி. தங்கையா

பரம்பரை தர்மகர்த்தர்கள் :
V. N. S. ராமசாமி நாயுடு
V. N. S. ரெங்கராஜ் நாயுடு
V. N. கோதண்டராம் நாயுடு

# ஸ்ரீ சம்பந்தசுவாமி ஆலயம்

## சித்தர்க்காடு

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

"பொன்னி நதி" என்னும் காவிரி தென்கரையில் மும்மூர்த்திகள் வழிபட்ட மூவலூருக்குக் கிழக்கே, கௌரி மாயூரம் என்னும் திருமயிலாடுதுறைக்கு மேற்கே அமைந்து உள்ளது. திருஞானசம்பந்தர் 'திருத்துருத்தி' என்னும் குத்தாலத்தில் இறைவனை வழுத்தி காவிரி வடகரை வழியே வந்தவர் மும்மூர்த்தி வழிபட்ட தலம் வெண்மணலே லிங்கமாகத் தெரிய, தென்கரை கீழ எல்லைவந்து சிவவழிபாடு செய்தார். அவர் அமைத்த ஆலயம் இதுவே. இறைவன் ஸ்ரீ பிர்மபுரீசர் ; இறைவி திரிபுரசுந்தரி. தீர்த்தம் சம்பந்தர் தீர்த்தம். ஞானப்பாலுண்ட விழா, சம்பந்தர் ஐக்கியம் சிறப்பு விழாக்கள் ஆகும்.

V. சேதுராமன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
S. இராதாகிருஷ்ணன் B. com. (தலைவர்)
R. ராமலிங்கம் பிள்ளை, M. இராமநாதநயினர்

# ஸ்ரீ பசுபதீசுவரசுவாமி
# ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்

## பந்தணைநல்லூர்

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணத்திலிருந்து வடகிழக்கில் 18 கல் தொலைவிலும் குத்தாலத்துக்கு வடக்கே 6 கல் தொலைவிலும் உள்ளது. இத்தலத்து இறைவன் ஸ்ரீ பசுபதீசுவரசுவாமி, இறைவி ஸ்ரீ வேணுபுஜாம்பிகை. இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய சமயக்குரவர்களால் பாடல் பெற்றது. இத்தலப்பெருமாள் திருநாமம் ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள், இறைவி ஸ்ரீ பரிமளவல்லி என்பதாம்.

இத்திருக்கோயில் மிகவும் பழைமையானது. இக்கோயில் அமைந்திருக்கும் கட்டிடக்கலையின் பாணியிலிருந்து இது சோழன் காலத்தில் கட்டப்பட்டு இருக்கலாம் என ஒருவாறு ஊகிக்க வேண்டியுள்ளது.

ஸ்ரீ பசுபதீசுவரருக்கு மாசி மக உற்சவமும், ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாளுக்கு பங்குனி உத்திர உற்சவமும் இங்கு சிறப்புடையது.

V. நாராயணன் B. A.
நிர்வாக அதிகாரி

பரம்பரை அறங்காவலர்கள் :
P. மணிப்பிள்ளை (தலைவர்) P. பெத்துராஜபிள்ளை

மு. கண்ணப்பன்
அறநிலைய அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை - 9
26—10—1972

பொற்றுத காவிரிப்புனல் பாயும் செந்தமிழ் நாட்டின் தமிழ்ப்பாவலர்கள் திறமிக்க சொல்லோவியங்கள் தீட்டி நாட்டைச் சிறப்பித்தார்கள். அரும்பெரும் சோழப்புரவலர் களோ பல கல்லோவியங்களை வானளாவ எடுப்பித்து தமிழ் நாட்டின் பெருமையை வான ஏட்டிலே எழுதி சிறப்பித் துள்ளார்கள். அத்தகைய சோழ மன்னர்களிலே பெருஞ் சிறப்புக்கு உரியவனும், தஞ்சைப் பெருவுடையார் திருக் கோயிலைச் சமைத்து அழியாப் புகழுற்று, மாமன்னன் முதலாய் பல்வேறு சிறப்புப் பெயர்களைத் தாங்கியவனுமான இராசராச சோழனின் பிறந்தநாளை சதயப் பெருவிழாவாக, வரும் நவம்பர்த்திங்கள் 15, 16 ஆகிய தேதிகளில் சிறப்பான முறையில் நடாத்திட இருப்பதை அறிந்து மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். விழா சிறப்புற அமையவும், விழா வினையொட்டி வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலர் மணம் நிறைந்து பரப்பவும் என் நல்வாழ்த்துக்களை உரித்தாக்கு கிறேன்.

அன்புள்ள,

மு. கண்ணப்பன்

# ஸ்ரீ ஆலந்துறையப்பர் சுவாமி

## தேவஸ்தானம்

## சித்தர்க்காடு

மாயூரம் அஞ்சல்    தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து 3 பர்லாங் தொலைவில் கும்பகோணம் செல்லும் பெருவழியில் இருக்கிறது. காவிரியின் தென்பால் உள்ள சித்தர்வனத்தில் சித்தர்கள் பலர் தங்கி யோகம் புரிந்த இடமாதலால் இவ்வூருக்கு 'சித்தர்க்காடு' எனப் பெயர். இத்தலத்திற்கு "வடவாரண்யம்" என்ற பெயரும் உண்டு. இத்தலத்திலுள்ள கருணமூர்த்தி பட்ட ஆலமரம் துளிர்ந்து எழுந்தருளியதால் "ஸ்ரீ ஆலந்துறையப்பர்" எனப்பெயர் பெற்றூர். சித்தர்க்காடு சந்தை இவ்வாலயத்திற்குச் சொந்தமானது. இது தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்தது.

**V. சேதுராமன்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

எஸ். ராதாகிருஷ்ணன் பி. காம்., (தலைவர்)
ஆர். ராமலிங்கம்   ஆர். நாராயணசாமி
வி. குஞ்சிதபாதம்   வி. ராமசாமி

---

SRI KASI MUTT RELIGIOUS CHARITIES, TIRUPANANDAL
**PROPRIETOR & TRUSTEE**
**H. H. SRI-LA-SRI KASIVASI MUTHUKUMARA SWAMI TAMBIRANSWAMIGAL AVERGAL**

## திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடுகள் :

| | | பக்கம் | விலை |
|---|---|---|---|
| 1, | திருக்குறள் உரைக்கொத்து | | |
| | அறத்துப்பால் | 12 + 368 | ரூ. 2 00 |
| | பொருட்பால் | 36 + 800 | ரூ. 2 75 |
| | காமத்துப்பால் | 12 + 304 | ரூ. 1 75 |
| 2. | பரிமேலழகருரை மட்டும் | xxii 570 | ரூ. 2 25 |
| 3. | திருக்குறள் மூலம் | | ரூ. 0 25 |
| 4. | திருக்குறள் - அறத்துப்பால் - சிற்றுரை | | ரூ. 0 20 |
| 5. | மணக்குடவருரை | அச்சில் | |

ஒவ்வொன்றிலும் 20 பிரதிகளுக்குக் குறையாமல் வாங்குவோர்க்கு 20% கழிவு உண்டு.

கிடைக்குமிடம் :- 1. ஸ்ரீ T. M. குமரகுருபரன்பிள்ளை, B.A.,B.L., அவர்கள்
வக்கீல், ஸ்ரீவைகுண்டம்.

2. ஸ்ரீ க. சுப்பிரமணிய அய்யர் B. A., அவர்கள்
தியாகராஜ விலாசம், 53, பிள்ளையார்கோயில் தெரு, சென்னை-5.

---

# ஸ்ரீ கல்யாணரெங்கநாதசுவாமி திருக்கோயில்

சீர்காழி வட்டம்   **திருநகரி**   தஞ்சை மாவட்டம்

108 வைணவ திருத்தலங்களில் இதுவும் சிறப்பு மிக்கதாகும். சீர்காழியில் இருந்து பெருந்தோட்டம் செல்லும் பஸ் மார்க்கத்தில் உள்ளது. ஸ்ரீ உடையவர் காலத்திற்கு முற்பட்டது. ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. பஞ்சநரசிம்ம தலங்களில் ஒன்றுகும். திருமங்கை ஆழ்வாருக்குத் தனி சந்நதியும் அமைக்கப்பெற்றுள்ளது.

கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அவதாரதிருவிழாவும், தைமாத அமாவாசையில் மங்களாசாசனமும், 12 கருடசேவை திருவிழாவும், பங்குனி மாதத்தில் ஸ்ரீ பெருமாள் பிரம்மோத்சவமும் இங்கு நடைபெறும் முக்கிய திருவிழாவாகும்.

திருமங்கை மன்னனுக்கு ஸ்ரீ பெருமாள் மந்திர உபதேசம் செய்த இடம் இவ்வூரின் அருகில் உள்ளது.

அறங்காவலர்கள் :

S. துரைசாமி (தலைவர்)   A. தனபாலன் B. A.,
P. ஆண்டித்தேவர்   V. மகாலிங்கம்   நிர்வாக அதிகாரி

**மன்னை ப. நாராயணசாமி**
உணவுத்துறை அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
**சென்னை – 9**

தேதி : 13—10—72

சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசனின் பிறந்தநாள் சதய விழா கடந்த ஆண்டுகளைப்போன்று இவ்வாண்டும் தஞ்சை நகர்தன்னில் சிறப்புற நடைபெற இருப்பதறிந்து மகிழ்கிறேன்.

வாகைசூடி, இனிய தமிழ்நாடி, வண்டமிழ்ப் புலவர் பாட உயர்ந்து நின்றான் பெருமன்னன் இராசராசன். அன்பும், அறமும் இனிதே கோலோச்சி நின்றன அவனது குடையின் கீழ். கலைவளர்த்த தமிழ் மன்னன் சிலை வடித்துப் போற்றியதோடு அவனது பிறந்த நன்னாளையும் கோல எழிலுடன் கொண்டாடி வருதல் தமிழினம் பெருமை கொள்ளத் தக்கதாகும்.

மாமன்னன் விழா சிறக்க, மலர் பயனுறஅமைய என் இனிய நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

*ப. நாராயணசாமி*

Phone No. Swi. P. O. O. Extn 1.

# திரு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

## சுவாமிமலை

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் ஆறுபடை வீடுகளுள் நான்காவது படைவீடாக போற்றப்பட்டுபக்தர்களால் வழிபாடு செய்யப்பட்டுவருகின்றது. இத்தலத்து முருகவேள் தந்தைக்கு உபதேசித்த ஞானதேசிகன். இவரை மெய்யன்புடன் வழிப்ட்டோர் உண்மை ஞானத்தைப் பெறுவர். திரு. அருணகிரிநாதரால் நாற்பது திருப்புகழ் பாடல்களும், நக்கீரரால் திருமுருகாற்றுப்படையும் பாடப்பெற்றது. திருக்கார்த்திகை விழாவும் பங்குனி மாதத்தில் நடைபெறும் திரு வள்ளி கல்யாண விழாவும் மிகவும் சிறப்புடையனவாகும். திருஞான சம்பந்தப்பெருந்தகையராலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடல்கள் பெற்ற புகழ்வாய்ந்த கீழ்க்கண்ட ஆலயங்களும் இவ்வாலயத்துடன் இணை கோயில்களாக விளங்கி வருகின்றன.

1. திரு. சுவேதவிக்னேஸ்வரசுவாமி திருக்கோயில், திருவலஞ்சுழி.
2. திரு. ஸ்கந்தநாதசுவாமி திருக்கோயில், ஏரகரம்.
3. திரு. சக்கரவாகீஸ்வரசுவாமி திருக்கோயில், சக்கராப்பள்ளி.
4. திரு. தர்மபுரீஸ்வரசுவாமி திருக்கோயில், வள்ளலார்கோயில்.
5. திரு. சோமநாதசுவாமி திருக்கோயில், கீழப்பழையாறை.

இத்தலம் கும்பகோணம் - தஞ்சாவூர் புகை வண்டிப்பாதையில் சுவாமிமலை புகை வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் மிக அருகாமையில் ஓடும் காவேரி ஆறு இவ்வாலயத்தின் அழகான அமைப்பை மேம்படுத்திக் காட்டுவதுபோல் அமைந்திருப்பது இவ்வாலயத்திற்குத் தனிச் சிறப்பாகும். திரு விழாக்காலங்களிலும், கல்யாண நாட்களிலும், மாதாந்திர கார்த்திகைத்தினங் களிலும் மக்கள் பெருவெள்ளம்போல் திரண்டுவந்து திரு சுவாமிநாதப் பெருமானைத் தரிசித்துச் செல்லும் காட்சி மிகவும் கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். இதை கண்ணுறும் பக்தர்கள் இவ்வாலயத்திற்கு அவசியம் வருகை தந்து திரு சுவாமிநாதப்பெருமானை வழிபட்டு இம்மை, மறுமைப் பயனைப்பெற்றுய்ய விழைகிறோம்.

**எஸ். மகாலிங்கம், B. sc.,**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

டி. எஸ். சுவாமிநாத உடையார் (தலைவர்)
பி. ராமசாமிதேவர்
எஸ். கோவிந்தசாமி பிள்ளை
ஆர். எஸ். முத்து
என். சுவாமிநாதன்

# ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில்

## திருவாரூர்

இவ்வூரில் கோயில் கொண்டுள்ள அருவுருவத் திருமேனி தாங்கிய இறைவர் வன்மீக நாதராக (புற்றிடங்கொண்டார்) உள்ளார். இப்பெருமான் அமர்ந்துள்ள கருவறையே பூங்கோயில் எனப்படுகின்றது. "பூங்கோயில் உள்ளிருந்து போகாதிருந்தாரே" என்பது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு. தேவாரம் பாடிய மூவரும் மாணிக்கவாசகரும் குமரகுருபரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் அருணகிரியாரும் இத் தலத்தைப் புகழ்ந்து பாடி யுள்ளனர்.

இக்கோயிலின் பரப்பு ஐந்து வேலியாகும். இக்கோயில் சிற்பக்கலையிலும், ஓவியக்கலையிலும், தலைசிறந்து விளங்குவது. இத்தலத்துக்கு மேலும் பெருமைதருவன ஐவேலி பரப்பினையுடைய கமலாலயம் எனும் திருக்குளமும், திருத்தேருமாகும். இக்கோயிலில் ஸ்ரீ கமலாம்பாள் ஆடிப்பூர உத்ஸவமும், மார்கழியில் திருவாதிரையும், பங்குனியில் உத்திரவிழாவும், தெப்போத்ஸவமும் மிகச் சிறப்புடைய நிகழ்ச்சிகள் ஆகும்.

*திரு. B. கிருஷ்ணசுவாமி*
நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ பரிமளரெங்கநாதர் திருக்கோயில்

## திருஇந்தளூர், மாயூரம்

தஞ்சை மாவட்டம் — தொலைபேசி எண் 330

இத்திருக்கோயில் காவிரி நதிக்கு வடக்கே மாயூரம் — மணல்மேடு பேருந்து நிலையத்தில் இருந்து 1 கி. மீட்டர் தொலைவில் இருக்கிறது. இக் கோயிலுக்கு அருகில் நீடூர் புகைவண்டிநிலையம் (சுமார் 2 கி. மீ.) உள்ளது. இந்தக்கோயிலுக்கு மாயூரம் பேருந்து நிலையத்தில் இருந்து நெ. 1 டவுன் பஸ் வசதியும் உண்டு.

108 திவ்ய தலங்களில் ஒன்றுவதும், திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டதுமான இக்கோயிலை வந்து தரிசியுங்கள் என்று அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**எஸ். ராமசாமி**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

ஆர். பழனிச்சாமி (தலைவர்)
பி. கிருஷ்ணமூர்த்தி
எஸ். என். குருமூர்த்தி
கே. எஸ். ராஜகோபாலன்
இ. எஸ். கணபதி

ம. பொ. சிவஞானம்,
துணைத் தலைவர்,
தமிழ் நாடு சட்டமன்றம்.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 9,
11—10—1972.

வணக்கம். நவம்பர் 15, 16 தேதிகளில் பெருமன்னன் ராஜராஜனின் சதயத் திருநாள் விழா கொண்டாடுவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நன்னுளை ஆண்டு தவறாமல் கொண்டாடி வரும் அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். ராஜராஜ சோழன் பிறந்திலையானால் தமிழினத்தின் வாழ்வு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முடிந்துபோயிருக்கும். அவன் அமைத்த சோழப் பேரரசு தமிழினத்தின் ஒற்றுமையால் ஆக்கப்பட்டிருப்பின், பிற ஏகாதிபத்தியங்கள் தமிழ்நாட்டில் கால் வைத்திருக்க முடியாது.

ராஜராஜன் மன்னன் மட்டுமல்ல; சைவ நெறி காத்த சன்மார்க்கியுமாவான். அவன் புரிந்த அற்புதங்களை ஒரு தனி நூலாகவே எழுத வேண்டுமென்பது என் விருப்பம். காலம் கைகொடுப்பின், அதைச்செய்து முடிப்பேன். விழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,
ம. பொ. சிவஞானம்

# ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

## திருலோக்கி

கும்பகோணம் வட்டம் ✳ தஞ்சை மாவட்டம்

இத்தலம், கும்பகோணம் வட்டத்தில், கும்பகோணம் - அணைக்கரை நெடுஞ்சாலையில் உள்ள திருப்பனந்தாளிலிருந்து கிழக்கே சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

தஞ்சை பெருவுடையார் கோவிலை எடுப்பித்த முதலாம் ராஜ ராஜ சோழனின் குருவான கருவூர்த்தேவரின் திருவிசைப்பாப்பாடல்கள் பதினொன்று பெற்ற சிறப்புத்தலம் இது. இந்த ஆலயத்தின் இறைவனை " திரைலோக்கிய சுந்தரம் " என்று கருவூர்த்தேவர் குறிப்பிட்டு உள்ளார்.

தற்போது இறைவன் பெயர் சுந்தரேஸ்வரர் என்றும், இறைவியின்பெயர் அகிலாண்டேஸ்வரி என்றும் வழங்குகிறது. இவ்வாலயத்தி லுள்ள ரிஷபாரூடர் சிலா மூர்த்தமும், ரதிமன்மத ஆலிங்கன சிற்பமும் வேறெங்கும் காணக்கிடைக்காதவை.

குருபகவானுக்கு, பரமேஸ்வரன் மார்கழி திருவாதிரையில், சகல தேவர்களும் புடை சூழ காட்சி அளித்து பாபவிமோசனம் அளித்ததாக ஐதீகம். இத்தலத்திலுள்ள மானசதீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், வருண தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபட்டால் ஊமை முதலான பிறவிக் குறைகள் நிவர்த்தியாகுமென நம்பப்படுகிறது.

தலவிருட்சம் : சரக்கொன்னை

அனைவரும் வந்து தரிசித்து இன்புற வேண்டுகிறோம்.

S. நல்லநாயகம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

தி. மு. இராசமாணிக்கம் (தலைவர்)

கு. இராசமாணிக்கம் M. L. A.

ரெ. கிருஷ்ணமூர்த்தி

# அருட்டிரு இரத்தினகிரீசுவரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் **திருமருகல்** தஞ்சை மாவட்டம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே.

— திருஞானசம்பந்தர்.

இத்தலத்தைப்பற்றிச் சேக்கிழார் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளியதைக் கூறும் பகுதி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியது. வைப்பூரில் தாமன் என்ற வணிகன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள். அவன் தன் சகோதரி மகனுக்குப் பெண் கொடுப்பதாகச் சொன்ன சொல் தவறி, பொருள் ஆசையால் முதல் ஆறு பெண்களையும் அயலாருக்கு மணம் முடித்துக் கொடுத்துவிட்டான். ஏழாவது பெண் தன் அத்தை மகனின் நிலைக்கிரங்கி, அவனுடன் புறப்பட்டுத் திருமருகலுக்கு வந்து மாணிக்கவண்ணரை வழிபட்டு இரவில் ஒரு மடத்தில் தங்கி இருந்தனள். இரவில் அவ்வணிகனைப் பாம்பு கடிக்க, அவன் இறந்தான். திக்கற்ற அந்த வணிகப்பெண் நெடுங்குரலெடுத்து அழுதுகொண்டு இருந்தாள். இத்தலத்திற்கு வந்து அடியார்களுடன் தங்கியிருந்த சம்பந்தர் காதில் அக்குரல் விழுந்தது. சம்பந்தர் எழுந்தருளிப் பெண்ணை விபரங்கேட்டார். அவளும் தன் கதையைச் சொன்னாள்.

காழி வேந்தரும் மாணிக்கவண்ணரை நோக்கிச் 'சடையாய் எனுமால்' என்ற தேவாரப் பதிகத்தை விண்ணப்பித்தார். உறங்கி விழித்தவன்போல் எழுந்தான் வணிகன். சம்பந்தர், மாணிக்கவண்ணர், வன்னி, வாழை, கிணறு இவை சான்றாக வணிகனுக்கும் அக்கன்னிகைக்கும் திருமணம் செய்து வைத்தனர். கோயில் சன்னதியில் வன்னிமரமும், திருமண மேடையும் இன்றும் நின்று காட்சி தருகின்றன. சித்திரைப் பெருவிழாவின் ஆருந்திருநாளன்று விடந்தீர்த்த புராண ஐதீகமும், ஏழாந்திருநாளன்று செட்டிப் பிள்ளைக்கும், செட்டிப் பெண்ணுக்கும் கலியாணமும் நடைபெறுகின்றன. இத்தலம் சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற சிறப்புடையது. குசகேது மன்னர் ஆட்சியில் கட்டியது. ஐந்து கால பூசைகள் நடைபெறுகின்றன. இலக்குமி தீர்த்தம் எனப் பெயர். சீராளன் கல்வி பயின்ற சாலையும் இங்கு அமைந்துள்ளது. இத்தலம் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் இருக்கிறது. நன்மக்கள் அனைவரும் வழிபட்டு உய்வோமாக!

கி. தியாகராசன்
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள்:

மா. சிங்காரவேலு (தலைவர்)
கோ. இராசாங்கம்
செ. வெங்கடராயலு

உ

ஸ்ரீ-ல-ஸ்ரீ
அம்பலவாண பண்டாரச்சன்னிதி அவர்கள்
ஆதீனகர்த்தர்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை
(தஞ்சை மாவட்டம்)
17—10—1972

# ஆசியுரை

இராசராசன் தமிழ்நாட்டு வரலாற்றின் பொற்காலச் சின்னமாகத் திகழ்ந்த தெய்வச் சோழத் தண்தமிழ்ப் பேரரசன்; திருவிசைப்பா ஆசிரியன்மார்களுள் கண்டராதித்தர் தேவியாகிய மாதேவ அடிகள் செம்பியன் மாதேவியால் வளர்க்கப்பெற்று, கருவூர்த்தேவரை ஞான ஆசிரியராகப்பெற்ற தனிச் சிறப்பு உடையவன்; சோழப்பேரரசின் எல்லையை நாற்றிசையிலும் விரிவு செய்து, தமிழ்ப் பண்பாட்டைக் கடல் கடந்த நிலங்களிலும் பரவச் செய்தவன்; அரசியல் திருவும், சிவஞானச் செல்வமும் ஒருங்கு உடையவனாய், குடி தழுவிக் கோல் ஓச்சி மக்கட்குக் கண்ணும் உயிரும் எனச் சிறந்து ஓங்கியவன்; சிவன் அடி மறவாச் சிந்தையன்; ஆயினும் பிற சமயத்தவர்களையும் பாதுகாத்தவன்.

இவன் தனது மேற்பார்வையில் திட்டமிட்டு அமைத்த தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் இந்தியாவில் உள்ள கோயில்களில் தலைசிறந்து நின்று, இம்மன்னர் மன்னனது வெற்றிக்கும், உள்ளொளிக்கும், கலையுணர்விற்கும் அடையாளமாக நிலவுகின்றது.

இத்தெய்வப் பேரரசனது பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதய விழா இவ்வாண்டில் 15, 16—11—72 ஆம் இருநாட்களில் நடைபெறவுள்ளது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைக்கின்றது.

இவ்விழாவால் மக்களிடத்துத் தெய்வந்தெளிதலும், தெளிந்தோர்ப் பேணலும், அறவுணர்வும், நன்முயற்சியும் வளர்ந்து ஓங்குக எனவும், விழா மலர் தமிழ் மணம் கமழ்ந்து உணர்வும் இன்பமும் பெருக்குக எனவும் வாழ்த்தி ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் செம்பொற்கழல்களைச் சிந்தித்திருக்கின்றோம்.

## ஸ்ரீ நாகநாதசுவாமி திருக்கோயில்

திருநாகேச்சுரம் — தஞ்சை மாவட்டம்

இறைவன் ஸ்ரீ நாகநாதர். இறைவி கிரிகுஜாம்பாள். ஆண்டுதோறும் கார்த்திகை ஞாயிறு தீர்த்தவாரியும், கடைஞாயிறு பெருவிழாவும் இத்தலத் தனிச் சிறப்பு. வைகாசி பூசத்தில் இவ்வாலயத்தில் கொண்டாடப்பெறும் 'சேக்கிழார் திருநாள்' தமிழகம் போற்றும் தனித்திருநாளாகும்.

நாகராசன் வழிபட்டதால் திருநாகேச்சுரம் என்னும் பெயர் பெற்ற இத் திருக்கோயிலில் ஸ்ரீ நாகநாதர் திருத்தொண்டர் சேர்ப்புப்பணியின்படி ரூ 5.00 செலுத்துபவருக்கு, அவருடைய பெயரில் ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் அர்ச்சனை செய்து திருநீறு குங்குமப்பிரசாதம் அனுப்பப்படுகின்றது. பெரிய புராணத்தில் உள்ள எல்லா பாடல்களையும் சலவைக்கல்லில் பதிக்கும் பணி நடைபெறுகின்றது. ரூபாய் ஐந்து லட்சம் செலவில் நடைபெறும் திருப்பணிக்கு தாராளமாக உதவ வேண்டுகிறோம்.

A. மாடசாமி
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
S. சிங்காரவேலு (தலைவர்)
M. S. S. சம்பந்தன்
S. ராமலிங்கம் பி. ஏ.

## ஸ்ரீ பிலாசவனேஸ்வரசுவாமி ஆலயம்

### திருநாலூர்மயானம்

திருச்சேறை அஞ்சல் :—: கும்பகோணம் வட்டம்

சைவசமய குரவர்களில் ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகளால் பாடப் பெற்ற பெருமை பெற்றதும், கல்பமுடிவில் மோக்ஷமடைய விரும்பிய பிரம தேவனால் பூசிக்கப் பெற்றவரும், ஆபஸ்தம்ப மகரிஷி பூசித்து அருள் பெற்றதும், பிரமமுத்தீசுவரர், பலாசவனநாதர், ஞானப்பிரதர், ஸ்வயம்பு நாதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவரும், கெஜப்பிருஷ்டம் என்ற விசேஷ கர்ப்ப விமானத்தில் பரிவாரங்களுடன் வீற்றிருக்கும் பெருமை வாய்ந்த. இத்தலம் சோழ வளநாட்டுக் காவிரித்தென்பால் 96 ஆவது தலமாகத் திகழ்கின்றது.

ஸ்தலவிருக்ஷம் : பலா

தீர்த்தம் : சந்திர தீர்த்தம்

நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ சாரநாதப்பெருமாள் தேவஸ்தானம்

### திருச்சேறை

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயில் குடந்தை புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே திருவாரூர் செல்லும் சாலையில் 9 கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும் இங்குச் செல்ல பேருந்து வசதியுண்டு. சோழமன்னர்களால் கட்டப்பட்ட இந்த ஆலயமானது திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்றது.

பெருமாளுக்கு இங்கு ஐந்து லட்சுமிகள் உண்டு. பெருமாளின் திருக்கையில் கமலமலர் உள்ளது.

தை மாதத்தில் தைப்பூசத் திருவிழா இங்கு நடைபெறுகிறது. இந்தக் கோயிலைத் தவிர வேறு எந்த விஷ்ணு ஆலயத்திலும் தைப்பூச விழா நடைபெறுவதில்லை. ஆவணி மாதத்தில் திருப்பவித்ரோத்சவம், புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா, ஐப்பசி மாதத்தில் மணவாள மாமுனி விழா, கார்த்திகை, மார்கழி மாதங்களில் திருவாய் மொழித் திருநாள் ஆகியவை இங்கு முக்கிய விழாக்களாகும்.

மேற்படி ஆலயத்தின் வடகிழக்கே ஒருபர்லாங் தூரத்தில் திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்ரீ சாரபரமேஸ்வரர் ஆலயம் உள்ளது. அது ஸ்ரீ சாரநாதப்பெருமாள் ஆலயத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

S. பிச்சையா B. A. (Hons.)
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
R. K. ராதாகிருஷ்ண செட்டியார் (தலைவர்)
R. பன்னீர்ச்செல்வம் T. S. கோவிந்தராஜன்
A. பழனிவேலு V. H. M. P. கோவிந்தராஜன்

உ
குருபாதம்

தருமையாதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P. O.
22—10—1972

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே "

படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் பழங்குடியினர் என்று பாராட்டப்பெறும் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்ட மாமன்னர்கள். இவர்கள் ஆட்சிக்காலம் தமிழக வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றப் பெறுகிறது.

ஆட்சி முறைகள், நாட்டுப் பாகுபாடுகள், கலை வளர்ச்சி, மொழி வளர்ச்சி, வாணிபம் முதலியவற்றால் இம்மன்னர்கள் செய்துள்ள தொண்டுகளை உலகம் புகழ்ந்து போற்றுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இம்மன்னர்கள் சமய வளர்ச்சிக்குச் செய்துள்ள பணிகள் மேலானவையாகும். இம்மன்னர்கள் தாங்கள் வாழ்ந்த அரண்மனைகளை அலங்கரித்துக் கட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக இறைவன் உறையும் நிலைபேறுடைய அரண்மனைகளைக் கட்டுவதிலேயே தங்கள் சிந்தனைகளைச் செலுத்தியுள்ளனர். இம்மன்னர்களின் அழியாப்புகழை அவர்கள் எடுப்பித்த ஆலயங்கள் இன்றளவும் விளக்கி நிற்கின்றன.

இம்மன்னர்கள் சிறந்த சிவபக்தர்களாக விளங்கியதை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் முதலியன வெளிப்படுத்துகின்றன. 'ஆனேறு உயர்த்தோன் அருளினில் வஞ்சித்தோன்றிய வானவன்' என்று புறச்சமயம் சார்ந்த இளங்கோவடிகள் தம்தமையன் செங்குட்டுவனைப்பாராட்டுகிறார். பூம்புகார் பிறவாயாக்கைப் பெரியோன் கோயில், ஆறுமுகச்செவ்வேள் அணிதிகழ் கோயில்களோடு விளங்கியதைக் கூறுகிறார்; பாண்டி மன்னர்களின் பக்தி உணர்வை வெளிப்படுத்தும்நிலையில் இறைவன் தென்பாண்டி நாட்டில் திருவிளையாடல் புரிந்து அந்நாட்டைச் சிவலோகமாக்குவித்தருளினான். இவ்வாறு மூவேந்தரும் சிவநெறிகளில் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்த வரலாறுகளை இலக்கியங்கள், புராணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் உணர்த்துகின்றன. இம்மன்னர்களின் தெய்விகத் தொண்டுகளை வெளிப்படுத்தும்வகையில் மூவேந்தர்களில் புகழ்ச்சோழர், நின்றசீர் நெடுமாறன், சேரமான்பெருமாள் முதலியோர் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரிசையில் இடம்பெற்று விளங்குகின்றனர்.

மூவேந்தர்களில் சோழமன்னர்கள் காவிரியின் இருகரை மருங்கிலும் எண்ணற்ற சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுத்த பெருமை உடையவர்கள். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்த பெருமை உடையவர்கள். இராசராசசோழன் தஞ்சையில் மிகப் பெரிய கோயிலை எடுத்தும், அடியார்களின் திரு உருவங்களை எழுந்தருளச் செய்தும் அணிகலன்கள் அளித்தும் நாள்வழிபாடு சிறப்புவழிபாடுகள் செய்வித்தும் சோழர் குடிக்குப் பெருஞ்சிறப்பு விளைத்த வேந்தனாக விளங்குகின்றான். சிவபாதசேகரன் என்ற சிறப்புப் பெயரோடு விளங்கிய இம்மன்னன் திருமுறைகளைத் தேடிக் கண்டு அவற்றைத் திருக்கோயில்களில் ஓதச்செய்தும் செப்பேடுகளில் படி எடுத்துக் காத்தும் 'திருமுறைகண்ட சோழன்' என்ற விருதுப் பெயர்பெற்றவன். இம்மன்னனின் பிறந்தநாட் பெருவிழாவாகிய ஐப்பசிச் சதயநாளை சதயவிழாக் குழுவினரும் அன்பர்களும் கொண்டாடுவதும், விழாவின் தொடர்பாக சிறப்பு மலர் வெளியிடுவதும் மகிழ்ச்சிக்குரியன.

விழா சிறப்புற நிகழவும், விழா மலர் நன்றாக மலர்ந்து மணம் வீசவும், இப்பணியில் ஈடுபடும் அன்பர்கள் பலர்க்கும் நலம் பல விளையவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

## திரு அருள்வள்ளல்நாதசுவாமி ஆலயம்

மாயூரம் வட்டம் திருமணஞ்சேரி தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் உமாதேவியாருக்கும், பரமேஸ்வரனுக்கும் திருமணம் நடந்த சிறப்பு வாய்ந்த இடம். திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல்பெற்றது.

வயதுவந்த திருமணமாகாத ஆடவரும் பெண்டிரும் திருமண சாந்திக்காக மாலை சாத்தி வழிபட்டால் தோஷம் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

இவ்வாலயத்தை ஒரு முறை தரிசித்து அருள்வள்ளல்நாதர் அருள் பெற்று உய்வீர்.

இரா. ஞானசம்பந்தம் B. A.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
K. சுப்பிரமண்ய செட்டியார் (தலைவர்)
G. மாரிமுத்து படையாட்சி, K. திருவேங்கடாச்சாரி

## ஸ்ரீ வேதபுரீஸ்வரர் திருக்கோயில்

மாயூரம் வட்டம் தேரழுந்தூர் தஞ்சை மாவட்டம்

இறைவன் ஸ்ரீ வேதபுரீஸ்வரர், இறைவி ஸ்ரீ சௌந்தரநாயகி, தீர்த்தம் வேதாமிர்ததீர்த்தம், தலவிருட்சம் சந்தன விருட்சம், இறைவனின் சாபத்தினால் பசுவான இறைவி பின் சௌந்தர உருவம் பெற்றதலம். வேதியர்களுக்கு வேதத்தை ஓதுவித்து இறைவன் அகத்தியர் சாபம் நீக்கிய திருத்தலம். காவிரிக்கு தனிக்கோயில் உண்டு. திருஞானசம்பந்தருக்கு ஈஸ்வரர் ஆலய இருப்பிடத்தைச் சுட்டிக்காட்டிய ஸ்ரீ ஞானசம்பந்த விநாயகர் ஆலயம் இதன் உபகோயில். மாசிமாத புனர்வசு தினத்தன்று இவ்வூர் பெருமாளுக்கு இறைவன் காட்சி அளித்தல். மாசி மாதம் 22, 23, 24 தேதிகளில் சூரிய பூஜை நடைபெறும். கல்வெட்டுகள் பல நிறைந்தது. சிவன் விஷ்ணு சொக்கட்டான் ஆடிய மண்டபம் பார்க்கச் சிறந்தது. சரித்திர பிரசித்தியும் பெற்றது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம்.

பி. பத்மநாபன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
டி. ஆர். ராஜு (தலைவர்)
டி. ஆர். கேசவன் டி. எஸ். சுவாமிநாத முதலியார்

## ஸ்ரீ ஸாக்ஷிநாதர் ஆலயம்

### திருப்புறம்பயம்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்து கல் தொலைவில் உள்ளதும், தஞ்சை மன்னர் ஸ்ரீ ராஜராஜசோழ மன்னரால் கட்டப்பட்டதும் சமயாசாரியர்கள் நால்வராலும் பாடல் பெற்றதும் இந்திரனால் கிளிஞ்சல் முதலிய கடல் விளைபொருள்களாலாக்கி போற்றி வழிபடப் பெற்ற ஸ்ரீ பிரளயங்காத்த விநாயகப்பெருமானையும் சநகாதி நால்வர்க்கு அறப்பயனாகிய ஐந்தெழுத்தை உபதேசித்தருளிய ஆலமர் கடவுளையும் சிறப்புடை மூர்த்திகளாகக் கொண்டிருப்பதும் அரவு தீண்டி இறந்த வணிக மைந்தனை உயிர்ப்பித்து மணமுடித்து வைத்து "வன்னிமரமும் மடப்பள்ளியும் சான்றாக" என்று சங்கநூலிற் கண்டபடி சாக்ஷியம் சொல்லிய அருட்செயலால் ஸ்ரீ ஸாக்ஷிநாதர் என்னும் திருப்பெயர் பெற்று ஸ்ரீ கரும்படு சொல்லம்மை சமேதராய் புறம்பயநாதர் வீற்றிருந்து அருளும் திருக்கோயில்.

K. S. விஜயரெகுநாதன்
கண்காணிப்பாளர்

உ

தவத்திரு குன்றக்குடி அடிகளார்,
குன்றக்குடி.

தங்கல் : சென்னை
21—10—72.

## வாழ்த்துரை

தமிழக வரலாற்றில் இராசராசன் ஒரு ஞாயிறு. இராசராசனின் ஆட்சிக்காலம் புகழ்பூத்த பொற்காலம். இராசராசன் காலத்தில் திசை அனைத்தும் தென்திசையின் புகழ் ஒளி வீசியது; அலைகடல்களுக்கு அப்பாலும் தமிழரசு கோலோச்சியது; தமிழர் தம் தோள்வலியைத் தொல்லுலகம் – வியனுலகம் கண்டு வியந்தது; அமைப்பால் முடி ஆட்சியேயானாலும் நடைமுறையில் குடியாட்சியாக விளக்கமுற்றிருந்தது; கிராமக் குடியாட்சிமுறை மலர்ந்திருந்தது; வறுமை என்ற சொல் அறியாத நாடாக வளம் பல கொழித்து வளர்ந்து செழித்திருந்தது; மதம் என்ற போர்வையில் மயக்கிய இருள் கிழித்து எழுந்த திருமுறைகளைத் தமிழகம் பெற்றது; தமிழகம் திருவருட் பொலிவுபெற்றது. தமிழினத்தின் அறத்தில் அகன்று தோய்ந்த – செம்மையில் உயர்ந்து விளங்கிய – இகழ்ச்சியின் நிழலும் படாதவாறு வாழ்ந்த – வாழ்க்கையை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலும் எழுந்தது.

இராசராசன் எடுத்த தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் ஒரு கலைப்பெட்டகம்; கல்லும் கவின்கலையில் பேசுகிறது; சிரித்துச் சிந்தனையைத் தூண்டுகிறது – உணர்த்துகிறது – உணர்வைத் தருகிறது; அருளார்ந்த வாழ்க்கையில் வழி நடத்துகிறது.

இராசராசன் மீட்டுத்தந்த திருமுறை, ஞானத்தின் கருவூலம்; சமரசத்தின் முரசு; அருளியலின் முழக்கம்; இராசராசன் விழா தமிழகத்தின் தன்னேரிலாத இனத்திருவிழா; தமிழ்விழா; கலைவிழா; அருள்நெறிவிழா. இந்த விழாவைச் சிறப்புற ஆண்டுதோறும் நடத்தும் தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித்துறையினருக்குத் தமிழகம் கடமைப்பட்டிருக்கிறது. இராசராசன் விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

உ
சிவமயம்

மதுரை ஆதீனகர்த்தர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மதுரை

தேதி: 23—10—72

முதலாவது இராஜ இராஜ சோழனது பிறந்தநாள் சதயவிழா இவ்வாண்டு நவம்பர் 15, 16 தேதிகளில் கொண்டாடவும் அவ்வமயம் சதயவிழா நினைவு மலர் ஒன்று வெளியிடவும் திருவருள் பாலித்திருப்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

தமிழனுடைய பக்தியையும், பண்பாட்டையும், சிற்பக் கலையையும், திருப்பணிகள் செய்யும் திறனையும் தஞ்சை விமானம் ஒன்றே உலகத்திற்கு என்றும் நின்று உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

சதய விழா யாதொரு விக்கினமுமின்றி எல்லா வகையாலும் சிறப்புற நடைபெறவும், அதில் கலந்துகொள்ளுகிற அனைவரும் எல்லா நலன்களும்பெற்றுத் திகழத் திருவருள் கூட்டி வைக்குமாறு எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

# ஸ்ரீ பிச்சைக்கட்டளை

## திருக்கடையூர்

மாயூரம் வட்டம்]                [தஞ்சை மாவட்டம்

இந்தக்கட்டளை பரம்பரை அறங்காவலர் திரு. கை. கனகசபை பிள்ளை அவர்களின் முன்னோர்களால் நிறுவப் பட்டது. திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி அம்மனுக்கு நித்திய பூசை இக்கட்டளை நிதியிலிருந்து நடைபெறுகின்றது.

ஸ்ரீ அபிராமிபட்டர் ஸ்ரீ உய்யவந்ததேவ நாயனர், ஸ்ரீ காரிநாயனர், ஸ்ரீ குங்கிலியக்கலயநாயனர் ஆகியோருக்கு இக்கட்டளையின் சார்பில் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலில் திருமணம் செய்துகொள்ளும் ஏழை தம்பதி களுக்கு கட்டளை நிதியிலிருந்து திருமாங்கல்யம் வழங்கப் படுகிறது.

தேவாரப்பாடசாலை ஒன்றும், ஆரம்பபாடசாலை ஒன்றும் இந்தக் கட்டளையினல் நடத்தப்படுகின்றன,

திருக்கடையூர் மருத்துவ மனையில் ஒரு மகப்பேறு பகுதி இந்தக் கட்டளையால் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டளை நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் பூம்புகார் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**கை. கனகசபை பிள்ளை**
பரம்பரை அறங்காவலர்

மதுரை ஆதீனத்தைச் சேர்ந்த

# ஸ்ரீ பன்னகா பரமேஸ்வரஸ்வாமி

## தேவஸ்தானம்

### பன்னதெரு

திருமுகத்தலை என்னும் பெயரோடு கருவூர்த் தேவரால் "திருவிசைப்பா" என்ற பாடலில் பாடப் பெற்றதும், ஆதிசேடன் தனது குன்ம நோயை இத் தலத்தில் இறைவனருளால் போக்கிக்கொண்டதாகப் புகழப் பெற்றதும், சூரியன் அம்பாள் ஆகியோரால் வழிபடப்பெற்று சிறப்புப்பெற்றதுமான இத்தலம் திருத் துறைப்பூண்டி தாலுக்கா பன்னதெரு கிராமத்தில் உள்ளது. இத்தலம் திருத்துறைப்பூண்டி சந்திப்பில் இருந்து 3 கல் தொலைவில் உள்ளது.

சுவாமி பெயர்: ஸ்ரீ பன்னகா பரமேஸ்வரர்
அம்பாள் பெயர்: ஸ்ரீ சாந்தநாயகி
தல விருட்சம்: புன்னை மரம்

மதுரை ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
பரம்பரை அறங்காவலர்.

M. S. வடிவேல் பிள்ளை
கண்காணிப்பாளர்.

உ

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்**

**காஞ்சீபுரம்**

*முகாம்:* காஞ்சிபுரம் *தேதி:* 10—10—72.

தஞ்சை இராஜராஜேச்வரம் கோயிலைக்கட்டி சிவபாத சேகரன் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவனும், சிவபெருமான் மீது பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்களை தில்லையில் கண்டெடுத்த பெருமையுடையவனும், தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் சிறந்த ஈடுபாடு கொண்டவனுமான முதல் இராஜராஜனுடைய இந்த பரிதாபி ஐப்பசி திங்கள் சதயவிழா தஞ்சை ப்ருஹதீச்வரர் கோயிலில் சிறப்பாக நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஆஸ்திகர்கள் இவ்விழாவில்கலந்துகொண்டும் இம்மன்னனைப் பின்பற்றி 'தமிழ், ஸம்ஸ்கிருதம் இருமொழிகளும் ஆண்டவனைப் போற்றி உய்ய உதவிகரமானவை' என்னும் உறுதியுடன் வாழ்க்கையை நடத்திக்கொண்டு எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.

. உ

சிவ சிவ

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி**
**முத்துக்குமரசுவாமித் தம்பிரான்**
**சுவாமிகள் அவர்கள்**

**ஸ்ரீ காசிமடம்**
**திருப்பனந்தாள்**
*(தஞ்சை ஜில்லா)*
9—10—1972.

# வாழ்த்துரை

பத்துப் பதினோராம் நூற்றுண்டில் சோழப் பேரரசு மிகச் சீரியநிலையில் இருந்தது. பொன்னும் மணியும் கொழித்துச் செல்வம் சிறந்து விளங்கியது. வானளாவிய கோயில்கள் தமிழ்நாடெங்கும் தோன்றின. தேவார காலத்தில் பாடல்பெற்ற கோயில்கள் எல்லாம் கற்றளிகளாக மாற்றப்பெற்றன. திருமுறைகளில் மக்கள் தோய்ந்த அறிவுடையவராய்த் திகழ்ந்தனர்; கோயில் வழிபாடுகளும் திருமுறை ஓதுதலும் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றன; வீரம் செறிந்தவராய் மக்கள் விளங்கினர்; கடல் கடந்து சென்று வாணிகம் செய்தனர்; இசை நடனம் முதலிய நாகரிகக் கலைகள் சிறப்புற்றோங்கின; இங்ஙனம் தமிழகம் - சிறப்பாகச் சோழநாடு மேம்பாடுற்றமைக்கு அடிகோலியவன் சிவபாத சேகரனாகிய முதலாம் இராசராசசோழன் ஆவன். அவன் அரசர்களுக்குரிய உயர் பண்புகளெல்லாம் படைத்தவன். சங்கச் சொற்றொடர்களால் அவன் சிறப்பினைக் கூறுவதாயின், "செற்றோரை வழி தபுத்தனன் - நட்டோரை உயர்பு கூறினன் - வலியரென வழி மொழியலன் - மெலியரென மீக்கூறலன் - இரந்தோர்க்கு மறுப்பறியலன் - வருபடை எதிர் தாங்கினன் - பெயர் படை புறங்கண்டனன் - பாணுவப்பப் பசிதீர்த்தனன் - மயக்குடைய மொழி விடுத்தனன்" என்றெல்லாம் இராசராசசோழன் புகழை விரித்துக்கூறலாம். இம்மட்டோ?

" அறிவுமடம்படுதலும் அறிவு நன்குடைமையும்
வரிசையறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த "

வாழ்ந்தவன் இம்மன்னன்.

" அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்
ஆண் அணிபுகுதலும் அழிபடை தாங்கலும் "

வீரர் புகழுமாறு இவ்வரசன் விளங்கினன்.

# ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள் திருக்கோயில்

கும்பகோணம் வட்டம் | நாச்சியார்கோயில் | தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பெருவழியில் தெற்கே ஐந்து கல் தொலைவில் உள்ள நாச்சியார்கோயில் கிராமத்தில் அமைந்திருக்கிறது. இங்கிருந்து திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன்கோயில் ஆகிய திருத்தலங்களுக்குச் செல்லும் பஸ் வசதி உண்டு.

இத்திருத்தலம் வைணவப் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்று இருக்கிறது. ஸ்ரீ தாயார் மிகுந்த வரப்பிரசாதியாக இருப்பதால் இத்தலத்திற்கு நாச்சியார்கோயில் எனப் பெயர் வந்தது.

ஸ்ரீ பட்சிராஜன் நாச்சியாரைத் தேடிக் கண்டு திருமணம் செய்ய உதவியாக இருந்தபடியால் அவர் வரப்பிரசாதியாகப் போற்றப்பெற்று பூஜைக்கு உரியவராக இங்குத் திகழ்கிறார். உற்சவங்களில் நான்காம் திருநாள் இவருடைய புறப்பாடு மிக விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

இங்கு கருடாழ்வார் பூஜைக்குரியவராக விளங்குகிறார். அவர் பிரார்த்தனைக்கும் உரியவராவர். 6 கால பூஜைகளுடன் தனி சந்நதியில் இருப்பதுவும் ஆறு திவ்விய உபாசனை தெய்வங்களுள் ஸ்ரீ பட்சிராஜனும் ஒருவராக ஆராதிக்கப்படுதலும் மிகவும் விசேஷம்.

இக்கோயிலில் கீழ்க்கண்டவாறு முக்கியத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

1. ஆவணி மாதம் விசாக விண்மீன் திருக்கல்யாணம்.
2. மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி முக்கோடி தெப்ப உற்சவம்.
3. பங்குனி மாதம் உத்திர விண்மீன் திருத்தேர், பிர்மோற்சவம்.

பல ஆண்டுகளாக சுதைத் தைலக்காப்புடன் கூடிய பெருமாள் தாயார் மற்றும் மூலவர்கள் விக்கிரகங்கள் நன்கு சுத்தம்பெற்று சுதைகளை நீக்கி வேலைசெய்து வருங்காலை சுதை திருமேனியுள் நல்ல சிலா திருமேனிகள் கிடைக்கப்பெற்று இப்போது மூலவர்கள் மிகவும் அழகாகவும் பார்ப்பவருக்கு மிகவும் வனப்பூட்டும் விக்கிரகங்களாகவும் காட்சி அளித்து வருகிறார்கள். திருப்பணிகள் செய்விக்கப்பெற்று சம்ரோக்ஷணம் சிறப்புற 17—5—70ல் நடைபெற்றது.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து சேவார்த்திகளுக்கு ஓர் தங்கும் விடுதியும் தினம் 30 சேவார்த்திகளுக்கு பிரசாதங்களும் உற்சவ காலங்களில் வரும் சேவார்த்திகளுக்கு பிரசாதங்களும் கொடுக்கப்பட்டுவருகின்றன.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து ஓர் "அன்பு இல்லம்" நடத்தப்பெறுகிறது. அதில் 35 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் இதர பராமரிப்புச் செலவுகள் செய்துதரப்படுகின்றன. அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு வரை பயில வசதி செய்யப்பட்டிருக்கிறது. தற்பொழுது திருக்கோயிலின் முன்புறம் பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு திருமணமண்டபம் கட்டப்பட்டுள்ளன.

V. S. வெங்கடாசலம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

V. சீனிவாசன் (தலைவர்), C. கிருஷ்ணமூர்த்தி, R. சிவசுப்பிரமணியம்

# ஸ்ரீ வில்வாரண்யேசுவரர் திருக்கோயில்

## திருக்கொள்ளம்பூதூர்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருக்குடந்தை - கொரடாச்சேரி நெடுஞ்சாலையில் செல்லூரிலிருந்து மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தஞ்சை — திருவாரூர் புகைவண்டிப்பாதையில் உள்ள கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 4 கல் தொலைவில் உள்ளது. ஞானசம்பந்தப்பெருமான் தன் அடியார்கள் சூழ ஏறி நாவலமே கோலாகக் கொண்டு பதிகம் ஓதி ஓடம் செலுத்தி ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்து எம்பெருமானைத் தரிசிக்கவர, ஏறுதாங்கிய இறைவன் தேவியுடன் காக்ஷிதந்த அற்புதம் நிகழ்த்திய திருத்தலம் இது. தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் காவிரித்தென்பாலமர்ந்த 113-வது திருத்தலம் திருக்கொள்ளம்பூதூர். மெய்யன்பர்கள் தங்குவதற்கு விடுதியும் உள்ளது.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருவிடவாயில் ஸ்ரீ புண்ணியநாதசுவாமி ஆலயம் இந்த ஆலயத்தின் ஓர் உப ஆலயம். இத்தலம் கொரடாச்சேரிக்குக் கிழக்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

R. கோவிந்தராசன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

சி. கிருட்டிணமூர்த்தி (தலைவர்)
பெ. ராம. ராம. சித. இராமன்செட்டியார் B. com.
பி. திருநாவுக்கரசு
மு. வெங்கட்ராமன்

இங்ஙனம் பாராட்டுதற்குரிய இராசராசசோழன் சேரநாட்டில் தன் பிறந்தநாளாகிய சதயநாளில் விழா நடத்துமாறு ஏற்பாடுசெய்தனன் என்று இலக்கியம் கூறும். இராசராசனுக்குரிய சதயநாள்விழா சில ஆண்டுகளாகச் சிறந்தமுறையில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் தஞ்சைப் பெரிய கோயிலில் கொண்டாடப்பெறுவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். சதயவிழா நினைவில் ஆண்டுதோறும் மலர் ஒன்றும் முகிழ்த்து வருகிறது. இவ்வியாண்டும் அம்மலர் இராசராசனின் நினைவு மக்கள் உள்ளத்தில் பதியுமாறு அமையும் என்று கருதுகிறோம். அம்மலர் சிறப்புறுவதாகுக. இவ்விழாவில் ஈடுபட்டிருக்கும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களுக்கும் தஞ்சைத் துணை ஆணையருக்கும் மற்றுமுள்ளோர்க்கும் செந்திலாண்டவன் திருவருள் துணை நிற்க.

*சிவ சிவ*

உ

முருகன் துணை

மயிலம் – பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் மஹாசந்நிதானம்

அருளிய

# ஆசியுரை

உலகிற்கு இறையாகிய மன்னன், உயிர்களுக்கு இறையாகிய பரம் பொருள் இரண்டையும் இறை என்னும் பொதுப்பெயரால் குறிப்பர்.

" நெல்லும் உயிர் அன்று நீரும் உயிர் அன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

அதனால்,

யான் உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே "

என்பது புறநானூறு. உலகம் என்னும் உடலுக்குத் தான் உயிர் என்று மன்னன் அறிதல் வேண்டும். அதற்குமேல் உயிருக்கு உயிராகிய பரம் பொருள் ஒன்று உண்டு என அறிந்து அப்பரம்பொருளை உணர்ந்து வழிபட்டு வரும் பெருநலத்தை உலகம் பெறச்செய்வது அரசனது கடமை. அம் மன்னன் பொன்மலர் மணம் பெற்றாற் போல வையம் சிறக்க வாழ்ந்த வாழ்வுடைய மன்னன் ஆவான்.

தமிழ்நாடு ஆண்ட வேந்தர்களில் பத்தாம் நூற்றாண்டில் சோழ நாட்டைத் தஞ்சாவூரில் இருந்து ஆண்ட முதல் இராசராசன் நிறைவாழ்வு வாழ்ந்த பெருமன்னன்.

மன்பதை உய்ய உயிர்க்குலங்களுக்கு அன்பு என்னும் பெருநெறி தந்தது சைவசமயமாகும். அச்சைவத்தின் உயிராய் இலங்குவன திருமுறைகளாகும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளைத் தேடித்தந்த பெருமைக்குரியவன் முதல் இராசராசன்.

சமயாசாரியப் பெருமக்கள் எம்பெருமானுக்கு அமைத்த சொற் கோயில்களைத் திறந்து வைத்து வழிபடுவார்க்கு உறுதி கூட்டியதோடு, மாபெரும் கற்கோயில் ஒன்றினைக் கருவூர்த்தேவர் என்னும் அருளாளர்

## ஸ்ரீ ராமஸ்வாமி திருக்கோயில்
### கும்பகோணம்

தஞ்சையை ஆண்ட ரெகுநாத நாயக்கரால் கட்டப் பெற்றது. கலைப்பொக்கிஷங்கள் நிறைந்த சித்திரங்களால் ஆன ராமாயணம் பார்க்கத்தகுந்தவை.

**S. சுப்பிரமணியன்**
*நிர்வாக அதிகாரி*

*அறங்காவலர்கள் :*

K. M. P. கோதண்டராமன் (*தலைவர்*)
G. சிவசுப்பிரமணிய பிள்ளை, P. R. தியாகராஜன்
P. கோபாலக்கிருஷ்ண செட்டியார்
R. சந்தானகிருஷ்ண செட்டியார்

## ஸ்ரீ பிரசன்ன மாரியம்மன் ஆலயம்

**பஸ் ஸ்டாண்டு சமீபம்** **நெ. 2 ரோடு மாயூரம்**

நகரமத்தியில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் கோயில் கொண்டுள்ள அம்மன் வரப்பிரசாதி. சாதி மத வேறுபாடின்றி சேவார்த்திகள் பிரார்த்தனை செலுத்தும் ஆலயங்களில் இதுவும் ஒன்று. இவ்வாலயத்தில் கல்யாண மண்டபம் கட்ட பக்தர்கள் தாராளமாக நன்கொடை உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**K. சுப்பிரமணியம்**
*நிர்வாக அறங்காவலர்*

*நிர்வாக அறங்காலர்கள் :*

P. S. குமார்
R. சொக்கலிங்கம்
கோ. ஜெயகுமார்
பொ. கிருஷ்ணமூர்த்தி

தருமை ஆதீனம்

## ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி
## தேவஸ்தானம்
### திருக்கடவூர்

**மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்**

**மார்க்கண்டேயர்க்காகக் காலனை அழித்த வீரட்டத்தலம்**

" .............................அருமுனிக்காச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்தபிரான் கடவூருரை உத்தமனே "

என அப்பர் பெருமான் இவ்வற்புதத்தை வியக்கிறார்.
மூவர் முதலிகள் தேவாரம் பெற்ற முதன்மைத்தலம்.

அமிர்தகடேஸ்வரராக அண்ணலும், அபிராமியாக அன்னையும் அருள் வழங்குகின்றனர்.

காலசம்ஹாரமூர்த்தி இங்கே தனிச் சிறப்பு உடையது.

**" அபிராமி அந்தாதி "**
என்னும் அம்மை அருள்வியக்கும் அன்பு நூலை அபிராமிபட்டர் அருளி அளித்துள்ளார்.

ஆண்டுதோறும் சித்திரை ஆரும் நாள் நடைபெற்றுவரும்
**" காலசம்ஹார விழாவை "**
பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு மகிழ்வர்.

கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

ஆயுள்விருத்தி வேண்டுவோர் இங்கு வந்து பரிகாரங்கள் செய்துகொள்வர். தங்கும் விடுதி உண்டு.

மாயூரம் - தரங்கம்பாடி புகைவண்டிப்பாதையில் இத்தலம் உள்ளது.

ஆசியுடன் தஞ்சாவூரில் நிறுவி இவ்வையம் முழுவதும் இறைவனது திருக்கோயிலே என்னும் உண்மையை அறியச் செய்தவன் அச்சிவபாத சேகரன் ஆகும்.

அவனது திருநாள் சதயத் திருநாள் ஆகும். "சதயநாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்" என்று கலிங்கத்துப் பரணி அவனைப் பாராட்டுகிறது. அவன் அவதரித்த காரணத்தினால் அவ்விண்மீனுக்குச் சிறப்புண்டாயிற்று என்று சொன்னால் மிகையாகாது.

பெருவீரனும், சிறந்த ஆட்சியாளனும், சிவபத்தியில் முதிர்ந்த நல்ல அருளாளனும் ஆகிய அப்பெருமன்னன் பிறந்தநாள் பெருமங்கலமாக சதய நாள் விழாமலர் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

மலர் நிறைமணம் உடையதாய்த் திகழ்ந்து சைவ உலகிற்கும் தமிழ் உலகிற்கும் நலம்பல நல்கிச் சிறக்கப் பணிபுரியும் துணை ஆணையர் அவர்களுக்கும், அவர்தம் தொண்டிற்குத் துணை நிற்கும் அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல மயிலம் முருகப்பெருமான் திருவருளும், ஆதிஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் திருவருளும் நிறைவதாக.

உ
சிவமயம்


தொலைபேசி எண் - 26479.

*வித்துவான்*
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம்

பேரூர் *(அஞ்சல்)*
கோயமுத்தூர் - 10


17—10—1972.

## *வாழ்த்துப்பா*

திருமுறை நெறியைப் பேணித் திசையெலாம் செங்கோ லோச்சி
ஒருகுடை நீழ லின்கண் உலகெலாம் பொலிய ஆண்ட
பெருந்தகை இராச ராசன் பீடுறு தமிழர் வேந்தன்
உருகிய சிந்தை யாலே உஞற்றினன் ஒளிசேர் கோவில்.

வெற்றியின் சின்ன மாக மேலதாம் பொற்பூ அட்டி
நற்றிறல் கொண்டான் இராச ராசனும் நமது மன்னன்
கற்றவர் போற்றச் சிற்பக் கலையினால் வல்லோர் வாழ்வு
பெற்றிடக் கருங்கற் கோவில் விண்ணளா விடவே செய்தான்.

மன்னவன் வழியே நாட்டு மக்களென் றிடவே நாட்டில்
கன்னலும் செந்நெ லும்சேர் கழனிபோல் வாழ்வும் ஓங்கி
தன்னல போக்க தின்றி சால்புடன் தெய்வம் பேணி
இன்னலற் றிடவே தஞ்சைக் கோவிலை எடுத்தான் மன்னன்.

நாரையூர் நம்பி யாண்டார் நல்வழி காட்டத் தில்லை
ஊரிடை மறைக்கப் பெற்ற உயர்திரு முறைகள் கண்டப்
பேரையும் தனதாக் கொண்ட பெற்றியன் இசையும் கூத்தும்
பாரிடைச் சிவனுக் காக்கும் பலநிபந் தங்கள் செய்தான்.

மண்ணிடை ஐப்ப சிக்கண் வருமுயர் சதய நாளை
எண்ணியே தஞ்சைக் கோயி லிறைவனை எவரும் போற்றப்
புண்ணியச் செயல்கள் செய்தான் பொற்புடன் விழாக்காண் போர்கள்
அண்ணலார் அருளால் வாழி அணிவிழா வாழி! வாழி!!

# ஸ்ரீ உத்திராபதீஸ்வரர் திருக்கோயில்

## திருச்செங்காட்டங்குடி

நன்னிலம் வட்டம்] — [தஞ்சை மாவட்டம்

சைவசமய குரவர்களில் அப்பர், சம்பந்தர் ஆகிய இருவராலும் பாடல்பெற்ற இத்தலம் நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்திலும், நன்னிலம் - நாகபட்டினம் பெருவழிப் பாதையில் திருப்புகலூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

ஸ்ரீ விநாயகர், கஜமுகாசுரனைக் கொன்ற இரத்தம் பெருகி ஓடியதால் செங்காடு என்றும், வழிபட்ட காரணத்தால் கணபதீச்சரம் என்றும் அழைக்கப்படுகிறது. சிறுத்தொண்டர் (பரஞ்சோதியார்) வாதாபி மன்னர் புலிகேசியை வென்று கணபதியை எடுத்துவந்து பிரதிஷ்டை செய்துள்ளார். பேரன்பை உலகம் அறிந்து உய்யும்வண்ணம் "ஒரு குடிக்கு சிறுவனொரு மகனை தாதை அரியத் தாய் பிடிக்கும்பொழுதில் தம்மின் மனமுவந்தே பேதமின்றிச் சமைத்த கறி யாம் இட்டுண்பது" என சிவனார் வேண்ட, அவ்வாறே அமுதுபடைத்த சிறுத்தொண்டருக்கு அருள்புரிந்த தலம். பல்லவ அரசன் ஐயடிகள் காடவர்கோன் மகாராசாவுக்கு காட்சியளித்த தலமும் இதுவே.

சித்திரை பரணியன்று அமுதுபடையலும், திருவோணத்தில் செண்பகப்பூக்காட்சி திருவிழாவும் மிகச் சிறப்புடையன. இத்திருக் கோயிலின் இராசகோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பெற்று வருகிறது.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதிகள்**
பரம்பரை அறங்காவலர்

ஒ. இளையபெருமாள் பி. காம்.,
நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ காயாரோகணசுவாமி திருக்கோயில்

நாகபட்டினம் — தஞ்சை மாவட்டம்

சரித்திரப் புகழ்பெற்ற இவ்வாலயம் மூவராலும் பாடப் பெற்றது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாகும். புண்டரீக முனிவர், பெருமானைக் காயத்தோடு ஆரோகணித்து முத்தி பெற்றதால் காயாரோகணம் என்ற காரணப்பெயர் பெறுவதாயிற்று. அம்மை கருந்தடங்கண்ணி என அப்பர் தேவாரத்தில் குறிக்கப்பெறுகிறாள்.

அறுபத்திநான்கு சக்திபீடங்களில் இத்திருக்கோயிலும் ஒன்று. அம்பாளுக்கு ஆண்டுதோறும் ஆடிப்பூரத் திருவிழா பத்து நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறுகிறது. முத்தித் தலங்கள் மூன்றனுள் ஒன்றாகும். வள்ளலார் இத்திருக்கோயிலுக்கு வருகைதந்து கால் பதித்துச் சென்றுள்ளார். இத்திருக் கோயிலில் உள்ள ஸ்ரீ நாகாபரண விநாயகர் சிலை மிகவும் வனப்புடையது. அருணகிரிநாதராலும் பாடல் பெற்ற தலமாகும். பெரும் புலவர் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய காரோணப்புராணம் இவ்வாலயத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

**எஸ். தசரதராமச்சந்திரன்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

ஏ. ராஜமாணிக்கம் பி. ஏ., பி. எல்., (தலைவர்)
ஏ. ராமசுவாமி
A. சௌந்தரராஜன்

உ
குருவே துணை


தவத்திரு. சுந்தரசுவாமிகள்
ஆதினகர்த்தர்
கௌமார மடாலயம்

சின்னவேடம்பட்டி அஞ்சல்
கோயம்புத்தூர் — 6
தொலைபேசி எண் : 25029


18—10—1972

# இராசராசன் சதயத் திருநாள் வாழ்த்து

## வெண்பாக்கள்

தஞ்சைப் பெருவுடையார் சாற்று திருக்கோயில்
மிஞ்சும் வகையெடுத்து மேதினியை - அஞ்சலின்றிக்
காத்துத் திருமுறையைக் கண்ட திருச்சோழன்
சாத்துபுகழ் ராசரா சன்.

உலகை அளந்தான் உயர்வெற்றி கொண்டான்
நலமார் அறப்பண்பை நாட்டில் - இலகச்செய்
ராசரா சன்பிறந்த நல்லசத யத்திருநாள்
தேசம் உணர்தல் சிறப்பு.

சதயத் திருநாள் தகைராச ராசன்
இதயப் பெருவுடை யீசற் – கிதமார்
திருமுழுக்குச் செய்து சிறந்தவிழாச் செய்வார்
பெருக உயர்நலமாம் பேறு.


பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தம்
தமிழ்த்துறைத் தலைவர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை-30

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30.


24—10—72

*அன்புடையீர் !*

விண்ணோங்கிய கோபுரங்கட்டிப் பெருங்கோயில் அமைத்த 'மண்ணளந்தா'னாகிய இராசராசனின் புகழ் என்றும் உலகில் நின்று நிலவும் என்பது உறுதி. வற்றா வளம் தரும் பொன்னியும் அதன் வளம் பெருக்க வழிகண்ட சோழர்தம் மரபும் அம்மரபின் மணி விளக்கான இராசராசனும் தமிழினம் என்றும் உணர்ந்து நினைந்து போற்றப் பெறும் வகையில் தாங்கள் விழா ஆற்றும்நிலை சிறந்ததாகும். தங்கள் பணி சிறப்பதாக ! விழா நிறை நலம் தருவதாக ! வாழ்க இராசராசன் புகழ்; வளர்க அவன் கலை நலம்.

*பணிவுள்ள*

**அ. மு. பரமசிவானந்தம்**

# ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில்

## ஆவூர்

பாபநாசம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் குடந்தையிலிருந்து தென்மேற்கே ஆறு கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்தும் தஞ்சையிலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு. மாயூரம் - தஞ்சை புகைவண்டி மார்க்கத்திலுள்ள தாராசுரம் புகை வண்டி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது.

இக்கோயில் பழமையானதும், புராதனமானதும் மூன்றும் இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டதாகவும் தேவாரப்பாடல் பெற்ற 274 தலங்களில் காவேரிக்குத் தென்கரையிலுள்ள 127 கோயில்களில் 21 வது தலமாகவும், திருஆவூர் பசுபதீச்சரம் என்ற பெயருள்ளதாகவும் வரலாற்றிலிருந்து தெரிகிறது.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. காமதேனுவாகிய பசு வழிபட்டு பேறு பெற்றது. மேலும் பிரமன்,சப்தரிஷிகள், கணங்கள், தேவர்கள், யக்ஷர், கின்னரர், கந்தர்வர், இந்திரன், ஆதித்தன், நவக்கிரகங்கள், திருமால், தசரதர் முதலியோர் வழிபட்டு பேறு பெற்ற தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி. இறைவர் பசுபதீஸ்வரமுடையார். மங்களாம்பிகை, பங்கஜவல்லி என இரண்டுஇறைவிகளை உடையவர். ஸ்தலவிருக்ஷம்வில்வமரம். ப்ரம்மதீர்த்தம், தேனுதீர்த்தம்,சந்திரபுஷ்கரணி, அக்னிதீர்த்தம், அகஸ்தியநதிஎன்றபொய்கை நதி, சூரியபுஷ்கரணி என ஆறுதீர்த்தங்களை உடையது.

தர்மத்துவஜன் என்னும் அரசன் குஷ்டரோகத்திலிருந்து நீங்கப் பெற்றதாகவும், சங்கப்புலவர்கள் வாழ்ந்து வந்ததாகவும், மற்றும் பல பெருமைகளை உடையதாகவும் உள்ளது.

எஸ். கந்தசாமிபாண்டியன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

என். சுவாமிநாதன் (தலைவர்)

வி. தில்லைசிகாமணி

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ நீலகண்டேசுரர்

## திருக்கோயில்

## இலுப்பப்பட்டு

*மாயூரம் வட்டம்* *தஞ்சை மாவட்டம்*

இத்திருக்கோயில் மாயூரம்—பந்தநல்லூர் சாலையில் மணல் மேட்டிலிருந்து 1 கல் தொலைவிலும், வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து 6 கல் தொலைவிலும் உள்ளது. சுந்தரரால் பாடல் பெற்றது.

ஆண்டுதோறும் இங்கு சித்திராபௌர்ணமி திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. புராணங்களில் இத்தலம் திருமண்ணிப் படிக்கரை எனக் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தில் பஞ்சபாண்டவர்கள் சிவபெருமானைப் பூசித்ததாக வரலாறு. நளன் விஷக்கடியால் மாறிய நிறம் மாறித் தன்னுருப்பெற்ற இடம். சிவபெருமான் கண்டத்தில், விஷமருந்திய கறையைக் காட்டியருளிய தலமாகும்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருள் ஆட்சியின் கீழ் உள்ளது.

# ஸ்ரீ கைச்சின்னேசுவரசுவாமி ஆலயம்

## கச்சனம்

திருத்துறைப்பூண்டி வட்டம்      தஞ்சாவூர் மாவட்டம்

இத்தலம் திருத்துறைப்பூண்டி - திருவாரூர் நெடுஞ்சாலையில் திருவாரூருக்கு தெற்கே 12 கல் தொலைவிலும், காரைக்குடி - மாயூரம் புகை வண்டிப் பாதையில் அம்மனூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு கல் தொலைவிலுமுள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியவர்களால் பாடப்பெற்றசிறப்புடையது. தலப் பெயர் கைச்சின்னம். இறைவன் பெயர் கைச்சின்னேசுவரர். இறைவியின் பெயர் வெள்வளைநாயகி. அகத்தியமுனிவர் வில்வலன் வாதாபி என்ற இருவரைக் கொன்ற பாவத்தையும், விதூமர் பிர்மாவினால் தனக்கு நேர்ந்த சாபத்தையும் இங்கு வந்து போக்கிக் கொண்டார்கள். கௌதம முனிவரால் இந்திரனுக்கு ஏற்பட்ட சாபம் நீங்க இந்திரன் தன் வச்சிராயுதத்தால் ஓர் தீர்த்தம் உண்டாக்கி அதில் மூழ்கி மண்ணினால் சிவலிங்கம் செய்து வழிபட்டார், வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்துடன் கூடிய நன்னாளில் பூஜையை முடித்து லிங்கத்தை எடுக்கும்போது, லிங்கம் பூமியில் பற்றிக் கொண்டது. இந்திரனின் வலது கை விரல்கள் லிங்கத்தின் சின்னமாக அமைந்தன.

இத்தலத்தில் அகத்தியலிங்கம், விதூமலிங்கம், தேவலிங்கம், காசி விஸ்வநாதலிங்கம், ஆதிகர்ணிகாவனேஸ்வரலிங்கம் என்ற பஞ்ச லிங்கங்கள் இருக்கின்றன. வைகாசி விசாகப் பெருந் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

பரம்பரை அறங்காவலர்

**ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள்**
மதுரை ஆதீனகர்த்தர்

P. நெல்லையப்பன் B. A.,
நிர்வாக அதிகாரி


# இராசராசசோழன் "சிவபாதசேகரன்"


திரு. கே. எஸ். நரசிம்மன்,
பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்.
ஆணையர், அறநிலையத் துறை.


இராசராசன் உயரிய பண்பு நலன்களுக்கெல்லாம், ஓர் உறைவிடமாக விளங்கினான். தன் தாய் தந்தையர்களிடத்திலும் பாட்டனார் பாட்டியார் தமக்கையார் ஆகியோரிடத்திலும் மிக்க பேரன்பும் பெருமதிப்பும் வைத்து அவர்களைப் பெரிதும் போற்றிவந்தான். தன் பாட்டனாராகிய அரிஞ்சயன் (957–970) நினைவாக, வடஆற்காடு மாவட்டத்தில் மேற்பாடி என்னும் இடத்தில், அரிஞ்சயேச்சுரம் என்னும் கோயில் எடுப்பித்தான். தனது தமக்கையாரின்மீது கொண்டிருந்த அன்பும், மதிப்பும் காரணமாக தனது அருமை மகளுக்கும் 'குந்தவை' என்றே பெயரிட்டான். தன் தாய் தந்தையரின் திருவுருவப் படிமங்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் தமக்கையாரின் விருப்பத்தின்படி எழுந்தருளச் செய்வித்தான். தன் பெரிய பாட்டனாரையும், பெரிய பாட்டியாரையும், முறையே ''சிவஞான கண்டராதித்தர்'' ''செம்பியன்மாதேவடிகள்'' எனக் கல்வெட்டுக்களிற் புகழ்ந்து போற்றினான்.

தன் தமையனாகிய ''ஆதித்த கரிகாலன்'' (957 – 970) இறந்தபிறகு, அவனுக்குப் பின்னர் அரியணையைக் கைப்பற்றித் தானே ஆட்சிபுரிந்திருக்கவல்ல ஆற்றல்கள் மிக்கவனாக இருந்திருந்தும், அங்ஙனம் செய்யாமல், கண்டராதித்தர் செம்பியன்மாதேவியார் ஆகிய இருவர் திறத்தும் தான் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் காரணமாக, அவர்களின் புதல்வனும் தனது சிறிய தந்தையுமாகிய 'உத்தமசோழன்' ஆட்சிக்குரியவனாய் முடிசூடிக் கொள்ளும்படி இராசராசன் அன்புடன் விட்டுக்கொடுத்தான். "தன் சிறிய தந்தை ஆகிய உத்தமசோழனுக்கு (கி. பி. 970–985) நாட்டை ஆட்சிபுரிவதில் விருப்பம் உள்ள வரையில், தான் மனத்தால்கூட அரசாட்சியை விரும்புவதில்லை'' என்று, இராசராசன் தன் குடிகளிடம் கூறினான் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் தனது உரிமையினைத் தியாகவுணர்வுடன் விட்டுக்கொடுத்து, பதினைந்து ஆண்டுகள் (970—985) அளவும் அமைதியாகக் காத்திருந்த இராசராசனின் பெருந்தகைமைப் பண்புநலன், உலக வரலாற்றிலேயே ஒப்புயர்வற்றதாகும்.

தருமை ஆதீனம்

## ஸ்ரீ சக்திபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

### கருங்குயில்நாதன்பேட்டை

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

காவிரியின் வட கரைத் தலம். கல்லணையிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் கரிகாலன் பெருவழியில் மாயூரத்திலிருந்து அரைகல் தொலைவில் அமைந்தது. அழகான சோலைசூழ் பெரும்பதி. இந்திரனுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாக அவன் கரிக்குருவியாகி அதிலும் தொழுநோய்ப் பற்றியதாகி உழன்றதாகவும், இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கிப் பெருமானை வழிபட்டு அவன் சாபவிமோசனம் பெற்று மீண்டும் இந்திரபதவி பெற்றதாகவும் வரலாறு. இதனைக்கொண்டு ஊர் கருங்குயில்நாதன்பேட்டை ஆயிற்று. பராசக்தி சப்தமாதாவாக உருவெடுத்து இவ்விடம் வந்து பெருமானை வழிபட்டு சித்திகள் பல பெற்றதாகவும், அதிலிருந்து பெருமான் ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் என்ற திருநாமத்தோடு விளங்குவதாகவும் வரலாறு. தொழுநோயில் துன்புறுவோர் பலர் இங்குள்ள தீர்த்தத்தில் முறையாக மூழ்கி நோய் நீக்கம் பெறுவது கண்கூடு. கார்த்திகை ஞாயிறுகளில் சுவாமி காவிரிக்கு எழுந்தருளி வந்து தீர்த்தம் கொடுத்தல் சிறப்பு. பெருமான்: ஸ்ரீ சக்திபுரீஸ்வரர். கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்மை; ஆனந்தவல்லி. தெற்கு நோக்கிய சந்நிதி. சனி தோஷத்துக்குப் பரிகாரம் செய்தல் சிறப்பு.

தருமை ஆதீனம்

## ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார்சுவாமி தேவஸ்தானம்

மாயூரம் வட்டம் — விளநகர் — தஞ்சை மாவட்டம்

மாயூரம் நகரைச்சுற்றிப் பல வள்ளல்கள் உண்டு. அதில் இங்குறையும் பெருமான் துறைகாட்டும் வள்ளலாக விளங்குபவர். உயிர்களுக்கு உய்யும் துறைகாட்டும் வள்ளல் ஆவார். அவரே, திருஞானசம்பந்தர் மாயூரத்திற்குத் தரிசனத்துக்கு எழுந்தருளி வந்தபோது தாமே மனித உருவில் எழுந்தருளிப் போந்து காவிரியில் அவருக்கு இறங்கு துறை இங்கு (விளநகரில்) காட்டி அழைத்துவந்து அருள்புரிந்திருக்கிறார். இதனாலும் துறைகாட்டும் வள்ளல் எனத் திருநாமம் பெருமானுக்கு வழங்குவதாயிற்று.

பாடல்பெற்ற பழம்பதிகளுள் காவிரித் தென்கரைத் தலம். திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்றுண்டு. மாயூரம் — தரங்கம்பாடி பெரும்பாட்டையில் மாயூரத்திலிருந்து 3 கல் தொலைவில் அமைந்து விளங்குவது, மிக அழகான சோலை சூழ்ந்த ஆலயம். பெருமான் : ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி. கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்பிகை: வேய்த்தோளியம்மை. தெற்கு நோக்கிய சந்நிதி.

## ஸ்ரீ கற்பகநாதசுவாமி திருக்கோயில்

### கற்பகநாதர்குளம் — (திருக்கடிக்குளம்)

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

பாண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கில் 4-மைல்தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. திருஞானசம்பந்தரின் பாடல் பெற்றது. இறைவன் பெயர் : கற்பகநாதர். இறைவியின் பெயர் : பாலசுந்தரி. தீர்த்தம் : விநாயகதீர்த்தம். தல விருட்சம் : பலா. சகல தேவாதி முனிவர்களும் வழிபட்ட ஸ்தலம். விநாயகருக்கு மாங்கனி அருளிய இடம். விநாயக தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட சகல தோஷங்களும் நீங்கும்.

R. குப்புசாமி<br>நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள்:

R. சற்குணநாதன் (தலைவர்)<br>V. குஞ்சிதபாதம் V. கந்தையன் வாய்க்காரர்

## ஸ்ரீ தாந்தோனீஸ்வரர் ஆலயம்

### சோழம்பேட்டை — [மாயூரம் வட்டம்

இத்தலம் காவிரியாற்றின் வடபுறத்தில் திருஇந்தளூருக்கும் திருவேள் விக்குடிக்கும் நடுவில் அழகிய சோலைக்குள் அமைந்துள்ள தொன்மையான சிவத்தலமாகும். கரிகால் பெருவளத்தான் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்றாகும். முன்னர் இது ஒரு வியாபாரத்தலமாக விளங்கிற்று. இத்தலத்தின் மூர்த்தி தானே தோன்றிய காரணத்தால் தான்தோன்றீசர் எனவும், அம்மன் அபிராமி எனவும் பெயர் வழங்குகிறது. குட்ட நோயுற்ற சோழன் ஒருவன் நீராடி நோய் நீங்கப்பெற்ற சோழகங்க தீர்த்தம் இப்பதியிலுள்ளது. ஸ்ரீ அழகநாதர், ஸ்ரீ திருமேனியழகர், ஸ்ரீநிவாசப்பெருமாள் ஆகிய ஆலயங்கள் இத்தலத்தைச் சூழ்ந்துள்ளன. இத்தலம் மூவலூருக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது.

வி. கனகராசன் பி. ஏ.,<br>நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

எம். ஏ. கோவிந்தராசன் (தலைவர்) எம். சின்னசாமி

இராசராசன், சோழப் பேரரசை நிறுவி வளர்த்துப் பெருக்குவதற்காக, எத்தனையோ பல பெரும் போர்களில் ஈடுபட்ட இணையற்ற பெருவீரன். அவன் காந்தளூர்ச்சாலைக் கலம் அறுத்தருளினான். வேங்கை நாட்டை வென்றான். கங்கை நாட்டைக் கைப்பற்றினான். தடிகைபாடியையும் நுளம்பபாடியையும் தன்வயப் படுத்தினான். குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் ஆகியவற்றைவென்று, தன் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டான். ஈழமண்டலத்தைச் சோழமண்டலத்திற்கு அடிமையாக்கினான். முரட்டு எழிற் சிங்களரைச் செருக்கு அடக்கினான். இரட்டபாடி ஏழரை இலக்கமும் தன் திண்டிறல் தண்டால் வெற்றி கொண்டான். அவனது ஆட்சிக் காலத்தில் சோழநாட்டின் எல்லை பெரிதும் விரிவடைந்து வளர்ந்தது. இதனால் அவனது இணையற்ற வீரத்தின் சிறப்பை இனிது உணரலாம்.

பற்பல போர்களில் வெற்றிமேல் வெற்றிபெற்று, நாட்டின் பரப்பளவை நனிபெருக்கி, இணையற்ற தனிப் பேரரசனாக விளங்கியிருந்தனன்; ஆயினும், இராச ராசன் எத்தகைய அகந்தையும், செருக்கும் அடையாமல் "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித், தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்" பெற்று உயர்ந்து சிறந்து ஒளிர்ந்திருந்தமை, நினைத்தொறும் வியக்கத்தகுவதாகும்.

இராசராசன், அறநெறி சிறிதும் பிறழாது அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தான். அறிவு திரு ஆற்றல் ஆகியவைகளிற் சிறந்து விளங்கியதுடன், நீதி, நேர்மை, பக்தி, ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் இராசராசன் இணையற்றுத் திகழ்ந்திருந்தான். போர்களில் வெற்றிமேல் வெற்றிபெற்ற போதும், இறுமாப்பும் செருக்கும் கொள்ளாமல், இவைகளெல்லாம் இறைவன் திருவருளால் பெற்றவையே என்று தெளிவுற எண்ணிச் சிந்தை நைந்து உருகினான். இவ்வுண்மை அவனது கல்வெட்டுக்களில் "சத்தியாசிரயனை எறிந்து போந்து ஸ்ரீபாத புஷ்பமாக அட்டின பொற்பூ" எனக் குறிப்பிட்டிருத்தல் கொண்டு செவ்விதின் தெளியப்படும். "பெருக்கத்து வேண்டும் பணிதல்" எனத் 'திருவள்ளுவர்' கூறியபடி, மேன்மேற் பல வெற்றிகளைப் பெறுந்தோறும், இராசராசன் இறைவனின் திருவருளையே நினைந்து வியந்து பணிந்து நின்றான்.

ஐப்பசிச் சதயமாகிய தன்னுடைய பிறந்தநாளில், பிறவியின் பயனைத் தான் பெறுவதற்காக, இறைவனுக்கு வழிபாடுகள் நிகழ்த்தத் தஞ்சை, திருவையாறு, முட்டம், திருவெண்காடு முதலிய இடங்களில் சிறப்பான ஏற்பாடுகளைச்செய்தான். தில்லைக்கூத்தப் பெருமானிடத்திலும், திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானிடத்திலும் அவனுக்கு எல்லையில்லாத ஈடுபாடும் பக்தியும் இருந்தன. இராசராசனது பக்தியுணர்வு, சமயநெறி ஆர்வம் ஆகியவற்றின் விளைவாகவே இப்பெரிய கோயில் எழுவதாயிற்று. சைவத்திருமுறைகளைத் தொகுப்பித்துப் பரப்பி வளர்த்தருளிய பெருமையும் இவனுக்கே உரியது. ஆதலின் 'சிவபாதசேகரன்' என்னும் சிறந்த பெயர், இராசராசனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

இத்தகைய சிறப்புமிக்க இராசராச சோழனின் ஐப்பசிச் சதயவிழா, வழக்கம்போல் இவ்வாண்டும் தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெற இருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன். விழா நன்கினிது நடைபெறவும், விழாமலர் சிறப்புற அமையவும், எனது வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெ. கிருஷ்ணசாமி ரெட்டி
உயர்நீதிமன்ற நீதிபதி

தமிழ்நாடு
6—11—72.

## வாழ்த்து

தமிழ் மக்களின் சீரிய பண்பை இத்தரணிக்கெல்லாம் எடுத்து இயம்பும் வகையில் தஞ்சைத் தரணியை ஆண்டு, விஞ்சிய புகழெய்திய இராசராசசோழ மன்னனின் நினைவாகச் சதயவிழா எடுத்து மலர் வெளியிடுவதை எண்ணி மகிழ்கிறேன். பன்னெடுங்காலத்திற்கு முன்பே இம்மண்ணில் வாழ்ந்துவந்த மக்களின் பண்பாட்டையும், அருளுணர்வையும் அவனிக்கு எடுத்தியம்பும் வகையாக, மாமன்னரான இராசராசன் எடுத்த பெருவுடையார் கோயிலை எண்ணும்பொழுது அந்த மன்னனது இறை உணர்வும், அவ்வுணர்வில் அவன் உளம் நெகிழ்ந்த நெகிழ்வும் தெள்ளத்தெளிய விளங்குகிறது. சதயவிழாவும், நினைவு மலரும் வெற்றிகரமாக அமைய எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

நெ. கிருஷ்ணசாமி ரெட்டி

# ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

## கஞ்சனூர்

கும்பகோணம் வட்டம் | தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - கும்பகோணம் புகைவண்டிப்பாதையில் உள்ள நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 2 கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து கிழக்கே 10 கல் தொலைவிலும் உள்ளது. நாவுக்கரசரால் பாடல்பெற்ற இத்திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவைகளினால் சிறப்புவாய்ந்தது. இங்கு மாசி மாதத்தில் பிரமோத்சவம் சிறப்புடையது.

வைஷ்ணவ மதத்தில் தோன்றிய சுதர்சனர் மழுமுக்காலியில் நின்று சைவத்தை ஸ்தாபித்து ஹரதத்தசிவாசாரியார் என்ற திருநாமம் பெற்றார். இது அவர் அவதரித்த தலம். இவர் மோக்ஷமடைந்த தை மாதம் சுக்கில பஞ்சமி திதியில் உத்ஸவம் நடைபெறுகிறது. தனிக்கோயிலும் உண்டு.

மதுரை ஆதீன கர்த்தர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

பரம்பரை அறங்காவலர்

**ஏ. ராஜகோபாலன்**

நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ கிருபாசமுத்திரப்பெருமாள் திருக்கோயில்

*சிறுபுலியூர்* கொல்லுமாங்குடி அஞ்சல்

நன்னிலம் வட்டம்] | [தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப்பாதையில் கொல்லுமாங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவிலும், மாயூரம் - திருவாரூர் பேருந்துப்பாதையில் கொல்லுமாங்குடி நிலையத்திலிருந்து கிழக்கே குடந்தை - காரை ரஸ்தாவில் (நெடுங்காடு வழி) முக்கால் கல் தொலைவிலும் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள ஆலயத்தின் நுழைவாயில் 75 அடி உயரம் உள்ள இராசகோபுரம் உள்ளது. புலிக்கால் முனிவர் வழிபட்டதாலும், முனிவருக்கு எம்பெருமான் பாலசயனமாய் சேவை அளித்ததாலும் இத்தலம் சிறுபுலியூர் என வழங்கலாயிற்று.

108 வைணவத் திருப்பதிகளுள் இத்தலம் 11ஆவது பதியாக உள்ளது. திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்றது.

இங்கு ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மணவாளமாமுனிகளது பத்து நாள் திருவிழாவும், பத்தாவது நாள் சாற்றுமுறை திருவிழாவும், மார்கழிமாதத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி திருவிழாவும், மாசி மாதம் வளர்பிறை ஏகாதசியில் அனந்தாழ்வாருக்கு பெருமாள் சேவை தரும் திருவிழாவும், வைகாசி மாதம் பிர்மோத்சவத்திருநாளும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்தலம் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிர்ந்த சோலைகளுடையது. சூரியன், அனந்தன், துர்வாசர், மணவாளமாமுனிகள் முதலியோர் வழிபட்டு பேறு பெற்றது. சமயபேதமின்றி சிவனடியார்களும் வைணவ அடியார்களும் வழிபட்ட ஸ்தலமென்பது குறிப்பிடத்தக்கது. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் பெருமையுடையது. இத்திருக்கோயிலின் திருப்பணி நடைபெற்று வருகிறது. வருகிற தைமாதம் குடமுழுக்கு விழா நடைபெற இருக்கிறது.

**கே. ஏகாம்பரநாதன்**

நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

**கே. எம். குருசாமி பிள்ளை (தலைவர்)**

**வரதராஜப் பிள்ளை**

# தமிழ்நாடு தெய்வீக பேரவை சென்னை

## [நோக்கங்களும் - தொண்டுகளும்]

திரு. அ. நாராயணசாமி, பி. ஏ.,

### தோற்றம்:

நம்முடைய நாட்டில் பொதுவாகப் பேசப்படும் இந்து சமயம் சைவ, வைணவ சமங்களையே குறிக்கும். இவை மிகப் பழமையானவை. சைவ, வைணவக் கோயில்களைப் பாடியவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களும். அவைகளுக்கு அரசர் முதலியோர் அளித்த மானியங்கள் அளவிறந்தன. அவை பலவாறுள (மேல், கீழ்) நிலைகளையடைந்து தற்சமயம் அரசாங்க அறநிலைய ஆட்சித்துறையில் கண்காணிக்கப்பெற்று வருகிறது. அது ஒரு புறமிருக்க, இந்து சமயத்தினர் பலவித காரணங்களால் வேறுமதங்களுக்கு மாறுவது பெருகிக்கொண்டு போகிறநிலை வந்தது. எனவேபொதுமக்களிடம் இந்துசமயத்தின் பழமையும் பெருமையும், அறிவுறுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழக அறநிலைய ஆட்சித்துறையினரின் முயற்சியில் ஒருதனி நிறுவனம் அமைக்கத் திட்டம் தீட்டப்பெற்றது. அதன் விளைவே தமிழ் நாடு தெய்விகப் பேரவை. இது 13-6-66ல் நிறுவப்பெற்றது.

### அமைப்பு :

தமிழகத்திலுள்ள மடங்களின் தலைவர்களே பேரவையின் மாநிலக் குழுவில் இருக்கின்றனர். அக்குழு 14 மடங்களின் தலைவர்களைக்கொண்டது. இக்குழுவின் முதல் தலைவர் தருமபுர ஆதீனத்தின் 25-ம் பட்டத்தில் எழுந் தருளியிருந்த திருவருள் திருக்கயிலை சுப்பிரமணியதேசிக பரமாச்சாரிய சுவாமிகள். அவர்கள் 13-6-66 முதல் 21-12-69 வரையில் தலைமை ஏற்றிருந்தார்கள். பின்னர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 22-12-69 முதல் மூன்று ஆண்டுகளுக்குத் தலைமை ஏற்றார்கள். மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 21-12-1975 வரையில் அவர்களே தலைமையேற்றிருக்க மாநிலக்குழு அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது. பேரவைக் குழுத் துணைத் தலைவர் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S. அவர்கள், அறநிலையத்துறை உதவி ஆணையர் நிலையிலுள்ள திரு அ. நாராயணசாமி, பி. ஏ., அவர்கள் செயலாளராக இருக்கிறார்கள். இந்த நிறுவனத்திற்கு விதிகளும்வகுக்கப் பெற்றிருக்கின்றன. சட்டப்படி பதிவும் செய்யப் பெற்றிருக்கிறது.

### நோக்கங்கள் :

இந்து சமயத்தில் மக்களுக்கு நம்பிக்கையைப் பலப்படுத்தல், மதம் மாற்றத்தைக் குறைத்தல், சமய, தத்துவ வரலாற்று நூல்கள் வெளியிடுதல், சமயக்கல்வி போதனைசெய்தல், உழவாரத் தொண்டு முதலிய கோயில் திருப்பணிகள் செய்தல், கல்வி, மருத்துவமனை, அனாதை இல்லம் போன்ற வைகளை அமைத்துச் சமுதாயத் தொண்டு செய்தல் என்ற இன்னோரன்ன பிறவாம்.

### நூல் வெளியீடு :

விநாயகர் அகவல் 20,000, இந்து மதபாலபாடம் 20,000, ஆத்திச்சூடி 20,000, கொன்றைவேந்தன் 20,000, சிவபுராணம் 40,000, அபிராமி அந்தாதி 30,000, கந்தரனுபூதி 20,000, நித்திய பாராயணத் திரட்டு 20,000, இராமநாம சங்கீர்த்தனம் 20,000, வைணவ வினாவிடை 10,000, திருமுறை திவ்வியப்பிரபந்தத்திரட்டு 1,00000-ஆக இதுவரை 3,20,000 பிரதிகள் இலவசமாக வெளியிடப்பெற்றிருக்கின்றன.

மேலும், தமிழில் அருச்சனை செய்வதற்குப் பயன்படும் வகையில் சிவன், அம்பிகை, கணபதி, முருகன், திருமால், தாயார், சேக்கிழார் முதலிய வணக்க நூல்கள் ஒவ்வொன்றிலும் 10,000 பிரதிகளாக 70,000 பிரதிகள் வெளியிடப்பெற்றிருக்கின்றன. ஆக, இலவச விநியோகத் திற்காக இதுவரை வெளியிடப்பெற்றவை 39,0000 பிரதிகள். அதில் திருமுறை திவ்வியப் பிரபந்தத் திரட்டு மட்டும் 10,0000 பிரதிகள். இவை களை ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு விநியோகம் செய்து ஆண்டு இறுதியில் பாராயணப் போட்டி வைத்துப் பரிசுகள் வழங்கத் திட்டமிடப் பெற்று, இப்போது பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைக்கப் பெறுகிறது.

திருக்குறளின் பெருமைகளைப் பற்றிய பேரறிஞர்கள் கட்டுரைகள் அடங்கிய 'திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர்' அச்சிடப்பெற்றிருக்கிறது. விலை ரூ. 4/-

இன்னும் "அறங்காவலர் கையேடு" 10,000 பிரதிகள் அடக்க விலைக்கு (50 காசுகள்) தயாரிக்கப்பெற்று விற்பனைக்கு ஏற்பாடாகி இருக்கிறது.

தமிழ்நாட்டு மடங்களின் வரலாறு, அருளாளர் வரலாறு, மாவட்டக் கோயில் வரலாறு, திருக்கோயில்கள் வரலாறு, ஆகமநூல் தமிழாக்கம், தஞ்சைக் கலைக்கூட விளக்க நூல் இவைகளை வெளியிடும் திட்டங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டு மடங்கள் பற்றிய நூலும் தயாராகிக்கொண்டு வருகிறது. தஞ்சைக் கலைக்கூட விளக்க நூலும், செங்கற்பட்டு மாவட்ட கோயில் வரலாறும் கூடிய விரைவில் தயாராகும்.

### சமயப் பிரச்சாரம் :

இப்போது மாவட்டங்களில் 18 சமயப்பிரச்சாரகர்கள் பணிபுரிகின்ற னர். இவர்களுடைய வேலைகளைக் கண்காணிப்பதற்காக ஆறு தலைமைப்

# திரு நெல்லிவனநாதர் திருக்கோயில்

## திருநெல்லிக்காவல்

*மன்னார்குடி வட்டம் — தஞ்சை மாவட்டம்*

தேவலோகத்திலுள்ள கற்பகத்தரு முதலிய ஐந்து தருக்களும் இத்தலத்தில் நெல்லி மரங்களாக அமைந்திருக்கின்றன. கற்பகத்தரு நினைத்ததைக் கொடுக்கும் தன்மையுடையது. கோயில்கொண்டுள்ள திருநெல்லி வனநாதரும் அடியார்கள் வேண்டுவதை அளிக்கவல்ல அருளாளர். பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோனும், ஆழிமிசை கல் மிதப்பில் அணைந்த அடியாரும், திருநாவலூர் வன்றொண்டரும் திருநெல்லிவனநாதரைப் பாடி வழிபட்டுள்ளார்கள்.

பெண்சுமந்தப் பாகப் பெருமானுக்கு பெருந் திருவிழா சித்திரைத் திங்களில் சிறப்புற நடைபெறும்.

இவ்வூர் மாயூரம் – காரைக்குடி புகைவண்டிப் பாதையில் அமைந்துள்ளது.

**N. திருநாவுக்கரசு B. A.,**
நிர்வாக அதிகாரி

*டி. எஸ். கல்யாணசுந்தரம்*
அறங்காவலர்

# அருள்மிகு கேடிலியப்பர் திருக்கோயில்

## கீழ்வேளூர்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் - நாகூர் புகைவண்டிப் பாதையில் கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. திருவாரூர் - நாகபட்டினம் பெருவழிப்பாதையில் மத்தியில் அமைந்துள்ளது. சமயகுரவர்களில் மூவரான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் இத்திருக் கோயிலைச்சிறப்பித்துப்பதிகம் பாடியுள்ளனர். முருகன் இப்பூவுலகில் இறைவனைப் பூசித்த தலமாகையால் கீழ்வேளூர் என்பதாகப் பெயர் பெற்றது.

இத்திருக்கோயிலில் ஆனி மகத்தில் எம்பெருமான் தன் திருமணக் கோலத்துடன் கால் மாறி நடனம் ஆடி அகத்திய மாமுனிவருக்குக் காட்சிக் கொடுத்திருக்கிறார்.

இத்திருக்கோயிலில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ அஞ்சுவட்டத்தம்பாள் மிகவும் சக்தி வாய்ந்த வரப்பிரசாதியாகக் கருதப்படுகிறாள். இங்கு ஸ்ரீ அஞ்சுவட்டத்தம்பாளுக்குப் பங்குனி மாதத்தில் பெருவிழா சிறப்பாக நடத்தப்படுகின்றது.

இங்கு ஆனி மகத் திருவிழாவும், ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டி விழாவும், சித்திரை விழாவும் மிக்க சிறப்புடையன.

**இரா. நரசிம்மன், B. Sc.,**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

செ. கி. கோவிந்தராசலு நாயுடு (தலைவர்)

கு. கணபதி, சௌ. கோபாலகிருட்டிணன்

பிரச்சாரகர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சமயப்பிரச்சாரகர்கள் இது வரையில் 922 பேரவைக் கிளைச் சங்கங்கள் சேர்த்திருக்கின்றனர். அவை களின் உறுப்பினர் தொகை 47,000. சமயப்பிரச்சாரத்துக்கென எல்லா வசதிகளையுமுடைய பிரச்சார ஊர்தியிருக்கிறது. திரைப்படக்காட்சிக் கருவிகளும் அதில் பொருத்தப் பெற்றிருக்கிறது.

**திருப்பணிகள் :**

சென்னைக்கருகிலுள்ள வட திருமுல்லைவாயில் கோயிலைப் பழுது பார்த்து அதை ஒரு முன்மாதிரிக் கோயிலாக்கும் நோக்கத்துடன் திருப்பணி வேலைகள் பேரவையின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. பேரவை ரூ. 25,000 நன்கொடை வழங்கவும் தீர்மானித்திருக்கிறது.

வட அமெரிக்காவில் நியூயார்க் நகரில் புதிதாகக் கட்டப்பெறும் கோயிலுக்கு பேரவை அதற்கென வெள்ளெருக்கு வேரினாலான விநாயகர் திருவுருவம் அண்மையில் அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளது.

வழிபாட்டுக் கூடங்கள், திருமண மண்டபங்கள் இவைகளைக் கட்டுவதில் உதவிசெய்யும் வகையில் சோளிங்கபுரத்தில் திருமண மண்டபத்துக்கு பேரவை ரூ. 10,000 நன்கொடை வழங்கியிருக்கிறது.

**உழவாரத் தொண்டு :**

கோயில்களில் புல், செடி, கொடி மரங்களை அகற்றுவதற்காக அப்பர் சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி உழவாரத் தொண்டு செய்வதற்கென 5000 உழவாரப் படைகள் செய்து தமிழக கோயில்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

**கல்வித் தொண்டு:**

1. பூம்புகார்க் கல்லூரி: இதன் நிர்வாகத்தைப் பேரவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் அதன் நிர்வாகக் குழுத் தலைவராக இருக்கின்றார்கள். இந்தியப் பண்பாட்டு எம். ஏ. வகுப்புத் தொடங்கப்பெற்று 1972—73 கல்வியாண்டு முதல் நடைபெறுகிறது. தமிழக வரலாறு, ஆகமங்கள், சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை, சித்த வைத்தியம், கல்வெட்டு இவற்றிற்காக, அடுத்த ஆண்டு முதல் பட்டப் படிப்புகள் தொடங்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

**2. அப்பர் அடிகள் சொற்பொழிவுப் பரிசு :**

தருமை ஆதீனகர்த்தர் அவர்களால் வழங்கப்பெறும் ரூ. 5,000த்தை முதலீடாகக்கொண்டு ஆண்டு தோறும் அப்பர் அடிகளைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு, ஏற்பாடாகி, அது சென்னைப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**3. இந்து சமய ஆராய்ச்சி :**

தத்துவம், வரலாறு போன்ற துறைகளில் எம். லிட்., பி. எச். டி. முதலிய பட்டங்களுக்காக ஆராய்ச்சி செய்பவர்களுக்கு மாத ஊதியம் ரூ. 300 கொடுக்க உத்தேசித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு (1972—73) தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**4. இந்து தனியார் பள்ளித் தாளாளர் பேரவை :**

இது பேரவையின் இணைப்புச் சங்கமாக உருப்பெற்றிருக்கிறது. இந்து தனியார் பள்ளித் தாளாளர்களை ஒருங்கிணைப்பதுடன் அந்த பள்ளிகளில் நீதி போதனை வகுப்பு நடைபெறும்போது சமயபோதனையும் செய்யத் தாளாளர்கள் இசைந்துள்ளனர். முதன் முயற்சியாக 1, 2, 3-ஆம் வகுப்புப் பிள்ளைகளுக்கு சமய சம்பந்தமான ஓவியப்பாட புத்தகங்களும், 4, 5 ஆம் வகுப்புகளுக்கு உரைநடைப் பாடப்புத்தகங்களும் அச்சிட்டு வழங்குவதெனத் தீர்மானித்து, அதற்குப் பாடப் புத்தகக் குழு ஒன்றும் அமைத்து, பாட நூல்களும் எழுதியாகிவிட்டது. முதலில் திருஞானசம்பந்தர் படவிளக்கப்பாட நூல் 29—10—72ல் வெளியிடப்பட்டது.

**5. இந்து இளைஞர் மன்றம் :**

சமய வளர்ச்சிக்காக கல்லூரி மாணவர் மன்றம் மாவட்டங்களில் அமைக்கப் பெற்றுள்ளன. அண்மையில் திருக்குற்றாலத்தில் 50 மாணவர்களுக்கு 8 நாட்கள் சமயப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இளைஞர் மன்ற தொடக்க விழா 11—8—72ல் நடந்தது. சென்னை மாவட்ட இளைஞர் மன்ற மாநாடு 21, 22—10—72 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

**6. அருளோசை :**

அஞ்சல் வழிச் சமயக் கல்வி போதனை செய்ய "அருளோசை" என்ற திங்களிதழ் வெளியிட முடிவு செய்து, 17—7—72 அன்று அறநிலைய ஆணையர் அவர்களால் முதல் இதழ் வெளியிடப் பெறும் நல்வாய்ப்பைப் பெற்றது. நான்கு இதழ்கள் வெளியாகிவிட்டன.

**7. பாவைப் பாடல் போட்டிகள் :**

திருவெம்பாவை - திருப்பாவை பாடல் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின்படி பாவை நூல் 13000 பிரதிகளும் 2000 அம்பாள் வெள்ளிக் காசுகளும் வழங்கப்பெற்றன. இவ்வாண்டும் அதே போல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகிறது.

**பன்னிரு திருமுறை உரையமைப்பு :**

பன்னிருதிருமுறைகளை நல்ல உரையுடன் வெளியிட முடிவு செய்து, தக்க பேரறிஞர்கள் அடங்கிய குழு ஒன்று பணி செய்து வருகிறது. முதல் திருமுறை முடிவாகும் நிலையிலுள்ளது. ரூ. 10,000 மதிப்பிடப்பட்டு ரூ. 8,000 வழங்கப்பட்டுள்ளது.

## திரு வெங்கிடாசலபதிபெருமாள் ஆலயம்

நாகை வட்டம் புலிவலம் தஞ்சை மாவட்டம்

புலிவலம் திருவெங்கிடாசலபதி பெருமாள் ஆலயம் அகத்திய முனிவரால் பூசிக்கப்பட்டது. திருஆரூர் மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சதரால் பாடப்பெற்றது. வியாக்ரபாதர் என்ற முனிவர் சிவபெருமான் உத்திரவின் பேரில் பெருமாளை வலம் வந்து அருள் பெற்று புலிரூபம் நீங்கியதால் புலிவலம் என்று வழங்கப்படுகிறதுடன் தென் திருப்பதி என்றும் வழங்கப்படுகிறது. இக்கோயில் திருஆரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்புறம் 4 கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

கோ. பாண்டுரெங்கன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
டாக்டர் R. விசயராகவன் (தலைவர்)
சா. மாரிமுத்து, நா. சமரசம்

## ஸ்ரீ வெண்ணிகரும்பீஸ்வரர் கோயில்

திருவெண்ணியூர் — கோவில்வெண்ணி

காவிரித் தென்பால் 102 வது திருத்தலம். வெண்ணிப்பறந்தலைப் போரில் கரிகாலன் சேர பாண்டியரை வென்ற வரலாற்றுச் சிறப்பு பெற்ற இடம். இறைவன் கருப்பங்கழிகள் பதிந்தன போன்ற அடையாளங்களோடு வெண்ணிக்கரும்பர். இறைவி அழகிய நாயகி. இத்தலம் மூவராலும் பாடல்பெற்றது. இத்தலம் திருவாரூர்-தஞ்சாவூர் புகைவண்டி மார்க்கத்தில் கோவில்வெண்ணி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே ஒரு கி. மீ. தொலைவிலும், பேருந்து மார்க்கத்தில் வடக்கே 0. 2 கி. மீட்டர் தொலைவிலுமுள்ளது.

இரா. சிதம்பரம்
திருப்பணியாளர் - அறங்காவலர்

## ஸ்ரீ செயசக்தி விநாயகர் ஆலயம்

### த ஞ் சை

இந்த ஆலயம் தஞ்சை புகைவண்டி நிலைய உள் நடைப்பாதையில் உள்ளது. இந்த ஆலயத்தின் மகிமை என்னவென்றால் விநாயகப்பெருமான் கிழக்கு நோக்கி வீற்றிருந்து, பல வெளியூர் சேவார்த்திகள் தரிசித்து வேண்டுவதை அளித்து அருள் புரிவதே.

இவ்வாலயத்தில் விநாயகர் சதுர்த்தி திருவிழா சதுர்த்தியிலிருந்து 5 நாட்களுக்கு அதிவிமரிசையாக நடாத்தப்படுகிறது. ஸ்தல விருட்சம்: அரசமரம்.

A. R. சுப்பிரமணியம் B. A., B, L.,
நிர்வாக அறங்காவலர்

## ஸ்ரீ மத்தியபுரீசுவர சுவாமி

### தேவஸ்தானம்

### பரக்கலக்கோட்டை

பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தேவஸ்தானத்தின் பிரதான ஆலயம் ஸ்ரீ பொது ஆவிடையார்சுவாமி என்கிற ஸ்ரீ மத்தியபுரீசுவரசுவாமி ஆலயமாகும். தொகுதி ஆலயங்கள் 1. ஸ்ரீ நாகநாதசுவாமி ஆலயம் 2. ஸ்ரீ பாலடிகாத்தவராயசுவாமி ஆலயம்.

இவ்வாலயங்கள் பட்டுக்கோட்டை — திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து கிழக்கே எட்டு கல் தொலைவில் உள்ளன. பிரதான பேருந்து சாலையிலிருந்து தெற்கே அரை கிலோ மீட்டரில் இவ்வாலயங்கள் உள்ளன. ஸ்ரீ மத்தியபுரீசுவரசாமி ஆலயத்தில் வாரம் ஒரு முறை திங்கட்கிழமை தோறும் இரவு மணி 10 க்கு மேல் பூஜை நடைபெறுகிறது. ஸ்ரீ நாகநாதசுவாமி ஆலயத்தில் தினந்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ பாலடிகாத்தவராயசுவாமி ஆலயத்தில் வாரம் ஒரு முறை வெள்ளிக்கிழமை தோறும் பூஜைகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ மத்தியபுரீசுவரசுவாமி ஆலயத்தில் கார்த்திகை மாத சோமவாரங்களில் ஆண்டு உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறும். கார்த்திகை மாத இறுதி சோமவாரத்தன்று மிக அதிகமான சேவார்த்திகளும், பொது மக்களும் காணிக்கைகளை செலுத்தி வழிபடுவர். ஸ்ரீ பாலடிகாத்தவராயசுவாமி ஆலயத்தில் ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறும். ஷை ஆடி உற்சவத்தின் போது பக்தி நாடகங்கள் நடைபெறும். இவ்வாலயங்களின் திருப்பணி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. குடமுழுக்கு விழா விரைவில் நடைபெறவிருக்கிறது.

எஸ். சடகோபராமானுஜம்
பரம்பரை அறங்காவலர்

கா. பாலசுந்தரம்
மேலாளர்

அச்சகம் ஒன்று தொடங்கப் பெற்று இயங்குகிறது. இன்னும் சில இயந்திரங்கள் வாங்க வேண்டியிருக்கிறது. பெரும்பாலான சிறு நூல்கள் எல்லாம் இங்கேதான் அச்சிடப் பெற்றன. இப்போது வெளியிடப்பெறும் "அருளோசை" இதழும் இவ்வச்சகத்தில்தான் அச்சிடப் பெறுகிறது.

**அப்பர் அடிகள் ஆராய்ச்சி நிலையம் :**

இந்து சமயத்தை வளர்க்க எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சிகள் செய்யும் பொருட்டு ஒரு நிலையம் ஏற்படுத்தும் முயற்சியில் பேரவை ஈடுபட்டுள்ளது. அடையாறு கிரீன்வேஸ் சாலையில் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. பேரவையின் தொண்டுகள் நாள்தோறும் விரிவடைந்து வருவதால் இப்போதுள்ள சொந்தக் கட்டிடத்தில் இடம் போதாத நிலையில் இருக்கிறது.

**இலவச மாலை நேர வித்துவான் கல்லூரி:**

அரசாங்க அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு தமிழறிவை அதிகப்படுத்தினால், ஆட்சிமொழியான தமிழில் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் பயன் தருவதாக இருக்கும். அதற்கென ஒரு திட்டம் வைத்து, ஒரு மாலை நேர இலவச வித்துவான் கல்லூரி தொடங்குவதென பேரவை முடிவு செய்தது. அதன் துவக்க விழா 17—7—72ல் நடைபெற்றது. 31—7—72 முதல், வகுப்புகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. ஐந்து ஆசிரியர்கள் பாடம் நடத்துகின்றனர்.

**மருத்துவ மனை, சிறைச்சாலைத் தொண்டுகள்:**

சமயப் பிரச்சாரகர்கள் மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று, நோயாளிகளுக்குத் திருநீறு, குங்குமப் பிரசாதங்கள் கொடுத்து நோயாளிகளுக்கு ஆறுதல் கூறுகின்றார்கள். சிறைச்சாலைகளிலும் அதே போல், கைதிகளுக்கு அறிவுரை கூறிவருகின்றனர். சென்னைக்கு மட்டும் மருத்துவ மனைகளில் பிணியாளர்களுக்கு பிரசாதங்கள் வழங்க ரூ. 125/- ஊதியத்துடன் தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# இராசராசசோழனும், சேக்கிழாரும்

திரு. ந. ரா. முருகவேள்,
எம். ஏ., எம். ஓ. எல்.
ஆசிரியர்: "திருக்கோயில்", சென்னை — 34.

**இராசராசன் :**

இராசராசன் பெருமனம் படைத்தவன்; அவனது உள்ளம் பரந்து விரிந்த பெரு நோக்கு உடையது. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது அவனுக்கு இயல்பாகவே அமைந்திருந்தது. அவன் 'சிறியன சிந்திக்கத் தெரியாதவன்.' அதனாலேயே அவன், பெரிய கோயில், பெரிய விமானம், பெரிய பிராகாரம், பெரிய லிங்கம், பெரிய நந்தி என எல்லாவற்றையுமே பெரிய அளவில் அமைத்துப் பெரு மகிழ்ச்சியுற்றான். இவற்றையெல்லாம் நோக்குகின்றபோது, பரந்து விரிந்த அவனது பெரிய உள்ளத்தின் பெற்றியினை நினைந்து நினைந்து நாம் வியக்கின்றோம். ஏறத்தாழ 1000 ஆண்டுகளாக எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் இப்பெரிய கோயிலைக் கண்டு வியந்து, இதனை எடுப்பித்தருளிய இராசரா்சனின் பேருள்ளத்தினைப் புகழ்ந்து பாராட்டிச் சென்றிருப்பர். இதனை நினைக்குங்கால், நம்முடைய உள்ளக்கண்ணுக்கு ஒரு கற்பனைக் காட்சி மின்னலிட்டுத் தோன்றுகின்றது.

**கற்பனைக் காட்சி :**

இக்கோயிலை நாம் கண்டு வியப்பது போலவே, சிவநெறிப் பெருஞ் சான்றோராகிய நம் சேக்கிழார்பெருமானும் வந்து கண்டு பார்த்து வியந்து மகிழ்ந்திருப்பார். இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்டிருந்தான். சேக்கிழார்பெருமான் கி. பி. 1112 முதல் 1144 வரையில் அரசு செலுத்திய இரண்டாங் குலோத்துங்கனின் தலைமை அமைச்சராக, விளங்கியிருந்தார் என்பது வரலாறு. ஆதலின் இராசராச சோழன் காலத்திற்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகள் கழித்து, பின்னர் வாழ்ந்திருந்த சேக்கிழார் பெருந்தகை இக்கோயிலைப் பலகால் வந்து கண்டு மகிழ்ந்து வியந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. நாம் சேக்கிழார் பெருந்தகையைக் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெற்றிலோம்! ஆயினும், அவர் கண்டு மகிழ்ந்த இக்கோயிலையும் விமானத்தையும் கண்டு மகிழ்கின்றோம் என்று எண்ணும்பொழுது, நம் உள்ளம் இறும்பூது எய்துகின்றது.

கவிஞர்கள் தாம் காணும் காட்சிகளையும் தம் வாழ்வில் அமையும் நிகழ்ச்சிகளையும், எங்ஙனமேனும் தம் நூல்களிற் குறித்து வைப்பர் என்பது அனைவரும் அறிந்ததே. அந்தமுறையில் எண்ணும்பொழுது, இத் தஞ்சை இராசராசேச்சுரத்தைக் கண்டு சேக்கிழார் எய்திய வியப்புணர்ச்சிகள், பெரிய புராணத்தில் எங்கேனும் அமைக்கப்பெற்றிருத்தல் கூடுமோ என்று, நம் உள்ளத்தில் ஒருவகை ஆர்வ உணர்வு எழுகின்றது. ஒரு சில பெரியபுராணப் பாடல்கள் இப்பொழுது நம் உணர்வுச் செவிகளில் முற்போந்து ஒலிக்கின்றன.

## ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

கரம்பயம் — பட்டுக்கோட்டை தாலுக்கா

இத்தலம் பழங்காலத்தில் கல்லும், கரம்பையுமாய் இருந்தமையினால் கரம்பயம் என வழங்கப்படுகிறது. இத்தலத்தில் யாதவர் ஒருவர் வைசூரியினால் அவதியுற்று ஸ்ரீ முத்துமாரியம்மன் கருணையினால் பங்குனிமீ ஞாயிற்றுக் கிழமையன்று நோய் நீங்கப்பெற்றமையால் ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு பக்த கோடிகட்கு மகிழ்வூட்டும் வண்ணம் 11 தினங்கள் அம்பாள் சுற்றுலா வந்து கொண்டிருக்கிறாள்.

பட்டுக்கோட்டையிலிருந்து பாப்பாநாடு செல்லும் 3 நிர். பேருந்து இத்தலத்தின் வழியாகச் செல்கிறது. பக்தகோடிகளனைவரும் வந்து ஸ்ரீ அம்பாளை வழிபட்டு அவளின் அருளைப் பெறவேணுமாய் வேண்டுகிறோம்.

V. R. சுந்தரராஜன்
அறங்காவலர்

T. ஞானகுரு B. A.
நிர்வாக அதிகாரி

---

தருமை ஆதீனம்

## ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருப்பறியலூர் — தஞ்சை மாவட்டம்

சிவபெருமானை அவமதிக்கக்கருதி வேள்வியியற்றிய 'தக்கனை' சமர் புரிந்து இறைவன் மறக்கருணை வெளிப்பட்ட வீரட்டத் திருத்தலம் இது. அட்ட வீரட்டத்துள் ஒன்று. 'தாரகன்' என்னும் அசுரனால் அமரர்க்கு உண்டாகிய அச்சத்தைப் பறித்ததனால் 'பறியலூர்' என்று பாராட்டப் பெற்றது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் திருவாக்கில் வைத்துப் பாடப்பெற்ற சிறப்புடையது. திருவாவடுதுறை ஆதீனக் குருமகா சந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ பின் வேலப்ப தேசிக சுவாமிகள் பாடி அருளிய தலபுராணம் உண்டு.

இத்தலம்: மாயூரம் - தரங்கம்பாடி வழியில் செம்பனார்கோயிலுக்குத் தென்மேற்கே ஒன்றேகால் கல் தொலைவில் உள்ளது.

---

தருமை ஆதீனம்

## ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

குத்தாலம்

மாயூரம் வட்டம்] — [தஞ்சை மாவட்டம்

வற்றாத வளங்கொழிக்கும் காவிரியின் வனப்புமிக்கத் தென்கரையில் அமைந்துள்ளது இத்திருத்தலம். 'திருத்துருத்தி' என்ற தொன்மை பெயர் உடையது.

இறைவன் : சொன்னவாறறிவார்
இறைவி : அரும்பன்ன வனமுலையாள்
தலவிருட்சம் : உத்தாலமரம்

சுந்தரமூர்த்திசுவாமிகளின் உடற்பிணி போக்கிய தீர்த்தச் சிறப்புடையது இத்தலம். இத்தலம்: கும்பகோணம் - மாயூரம் பேருந்துப் பெருவழியில் உள்ளது. மாயூரமிருந்து 8 கல் தொலைவு.

---

காஞ்சி வரதன் எனப் பிரசித்தி பெற்ற

## ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானம்

காஞ்சிபுரம்

முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் ''கச்சி'' என வழங்கும் காஞ்சி மாநகரில் வேண்டுவோர்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கும் வரதராஜப் பெருமாளை வந்து தரிசித்து இம்மை, மறுமைப் பயன்களை அடைய வேண்டுகிறோம்.

வைகாசித் திங்களில் நடைபெறும் பிரம்மோத்ஸவம் தனிச் சிறப்புடையதாகும். அதில் மூன்றாம் நாள் காஞ்சிவரதன் ''கருடசேவையும்'' ஏழாம்நாள் ''திருத்தேரும்'' பிரசித்தமானது. ஆண்டுமுழுவதும் விழாக் கோலம் பூண்டு பிரபந்த, வேதகோஷங்களிடையே ஸ்ரீ வரதராசப்பெருமாள் கோலாகலப் பவனிவருவது தனிச்சிறப்பாகும். யாத்ரிகர்கள் தங்க வசதியுண்டு. காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்குச் செய்யும் ரத்னாங்கித் திருப்பணிக்கு பக்தர்கள் நவரத்தினங்களை வாரிவழங்க வேண்டுகிறோம்.

எஸ். வைத்தியநாதன் பி. ஏ,
நிர்வாக தர்மகர்த்தர்

கௌரவ தர்மகர்த்தர்கள்:
ஆர். தாததேசிகதாதாசாரியார்,
பெரு. சுதர்சனதாதாசாரியார்.

**சேக்கிழார் :**

இப்பெரிய கோயிலைக்கண்டு, இதனை அமைத்த இராசராசனின் பேருள்ளத்தினை எண்ணி வியந்த சேக்கிழார், அவ்வியப் புணர்வினைப் பெரிய புராணத்தில் ஓரிடத்தில் சிறப்புற இணைத்து இயைத்துக் குறிப்பிடுகின்றார். கயிலாய மலையைப் பற்றிப் பெரியபுராணத்தின் தொடக்கத்தில் பாட வேண்டிய இன்றியமையாமையும் இயைபும் அவருக்கு நேருகின்றன. அந்தநிலையில் அவர் கயிலாய மலையையும், தட்சிணமேரு எனும் இப்பெரிய கோயிலை அமைத்த இராசராசனின் பேருள்ளத்தினையும் இணைத்து எண்ணி, இரண்டிற்கும் இடையே பல பொருத்தங்களும் ஒப்புமைகளும் காண்கின்றார்.

கயிலாயமலை அளப்பரும் பெருமை உடையது, மெய்ஒளி தழைப்பது, மிகவும் தூய்மை வாய்ந்தது, ஓங்கி உயர்ந்து நிற்பது. சிவபெருமான் எழுந்தருளியிருப்பது. இவ் ஐந்துவகை இயல்புகளும் இராசராசனின் திருவுள்ளத்திலும் இயல்பாக அமைந்துள்ளன. அவனது திருவுள்ளம் அளப்பரும் பெருமையுடையது, சத்தியம் ஞானம் முதலிய உயர்ந்த பண்புகள் ஒளிமிக்குத் திகழ்வது, மிகப்பெரிதும் தூய்மை வாய்ந்தது, உயர்ந்த நோக்கங்களும் குறிக்கோள்களும் உடையது, எப்பொழுதும் மறவாது நினைத்துப் போற்றுதலால் இறைவன் எழுந்தருளி இருப்பது. இவ்வாற்றால் திருக்கயிலாயமலையும், சிவபாதசேகரனாகிய இராசராசனின் திருவுள்ளமும் ஒத்ததன்மையுடையன என்பதனைச் சேக்கிழார்பெருமான்,

கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
 கதிரிளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்,
 அளப்பரும் பெருமையி னாலும்,
மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்,
 வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும்
 திருக்கயி லாயநீள் சிலம்பு.

எனவரும் பெரியபுராணப் பாடலில், ஒரு வகையில் புலப்படும்படி இனிது இயைத்துப் பாடியிருக்கும் திறம், அறிஞர்களின் உள்ளங்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும்.

**ஆட்சிக்கால மாட்சி :**

இராசராசன், இப்பெரியகோயிலை எழுப்புவித்ததோடு மட்டுமல்லாமல், இங்கே பற்பல விழாக்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்தான். அவனுடைய காலத்தில் ஓர் ஆண்டில் மொத்தம் 34 பெரிய விழாக்கள் நடைபெற்றன என்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது. மாதந்தோறும் நிகழும் சதயத் திருவிழாக்கள் 12, மாத சங்கராந்தி விழாக்கள் 12, வைகாசி உற்சவ விழாக்கள் 9, கார்த்திகை விழா 1. ஆக ஓராண்டில் 34 விழாக்கள் நிகழ இராசராசன் ஏற்பாடுகள் செய்திருந்தான். இவ்வாறே, தனது ஆட்சிப் பரப்பிற்கு உட்பட்ட நாடுமுழுவதும் உள்ள கோயில்கள் அனைத்திலும், பூசையும் விழாவும் பொற்புற இனிது நடைபெறச் செய்தான். தனது சிறிய தந்தையாகிய உத்தம சோழனின் புதல்வன் "மதுராந்தகன் கண்டராதித்தசோழன்" என்பவனைக் கொண்டு, தனது ஆட்சியிற் கோயிற் காரியங்களும், பிறஅறநிலையங்களும் நன்கு நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கச்செய்தான். திருநெறிய தமிழ் இசையும், தெய்விக நடனமும், சிற்பம் ஓவியம் முதலிய கலைகளும் யாண்டும் செழித்தோங்கப் புரிந்தான். இராசராசனால் கோயில்களிலெல்லாம் பூசைகள் நீடினிது நிகழ்ந்தன; ஏழிசைப்பாடல் ஆடல்கள் எழிலுற மலிந்தன; அருங்கலைகள் பலவும் ஆதரித்துப் போற்றப்பெற்றன. தமிழ்நாடே ஒருபெரும் புத்துயிர்ப்புணர்ச்சியும் மறுமலர்ச்சி வளமும் பெற்று நின்றது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கின. 'கருவூர்த்தேவர்' போன்ற சிவநெறிச் சான்றோர்களும், சிவனடியார்களும் போற்றி வழிபடப் பெற்றனர்.

"மங்கையைப் பாக மாக
 வைத்தவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி,
 ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
 போற்றுதல் புரிந்து வாழ்வார்!
தங்கள்நா யகருக்கு அன்பர்
 தாளலாற் சார்புஒன் றில்லார்"

எனவ்ரும் பெரியபுராணப்பாடல் ஒருவகையில் இராசராசனின் ஆட்சிக்காலச் சூழ்நிலையின் மாட்சிமையினையே குறிப்பின் நெறிப்படப் புலப்படுத்துகின்றது எனலாம்.

**முடிவுரை :**

நமது தமிழகத்தில் உள்ள எண்ணற்ற பல கோயில்களுள், ஒப்புயர்வற்ற கலைநலத்தினாலும், கட்டிட அமைப்புத்திறனாலும், வரலாற்றுப் புகழினாலும், மிகவும் தலைசிறந்தோங்குவது தஞ்சைப் பெரிய கோயில். "உலகத்திலேயே கோயில்கள் அமைக்கும் திறனில் ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்பவர்கள் தமிழர்களே யாவர்" என அயல்நாட்டு அறிஞர்களும் அகமகிழ்ந்து போற்றிப் பாராட்டும் நிலையில், இப்பெருவுடையார் கோயிலை எடுப்பித்த இராசராச சோழனின் அருமை பெருமைகள் எல்லையற்றன. தமிழகப் பெருவேந்தனாகிய அவனது சிறப்புக்களை நினைத்துணர்ந்து, தமிழராகிய நாம் அனைவரும் பெருமிதமெய்தி இன்புற்று மகிழ்வதுடன், நம் தமிழ்நாட்டிற்கு அப்பேரரசன் ஆற்றியுள்ள அரும் பெருந்தொண்டுகளுக்காகத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் என்றென்றும் நன்றி செலுத்திப் போற்றக் கடமைப் பட்டுள்ளோம். வாழ்க இராசராசன்புகழ்; வளர்க சதயநாள் விழாச் சிறப்பு!!

எங்காயி னும்காண இயலாத
 எழில்நலஞ்சேர்ந் தினையற் றோங்கி,
இங்காரும் வியந்துவக்கும் இனியதஞ்சைப்
 'பெருவுடையார் கோயில்' என்றும்
மங்காத வகைஅமைத்த இராசராச
 சோழன்விழா, மாண்பிற் கண்ட
நம்காதல் தமிழரசு நாள்நாளும்
 சிறந்தோங்கி வளர்க நன்றே!

— ந. ரா. முருகவேள்.


# தேவபுரீச்சுரசுவாமி திருக்கோயில்

## தேவூர்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயிலானது கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்டுள்ள மாடக் கோயில்களுள் ஒன்றாகும். திருவாரூர் - நாகூர் புகைவண்டிப்பாதையில் கீழ்வேளூர் நிலையத்திலிருந்து தெற்கே 2 கல் தொலைவிலுள்ளது. இறைவனின் பெயர் தேவபுரீச்சுவரர். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை தேவர்கள் பூஜித்து வந்ததால் தேவகுருநாதர் என்ற பெயரும் வழங்கி வருகின்றது. இறைவியின் பெயர் தேன்மொழியாள். சமயகுரவர்களாகிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் இராமலிங்க அடிகளாரும் இத்தேவூர் இறைவனடி போற்றி, வாழ்த்தி வழிபட்டுள்ளார்கள். இத்தலமானது வாழையைத் தலவிருட்சமாகக்கொண்டுள்ளதால் கதலீவனம் என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகின்றது. ஷ வாழை கல் மலையில் வளர்ந்து வருவது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

N. சிவலிங்கம்

நிர்வாக அதிகாரி

# திரு வேதபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

நேமம் எழிலூர் அஞ்சல்

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

திரு வேதநாயகி உடன் கூடிய ஸ்ரீ வேதபுரீஸ்வரர் திருச்சிற்றேமம் எனும் நேமத்தில் எழுந்தருளியுள்ளார். திருஞானசம்பந்தமூர்த்திகளால் பாடப்பெற்ற இத்திருத்தலத்தில் திரு வேதபுரீஸ்வரரையும் திரு வேத நாயகியையும் விதிப்படி வணங்குவோர் இம்மையில் சகல செல்வத்தையும் மறுமையில் மோட்ச இன்பத்தையும் அடைவர். இத்திருக்கோயிலுக்கு மேற்பாலுள்ள தீர்த்தத்தில் முழுகுவோர் சொர்ணமயமாவார்கள்.

ஆர். ராஜாராம் B. SC.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
N. S. ராமச்சந்திரதேவர்
S. மாணிக்கம்பிள்ளை

# ஸ்ரீமூலநாதஸ்வாமி ஸ்ரீ லெக்ஷ்மிநாராயணப்பெருமாள் திருக்கோயில்

மகாராஜபுரம் தஞ்சை வட்டம்

இறைவர் : ஸ்ரீ மூலநாதஸ்வாமி. இறைவி: ஸ்ரீ சிவகாமசுந்தரி. விசேடங்கள்: நவராத்திரி, ஸ்கந்தசஷ்டி, அன்னாபிஷேகம், ஆருத்ரா தரிசனம், மகாசிவராத்திரி, திருக்கார்த்திகை, முதலியன.

மூலவர் : லெக்ஷ்மிநாராயணப் பெருமாள். உற்சவர்: வரதராஜப் பெருமாள். ஸ்ரீதேவி, பூதேவியுடன் இருக்கிறார். விசேடங்கள் : மாதாந்தர ஏகாதசிகள், வைகுண்ட ஏகாதசி, மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை முறையாக நடைபெற்று வருகிறது. புகைவண்டி நிலையம் பூதலூர். மூன்றரைக்கல் தொலைவில் மேற்கே திருக்காட்டுப்பள்ளியும், கிழக்கே 8 கல் தொலைவில் திருவையாறும் உள்ளன.

இரண்டு கோவில்களுக்கும் டியூப்லைட்டுகள் போட்டு மின்விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. பழைய சிற்பங்கள் பழுது பார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. கோயிலைக் கண்ணுறும் பக்தர்கள் கோயிலின் தூய்மையை பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

M. S. சந்தானம்
அறங்காவலர்

# ஸ்ரீ தேனுபுரீஸ்வரசுவாமி ஆலயம்

பட்டீச்சரம்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

வரலாற்றுச் சிறப்பும், ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் பேரருளும் சிறந்து விளங்கும் இத்திருத்தலம் குடந்தையை அடுத்த தாராசுரம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. காவிரிக்குத் தென்கரையில் உள்ள திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற தலங்களில் இது 23 ஆவது ஆகும்.

சோழப் பேரரசர்கள் முடிசூடும் பெருநகரங்களில் ஒன்றான பழையாறையைச் சார்ந்த மழபாடி என்னும் தலமே இப்பட்டீச்சரம்— இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தர், ஈஸ்வரனால் பூதகணங்கள்மூலம் அனுப்பப்பட்ட முத்துப்பந்தலின் நிழலில் எழுந்தருளும் காட்சியைக் காணவும், தம்மை திருஞானசம்பந்தர் வழிபடவும் பெருமான் நந்தி தேவரை விலகி இருக்கும்படி கட்டளை இட்டு கீழ கோபுரத்திலிருந்து சந்நிதி வரையிலுமுள்ள நந்திகள் விலகி இருக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இவ்விழா ஆண்டுதோறும் ஆனிமாதம் முதல் தேதி காலை முத்துப்பல்லக்கு, மதியம் முத்துப்பந்தல், இரவு முத்துவிமானம் ஜோடனைகளுடன் வீதி உலாகாட்சி அதிசிறப்புடன் நடந்துவருகிறது. வடக்குக் கோபுரவாயிலில் குடிகொண்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ துர்க்கையை தரிசித்து இன்புறுவது ஒவ்வொரு மானிடரின் கடமையாகும்.

இவ்வாலயத்தில் சுமார் இரண்டு இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்விக்க திட்டமிடப்பெற்று தனியாக திருப்பணிக் குழு அமைக்கப் பெற்றுள்ளது. அன்பர்கள் எல்லோரும் ஏற்ற வகையில் பங்கு கொண்டு நமது ஆன்மீகச் செல்வங்களும், கலைச் செல்வங்களும் அழியாமல் காக்க உதவிபுரிய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

L. D. கிட்டப்பா
அறங்காவலர்


K. அய்யாதுரை
நிர்வாக அதிகாரி

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ வீழிநாதசுவாமி திருக்கோயில்

## திருவீழிமிழலை

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்தலம் சிவபெருமான் விண்ணிழி விமானத்தில் திருமணக்கோலத்தில் வீற்றிருக்கும் சிறப்புள்ளது. திருமால் ஆயிரந்தாமரைகளுள் ஒருநாள் ஒரு பூ குறையத் தம் கண் மலரால் அருச்சித்துச் சக்கரம் பெற்றது. பூந்தோட்டம்-நாச்சியார்கோவில் பெருவழியில் சுமார் 9 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

சம்பந்தர் பதிகம் பதினன்கு, அப்பர் பதிகம் எட்டு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக 23 தேவாரத்திருப்பதிகம் பெற்றது. சேந்தனர் திருவிசைப்பாவும் உள்ளது. கி. பி. 7-ம் நூற்றுண்டில் பஞ்சத்தீர்விற்குச் சுவாமியே சம்பந்தருக்கும் அப்பருக்கும் நாடோறும் படிக்காசுகள் கொடுக்க இருபோதும் பறைசாற்றி அன்னம் அளித்து வறுமை போக்கிய தலம். சுவாமி திருமணக்கோலத்தில் இருந்து இரதிக்கு மன்மதனை உயிர்ப்பித்து அளித்தது.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்களது அருளாட்சியின் கீழ் உள்ளது.

# அருள்மிகு நடுதறிநாதசுவாமி திருக்கோயில்

## கோயில் கன்றுப்பூர்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் மாயூரம் - காரைக்குடி புகைவண்டிப் பாதையில் மாவூர் ரோடு புகைவண்டி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவில் கீழ்த் திசையில் அமைந்துள்ளது. சைவசமயக் குரவராகிய அப்பர் அடிகள் வாழ்த்தி வணங்கி வழிபட்ட தலமாகும். நட்ட தறியிலிருந்து வெளிப் பட்ட காரணத்தால் நடுதறிநாதரென இறைவன் திருநாமம் அமைந் துள்ளது. இறைவியின் பெயர் மாதுமைநாயகி.

இத்தல வரலாறு சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

வீ. இராகவசாமி பி. எஸ்ஸி.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
வி. ரெங்கராமானுஜம் (தலைவர்)
த. கோபால்சாமி நா. வேணுகோபால்

# திரு சுவர்ணஸ்தாபனேஸ்வரசுவாமி ஆலயம்

## (பொன்வைத்தநாதர்)

சித்தாய்மூர் திருச்சிற்றேமம்

அப்பர், ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம். ஆலத்தம்பாடி புகைவண்டி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவிலும், ஆலத்தம்பாடி பேருந்து நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. அர்த்தமண்டபத்தில் கல் சாளரத்தில் நெடுங்காலமாக அமைந்துள்ள "தேன் அடை" பார்க்க வேண்டியது. மேலும் வணிகப் பெண்ணின் கற்பின் மேன்மையை உலகிற்கு உணர்த்த வைகாசித் திங்களில் விசாகத்திற்கு முதல்நாள் இரவு அகாலத்தில் அகால தரிசனம்தந்து உய்வித்த இடம்.

க, துரைசாமி பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
S. சிவவடிவேல் (தலைவர்)
வெ. நாகராஜன் P. சுந்தரமூர்த்தி

# அரங்கநாதர் திருக்கோயில்

## திருவரங்கம்

இத்திருக்கோயில் ஆழ்வார்கள் பதின்மரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தனிச் சிறப்பைப் பெற்றதாகும். இவ்வாலயத்தின் மூலஸ்தான விமானம் தங்கத்தால் அழகுபடுத்தப்பட்டிருப்பது கண்கவர் காட்சியாகும். இத்திருக்கோயில் நகரத்தின் மையமாக அமைந்துள்ளதால் இதைச் சுற்றியுள்ள மதில் சுவற்றுடன் கூடிய தெருக்கள் மிக அழகாக காட்சி அளிக்கின்றன. நகரின் இருபுறமும் காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகள் தவழ்ந்தோடுவது இந்நகருக்கு மேலும் அழகு செய்கிறது. அரங்கரை சேவிக்க தினமும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து கூடுகிறார்கள். இந்நகருக்கு வந்துபோக இரவு 10 மணிவரை ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்துவீதம் செல்கின்றன. பக்தர்கள் தங்கிச்செல்ல திருவரங்கம் தெற்குச் சித்திரைவீதியிலும், காட்டழகிய சிங்கர் ஆலயத்திலும், சமயபுரத்திலும் தேவாலயத்தின் சார்பாக வசதி மிக்க அறைகள் கட்டப்பட்டு குறைந்த வாடகைக்கு கொடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த தேவஸ்தானத்தைச் சேர்ந்த சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் இங்கிருந்து வடக்கில் 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இவ்வாலயத்திற்குத் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள்வந்து அம்மனை தரிசித்து செல்கின்றனர். இதனைச்சார்ந்த உறையூர் கமலவல்லி நாச்சியார் திருக்கோயிலும், திருவெள்ளறை புண்டரீகாட்சப்பெருமாள் (செந்தாமரைக் கண்ணன்) திருக்கோயிலும், காட்டழகியசிங்கர் ஆலயமும் காணற்கரியதும், வரலாற்றுச் சிறப்புடையதுமாகும். ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணி டாக்டர் சர். ஏ. ராமசாமி முதலியார் தலைமையிலும், சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருப்பணி திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையிலும் நடைபெற்று வருகிறது. ஸ்ரீரங்கம், சமயபுரம் வரும் சேவார்த்திகள் தங்கிச் செல்ல தேவஸ்தானத்தாரால் சகல வசதியுடன் தங்கும் விடுதிகள் நடத்தப்படுகின்றன. ஸ்ரீரங்கத்திற்கும், சமயபுரத்திற்கும் திருப்பணி நன்கொடைகளை திருப்பணிக்குழு செயலாளர் அண்டு பொருளாளர் என்ற முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம். எம்பெருமானை வழிபட்டு வாழ்வில் பயனடைய வேண்டுகிறோம்.

S. இரத்தினம் B. A., B. T.,
செயல் அலுவலர்

அறங்காவலர்கள் :

திரு. பி. ஏ. ஸ்ரீ ரங்கராஜபட்டர் சுவாமிகள்
திரு. ஆர். எஸ். கிருஷ்ணராவ் அவர்கள் பி. ஏ., பி. எல்.,
திரு. பி. வடவேங்கட கோனார் அவர்கள்
திரு. ஆர். நல்லமுத்துநாட்டார் அவர்கள்
திரு. க. இராசவேலு அவர்கள் எம். ஏ., பி. எல்., (தலைவர்)

# திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## திருத்தணிகை

### செங்கை மாவட்டம்

திருமுருகன் உறையுஞ்சிறப்புத் தலங்கள் ஆறு படைவீடுகளாகும். அவ் வாறு படைவீடுகளில், ஐந்தாவது படைவீடாகும் திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், வாக்கில் சிறந்த அருணகிரிநாதர், முத்துசாமி தீட்சதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இத்தணிகை, செங்கை மாவட்டத்தில் சென்னை - பம்பாய் இருப்புப்பாதையில், அரக்கோணம் சந்திப்பிலிருந்து வடக்கே 14 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாகும். சென்னையிலிருந்து 84 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

இத்தலத்தில் நடைபெறுகிற ஆடிக்கிருத்திகை பெருவிழாவில் லட்சோபலட்சம் மலர்க்காவடிகள் செலுத்துவதும், பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்துவதும், ஆயிரமாயிரம் பிரார்த்தனை முடிப்புக்கள் செலுத்துவதும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31—ம் நாள் ஜனவரி 1—ம் நாள் ஆகிய இரு தினங்களில் திருப்படித் திருவிழாவில் திருப்படிகள் தோறும் திருப்புகழ் பாடிச்செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

நாள்தோறும் இத்தலத்தை நாடி ஆயிரமாயிரம் பக்தர்கள் வருகின்றனர். வருகின்ற பக்தர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள், குடியிருப்பு அறைகள், உணவு விடுதி, மலைக்கு வாகனங்கள் செல்வதற்கு மலைப்பாதை ஆகியவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, பக்தர்கள் பெருமளவில் வந்து திருமுருகன் அருள்பெற்றுய்ய வேண்டுகிறோம், பக்தர்கள் மலைக்குச் செல்ல வாகன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

கி. சிதம்பரம் பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

மி. ச. நடேசன் (தலைவர்)
ஜி. எஸ். துரைசாமி முதலியார் — கே. கன்னையா நாயுடு
கே. திருவேங்கடம் — வி. எம். துரைசாமி ரெட்டி

தொலைபேசி எண்கள் :

திருக்கோயில் அலுவலகம் 25 — திருக்கோயில் (மலை) 43
நிர்வாக அதிகாரி குடியிருப்பு 47 — யாத்ரீகர் குடியிருப்பு இல்லம் 87
மலைப்பாதை 96

## ஸ்ரீ வெங்கடாஜலபதி கம்பசேர்வை கட்டளை

இளந்தோப்பு

மாயூரம் வட்டம்] [தஞ்சை மாவட்டம்

மேற்கண்ட கட்டளை நிதியிலிருந்து ஆண்டுதோறும் கம்பசேர்வையின்பொழுது ஏராளமானவர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. இக்கட்டளை இந்து சமய அறநிலைய இலாகாவின் ஆளுகையில் உள்ளது. இதன் ஆண்டு வருமானம் சுமார் ஆயிரம் ரூபாய்.

T. ஞானப்பிரகாசம்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்

மாயூரம் வட்டம் விளநகர் - ஆறுபாதி தஞ்சை மாவட்டம்

விளநகர், மாயூரத்திலிருந்து பொறையார் பேருந்து மார்க்கத்தில் 5 மைலில் இருக்கின்றது. தவம்புரிந்த ஜயஷவ்ய முனிவருக்கு தண்ணருள்தந்திட தென்காஞ்சி என்ற இத்திவ்ய தலத்தில் நீள்புகழ் கொண்ட நெடுமால் நின்ற கோலமாய் எழுந்தருளியுள்ளார். வைகாசி விசாகத்தைக் கடைசியாகக்கொண்ட பிரும்மோற்சவ விழா வனப்புடையது. அகழ்ந்து எடுக்கப்பெற்ற ஐம்பொன் இராமர், சீதை திருவுருவங்கள் அற்புதமாய் காட்சி அளிக்கின்றன.

சி. சோதி பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

V. மச்சிநாதன் (தலைவர்)
S. கணேசன் M. L. A.
A. N. கல்யாணசுந்தரம் M. A.,
S. பொன்னையா முதலியார்
K. பஞ்சாயத்து

# ஒப்பற்ற மாமன்னன்

கம்பன் அடிப்பொடி

சோழப் பேரரசர்களில் எல்லா வகையாலும் சிறப்புற்றுத் திகழ்ந்தவன் முதலாம் இராசராசன். கல்வி, அறிவு, வீரம், பக்தி, கலையுணர்வு, சீலம், பரந்தமனம் முதலிய பலவகையிலும் ஒப்பற்ற ஒரு பேரரசனாய் விளங்கியவன். இவனுக்கு நிகராக மற்றோர் அரசனை - ஆம், எல்லாம் நிரம்பிய ஓர் அரசனை - வரலாற்றில் காண்டல் அரிது. இராச தந்திரத்திலும், ஆட்சித் திறமையிலும், ஒப்பற்றவன் இராசராசன்.

இவன் காலத்தில் இவன் ஏற்படுத்தியவை எல்லாம் கட்டளைகள் (அளவைகள்) ஆக, முன்மாதிரியாக ஆகிவிட்டன. "ஒரு மனிதன் ஆயுளிலா இவ்வளவும்?" என்று வியக்கச்செய்யும் அளவுக்கு செயல்களின் அளவும், தரமும் பெருகிநிற்கின்றன.

இவ்வளவுக்கும் என்ன காரணங்கள்? எதனால் இத்துணை ஆற்றலும், அறிவும், திறமையும் உள்ளவன் ஆனான்? ஒன்றா இரண்டா? காரணங்கள் பலப்பல. அவற்றைச் சிறிது பார்ப்போம் இனி! ஒன்று: குடிப்பிறப்பு. ஆம்; "குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்" என்பான் கம்பன். தந்தைவழியும் தாய்வழியும் இராசராசனுக்கு அத்துணைச் சிறந்தன. மனுவும், சிபியும் வந்த வளவர் குலத்தோன்றல் சுந்தரசோழர் என்ற பொன்மாளிகைத் துஞ்சின தேவர். இவர் இராசராசனின் தந்தை. தாயோ திருமுடிக்காரி போன்ற பெருந்திறல் அறவோர் வந்த மலையமான் குடியிற் பிறந்த கற்பின் செல்வியான வானவன்மா தேவி. இவரைப் பற்றி,

"செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
இந்திர சமானன் இராச சர்வக்ஞன் எனும்
புலியைப் பயந்த பொன்மான்; கலியைக்
கரந்து கரவாக் காரிகை; சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறும்
தூண்டா விளக்கு ... ..."

என்று திருக்கோவலூர்க் கல்வெட்டு பாடிப் பரவும். இத்தகைய குடிமுதல் ஒழுக்கங்களால் சிறந்த தாய் தந்தையருக்குப் பிறந்தமை முதற்காரணம்.

இரண்டாவது: செம்பியன்மாதேவியார் பால்மணம் மாறாப் பருவத்திலேயே தந்தை பொன்மாளிகையில் மாள, தாயும் அவருடன் உடன்கட்டை ஏறிமாள, இராசராசனைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக் காத்து வளர்த்தவர் மாதேவடிகள் ஆன செம்பியன் மாதேவியாரே! ஆண்டாலும், அறிவாலும், அனுபவத்தாலும், தெய்வப் பற்று முதலிய சீலத்தாலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனிச்சிறப்புடைய மூதாட்டியார் அவர். அவரே இவருக்கு இறையுணர்வையும், தெய்வத் தமிழ்ப் பாசுரங்களில் ஈடுபாட்டையும் ஊட்டி மெய்யறிவும் ஒழுக்கசீல உறுதியும் ஏற்படுத்தியவர். இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது: குந்தவைப் பிராட்டியார். செம்பியன் மாதேவியார்க்கு அடுத்தபடி அன்னையாக இவரை வளர்த்தவர் இவருடைய தமக்கையாரான குந்தவைப் பிராட்டியாரே! இராசராசனுக்கு அவர்தான் அரசியல் துறையில் ஆர்வம் ஊட்டி அவ்வேட்கையை வளரச்செய்து சிறந்த மதிமந்திரி

கயிலையே......                                                    மயிலை!

தந்தி : கபாலீச்சரம்                                   தொலைபேசி : 71670

# திருமயிலை கபாலீச்சரர் ஆலயம்

## கருங்கல் தளவரிசை திருப்பணி நிதிஉதவ வேண்டுகோள்

தொண்டை நாட்டுத் திருப்பதியாகிய திருமயிலைக் கபாலீச்சரம் மிகத் தொன்மை வாய்ந்த சிவத்தலம். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் என்பை எழிலுரு கொண்ட ஏந்திழையாகச் செய்த அற்புதத் திருத்தலம். அருணகிரியாரால் பாடப் பெற்ற சிங்காரவேலர் கோயில் கொண்டுள்ள திருத்தலமும் இதுவே! அம்பிகை மயிலுருவில் வழிபட்ட அரிய திருத்தலம். அப்பரால் பாடப்பெற்ற அழகொழுகும் ஆலயம். இத்துணை புகழ் மலிந்த மயிலையம்பதியில் உள்ள கற்றூர்கள் ஏத்தும் கபாலீச்சரர் ஆலய பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைக்கும் திருப்பணியினை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. மு. கண்ணப்பன் அவர்களால் 22-8-71ல் துவக்கப்பட்டுள்ளது.

இத்தகைய திருப்பணிக்கு ஆகும் செலவு ஏறக்குறைய இரண்டு லட்சம். நூறு சதுர அடிக்கு ஆகும் செலவோ ரூ 400 தான்.

தமிழகத்தின் தலைநகராம் சிங்காரச் சென்னையில் உலகோர் அனைவரையும் தன் கலையழகால் ஈர்க்கும் இவ்வாலயத்தில் அரிய திருப்பணிக்கு அன்பர்கள் இருநிதியினை வாரி வழங்கி இறை பணியினை இனிதே முடித்துத் தருமாறு வேண்டுகிறோம்.

நன்கொடை வழங்குபவர்கள், "நிர்வாக அதிகாரி, திரு கபாலீச்சரர் ஆலயம், மயிலாப்பூர் சென்னை-4" என்னும் முகவரிக்கு அனுப்பி அச்சு ரசீதுப் பெற்றுக்கொண்டு திருகற்பகாம்பாள் உடனுறை கபாலீச்சரரின் திருவருள் பெற்று வாழ வேண்டுகிறோம்.

த. நாகராஜன், பி. எஸ். ஸி.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
கு. அய்யா சுப்பிரமண்ய முதலியார், (தலைவர்)
சி. செல்வநடராஜ முதலியார்    டி. பாலகிருஷ்ணன்
ஆர். கோதண்டராமன்    எஸ். ஜெயராமன்

# ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் திருக்கோயில்

## திருக்கண்ணபுரம்

நன்னிலம் வட்டம் ]                                     [ தஞ்சை மாவட்டம்

பாநாளும் பணியத் தணியும் பிணி
ஏதம்சார எனக்கே வினியேன் குறை
வேதநாவலர் விரும்பும் திருக்கண்ண புரத்
தாதியானை அடைந்தார்க் கல்லலில் லையே.

108 திவ்விய தேசங்களுள் ஒன்றுகிய இந்தத் தலத்தை தரிசித்து விட்டீர்களா? இன்றேல் உடனே தரிசியுங்கள்.

டி. உதயராஜ் பி. ஏ.
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
ஜி. கோவிந்தசாமி நாயுடு (தலைவர்)
S. சுந்தரேச அய்யர்    ஆர். எஸ். எம். ராமலிங்கம் பிள்ளை

# ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி தேவஸ்தானம்

திருவல்லிக்கேணி — சென்னை - 5

[ தொலைபேசி : 88818 ]

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி மூலவருக்கு 1008 பொன் காசுகள் (டாலர்) கொண்ட ஸ்ரீ லஷ்மிஹார சஹஸ்ரநாம மாலை சாத்துவதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பெற்று பக்தர்கள் நன்கொடையைக்கொண்டு இதுவரை மூன்று ஹாரமாக 300 டாலர்கள் கொண்ட மாலைகள் சாத்தப்பெற்றுள்ளது.

பாக்கியுள்ள 708 டாலர்கள் சாத்துவதற்கு பக்தர்கள் யாவரும் முன்வந்து தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி இப்பெரிய கைங்கரியத்தை நிறைவேற்றி வைக்கும்படி வேண்டுகிறோம்.

கே. இராமகிருஷ்ணன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
வி. ஜகன்னாதம் செட்டி F. C. A. (தலைவர்)
எஸ். வி. வரதராஜ அய்யங்கார் M. A. M. O. L.
பி. வி. செங்கல்வராய செட்டி

யாகவும் விளங்கினர். சுந்தரசோழர் பரம்பரைக்கு வந்த அரசுரிமை பறிபோகாமல் இருக்க அவர் மிகத்திறமையாகச் செயலாற்றியுள்ளார். அதன் காரணமாக இராசராசன் தமக்கையார்பால் எல்லையற்ற பெருமதிப்பு உடையவனாய் விளங்கினான். இது மூன்றாவது காரணம்.

நான்காவது: தன்சிற்றப்பன் மதுராந்தகனை உத்தம சோழன் கோலோச்சிய காலத்தில் சோழநாட்டிலும், சோழநாட்டிற்குட்பட்ட வேறு நாடுகளிலும் இளங்கோவாக இருந்து செயற்பட்டான். இங்ஙனம் மதுராந்தகன் ஆண்ட பதினைந்து ஆண்டுகளும் தன் பல்துறை வளர்த்துக் கொண்டான். நாலாபக்கத்து உறவுகளையும் வலுப்படுத்திக் கொண்டான். இது நான்காவது காரணம்.

ஐந்தாவது: தமிழர்தவம். எத்தனையோ காரணங்களால் புகழ்மங்கிக்கிடந்த தமிழகக் கலை, மொழி, சமயம், நிர்வாக நெறி முதலிய செழித்து மறுமலர்ச்சி அடைய தமிழ் மக்கள் செய்த தவம் பலித்தது. இராசராசன் அரசு கட்டில் ஏறினான். புதையுண்டு கிடந்த திருமுறைகள் உதித்தன. எத்தனை எத்தனையோ குறைகள் தீர்ந்தன; நலன்கள் மலர்ந்தன. இது ஐந்தாவது காரணம்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தெய்வத் திருவருள். அவனருள் இன்றேல் யாது தான் நடக்கும்?

அனைத்திற்கும் உரியவனாய், தன்னை உருப்பெறச் செய்த யாவரையும் மறவாதவனாய், ஒப்பொருவர் என்று உரைக்க முடியாத மாமன்னனாய் அரும்பணி ஆற்றி நின்றான் இராசராசன்.

தன் மூத்த மகளுக்குத் தன்னை அறத்துறையில் உருவாக்கிய செம்பியன் மாதேவியாரின் திருப்பெயரான 'மாதேவடிகள்' என்ற பெயரையும்.

தன் இளைய மகளுக்குத் தன்னை அரசியல் துறையில் ஆளாக்கிய தன் தமக்கையாரின் திருப் பெயரான "குந்தவை" என்னும் பெயரையும்,

தன் ஒற்றைத் தனி மகனுக்குத் தன் சிற்றப்பனின் இயற்பெயரான 'மதுராந்தகன் என்ற பெயரையும் சூட்டித் தனது நன்றியறிவைப் புலப்படுத்திக்கொண்டான்.

நாட்டிலே அமைதி நிலவவேண்டும் என்ற கருத்தினால் தன்நாட்டைச் சுற்றியிருந்த பல பெரும் நாட்டு அரசகுலத்திலிருந்தும் மகளிர் பதினொருவரை மணம் செய்து கொண்டிருந்திருக்கிறான். இவையெல்லாம் ராஜதந்திரத்தின் சிறப்புஆகும்.

உள்ளத்தால் பெரியவன்; அவன் அளித்த அறக்கொடைகள் பேசும்! அறிவால் பெரியவன்; அவன் நிபந்தங்கள்பேசும்! செயலால் பெரியவன்: தஞ்சைப் பெரிய கோயில் பேசும்! கொடையால் பெரியவன்; தேவாரத்திருமுறை பேசும்! எல்லாவற்றாலும் பெரியவன்; அவன் கல்வெட்டுக்கள் பேசும்!

நாமும் அந்த அறத்துறை ஆட்சி புரிந்த சிறப்புடை மன்னவனும் கோராசராசகேசரி சிவபாதசேகரன், திருமுறைகண்ட சோழன் உய்யக்கொண்டான் இராசராசதேவர் உலகுய்யத் தோன்றிய ஐப்பசிச் சதய நாளில் நன்றிப்பெருக்குடன் வணக்கம் செலுத்தி மகிழ்வோமாக!

# தமிழகக் கோயில்சிறப்பு

தஞ்சை — என். எஸ். தாத்தாசாரியார்

*நிற்கின்ற போதே நிழலுடை யான்கழல்*
*கற்கின்ற செய்ம்மின் கழிந்துசும் பாவங்கள்*
*சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுத*
*மற்றுஒன் றில்லாத மணிவிளக் காமே.* [பின்

## 1. தோற்றுவாய்

மலையில் சிறந்தது இமயம். கலையில் சிறந்தது சிற்பம். ஒளியில் மிக்கது பகல். தளியில் மிக்கது இராசராசேச்சுரம். மண்ணில் சிறந்தது பாரதம். மக்களில் சிறந்தவன் இராசராசன்.

மாமன்னர் இராசராசனின் சிந்தனையின் விளக்கமான தஞ்சைப் பெரியகோயில் அம்மன்னனது புகழப் பெரும் காவியத்தை வான ஏட்டில் இன்றும் எழுதிக்கொண்டு திகழ்கிறது. இக்கோயிலே தமிழன் பெருமைக்கு விண்ணிலா விளக்கமாகும். தமிழரின் தலையை நிமிரவைக்கும் நீள் முடியும், கவிஞனின் கற்பனையைச் சிதறவைக்கும் சிற்ப அமைப்பும், விஞ்ஞானியை வியக்க வைக்கும் வினைத்திறனும் கூடிக் களித்திடும் இடமே தஞ்சைப் பெரியகோயில். 793 அடி நீளமும், 397 அடி அகலமும்கொண்ட சிறு கோட்டையிலே அமைந்திருப்பது இந்தக் கோயில். மன்னர்கள் தாம் கட்டி முடித்துப் பூசைசெய்ய இயலும் மகுடாகம முறைப்படி கட்டிய மாடக்கோயிலே இது. 90 அடி உயரமுள்ள கேரளாந்தகன் வாயிலும், 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உள்ள வெளி முற்றமும், 216 அடி உயர்ந்து 14 அடுக்குகளும், 80 டன் எடையில் 25½ அடி சதுரமும்கொண்ட பிரம்மரந்திரக்கல்கொண்ட விமானமும், 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8½ அடி அகலமும்கொண்ட நந்தியுடனும் கூடிய இந்தக் கோயிலே தமிழ்நாட்டுக் கோயிலமைப்புக்கு எடுத்துக்காட்டாகவும் சிற்றிலக்கணமாகவும் அமைந்துள்ளது. இந்தக்கோயிலின் அமைப்பையும் பெருமையையும் மையமாகக்கொண்டு நம் தமிழ்நாட்டுக் கோயில்கள் கோபுரங்கள் இவைகளின் சிறப்பை இக்கட்டுரையில் சுருக்கமாக விளக்குதும்.

## 2. கோயில்

"கோ" என்பதற்கு அரசன் இறைவன் முதலிய பொருள்கள் உண்டு. அவர்கள் இருக்குமிடம் கோ + இல்=கோயிலாயிற்று. ஆனால் ஈண்டுக் காரண இடுகுறிப் பெயராய் கடவுள் ஆலயங்களுக்கே 'கோயில்' எனப் பெயர் ஏற்பட்டுவிட்டது. கோயில், ஆலயம், கோட்டம், குடி, கற்றளி என்றெல்லாம் அழைப்பதுண்டு. ஆலயம் என்பதை ஆ + லயம்=எனப் பிரித்து ஆன்மா அடைவதற்கும் லயிப்பதற்கும் உரிய இடம் என்றும், ஆணவமலம் அடங்கவேண்டிய இடமென்றும் பொருள் உரைப்பதுண்டு.

இன்று நம் தமிழ்நாட்டில் காணும் ஆலய அமைப்பு ஆகம விதிப்படிக்கு மனித வடிவ அமைப்பைச் சார்ந்தே காணப்படுகிறது. இதனை 'க்ஷேத்திரம் சரீரப்ரஸ் தாரம்' என்பார்கள். திருமூலர் இக்கருத்தை.

*உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம் பாலயம்*
*வள்ளல் பிரானுக்கு வாய்கோ புரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.*

என்று வெளியிட்டார்.

மனித உடலின் பாதம் கோபுரம், முழங்கால் முன் மண்டபம், துடை வாத்யமண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகா

## ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி வட்டம் பூவனூர் தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயில் மன்னார்குடி—நீடாமங்கலம் பெருவழியில் நீடாமங்கலத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது. ''பூவனூர் புகுவார் வினைபோகுமே'' என்று திருநாவுக்கரசரால் போற்றப்பட்ட தலம். எத்தலத்திலும் இல்லாததாய் இத்திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் மைசூர் மன்னர்களின் குலதெய்வமான ஸ்ரீ சாமுண்டியம்மன் சந்நிதியில் பிரதி ஞாயிறு தோறும் எலிக்கடி முதலான விடங்களுக்கு காலை 9 மணி முதல் 12 மணிவரை வேர் கட்டப்படுகிறது. வேர் கட்டியதும் விடம் நீங்குகிறது.

இது தீர்த்த விசேடமும் மூர்த்தி விசேடமும் கொண்டது. கிழக்கு நோக்கிய சந்நிதி. இறைவன் ஆதி பெயர் புஷ்பவனேஸ்வரர். இறைவி கற்பகவல்லி. ஸ்ரீ ராஜராஜேஸ்வரிக்கு தனி சந்நிதி இருக்கிறது. செவிலித் தாயாக வந்த சாமுண்டி பெயரில் ''ஸ்ரீ சாமுண்டியம்பிகைமாலை'' என்ற நூல் உள்ளது. அதுவும் அதிருத்திரகும்மி என்ற நூலும் தேவஸ்தான வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

G. விஜயராகவன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
P. S. இராமலிங்கம் (தலைவர்)
M. செல்லையன் G. துரைராஜு வன்னியர்

## திரு இருதய கமலநாதசுவாமி ஆலயம்

நாகை வட்டம்] வலிவலம் [தஞ்சை மாவட்டம்

இத்தலம் திருவாரூர்—அறந்தாங்கி இருப்புப் பாதை கிளையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 8 கி. மீட்டர் தொலைவிலும், கீவளூர்—திருத்துறைப்பூண்டி பேருந்து மார்க்கத்திலும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் கோச்செங்கண்ணன் என்ற சோழ அரசர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதால் கி. மு. 2000 நூற்றுண்டிற்கு முற்பட்டதாகிறது. இத்தலத்தைப்பற்றி சமயகுரவர்களால் பாடல்பெற்றதும், அருணகிரிநாதர் திருப்புகழ் பதிகம் பாடிய பெருமையும், ''வலிவலம் மும்மணிக்கோவை'' என்ற அரிய இலக்கிய நூல் ஒன்றும் சிறப்புடையது ஆகும். ''புன்னை மரம்'' புனிதமரமாகவும், ''சக்கரதீர்த்தம்'' புனித நீராகவும் உடைய இத்தலத்தில் எழுபத்திரண்டு அடியார்களின் திருவுருவங்களையும், வலம்புரிவிநாயகரும், மனைத்துணை நாதர், மழையுண்கண்ணியும், ஆறுமுகப் பெருமானும், சுற்றுப் புறங்களில் பரிவார தேவதைகளுடனும் அமைந்திருப்பது மனதில் அழியா இறையுணர்வை வளர்க்கிறது.

N. சிவலிங்கம்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ வன்மீகநாதசுவாமி திருக்கோயில்

அம்மாபேட்டை அ. நி. தீபாம்பாள்புரம் பாபநாசம் வட்டம்

புற்றினடியில் லிங்கம் ஒன்றுக்குப் பசு ஒன்று பால் சுரக்கக் கண்டு சோழ அரசர் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதும், தஞ்சையை ஆண்ட முதல் சரபோஜியின் தாயாரான தீபாபாய் அம்மையாரால் திருப்பணிகள் செய்யப்பட்டதுமாகிய இந்த ஆலயம் அம்மாபேட்டையிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருவார் மங்களநாயகியின் அருட்சிறப்பிற்கு உறைவிடமான இந்த ஆலயத்திற்கு வருகை தருமாறு பக்தர்களை அழைக்கின்றோம்.

A. பட்டாபிசுப்பிரமணியன் B. sc.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
K. S. நாகராஜன் (தலைவர்)
G. ராமச்சந்திரதேவர் S. சாமிஜயாசேனாநாட்டார்

## ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானம்

விருத்தாசலம் தென்னார்காடு மாவட்டம்

பாடல்பெற்ற நடுநாட்டு சிவத் திருக்கோயில்களில் இதுவும் ஒன்று. சைவசமய மூவராலும், அருணகிரிநாதர், குருநமச்சிவாயர், இராமலிங்கஅடிகள், சொக்கலிங்கஅடிகள் முதலியோராலும் பாடல்கள் பெற்றுத் திகழ்வது. இத்திருக் கோயிலைச் சுற்றி மணிமுத்தாறுநதி பாய்கின்றது. இந்த நதியில் எலும்பையிட்டால் கல்லாக மாறி விடுகின்றது. பெருமானிடம் சுந்தரர் பொன்னைப்பெற்று இந்நதியில் இட்டு திருவாரூர் கமலாலயத்தில் எடுத்தார் என்பர்.

இத்திருக் கோயில் காசியிலும் வீசம் அதிகம் எனப்படும். கோபுரங்கள் ஐந்தும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டவை. இத்திருக்கோயிலை செம்மைப் படுத்த திருப்பணிக்குழு அமைத்து வேலைகள் நடைபெற்று வருகின்றன.

S. துரைராஜன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
T. S. சுப்பிரமணிய பிள்ளை B. A. B. L. (தலைவர்)
V. இராமச்சந்திரன் B. SC., B. L. V. S. மணி

மண்டபம், கழுத்து அர்த்தமண்டபம், தலை கருவறை, இருசெவிகள் விமானத்தின் வலம் இடமாய் அமைந்த தக்ஷிணாமூர்த்தி சண்டேசுவரர் ஆலயம், கழுத்தின் மையம் நந்தி, வாயும் மூக்கும் மருங்கு ஸ்நபனமண்டபம், புருவத்தின் நடு சிவலிங்கம், தலையின் உச்சி விமானம் என அமைப்பைக்கூறுவர். மனிதனது உடலை மண்ணால் அமைந்ததொரு வெற்று உருவமாகக் கருதும்பொழுது இவ்வுடல் சரீரம் (அழியும் தன்மையுள்ளது) என்றும், தேகம் (எரிக்கப்படுவது) என்றும் பெயர்பெறும். இதையே இறைவனுடைய இருப்பிடமான திருக்கோயிலாகக் கருதினால் இதற்கு 'மெய்' என்ற பெயர் ஏற்படுகிறது. இந்த மனித உடலை மறைத்திருக்கும் உறை அதாவது ஆவரணம் ஏழாகும். மற்றும் இதுபோல ஜீவான்மாவுக்கு உறையான அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்ற கோசங்கள் ஐந்தாகும். இக்கணக்கை இட்டு ஆநந்தமயமான இறைவனுடைய கருவறையைச்சுற்றி ஏழு அல்லது ஐந்து திருச்சுற்றுக்களை ஆலயத்தில் அமைத்தனர். மனிதன் கருவறையிலுள்ள இறைவனை அடைவதை அன்னமய கோசமான உடலையும் இதற்குள் உள்ள காற்றுருவில் உள்ள பிராண மய கோசத்தையும், இதற்கும் உள்ளே உள்ள மனோமய கோசத்தையும் புத்தி என்ற விஞ்ஞானமய கோசத்தையும் தாண்டிக் கடைசியில் உள்ளதாகிய ஆநந்தமயகோசத்தை அடைந்து அழியாப் பேரின்பத்தை அடைவதையே குறிக்கும் என்பர். ஒரு கோயிலின் அடிப்பகுதியில் சிவசக்தியும், நடுவில் விஷ்ணு சக்தியும், முடியில் பிரமனுடைய சக்தியும் உள்ளன என்றும் கூறுவார்கள். அதனால்தான் விமானத்தின் நடுவே மூடி போன்ற கல் பகுதிக்கு பிரம்மரந்திரம் என்னும் பெயரிட்டார்கள் என்பது சிலரது கருத்து. கோயில்களில் இறைவனது உருவங்களைக் கல், செம்பு முதலிய உலோகப் பொருள்களால் அமைத்து அதற்கு மேல் வானொலியின் ஏரியல்போலக் குடவான இடைவெளியுள்ள விமானத்தை அமைத்து; சிகரத்தில் செம்பு, பொன்னாலான தூபியையும் அதில் மாவிலை விசிறியையும் அமைப்பதை மின் ஒளி சக்தி பரப்பும் விஞ்ஞான முறையில் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மின் சக்தி ஓட்டம்கொண்ட நீரில் மந்திரசக்தியை நல்லோர்கள் நல்லமுறையில் பாய்ச்சியும், மாபெரும் தூய அடியார்களின் உள்ளத்தின் அருட்சக்தியைச் சொற்களால் பாய்ச்சியும் அந்நீரை சிலைவடிவில் அபிஷேகமாக இட்டால் அந்நீரினின்று பாய்ந்தோடும் ஒப்பற்ற அருட்சக்தி, அச்சிலையின் மூலமோ தாமிரம் போன்ற உலோகப் பொருளாலான வடிவத்தினின்றோ நேர்குத்தாக எழும்பி, மேலே விமானத்தின் கலசத்தினுடைய விசிறிகளின் வழியே. வானில் பரவி நிற்கும். நீருக்குச் சூட்டை இழுக்கவும், விடவும் ஆற்றல் உண்டென்பதை சூடான பால்பாத்திரத்தை குளிர்ந்த நீரில் வைத்தால் அக்குளிர்ந்த நீரில் பாலின் சூடு பாய்வதைக் காணலாம். அதனால்தான் கோபுரத்தைக் காலையில் கண்கள் மூலம் காண்பவர்களுக்கும் இறைவனது அருட்சக்தி கிடைக்கும் என்பார்கள், மனிதனது கண்களை ஒளியின் இருப்பிடமென்று கூறுவதையும் ஈண்டு கவனித்தல்வேண்டும். ஆகவேதான் கோயில் இறைவனது படிமங்களைக் கூர்ப்பான முடியுடனும், "கருவறை"யில் புறக்காற்றுப் பரவாமலும் அடக்கமாகவும் அமைத்தார்கள். கற்பாறைகளுக்கு ஒளி ஒலியைத் தேக்கி முன்னே தள்ளும் சக்தி உண்டு என்பதையும் நினைவில்கொள்க. அதனால்தான் ஔவையாரும் "ஆலயம் (கோபுரம்) தொழுவது சாலவும் நன்று" என்று கூறினார். இது ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டிய உண்மை. இருப்பினும் அறிஞர்களின் ஆராய்ச்சிக்காக இக் கருத்தை இங்கு எழுதினோம். சுருங்கக் கூறின் நம் தமிழ்நாட்டு ஆலயங்களை "அருள் வான் ஒளி பரப்பும் நிலையம்" எனலாம்.

## 3. கோபுரம்

இறைவனது ஆலயத்தில் கருவறையும், பலிபீடமும், கோபுரமுமே முக்கியப் பகுதிகளாகும். இறைவனது கருவறைக்கு மேலே உள்ள கோபுரத்தை "விமானம்" என அழைப்பார்கள். சிவன் கோவிலின் கோபுரத்தை ஸ்தூலலிங்கம் என்பார்கள். கோபுர தரிசனம் கடவுளின் பாததரிசனம் என்று உரைப்பார்கள். விமானம் நாகரம், வேசரம், திராவிடம் என மூவகைப்படும். அடிமுதல் அனைத்தும் நாற்கோண வடிவாக உள்ளது (சதுரம்) நாகரம் எனப்படும். கண்டம்முதல் வட்டமாக உள்ளது வேசரம் எனப்படும். கண்டம் முதல் எட்டுக் கோணமாக உள்ளது திராவிடமாம். தமிழ்நாட்டில் திராவிடமே புகழ்பெற்றது. நாகரத்தை ஆண் விமானம், திராவிடத்தை பெண் விமானம், வேசரத்தை அலிவிமானம் எனவும் அழைப்பார்கள். "ஹெலியோடோரஸ்" என்ற கிரேக்கநாட்டுப் பெரியவர் நம் நாட்டிற்கு வந்தார் என்றும், அவரைப்பற்றிய கல்வெட்டில் மிகப் பழங்காலம் தொடங்கி இந்நாட்டில் கோபுரம் கொடிமரம் முதலிய அமைந்த கோயில் கட்டும் முறை உண்டு என்றும் புதைபொருள் ஆராய்ச்சி நூலில் 5 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. என்பார் (Memories of the Archeological Servuey of India.) கோபுரம் என்பது தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில், உள்ள கோயில்களின் வாயிலின்மேல் கட்டப்பட்ட உயரமாகவும் மேலே போகப் போக குறுகியும் காணப்படும் வாயில் மாடமாகிய பாகத்தின் பெயராகும். ஆந்திராவில் அமராவதி நாகார்ஜுன கொண்டா முதலிய இடங்களில் அகப்பட்ட, கி. பி. 1. 2 நூற்றுண்டுகளைச் சேர்ந்த சிற்பங்களிலே கோபுரம்போன்ற மேற்கோப்புள்ள சிறிய வாயில்களைக் காணலாம், கி. பி. 7, 8ஆம் நூற்றுண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் பல கோயில்கள் கட்டப்பட்டிருந்தன என்பதைச் சங்கநூல்கள், தேவாரம், திவ்வியப் பிரபந்தங்கள் இவற்றிலிருந்து காணலாம். புகாரிலும், மதுரையிலும் 'பலதேவருக்குக்' கோயில் இருந்தமைபற்றிக் கூறும் சிலப்பதிகாரம்.

*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*(சிலம்பு. 5; 171 - 2.)*

*மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்*
*(சிலம்பு. 14. 8. 9.)*

என்ற அடிகளால் முதல் நூற்றுண்டிலேயே தமிழ்நாட்டில் கோயில்கள் கட்டப்பட்டன என்பதை அறியலாம். இக்கோபுரங்கள் முதலில் மரம், செங்கல், சுண்ணம்பு ஆகியவற்றால் கட்டப்பட்டு நிலைத்திருக்காமல் சிதறுண்டன. இந்தக் காலத்தில் கோபுரம் கொண்ட முதற்கோயிலானது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலாகும். ஆனால் இதற்குக் கொஞ்சம் முந்திய காலத்தைச்சார்ந்த மாமல்லபுரத்தில் உள்ள ஒரு கல்லில் செதுக்கப்பட்ட "பீமரதம்" எனப்படும் சிறு கோயிலே கோபுர அமைப்பில் செதுக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இக்காலத்தில் கோயிலினது கருவறைவிமானத்துக்கே பெருமை தரப்படுகிறது. 'லட்டிகம்' என்ற ஊரில் உள்ள சோழர்காலத்துக் கோயிலினுடைய கோபுரமும் மிகவும் எளிய அமைப்பைக்கொண்டது. 11 ஆம் நூற்றுண்டைச்சேர்ந்த தஞ்சைப் பெரிய கோயிலின் புறத்தே இரண்டு கோபுரங்கள், சாலைகள், கோஷ்டங்களாலும் சுதைச் சிற்பங்களாலும் அழகுறுத்தப்பட்டன. 12ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்ட தாராசுரத்துச் சிவன் கோவிலின் கோபுரம் சற்று உயரமானது போலும். 13ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்ட திருபுவனக்கோயில் கோபுரம் அடுத்தபடியானது. இக்கோபுரங்கள் யாவும் சோழர் காலத்தவை. இக்கோயில்களில் கோபுரத்தைவிட விமானங்களே பெரியனவாக உள்ளன.

13 ஆம் நூற்றுண்டின் இறுதியில் பாண்டியர்களும் கோபுரங்கள் கட்டினர். திருவாரூர்க் கீழைக்கோபுரம், சிதம்பரம் மேலைக்கோபுரம் ஆவுடையார்கோயிலின் கோபுரம் முதலியவை இவர்கள் காலத்தில் கட்டப்பட்டவை எனலாம். கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்ட பெருங் கோபுரங்கட்குச் சிதம்பரம் வடக்குக் கோபுரமும் திருவண்ணமலை மேலைக்கோபுரமும் எடுத்துக்காட்டாகும். கி. பி. 17ஆம் நூற்றுண்டில் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்து நிறைந்த கோபுரங்களை மதுரை நாயக்க மன்னர்கள் கட்டியுள்ளனர். திருமலை நாயக்கர் மரபினரால் கட்டப்பட்ட பெரிய கோபுரங்களை

# VISIT RAMESWARAM

Rameswaram is famous and more sacred in all the three aspects of Moorthi, Theertha and Kshethra and has got its origin from the Purani Age of Ramayana. This is one among the twelve Jyothir Linga Kshethrams of India and has got the sacred link of Pilgrimage with Varanashi and stand as symbol of National Integration of the Amandha Bharath.

The Devasthanam is endeavouring to complete the 2nd Corrider of this temple and also a portion of the 3rd Corridor recently affected by fire accident, and build the South and North Gopurams and Mandapams at the entrance of the Temple. This work is in progress. The expenditure costs Rs. 35 lakhs. The Kodi Archana series are performed for securing fund for the Renovation.

Devotees are requested to donate liberally for this sacred Renovation work. Donation for this purpose is exempted from Income-tax.

Devotees are requested to visit in large mumbers and perform sacred Gangabishegam to Lord Rameshwar and Kodi Archana Sahasranamam to the God and Goddess. Ticket fee for each Sahasranamam in the series is Rs. 10/- only.

All donations may be sent to the address "Executive Officer, Rameswaram Devasthanam, Rameswaram" and prasadhams will be sent to them. For each Kodi Archana a silver locket with the image of the Deity is given.

Devasthanam owns large number of rest houses self contained with all modern facilities at different rates ranging from Rs. 8/- to 15/- and single rooms at Rs. 6.

Conveyance facilities can be had for visiting Dhanushkodi and Gandhamadhana Parvatham.

The Devotees are requested that for all particulars of poojas in the Temple, Accommodation, conveyance etc., facilities to contact the Executive Officer in the Devasthanam Office adjoining the temple entrance to accomplish their pilgrimage to this Temple more comfortable and fruitful.

Executive Officer

**Rameswaram Devasthanam Rameswaram**



தருமை ஆதீனம்

# ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## திருபுவனம்

குடந்தை வட்டம் தஞ்சை மாவட்டம்

பிற்காலச் சோழப்பெருவேந்தன் 'மூன்றும் குலோத்துங்கன்' கட்டி முடித்த வரலாற்றுச் சிறப்பும், சிற்ப அழகும் உடைய பொற்புடைத்தலம் இது! இரணியனைக் கொன்ற நரசிங்கத்தைப் பெருமான் 'சரபராக' எழுந்தருளி வந்து அழித்து அருள் வழங்கும் அன்புத்தலம்.

நடுக்கந்தீர்த்த நாயகன் என்று பொருள்படும் கம்பகரேசனாக இறைவனும், அறம் வளர்த்த நாயகியாகிய இறைவியும் எழுந்தருளி அருள் வழங்குகின்றனர். சிறப்புத் திருமேனியாக 'சரபமூர்த்தி' அருள் வழங்குகிறார்.

ஆண்டுக்கொருமுறை சித்திரைத் திருவிழா முடிவில் சரபமூர்த்தி திருவீதி எழுந்தருளும் சிறப்புடையது. உபாசனைகளில் சரப உபாசனை சிறந்தது. பலருக்கும் குலதெய்வமாகத் திகழ்வது.

இத்தலம் கும்பகோணம் – மாயூரம் பேருந்து வழியில் கும்பகோணத்தை அடுத்து 4-வது கல்லில் உள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே காணலாம். இவைகளில் இருமுறைகள் உள்ளன. ஒன்று நான்கு மூலைகளிலும் நேர்க்கோடு போன்று அமைந்திருப்பது. மற்றொன்று இவை உள் வளைவாக வளைந்திருப்பதாகும். இரண்டாவது முறைக்கு மீனாட்சியம்மன் கோயிலின் தெற்குக் கோபுரம் எடுத்துக்காட்டாகும். இவைகளுக்குச் சற்றுப் பிற்பட்டது மிக உயரமானதும் சுதை வேலைகள் இல்லாததுமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலயக் கோபுரமாகும். இன்றும் கோபுரம் கட்டும் முறை சற்று நவீன அமைப்பில் நடந்து வருகின்றது. ஆனால் இத்தகைய கோபுரங்களில் சாலைகளும் கோஷ்டங்களும் மிகச் சிறியவை. அவைகளைச் சிற்பங்கள் மறைத்து நிற்கின்றன. கோபுரத்தின் அடிப் பகுதியில் சிற்ப வேலைப்பாடுகள் குறைவு. மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் கீழைக் கோபுரம் இத்தகையது. (சாலை - மண்டபம். கோட்டம் - வளைவு.)

## 4. மாடக்கோயில்

இயற்கை அழகு மிளிரும் இடமே வழிபாட்டிற்குச் சிறந்த இடமென்று முதன் முதலில் ஆற்றங்கரைகளிலும், மரச் சோலைகளிலும், மரத்தடியிலும், தெய்வங்களின் உருவமைத்து மக்கள் வழிபட்டனர். ஒவ்வொரு பழங்கோயிலுக்கும் இன்று தல புராண நூல்களில் "தல விருக்ஷம்" கூறப்படுவது இதற்குச் சான்றாகும். பிறகு மரத்தடிகளில் சிறு கோயில்களின் கட்டிடம் சமைத்தனர். அதன்பின் மலைக் குகைகளில் கோயில் அமைத்தனர். பிறகுதான் இப்பொழுது அமைந்துள்ள கோயில்வகைகள் ஏற்பட்டன. ஆகமமுறைப்படி அமைந்த ஆலயங்கள் இடைக்காலத்தவை. வீடுகளில் செய்யும் வழிபாட்டைத் தன்னலம் கருதியும், கோயில்களில் செய்யும் வழிபாட்டை நாட்டின் நலன் கருதியும் செய்வதால், கோயில்களுக்குப் பரார்த்தம் எனப்பெயர் உண்டு. இன்று ஆகம முறைப்படி அமையும் ஆலயங்களில் சுற்றுமதில், சிறிய, பெரிய கோபுரங்கள், பலிபீடம், கொடிமரம், அந்த அந்த இறைவனுக்குரிய ஊர்தி, கருவறை என்பன முக்கியமாக இருக்கும். கோயில்களை நகரின் மையமாக வைத்துச் சுற்றுப் பெருந்தெருக்களை அக்கோயிலின் சுற்றுக்களாக ஆக்கினர். சுற்றுக்களுக்குள்ளே மக்கள் குடியிருக்கும் முறையைச் சிறப்பாக மதுரை நகரிலும், திருவரங்கத்திலும் காணலாம். ஆலயச் சுற்றுக்களாகிய தெருக்களில் வசிப்பது, இறைவன் திருவடி நிழலிலேயே ஒதுங்கி வாழ்வதைக்காட்டும். ஆகவே தமிழகக் கோயில்களைப் பற்றிய வளர்ச்சி முறையை மிகச்சுருக்கமாகக் காணலாம்.

தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலே கற்களை உடைத்துச் செதுக்கிச் சேர்த்துக் கட்டின கோயில்கள் எழுந்தன. இவைகளே கற்றளிகளாகும். இவைகளுக்கு எடுத்துக்காட்டு மல்லையில் உள்ள அலைவாய்க் கோயிலும், காஞ்சியிலுள்ள பல்லவர்களின் கோயில்களுமாகும். அடுத்துவந்த சோழர் காலத்தில் இத்திருப்பணி மேம்பாடடைந்தது. ஒரு நிலை விமானங்களுடன் கூடின சிறிய கோயில்களும், பலநிலைகளுடன் ஓங்கி வளர்ந்து நின்ற பல மாடக் கோயில்களும் (மஹாப்ராஸாதம்) எழுந்தன. எங்குமிருந்த செங்கல், மரம் இவற்றாலான பழைய கோயில்கள் கற்றளிகளாகப் புதுப்பிக்கப் பெற்றன. சோழர்காலத்துத் திருப்பணியில் கற்பனையும், கைத்திறனும் சிறந்து விளங்கியதோடு கோயிலின் அமைப்பும் திட்டமாயிற்று. கோபுரம், திருமதில், சுற்றாலை, பரிவாரதெய்வங்களின் சிறுகோயில்கள், இவைகளின் நடுவே விமானம், அதில் அகமண்டபம் மகாமண்டபம், முகமண்டபம் முதலிய உறுப்புக்கள் திட்டமாக அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் தொடர்ந்து வளர்ந்த திருப்பணியின் உச்சநிலையைக் காட்டும் தஞ்சைப் பெரிய கோயிலின் அமைப்பு இதற்கு எடுத்துக்காட்டாகும். இக்காலத்தில் விமானமே கோயிலமைப்பின் நடுநாயகமாக ஓங்கி வளர்ந்து நிற்பதும், மற்றத் தளிகளும், கோபுரங்களும் விமானத்தைவிடச் சிறிய அமைப்பில் இருப்பதும் இதன் சிறப்புக்களாகும். பிற்காலச் சோழர் காலத்திலும் இவர்களுக்குச் சமகாலத்தவரும், பின் யோர்ந்தவருமான பாண்டியர் காலத்திலும், மதிற்சுற்றுக்கள் பெருகி, அவற்றினுடைய வாயில்களில் மிகப் பெரிய நிலைக்கோபுரங்களும் அமைக்கப்பட்டன. இறுதியாகவந்த விஜய நகரவரசர் காலத்திலும், அவர்களைத் தொடர்ந்த நாயக்கமன்னர் காலத்திலும், மேலும் உயர்ந்த சுதைக் கோபுரங்களும், உள்ளும் புறமும் பலவகையான கலியாண மண்டபங்களும், நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களும் திருவிழா மண்டபங்களும் அமைக்கப்பட்டன. இவ்வாறு தமிழ்நாட்டில் கோயிலமைப்பு படிப்படியாகத் தொடர்ந்து, ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் மாறி வளர்ந்து, இன்னும் பொலிவுடன் விளங்குகிறது.

தென்னாட்டுக் கோயில்களின் சிகரங்கள் பெரும்பாலும் எட்டுக் கோணங்கள் கொண்டவை. இந்த வகையைத் திராவிடம் என்று சிற்பம் கூறும்.

இத்தென்னாட்டுத் திருப்பணிக் காலத்தைச் சற்று ஏறக்குறைய கி. பி. 600 முதல் 850 வரை பல்லவர்காலம், 850 முதல் 1100 வரை சோழர்காலம், 1100 முதல் 1350 வரை பிற்காலச்சோழர் அல்லது பாண்டியர் காலம், 1350 முதல் 1600 வரை விஜயநகரவரசர் காலம், 1600 க்கு பிற்பட்டது நாயக்கர்காலம் எனப் பாகுபடுத்திக் கூறுகின்றனர். சிற்பமுறைப்படி இரண்டு முதல் பதின்மூன்றுக்கு மேற்பட்ட தளங்களையுடைய தஞ்சைக்கோயில்போன்ற கோயில் விமான அமைப்பை ஜாதி விமானங்கள் அல்லது மாடக்கோயில் என்பர். அர்த்த மண்டபத்திற்கு மேற்கூரையாக வண்டிக் கூடுபோல் நீண்டு வருவதும் இக்காலத்திய சிறப்பாகும். இதனைச் சுகநாசி (கிளிமூக்கு) என்பார்கள். தஞ்சைக்கோயிலில் காணும் சித்திரங்களில் கட்டப்பட்டுள்ள பழைய கோயில் அமைப்புக்களும், சிதம்பரம் சிற்சபையும், மற்றும் திருக்குற்றாலத்துச் சித்திர சபையும் பழங்கால மண்டபக் கட்டிட அமைப்புக்களுக்குச் சான்றாகும்.

கோயில் திருப்பணியைக் கற்கட்டிடங்களால் அமைத்தாலும் மன்னர்கள் பெரும்பாலும் தங்கள் அரண்மனைகளைப் பணிவின் காரணமாகச் செங்கல், மரம், ஓடுகள் ஆகியவற்றால் அமைத்துக்கொண்டார்கள் என்பர். ஹம்பியில் உள்ள சித்திராங்கி மகாலில் உள்ள கஜசாலை, செஞ்சியிலுள்ள காற்றாடி மண்டபம், களஞ்சியம், பாசறைகள், மதுரையில் உள்ள திருமலைநாயக்கர் மகால், தஞ்சை அரண்மனை என்பவை இத்தகைய கட்டிட அமைப்புக்குச் சான்றாகும்.

## 5. கொடிமரமும் – நந்திதேவரும்

துஷ்ட தெய்வங்களை அகற்றவும், தேவ கணங்களை அழைக்கவும், ஆலயத்தைக் காக்கவும், பக்தர்களைக் காக்கவும் கொடி மரம் நிறுவப்படுகிறது. அதனது முகப்பகுதியும், அடுத்துள்ள இறைவன் ஊர்தியின் முகமும் இறைவனை நோக்கியே இருக்கும். கொடிமரத்திற்குச் சந்தனம், தேவதாரு, சண்பகம், வில்வம், மகிழ்முதலிய மரங்கள் சிறந்தவைகளாகும். கொடிமரத்திற்கு 33 கணுக்கள் இருப்பது சிறப்பு. கொடிமரத்திற்கு அப்பால் உள்ள சிவன் கோயிலில் அமர்ந்திருக்கும் "நந்திதேவர்" சிவலிங்கத்தை நோக்கிக் கொண்டு இருப்பர். நந்தி என்பதற்கு எப்பொழுதும் மகிழ்ந்த நிலையில் இருப்பவர் எனப் பொருள். இவர் இளமையும் திட்பமும் வாய்ந்தவர்; சிவகணத் தலைவர். இவருடைய இசைவு பெற்றே அடியார்கள் இறைவனை வணங்கச்செல்வர்.

முடிவுரை: நம் முன்னவர் நம் ஆன்ம நலங்கருதி எடுப்பித்துள்ள ஆலயங்களுக்கு நாம் தவறாது சென்று இறைவழிபாடாற்றி நற்பயன் கொள்வோமாக.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில்

## திருவிடைமருதூர்

குடந்தை வட்டம் ★ தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணம் – மாயூரம் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கல் தொலைவிலுள்ளது. மூவர் தேவாரமும் திருவாசக தனிப்பாடல்களும் பெற்ற சிறப்பினை உடையது. கருவூர்த்தேவரது திருவிசைப்பாவையும் பட்டினத்தடிகளால் பாடப்பட்ட திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்ற துதிப்பாவினையும் பெற்றது. சீரார்ந்த கோயில், செல்லாய கோயில், புலமல்கு கோயில், கனமல்கு கோயில், நலம் மொய்த்த கோயில், நிறைமல்கு கோயில் என்றெல்லாம் ஞான சம்பந்தப் பெருமானால் பாராட்டப்பெற்ற பெருமையினை உடையது இத்திருக்கோயில். இடைமருதினை வலமிட உடல் நலிவும் உள வினையும் இலதாகும் என்பது அப்பெருமானது அருள் வாக்கு. 'இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே' எனப் போற்றியுள்ளார் அப்பர் பெருமான். மணிவாசகருக்கு இறைவன் திருவடி சூட்டிய பெருமையினையுடையது இத்திருத்தலம். இடைமருது அதனில் ஈண்ட இருந்து படிமப் பாதம் வைத்த அப்பரிசினைப்பற்றி மணிவாசகம் பேசுகிறது.

பெரிய அன்பின் வரகுணதேவர் என்று பட்டினத்தடிகளால் பாராட்டப்பெற்ற பாண்டிய மன்னரது தொடர்பினையும், பட்டினத்தடிகளது சீடரான பத்ரகிரியாரது தொடர்பினையும் உடையது இத்தலம். பட்டினத்தடிகள் பல்லாண்டுகள் வதிந்து தவம் செய்ததும், இறைவனிடம் அடிகள் பேய்க்கரும்பினைப் பெற்றதும் இத்தலத்திலேயாம்.

பிரசுரிப்போர்: இராஜராஜசோழன் சதயவிழாக் குழுவினர், தஞ்சாவூர்.
அச்சிட்டோர்: ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

84374

## ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம்] திருமெய்ஞ்ஞானம் [தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப்பாதையில் உள்ள பேரளம் நிலையத்திலிருந்து மேற்கே 5 கி. மீ. தொலைவிலும் பேரளம் பேருந்து நிலையத்திலிருந்து காரைக்கால் - குடந்தை நெடுஞ்சாலையில் ஏ. கிளியனூருக்குத் தெற்கே 1 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இறைவனின் திருப்பெயர் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர். இறைவியின் பெயர் ஸ்ரீ ஞானாம்பிகை. இங்கு வைகாசி மாதத்தில் விசாகத்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

திரு. எஸ். சீனிவாசன்
நிர்வாக அறங்காவலர்

திரு. எம். ஆறுமுகம்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ சுந்தரேஸ்வரஸ்வாமி திருக்கோயில்

தம்பிக்கோட்டை — மேலக்காடு P. O.
பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம்

சுவாமி : ஸ்ரீ சுந்தரேசுவரஸ்வாமி அம்பாள் : ஸ்ரீ சுந்தராம்பிகா

இத்தலம் தம்பிக்கோட்டை புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் சுமார் 1 பர்லாங் தொலைவில் அமையப்பெற்றுள்ளது. தம்பிக்கோட்டை புகைவண்டி நிலையம் மாயூரம் — காரைக்குடி இருப்புப்பாதையில் உள்ளது. இக்கோயில் சந்நிதிவரை பெருவழித் துறையினரால் அமைக்கப்பட்ட நல்ல தார்ப் பாதையும் உண்டு.

V. பூரணலிங்கம்
நிர்வாக அதிகாரி

N. ராமசாமி
பரம்பரை டிரஸ்டி

## ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோவில்

வடுவூர் — மன்னார்குடி வட்டம்

**திருப்பணிக்கு உதவுங்கள்**

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்கரவர்த்தி திருமகன் (வடிவழகன்) நேரில் எழுந்தருளி ஸ்ரீ சடாரி பிரதிஷ்டை செய்விக்கப்பட்டு அபிமானி திவ்யமூர்த்தியாய் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்டராமன் சன்னதியில் பல திருமணங்கள் நடைபெறுவதை உத்தேசித்து திருமணமண்டபமும், சேவார்த்திகள் தங்குவதற்கு விடுதியும், அலுவலகம், புஷ்கரணி மராமத்து, நந்தவனத் திருமதில்கள் ஆகிய திருப்பணிவேலைகள் செய்யவேண்டியிருப்பதால் ஆஸ்திக மகாஜனங்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து டை திருப்பணியைப்பூர்த்தி செய்துவைத்து பக்தகோலாகலன் பரந்தாமன் ஸ்ரீ கோதண்டராமனின் திருவருளுக்குப் பூரணபாத்திரர்களாக வேண்டிக்கொள்கிறோம்.

இப்படிக்கு
ஆலய நிர்வாகிகள்


# திருவிசைப்பா ஆசிரியர் இருவர்


ஆத்ரேய ராமசேஷன்,
வலையப்பேட்டை, —o— கும்பகோணம்.


செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னுர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர்சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த் தேவர்
நம்பிகா டவர்கோன்நற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணாட்டடிகள் திருவாலி யமுதனார்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறைகண் டடைவே.

\- (பழம்பாடல்)

தஞ்சையிலே விஞ்சு புகழ்கொண்டு நாடாண்ட இராசராச சோழனுடைய விருப்பிற்கு இணங்க நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்த முதல் ஏழு திருமுறைகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோருடைய தேவாரங்கட்குப் பின் எட்டாந் திருமுறையாகத் திருவாசகமும், திருக்கோவையாரும் தொகுக்கப்பட்டன. ஒன்பதாம் திருமுறையாக அமைந்தவை திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டுமாகும். திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் சைவ மக்களது உள்ளத்தில் எவ்வாறு சிறப்பிடங்கொண்டன என்பதைத் தினமும் திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதும் போது அதில் திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் இடம் பெற்றுள்ளமையைக் கொண்டு இனிது உணரமுடியும்.

திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் 28, சேந்தனார் திருப்பல்லாண்டு என்ற திருப்பதிகம் 1. ஆக 29 திருப்பதிகங்களும் தற்போது கிடைத்த அளவில் 301 திருப்பாடல்களைக் கொண்டுள்ளன. திருவிசைப்பா ஆசிரியர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி, காடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்போராவர். திருவிசைப்பாப் பாடிய சேந்தனாரே திருப்பல்லாண்டும் பாடியருளினார்.

திருப்பல்லாண்டு என்னும் 13 திருப்பாடல்கள் இறைவனுக்குப் பல்லாண்டு கூறும் பாக்களாகும். இப்பாடல்கள் கடல் கடந்த நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. "இந்தோனேசியாவில் தொல்குடிச் செல்வர் வீடுகளில் திருமணக் காலத்தில் இத்திருப்பல்லாண்டு ஓதப்பெறும். இதற்கு அவர்கள் "லாண்டுபாடு" என்று பெயர் கூறுவர். இது "மான்கடில்" எனத் தொடங்குவது என்று மேனாட்டறிஞர் குறித்துள்ளனர். "மான்கடில்" என்பது திருப்பல்லாண்டின் முதற்பாட்டின் முதற்சீராகிய "மன்னுகதில்லை" என்பதன் சிதைவே ஆகும்" (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை - சைவ இலக்கிய வரலாறு: பக். 394).

இனி, திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மருள் இருவரை இராசராசன் சதயத் திருநாள் நிகழ்வுறும் இந்த நன்னாளில் நினைவுகூர்தல் சிறப்புடையதாகும்.

*கண்டராதித்தர் :* விசயாலய சோழ வமிசத்தில்வந்த முதற்பராந்தக சோழனின் (கி. பி. 907 - 953) இரண்டாம் குமாரர் கண்டராதித்தச் சோழர் ஆவார். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்னோடு வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கிய மன்னர் முதற்பராந்தக சோழர். ஆகவே அவர் குமாரர் சிறந்த சிவபக்தராக விளங்கியதில் வியப்பில்லை. இவரைச் சிவஞான கண்டரா

தித்தர் என்று ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. (Epi. Car. IX. P. 99) கண்டராதித்தச் சோழரே திருநாகேச்சரம் திருக்கோயிலைக் கற்றளியாக்கியவர் என்று கூறப்படுகின்றது. திருமழபாடிக்கு மேற்கே விளங்கும் இன்றைய கண்டிராச்சியம் அக்காலத்தில் கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப்பட்டது. கண்டராதித்தரின் மனைவியாராகிய செம்பியன் மாதேவியாரும் சிவபக்தியில் தலைசிறந்து விளங்கியவர். இம்மாதேவியாரின் திருப்பணிகளைக் கோனேரிராசபுரம் (திருநல்லம்), திருவக்கரை முதலிய திருக்கோயில்களில் காண்கிறோம். இப்பேரரசியாரை "மாதேவடிகள்" என்று சிறப்பித்துள்ளனர். முதலாம் இராசராசன் தென்னாட்டைச் சிவனுறைநாடாகச் செய்வதற்குத் தூண்டுகோலாக விளங்கியவர் செம்பியன் மாதேவியாரே ஆவர். கண்டராதித்தர் பாடியதாக நமக்குக் கிடைத்துள்ளது ஒரு திருவிசைப்பாப் பதிகமே (10 திருப்பாடல்கள்) ஆகும். தமது திருவிசைப்பாவிலே தம் தந்தையாராகிய முதற் பராந்தகர் பொன்னோடுவேய்ந்த செய்தியைக் கண்டராதித்தர்

"வெங்கோல் வேந்தன் தென்னாடும்
ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும்
அணிதில்லை யம்பலம்"

எனப் போற்றியுள்ளார்.

கருவூர்த்தேவர் : திருவிசைப்பாப் பாடியருளிய ஆசிரியர்களுள் மூன்றாமவராகக் காணப் பெறுகின்றவர் கருவூர்த் தேவர் ஆவார். இராசராச சோழமன்னன் (கி. பி. 985 - 1014) காலத்தவர் இவர்; கருவூரில் தோன்றிய காரணத்தால் கருவூர்த் தேவர் என்ற பெயர் பெற்றார்.

இராசராசசோழன் எடுப்பித்த தஞ்சை இராச ராசேச்சரத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்தமாகிய பெருவுடையார் மருந்து சாத்தப்பட்டும் நில்லாமையை அறிந்த கருவூர்த் தேவர், சிவபெருமானிடத்தில் வேண்டி விண்ணப்பம் செய்த அளவில் அம்மூர்த்தம் நிலைபெற்றதாக ஒரு வரலாறு உண்டு. திருவிசைப்பாவில் உள்ள பதிகங்களில் கருவூர்த்தேவர் அருளிச்செய்த பதிகங்களே மிகுதியாக உள்ளன.

கோயில் (சிதம்பரம்), திருக்களந்தை, ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர், திருச்சாட்டியக்குடி என்னும் பத்துத் தலத்திறைவர்களை இவர் போற்றிய திருவிசைப்பாக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவர் கருவூரிலே சிவலிங்கத்தில் ஐக்கியமானதாக ஒருவரலாறு உண்டு.

தஞ்சை இராசராசேச்சரத்தில் கற்பக்கிரகத்துக்கு மேற்கில் ஒருசமாதி உண்டு. அது கருவூர்த்தேவர் இருந்து சமாதிகூடிய இடம்; அல்லாமல் சமாதிவைத்த இடமன்று என்று என் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை தாம்இயற்றியுள்ள கருவூர்த் தேவர் திருவிருத்தங்கள் எனும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

போகநாத சித்தரின் மாணவர்களில் ஒருவரான கருவூர்த்தேவர் காயசித்தி கைவந்த சித்த மூர்த்திகளாக விளங்கினார். திருவாவடுதுறையில் கோயில் கொண்டுள்ள திருமாளிகைத் தேவருடனும் பெரிதும் தொடர்புகொண்டு இருந்தார். இவர் கங்கைகொண்ட சோளேச்சரத் திறைவனையும் தமது திருவிசைப்பாவில் போற்றியுள்ளமையின் இவரது காலம் கி. பி. 10ம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அமைந்து இருத்தல் வேண்டும்.

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

# இலக்கிய நோக்கில் இராசராசன்

கி. கோதண்டபாணி, M. A., B. O. L.
அ. வீரையா வாண்டையார் நினைவு புட்பம் கல்லூரி, பூண்டி.

ஈராயிரம் ஆண்டுகட்குமுன் தமிழகத்தில் வாழ்ந்த பெரியார் ஆண்டால் முதிர்ந்தும், அருள்தோற்றத்தால் இளமையுற்றும் விளங்கினார். அவர் வாழ்ந்துகழித்த ஆண்டுகள் பலவாயினும் நரை, திரை முதலிய மூப்புக்குறிகள் சிறிதும் பெற்றாரில்லை. இவ்வாறு தாம் இளமை எழிலுடனும், வளமான உடற்பொலிவுடனும் வாழ்ந்ததற்கு ஏற்ற காரணங்களை ஒரு புறப் பாட்டின்மூலம் இனிது விளக்குகின்றார். தம் இளமையின் பொலிவிற்கு முதற்காரணமாய் அவர் கூறியிருப்பது மாட்சிமைப் பட்ட பண்புகளையுடைய அவரது மனையார் அடுத்து. ஏவாமக்களாய், எண்ணால் நிரம்பாது அறிவால் நிரம்பிய அறிவறிந்த மக்களைக் கூறுகின்றார். மூன்றாவதாக அவர் பணியாட்கள் அவரது குறிப்பறிந்து செயலாற்ற வல்லவர்கள். அவரது மனமொத்த பணியாட்கள் அவர் எண்ணுவதனையே தாமும் எண்ணவல்லவர்களாம். அவர்கள் பெறுகின்ற இடம் மூன்றாம் நிலையாகும். ஒருவீடு சிறக்க மேற்கூறிய மூன்று நிலைகளும் சிறந்திருக்க வேண்டும். இம்மூன்றன் சிறப்பினையும் பெற்ற புலவர் பெருமான் வீட்டின் விளக்கத்தைப்பெற்றார். வீடு அமைந்த ஊர், ஊரில் வாழும் அண்டை அயலார் இவர்களது சூழலையும் அடுத்து விளக்குகின்றார். ஊரில் வாழும் அண்டை அயலார் ஆன்றவிந்து அடங்கிய சான்றோர்களாம். ஆகவே ஊரும் சிறப்புடையதாய் விளங்குகிறது. மேலும் நாட்டையாளும் மன்னன் என ஐயுறுவார்க்கு அதனையும் இறுதியாக விளக்கிவிடுகின்றார். நாட்டையாளும் வேந்தன் அல்லவை எண்ணாது நல்லவை செய்யும் நல்லோன். கண்ணினைக்காக்கும் இமையில் காக்கும் காவலானாயும் உயிரெலாம் உறைவதோர் உடம்பாய் இலங்கும் உத்தமனாயும் மன்னன் விளங்கினான் என்றும் கூறுகின்றார். ஆகவே வீட்டைப் பற்றியும், நாட்டைப்பற்றியும் சிறிதும் கவலைகொள்ளவில்லையாம். அதன் பயனால் நரை, திரை முதலிய குறிகள் பெறவில்லையாம். இதனைப் பிசிராந்தையார் என்ற புலவர் பெருமகனார் கீழ்க்காணும் புறப்பாடல் மூலம் இனிது விளக்குகின்றார்.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

இவ்வாறு பிசிராந்தையார் கூறிய இலக்கணத்திற்கு ஓர்எடுத்துக்காட்டாய் வாழ்ந்த பெருமன்னனே இராசராசன் என அறியலாம். அம்மாமன்னனது வாழ்க்கைச் சூழ்நிலை இப்புறப்பாடலை நினைவுறுத்தி நிற்கின்றது. மனையறத்திற்குரிய மாண்புகள் அனைத்தும் பெற்ற மனையாள் மாதேவியார் ஆவர். பேரெழிலும், பெருங்கற்பும் பெற்று ஆன்றவிந்தடங்கிய பெண்மைப் பண்புகள் அத்துணைக்கும் தாயகமாய் விளங்கியவர் மாதேவியார். பிறந்த குடியும், புகுந்த குடியும் சிறந்தமைந்தபோது உயர் பண்புகளும் இயற்கையாகவே மலர்ந்திருப்பது. இந்நல்லாளும் பெருமன்னன் இராசராசனும் ஆற்றிய இல்வாழ்வின் நற்கலனாய்த் தோன்றிய பெருந்தகையே 'பூர்வ தேசமும் கங்கையும், கடாரமும் கொண்ட கோப்பரகேசரி

வர்மன்' என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும் இராசேந்திரனுவான். ஒருவனது நாட்டுவாழ்வு சிறப்பாய் அமைவதற்கு அவனது வீட்டுவாழ்வு சிறப்புடன் அமைதல் வேண்டும். எதிர்காலத்தில் பெருவெற்றியும், பெரும்புகழும், செயற்கரும் செயலும் ஆற்றுவதற்கு அவனது இல்லறத்துணைவி மாதேவியாரே காரணமானுர்கள். சைவ சமயப் பற்றும், சிவாலய வழிபாடும் இம்மன்னனைப் பேராலயம் எடுக்கத் தூண்டுகோலாய் அமைந்தது. பெருவுடையார் ஆலயத்தை இம்மாமன்னன் எடுக்கத் தூண்டுகோலாய் அமைந்தவர்கள் இவனை வளர்த்த பாட்டியார் செம்பியன் மாதேவியாரும், தமக்கையார் குந்தவைப் பிராட்டியும் எனக்கூறுனுலும் அவன் மாதேவியாரும் காரணமானவர் என்பதனை யாரும் மறுத்தல் இயலாது. இம்மங்கையர் சைவசமயப்பற்று, பிறசமயப் பொறை முதலிய பண்புகளே இராசராசனது சைவசமய வளர்ச்சிக்கும், சிற்பம், ஓவியம், இசை முதலான கலைவளர்ச்சிக்கும், இவற்றிற்கும் மேலாகச் சமயப்பொறைக்கும் காரணங்களாக விளங்கின.

இராசராசனின் தந்தையார் இரண்டாம் பராந்தகன் என்ற பெருமன்னர். இவர் இயற்கையிலேயே எழிலுடன் விளங்கிய காரணத்தால் சுந்தரசோழன் என்ற வேறு பெயரும் பெற்றிருந்தார். அவர் தம், மகனுக்கு இட்டு வழங்கிய பிள்ளைத்திருநாமம் 'அருண்மொழி வர்மன்' என்பதே யாகும். ஆனுல் ஆட்சி ஆண்டு இராசராசன் என்ற பெயருக்கு உரியவன் ஆனுன். அருள்மொழி வர்மன்' தன்னுட்சி கி. பி. 985 முதல் 1014 வரை பெரும் மன்னனுயும் வாகை சூடிய வெற்றிவேந்தனுயும் விளங்கினுன். இவன் தன் ஆட்சிக்காலத்தில் ஆற்றிய போர்களும் அடைந்துள்ள வெற்றிகளும் இவனது 'மெய்க்கீர்த்தி' மூலம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் இவன் பிறந்தநாள் சதய நன்னுள் என்பது இவன் திங்கள் தோறும் சதயநாளில் விழா எடுப்பதற்கு விட்ட நிவந்தங்களைக் குறிக்கும் கல்வெட்டால் அறியலாம். மேலும் இவன் "சதய நாள் விழா உதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்'' என்று சயங்கொண்டாரால் கலிங்கத்துப்பரணியில் போற்றப் படுகின்ருன். ஆகவே இயற்கை எழிலும், திருவும், ஆண்மையும் ஆற்றலும், திண்மையும், திறனும் ஒருங்கே இவன் பெற்றமை வழிவழி வந்த பெரும் பண்புகளாகும்.

அடுத்து இவன் வாழ்வின் உயர்விற்கு இவன் மகன் இராஜேந்திரனும், பெண்மக்கள் மாதேவடிகளும், இரண்டாம் குந்தவையும் காரணமாயிருந்தனர். தமக்கையாருக்கும், இளைய மகளுக்கும் ஒரேபெயர் குந்தவை என இருந்தமையால் தமக்கையாரைக் குந்தவை 1. அல்லது பெரிய குந்தவை என்று வழங்கிவந்தனர். ஆக இம்மூவரும் தந்தை இராசராசனின் ஏவா மக்களாய் வாழ்ந்து சோழப் பேரரசின் வெற்றிக்கு உறுதுணையாய் விளங்கினுர்கள். இராசேந்திரனுக்கு இராசராசன் வைத்த பிள்ளைத் திருநாமம் 'மதுராந்தகன்' என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. இவன் பிறந்தநாள் மார்கழித்திங்கள் 'திருவாதிரை' நன்னுளாகும். செல்வன் இராசேந்திரன் தந்தையைப்போலவே பெருவீரனுய்விளங்கி உள்நாட்டுப் போருடன் நிற்காது கடல் கடந்தும் போரிட்டு பெரு வெற்றிபெற்ருன். கடாரம், ஈழம், (முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்) முதலிய இடங்களைக் கடல்கடந்து கலத்தில் சென்று போருடற்றி வென்ற திறன் தந்தையின் ஆற்றலை நினைவுறுத்தி நிற்கின்றது. தந்தை எடுத்த தஞ்சை இராசராசேச்சுரம் போன்று மகனும் கங்கை கொண்ட சோழபுரத்தில் பேராலயம் எடுத்தான். தன் வெற்றியின் அறிகுறியாய் அந்நகர்க்குக் 'கங்கை கொண்ட சோழபுரம்' எனப் பெயரமைத்தான். இராசராசன் கி. பி. 1012ம் ஆண்டில் தன்மகன் இராசேந்திரனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி ஆட்சி அநுபவம் பெற வாய்ப்பு அளித்தது போல இராசேந்திரனும் தன் முதற்புதல்வன் இராசாதிராசனுக்கு கி. பி. 1018-ல் அதாவது (கி. பி. 1012 முதல் 1044 வரை) ஆட்சி ஆண்டின் ஏழாம் ஆண்டிலேயே இளவரசு பட்டம் கட்டிப் பல சிக்கல்களை நீக்கிவிட்டான். மகனுக்கு அரசியல் அறிவூட்டவும் ஆட்சிப் பொறுப் பேற்கவும் தாயத்தார் எதிர்காலத்தில் உரிமைச்சிக்கல் எழுப்பாதவாறும் இளவரசுப் பட்டம் கட்டிவிட்டான். இது மிகப்பெரிய அரசியல் நுணுக்கமாகும். தந்தை வழிப்பெற்ற அறிவாகும் இது. தந்தையறிவு மகனறிவு அல்லவா?

அடுத்து இராசராசப் பெருமன்னனின் அரசியல் அலுவலரே அவனது பெருவெற்றிக்குக் காரணமாயிருந்தனர் என்பதனை ஆராய்வோம். பிசிராந்தையார் கூற்றினைப்போல் இராசராசன் மக்களை எண்ணுல் நிரப்பாது அறிவால் நிரப்பி இன்றையத் தேவைபோலவே பெற்றிருந்தான். இதனைப் போலவே குறிப்பறிந்து பணியாற்றும் அரசியல் அலுவலர்களையும் பெற்றிருந்தான்.

இராசராசன் ஆட்சியில் அமைச்சர்களாகவும், தளபதிகளாயும், நாட்டதிகாரிகளாயும், திருமந்திர ஓலை நாயகமாயும், அறநிலையப்பாதுகாவலராயும் அமர்ந்து ஆட்சியைப் போற்றியவர்களைப்பற்றி அவன் கல்வெட்டுக்கள் சிறப்பான செய்திகளை வெளிப்படுத்துகின்றன.

1. சேனுதிபதி கிருஷ்ணன் இராமனுன மும்முடிச் சோழ பிரமராயன், 2. பரமன் மழபாடியானுன மும்முடிச் சோழன் 3. சேனுதிபதி குரவன் உலகளந்தானுன இராசராசமாராயன். இம்மூவரும் படைத்தலைவர்களாய் விளங்கி இராசராசன் ஆட்சிக்கு அணிசெய்தவர்களாவார்கள். இவர்களில் முன்னவன் அந்தணர் இனத்தைச் சார்ந்து வேந்தன் ஆணையின்படி தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் திருச்சுற்று மாளிகையை எடுப்பித்தவன். இரண்டாமவன் ஆந்திர நாட்டுப் பகுதிகளாகிய நெல்லூர், சீட்புலிநாடு முதலிய இடங்களை வென்று பலதிறைப் பொருள்களைக்கொணர்ந்தவன். இத்திறைப் பொருள்களைக் கொண்டு தன் மன்னன்பெயரால்அற ஆவணம்செய்தான். மூன்ருமவன் அரசன் ஆணையின்படி கி. பி. 1001ல்சோழப்பேரரசு முழுமையும் அளந்து (Survey) நன்செய், புன்செய் நிலங்களைக் கணக்கிட்டு முறையான வரிவிதிப்பு ஏற்பாடு செய்தவன் ஆவான்.

அடுத்து அறநிலயம் பேண "மதுராந்தகன் கண்டராதித்தன்'' என்ற அரசியல் அலுவலர் அமர்த்தப்பட்டார். இவர் இராசராசனின் சிறிய தந்தை உத்தமச் சோழனின் மகனுவார். இவர் மன்னனின் உளப்படி கோயில்கள் கண்காணிப்பில் தவறு இழைத்தவர்களைத் தண்டித்து அறநிலையம் பேணி வந்தார்.

பின்னர், பாளூர் கிழவன் அரவணையான்மாலரி கேசவன், இராசகேசரி நல்லூர் கிழவன் காருயில் எடுத்த பாதம் முதலியோரும் முறையே இராசராசனின் ஸ்ரீகாரியக் கண்காணி நாயகமாகவும், திருமந்திர ஓலை எழுதும் அதிகாரியாயும் இருந்து மன்னனின் ஆணையைச் செயற்படுத்தும் கடமையுணர்ச்சி மிக்க அலுவலர்களாய் இருந்தனர் என அறிகின்ருேம்.

பல மண்டலங்களைத் தன்பாற்கொண்டு விளங்கிய சோழப் பேரரசுக்குப் பெருமன்னனுய் விளங்கி ஆட்சி செலுத்திய இராசராசன் காலத்தில் அரசியலில் பலதுறைகளிலும் அதிகாரிகளாய் அமர்ந்து சிறக்கப் பணிபுரிந்தோர் பலரும் ஆவர். ஆனுல் சிலரைப்பற்றியே கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு மனையறம் நிறைந்த மனையாளும், ஏவாமக்களாய் அமர்ந்த இராசேந்திரனும், குந்தவையாரும், குறிப்பறிந்தாற்றிய ஏவலரும், சான்ருேர்களாய் விளங்கிய நாட்டோரும் இருந்த காரணத்தால்தான் இராசராசன் பெருமன்னனுய், சோழர்குல திலகனுய் விளங்க முடிந்தது என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை.

# கொளஞ்சியப்பர் திருக்கோயில்

## மணவாளநல்லூர்

விருத்தாசலம் வட்டம்] [தெ. ஆ. மாவட்டம்

இத்திருக்கோயில் தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப் பிரசித்திப் பெற்ற ஓர் பிரார்த்தனைத் (முருகன்) தலம். இது விருத்தாசலம் டவுன் புகை வண்டி நிலையத்திலிருந்து மேற்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. உண்டியல், கோழி, கால்நடை, முடி இவற்றின் மூலம் வருடம் சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்கு வருமானம் வருகிறது. தங்கள் குறைகள் நிவர்த்தியாக, பிராது எழுதிக்கட்டுதல் என்பது இங்குள்ள ஒரு விசேடமாகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காவடி எடுத்தல் முடி இறக்குதல் அமுது படைத்தல் முதலியன குறிப்பிடத்தக்கதாகும். திருமணங்கள், காதுகுத்தல் முதலியவைகளும் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. புதிய அலுவலக கட்டிடம், விருந்தினர் விடுதி, யாத்திரீகர்கள் விடுதி, உற்சவர் மண்டபம், குளியலறைகள், முடிகொட்டகை முதலியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருமண மண்டபம், மேல்நிலை நீர்த்தேக்கம் முதலியவைகளும் கட்டி முடிந்துள்ளன. தற்போது மகாமண்டபம், பிரகார மண்டபம் மற்றும் உற்சவர் மண்டபமும் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணிக்கை செலுத்துபவர்கள் நிர்வாக அதிகாரியினுடைய முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்,

விருத்தாசலத்திலுள்ள கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரிக்கு இத்திருக்கோவில் நிதியிலிருந்து ரூபாய் 2 லட்சம் நன்கொடை கொடுக்கப் பட்டுள்ளது. ஓர் இலவச சித்த வைத்தியசாலையும் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கோயில் பங்குனி உத்திரவிழா முக்கிய விழாவாகும். 10 நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கு சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடுவர்.

இத்தலத்திற்கு ஒருமுறை வந்து முருகனுடைய அருளுக்குப் பாத்திர மாகும்படி கோருகிறோம்.

எஸ். துரைராஜன்.
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
தி. ச. முருகேசன் எம். ஏ., பி. எல்.,
என். ராசவேலு

# கல்சொல்லும் கதை

சு. கலியாணம்,
எம். ஏ., டிப். எக்கான்.

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணுமே" என்பது அருந்தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியின் வாக்கு. நல்லவர்களுக்குச் செய்தஉதவி, கல்லில் பொறித்த எழுத்துக் களைப்போல் என்றும் நிலைத்திருக்கும் என்பது அதன் பொருள். எனவே, கற்களில் எழுத்துக்களைச் செதுக்கிவைக்கும் பழக்கம் நம்நாட்டில் நிலவியது என்பது போதரு கிறது.

இந்திய நாட்டில் அதுவும் சிறப்பாகத் தென்னாட்டில் பாறைகளிலும், தூண்களிலும், கோயில்களிலும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்களைக் காணலாம். அரசாங்கத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அவற்றைப் படியெடுத்துப் பதிவு செய்துள்ளனர். இன்னும் படியெடுக்க வேண்டியவை எத்தனையோ உள்ளன. படியெடுத்தவற்றுள்ளும் அச்சிட்டு வெளியிடப் பெறுதிருப்பன எத்தனையோ ஆயிரம் ஆயிரம். தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் பயன்பட்டவை கல்வெட்டுக்களே.

வரலாறு, சமயம், அரசியல், பண்பாடு, மக்கள் வாழ்க்கை முதலியவைபற்றித் தெரிந்துகொள்ள அவை மிகவும் துணை செய்வன. தமிழ் நாட்டைப் பல்லவ மன்னர் ஆண்ட காலத்தில் (கி. பி. 300 முதல் 900 வரை) அதிகமான கல்வெட்டுக்கள் இல்லை. சோழஅரசர், விஜயநகரவேந்தர் காலத்தில் (கி. பி. 900 முதல் 1800 வரை) பொறித்த கல்வெட்டுக்கள் பல்லாயிரக்கணக்கானவை. இவற்றுள்ளும் மிக மிக அதிகமானவை சோழ மன்னர் காலத்தனவே. இங்கு நாம் எடுத்துக் கொண்டவை முதலாம் இராஜராஜனைப் பற்றியனவாகும்.

இராஜராஜன், சுந்தர சோழனுக்கும் வானவன் மாதேவியார்க்கும் சோழர் குலத்துக்கு மணிவிளக்காய் உதித்தவன். இவன் தமக்கையார் குந்தவையார். இவன் பிறந்த நாள் ஐப்பசி மீ சதயம். இளமையில் இவனுடைய பெயர் இராஜகேசரி அருள்மொழி வர்மன் என்பது. இளவரசுப் பட்டம் பெற்றது 25—6—985 என்ற நாளுக்கு அண்மையில் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவனுடைய பெயர்கள் இராஜராஜன், மும்முடிச்சோழன், ஜயங்கொண்டசோழன், அருள்தொழித்தேவன் என்பவை. பட்டப்பெயர்கள் சோழேந்திர சிம்மன், சிவபாதசேகரன், க்ஷத்திரியசிகாமணி, ஜனநாதன், நிகரிலிசோழன், நித்திய விநோதன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், இரவிகுலமாணிக்கம், தெலிங்ககுலகாலன் முதலியன. ஒவ்வொரு பட்டப் பெயர் ஏற்படக் காரணம் உண்டு.

இராஜராஜன் அரசாண்ட காலம் கி. பி. 985 முதல் 1014 வரை 29 ஆண்டுகளாகும். இவன் 2-ஆம் ஆட்சியாண்டு முதல் 29-ஆம் ஆட்சியாண்டு வரையிலான கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரி கல்வெட்டு ஒன்று 31-ஆம் ஆட்சியாண்டில் ஜெயங்கொண்டசோழன் தண்ணீர்ப் பந்தல் வைத்ததைக் குறிக்கிறது. இந்த கல்வெட்டுச் சிதைந்துபோய் முதல் பாகம் காணப்படவில்லை. இப்பேரரசனின் கல்வெட்டுகள் வடக்கே நெல்லூரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையில் காணப்படுகின்றன. பெரும்பாலானவை தஞ்சை, திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு வட ஆர்க்காடு செங்கற்பட்டு திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் உள்ளன. புதுச்சேரி, திருவாங்கூர், மைசூர், குடகு முதலிய இடங்களிலும் இருக்கின்றன.

சோழ அரசை நிலைநாட்டிய விஜயாலயன் தஞ்சாபுரி என்ற தஞ்சையைத் தலை

நகராக்கி அங்கே நிசும்பசூதனியம்பிகைக்கு ஒரு கோயில் எழுப்பினான். இராஜராஜன் தஞ்சை நகரத்தை விரிவாக்கினான். உள்ளாலை அகநகர், புறம்பாடியாக (Outer City) விரிவடைந்தது. இராஜராஜன் காலத்தில் தான், சோழநாடு சோழ சாம்ராஜ்யம் (Empire) ஆயிற்று. அவன் முதல் படையெடுப்பு தெற்கு நோக்கியது. கேரள மன்னன் பாஸ்கர ரவிவர்மன் சோழ மன்னனின் தூதனை அவமதித்ததற்காகப் படையெடுத்துச்சென்று, காந்தளூர்ச்சாலையென்ற இடத்திலிருந்த கப்பல்களையழித்து அவ்வரசனைக் கீழ்ப்படுத்தி, தன் தூதனை மீட்டான்.

பாண்டிய நாட்டரசன் அமரபுஜங்கனையும் அடிப்படுத்தி, விழிஞம் என்ற கோட்டையைப் பிடித்தான். கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைப்பாடி, கொங்குநாடு, சாளுக்கிய நாடு, 12000 மாலத் தீவுகள் முதலியவற்றைப் பிடித்தான். இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று, அதைத் தன்னடிப் படுத்தி, பொலனுறுவையென்ற இடத்தில் ஒரு சிவன்கோயிலைக் கட்டினான்.

அவனுடைய சேனையில் 30 பிரிவுகள் (Regiments) இருந்ததாம். அம்பாசமுத்திரம் திருவாலீசுவரம் கோயில் கல்வெட்டில் "மூன்றுகை மகாசேனை" (குதிரை, யானை, காலாள் படைகள்.) இருந்ததாகவும், அது சிவன், திருமால் இவர்களை வழிபட்டதாகவும் கூறப்பெற்றிருக்கிறது. வலங்கை, இடங்கைப் பிரிவுகளையுடைய 'வேளைக்காரர்' என்னும் படைப் பகுதியும் இருந்தது. வேண்டிய போது சேர்த்துக்கொள்ளப் பெறும் அணி அது. (Occasional Volunteers) தன் படையெடுப்பு முதலிய நிகழ்ச்சிகளை அவன் காலத்துக் கல்வெட்டுகளில் பொறிக்கும்படிச் செய்தான். இப்படி முதல் முதல் செய்தவன் இராஜராஜனே. அத்தகைய மெய்க்கீர்த்திகளையுடைய கல் வெட்டுகள் வரலாற்றை உருவாக்குவதற்கு பெரிதும் பயன் பெற்றன. அவை "திருமகள்போல" என்று தொடங்கும்.

அவன் பிடித்து ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்த நாடுகளையெல்லாம் மண்டலம், வளநாடு, கோட்டம், கூற்றம் முதலியனவாகப் பிரித்தான். நகரங்களும், தனியூர்என்ற பெரிய கிராமங்களும் இருந்தன. இராஜராஜன் காலத்தில் இலங்கையுள்பட 9 மண்டலங்கள் (Province) இருந்தன. அவன் காலத்தில்தான் நிலங்களை அளக்கச் செய்து வரிவிதித்தான். நில அளவை செய்த அரசாங்க அதிகாரிக்கு "உலகளந்தான்" என்ற பட்டத்தையளித்தான்.

இராஜராஜன் காலத்திய எண்ணிறந்த கல்வெட்டுகளிலிருந்து பல செய்திகளை நாம் தெரிந்துகொள்கிறோம். கற்கோயில்கள் எடுத்தது. கோயில்களில் பூசை, விழா முதலியவற்றிற்காகப் பொன், பொருள், நிலம் வழங்கியது, ஆபரணங்கள் வெள்ளிப் பாத்திரங்கள் கொடுத்தது, கோயில்கணக்குகளைத் தணிக்கை செய்தது. கோயில் நிலங்களை அபகரித்தவர்களுக்கு அபராதம் விதித்தது, கோயில் பொருளைக் கையாடல் செய்தவர்களின் நிலத்தைப் பறிமுதல் செய்தது, கோயில்களில் விளக்கு எரிக்க நெய்க்காக ஆடுகள், பசுக்கள் முதலியன கொடுத்தது. கோயில்களில் அடியார்கள், தெய்வங்கள் முதலியோர் திருவுருவங்கள் எடுப்பித்தது, வீணை, வாய்ப் பாட்டு, தேவாரம் முதலியன பாடுபவர்களுக்கு மானிபங்கள் வழங்கியது, பிரபாகரம் வியாக்கியானம் செய்யவும், ஆரங்க ஆரியக் கூத்தாட சாக்கை காணிக்கையாகவும் நிலதானம் செய்தது, நிலவிற்பனை செய்தது, நிலவரி நீக்கியது, நிலப் பங்கீடு செய்தது, அடியார்க்கு அன்னமளித்தது, கோயில் சிப்பந்திகளுக்கு நெல் அளந்தது, ஏரி பழுது பார்த்தது, கோயில்களில் மாலை தொடுக்க, சங்கு ஊத, திருமஞ்சனம் எடுக்க மானிபங்கள் அளித்தது முதலான பல செய்திகள் கூறப்பெற்றிருக்கின்றன.

சென்னையிலுள்ள மயிலாப்பூரை ஒரு கல்வெட்டு புலியூர்க்கோட்டத்து மயிலார்ப்பு என்று கூறுகிறது. புலியூர் இப்போது கோடம்பாக்கம் என்று வழங்கும் பகுதி. காஞ்சிபுரத்தை, 'கச்சிப்பேடு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடிகைகளத்துக்கோல்' சிற்றம்பலத்துக்கோல் முதலியவை நில அளவை செய்யும் கருவிகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கச்சிப்பேடு நின்றான், ஜெயங்கொண்ட சோழரயன், ஆடவல்லான், சோழியம் நின்ற நாழி, அருள்மொழித்தேவன், வீதிவிடங்கன் முதலியவை முகத்தளவை.

இராஜராஜன் காலத்தில் ஈசானசிவர், சர்வசிவர் என்ற குருமார்கள் இருந்தனர். திருவிசைப்பாபாடியகருவூர்த்தேவர் தஞ்சை பெரியகோயில் கட்டுவதற்கு மிகவும் உதவியாக இருந்தார். இராசராசனுக்குப் பதினைந்துமனைவியர் இருந்ததாகத் தெரிகிறது. தந்திசக்திவிடங்கியென்ற உலோகமாதேவியார் மிகவும் சிறந்த பட்டத்தரசி. இவர்கள் இருவர் உருவங்களும் திருவிசலூர்க் கோயிலில் காணப்படுகின்றன. அங்கு இருவரும் துலாபார தானமும் இரணிய கர்ப்பமும் செய்ததாகத் தெரிகிறது. அரசனின் கொள்ளுப்பாட்டியார் செம்பியன் மாதேவியார், அவன் தமக்கை குந்தவையார். அவரிடம் மிக்க அன்புகொண்டிருந்தமையால் தன் பெண்ணுக்கும் குந்தவை என்று பெயரிட்டான்.

தஞ்சைப் பெரியகோயில் இந்தியாவிலேயே சிறந்தகோயில். அதைக்கட்ட ஆறு ஆண்டுகள் பிடித்தது. விமானத்திலுள்ள பெரிய செப்புக்கலசத்தை 25-ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1010) 275-ஆம் நாள் பொருத்தப்பெற்றதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. அந்த கோயிலுக்கு நாள்பூசை, விழா முதலியவற்றிற்கு அவன் சிறந்த ஏற்பாடுகளைச் செய்ததுடன் ஏராளமான நிலம் பொன் பொருள் முதலியவற்றை வழங்கினான். அவன் பிறந்தநாளான சதயநட்சத்திரத்தில் கோயில்களில் வழிபாடு நடத்த மானிபங்கள் வழங்கியதை மரக்காணம், திருப்புகலூர், திருவிடந்தைக்கோயில் கல்வெட்டுகளிலிருந்து அறிந்துகொள்கிறோம். இராசராசன் ஆட்சியின்மாட்சியை கல்வெட்டுகளிலிருந்து ஒருவாறு சுருக்கிக்கூறினோம்.


## திரு தாமோதர நாராயணப்பெருமாள் கோயில்

### திருக்கண்ணங்குடி

நாகை வட்டம்] (கீழ்வேளூர் வழி) [தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் – நாகூர் புகைவண்டிப்பாதையில் கீழ் வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருவாரூர் – நாகபட்டினம் பெருவழிப் பாதையில் ஆழியூரிலிருந்து தெற்கே 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இத்தலம் 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.

கருடாழ்வார் இங்கு கைகட்டி காட்சி அளிக்கின்றார். இங்கு சித்திரைப் பெருவிழாவும், மார்கழி அத்யயன விழாவும், மாசி மக விழாவும் சிறப்புடையன.

இரா. நரசிம்மன் பி. எஸ்ஸி.,
நிர்வாக அதிகாரி

## திரு வேயுறுதோளியம்மை சமேத சோமநாதர்
### திருக்கோயில்

மாயூரம் வட்டம் நீடூர் தஞ்சை மாவட்டம்

மாயூரம் - சிதம்பரம் புகைவண்டிப் பாதையில் மாயூரம் சந்திப்பிற்கு அடுத்த நிலையமாக நீடூர் உள்ளது. புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்றது. அறுபத்து மூவர்களில் ஒருவரான முனையடுவார்நாயனர் வாழ்ந்த தலம். இத்தலத்தை இந்திரன், சூரியன், சந்திரன் ஆகியோர் வழிபாடு செய்துள்ளார்கள்.

மாயூரத்திலிருந்து நீடூர் செல்ல நெ. 1 டவுன் பஸ் வசதி உண்டு,

எஸ். ராமசாமி,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
E. S. கணபதி, B. E., (தலைவர்) T. S. வேலாயுதம்
B. வரதராஜன் S. பாலசுப்பிரமணியம், B. Sc.

## ஸ்ரீ திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி
## ஸ்ரீ சண்முகநாதன் திருக்கோயில்

அருணகிரிநாதரால் பாடல்பெற்ற திருத்தலம்.
மயில் சாபவிமோசனம் பெற்ற திருத்தலம்.
வீரமருது சகோதரர்கள் நாளும் வழிபாடுசெய்த திருத்தலம்.
வழிபடும் அடியார் மனக்குறை தீர்த்தருளும் கண்கண்ட தெய்வம்.
வருக! வழிபடுக!! வளம்பல பெற்று வாழ்க!!!

## ஸ்ரீ யோகநாதசுவாமி ஆலயம்

மங்கைமடம் (அஞ்சல்) யோகீஸ்வரம் சீர்காழி வட்டம்

திருவெண்காட்டிற்கு சற்று வடக்கில் மணிகர்னிகைக்கு அருகில் உள்ள குரு ஸ்தலமாகும். ஸ்ரீ யோக தக்ஷிணாமூர்த்தி என்ற பெயர்பெற்று சன்னதி மேற்கு பார்த்து அமைந்துள்ளது. மூலவர் சுயம்புவாக அமைந்துள்ள புராணகாலத்து ஆலயமாக விளங்குகிறது. கார்த்திகை மாதத்தில் கடைசி குரு வாரத்தில் ஸ்ரீ யோக தக்ஷிணா மூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆதாரதனைகள் நடைபெறுகிறது. குரு ஸ்தலங்களில் சிறப்பு மிக்க தாகும்.

A. தனபாலன் B. A.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
T. K. கோபாலகிருஷ்ணன் M. A., (தலைவர்) R. கிருஷ்ணமாச்சாரியார்
V. சீனுவாசன் T. P. சுப்பிரமணிய பிள்ளை


# சோழப் பெருமன்னர்களின் சைவ வைணவசமய நடுநிலை


அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார்


பரந்த அடிப்படையில் அமைந்த வேத நெறி பாரதம் முழுதும் பரவிய நெறியாகும். பண்டைய தமிழகமும் அந்த நெறியைப் போற்றியது.

நிகழா நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பழைய புறப்பாடல்.

'பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்'

என்று சுட்டுவது காண்க.

சிவபெருமான் வேதநாவன் ஆதல்,

'யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்'

என்ற சொற்றொடராலும்,

திருமால் வைதிகக் கடவுளாதல்,

'இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே'

என்ற சொற்றொடராலும் பண்டைத் தமிழ் நூல்களில் புகலப்படுகின்றன.

இச்செய்திகள் பிற்காலச் சான்றோர்தம் உள்ளத்தும் இடம்பெற்ற செய்தி,

'சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார்'

என்ற திருத்தொண்டர் புராண அடியினையும்,

'மறையாய நால்வேதத்து
உள்நின்ற மலர்ச்சுடரே'

என்ற சடகோபர் திருவாக்கினையும் நோக்கி உணரப்படும்.

வேதகாலத்துக்குப் பிற்படத் தோன்றிய சான்றோர் பலரும் இறை வழிபாட்டு முறைகளில் புதியன பல சிவணச் செய்தனரெனினும்,

'மரபுநிலை திரியின் பிறிது பிறி தாகும்'

என்ற கட்டுப்பாட்டினை உட்கொண்டு பண்டைய வேதநெறி அடிப்படையிலேயே புதுவன புணர்த்து இறைவழிபாட்டு நெறிகளைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் படைப்பாராயினர்.

சிவன், விஷ்ணு என்ற இரு பெயர்களும் வேதம் நுவலும் பெயர்களே. வேத நெறியாகிய அடிமரத்தின் இரு பெருங் கிளைகளாகச் சிவ வழிபாடும் திருமால் வழிபாடும் தோன்றவே, தமிழகத்து மக்கள் பலரும் இவ்விரண்டனுள் ஒன்றனைப் பின்பற்றி உய்வழி காண்பாராயினர். சிலப்பதிகாரம்,

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நேமியோன் கோயிலும்'

பக்கல் பக்கலில் அமைத்து, வழிபாட்டு வேற்றுமைபற்றிக் காழ்ப்புணர்ச்சி எதுவுமின்றி மக்கள் இறை வழிபாடாற்றிய எழிலை இயம்புகிறது.

சேக்கிழார்பெருமான்,

'வேதநெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறை விளங்க'

திருஞானசம்பந்தப்பெருமான் திருவவதாரம் செய்த திறம் இயம்புவதனையும், திருமங்கை மன்னன்,

‘தென்மொழியும் வடகலையும் திகழ்ந்த நாவர்
திசைமுகனே அனையவர்களாய்’

திருமால் அடியார்கள் திகழ்ந்த செய்தியை இயம்புவதனையும் நோக்க, வேதநெறியின் இரு கிளைகளான இவ்விரு இறை வழிபாடாற்றுவோரிடையும் உள்ளத்துக் காழ்ப்புணர்ச்சி கோடற்கு இடமின்மை தேற்றம்.

சிவபெருமானுடைய ஒரு கூருகத் திருமால் இருக்கின்ருர் என்பதும், திருமாலுடைய ஒரு கூருகச் சிவபெருமான் உள்ளார் என்பதும்,

‘அரியலால் தேவியில்லை ஐயன் ஐ
யாறனார்க்கே’

‘மங்கையோர் பங்கனைப் பங்கினில்
வைத்து உகந்தான் தன்னை’

முதலிய தெய்வப் பாடலடிகளால் புலனாதல் காண்க.

வழிபாட்டுநெறியில் பக்தியை அடிப்படையாகக்கொண்டு அமைந்த இவ்விரு சமயங்களும் பிற்காலத்துக் கற்று வல்லார் தம்முடைய அறிவுத்திறனை வெளிப்படுக்கும் சாதனங்களாக அமைந்த காலத்திலேயே, வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கட்கு இடம் தந்து, வாதப் பிரதிவாதங்களுக்கு வாய்ப்பளித்து, ஒவ்வொன்றும் மற்றதைப் புறச் சமயமாகக் கருதி வெறுக்கும்நிலை ஏற்படத் தொடங்கியது.

‘சைவ ரிற்சிலர் தாமரைக் கண்ணனை
வைவ தொப்ப வைணவ ரிற்சிலர்
மைவ ணக்கள அண்ணலை நிந்தனை
செய்வ துண்டு மதங்கொண்ட திண்மை
[யால்’

என்ற புலவர் புராணமுடையார் கருத்தினை நோக்குக.

கற்று வல்லார் எப்பெற்றியினராகவும், பொது மக்கள் உள்ளத்து வேறுபாடு ஏதுமின்றி முக்கணன், மாதவன் இருவர்தம் வழிபாட்டையும் உவகையோடு செய்து உளவமைதியும் வாழ்க்கை நலனும் பெற்று வருவாராயினர்.

தொடக்கத்தில் வழிபாட்டு விளக்கங்களாகத் தொடங்கிய ஆகமங்கள் பிற்காலச் சூழலிலேயே காழ்ப்புணர்ச்சிக்கும் வாய்ப்பு அளிப்பனவாயின.

ஆனால் தென்னகத்தில் ஆண்ட சோழ மன்னர்கள் ‘வையம் மன்னுயிராக அம்மன்னுயிர், உய்யத்தாங்கும் உடலங்களே’ தாங்கள் என்ற எண்ணம்கொண்டாராய், மக்கள் வழிபாட்டிற்குப் பல்லாற்ருனும் சமய வேறுபாடு காட்டாது உதவி வந்தனர் என்பது வரலாறு காட்டும் செய்தி. இதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் பல உள.

எண்டோளீசர்க்கு எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட திருக்குலத்துவளச் சோழனாகிய செங்கணான் திருமாலுக்குத் திருநரையூர் மணிமாடம் எடுப்பித்தவன். அம்மரபில்வந்த பிற்காலச்சோழர்களாம் விசயாலயன் மரபினர், மரபு நிலை தவருமல் இரு சமயங்களையும் நன்முறையில் ஆதரித்து வந்துள்ளனர். தாம் சிவனடி மறவாச் செம்மல்களாய்க் காவிரியில் இருமருங்கும் அவ்வெண்டோள் ஈசற்கு எழிற்கோட்டங்கள் பல கற்றளிகளாய் எடுப்பித்த அம்மன்னர் மரபில் ஒரு சிலராதல் விண்ணகரங்களும் எடுப்பித்துள்ளமை வரலாறு கண்ட உண்மையாகும்.

சோழ மன்னர்கள் தாம்வைணவ சமயத்திற்கும் இராமாநுசர் போன்ற அச்சமயத் தலைவருக்கும் பெருந்தீங்கு விளைவித்தனர் என்று பேசப்படுவதற்கு வரலாற்றுச்சான்று எதுவும் இல்லையென்பது அறிஞர்தம் உள்ளத்தில் அழுத்தமாக அமைய வேண்டுவதொரு செய்தியாகும்.

‘பாடரவத் தென்னரங்கம் மேயாற்குப் பன்ம
ஆடரவப் பூம்பாயல் அமைத்த’ [ணியால்

இராசமகேந்திரன் விசயாலயன் மரபினன் அல்லனோ?

அவன் அமைத்த திருவரங்கத்து இராசமகேந்திரன் திருவீதியும், விக்கிரம சோழனமைத்த அகளங்கன் திருவீதியும் இன்றும் அந்தப்பெயரால் வழங்கப்பட்டு வருதலை அறியேமோ?

முதற்குலோத்துங்கன் (கி. பி. 1070 - 1118) தன் ஆட்சியின் 15-ஆம் ஆண்டில் திருவரங்கப் பெருங்கோயிலில் திருவாய்மொழியும் திருப்பள்ளியெழுச்சியும் பாட ஏற்பாடு செய்துள்ள கல்வெட்டு இன்றும் அக்கோயிலில் காணப்படுகிறது. அவன் ஆட்சியாண்டு ஒவ்வொன்றிலும் திருவரங்கப்பெருங்கோயிலுக்கு நிவந்தம் விடப்பட்ட செய்தியைக் காட்டும் கல்வெட்டுக்கள் இன்றும் அவன் பரந்த உள்ளத்திற்கு நிலைத்த சான்ருய் உள்ள நிலையைக் காணலாம். குலோத்துங்கன் I. தன் ஆட்சியின் 18-ம் ஆண்டில் ‘தேட்டருந்திறல்’ என்ற பாடல்களைத் திருவரங்கத்தில் பாடச்செய்த செய்தி உலகறிந்த தொன்று.

மூன்ரும் குலோத்துங்கன் (கி. பி. 1178 - 1216) திருவானைக்கா, திருவரங்கம் ஆகிய இருபெருங் கோயில்களின் நிலத்தகராறுகளைத் தீர்த்துவைத்தகல்வெட்டும்உள்ளது.

நந்தா விளக்குக்கும் கற்பூரத்துக்கும் திருவரங்கக் கோயிலுக்கு 70 கழஞ்சுகள் வழங்கிய பராந்தகச் சோழன் கல்வெட்டும், திருச்சானூரில் நந்தா விளக்கெரிக்க அம்மன்னன் காலத்தில் வழங்கப்பட்ட நிவந்தம் பற்றிய கல்வெட்டும், ஸ்ரீநாதமுனிகள் அவதாரத்தலமான காட்டுமன்னார் கோயிலில் அம்மன்னன் தன் பெயரால் எடுத்த வீரநாராயண விண்ணகரமும் அம்மன்னனது சமய நடுவுநிலைக்கு நிலைத்த சான்றுகளாம்.

இராசராசன் I. ஆட்சியின் பதிநான்காம் ஆண்டில் திருவேங்கடமுடையானுக்கு வழங்கப்பட்ட பொன், மணிகள் பற்றிய கல்வெட்டும் விக்கிரமசோழன் ஆட்சியில் வைகுந்தப்பெருமாளுக்கு நிலம் வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கும் கல்வெட்டும், குலோத்துங்கன் தஞ்சைமாவட்டத்து மன்னார்குடியில் எடுப்பித்த குலோத்துங்க சோழ விண்ணகரம் எனப்படும் இராசகோபால சுவாமி கோயிலும், ஆந்திரப் பிரதேசத்தின் கடப்பை மாவட்டத்தில் உள்ள குலோத்துங்க சோழ விண்ணகரமும் தஞ்சை பிற்காலச் சோழமன்னர்கள் தாம் பெரும்பாலும் சிவவழிபாட்டை மேற்கொண்டனர் எனினும் வைணவத்தைப் புறக்கணித்தாரல்லர் என்ற செய்தியைப் பறைசாற்றுவனவாகும்.

நாகையில் அமைத்த புறச்சமயத்ததாகிய சூடாமணிவர்ம விகாரத்துக்கு ஆனைமங்கலம் என்ற ஊரையே தானமாக வழங்கிய சோழர் மரபு வைதிக மதத்தின் இரு நெறிகளுள் ஒன்ருகிய வைணவத்தைத் தக்காங்குப் பாதுகாத்து ஆதரித்து வந்தது என்ற கருத்தில் வேறுபாடு கோடற்கு வரலாற்றுச் சான்று எதுவும் இன்று என்பது இதுகாறும் கூறியவற்ருல் போதரும்.


**ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்**

**திருமயானம்**

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருமயானம் கோயிலின் விஸ்தீரணம் 6 ஏக்கர். திருக்கடையூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒருமைல் தூரத்தில் உள்ளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவராலும் தேவாரப்பதிகம் பெற்றது.

K. கனகசபைபிள்ளை
ரெ. அமிர்தலிங்கம்
மா. மிருத்தஞ்சயன்

தொலைபேசி எண் 37.

# ஸ்ரீ அக்னீசுவரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் **திருப்புகலூர்** தஞ்சை மாவட்டம்

திருப்புகலூர் இந்த புராதன சிவத்தலம் மாயூரம் - காரைக்குடி புகைவண்டிப் பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டர் கிழக்காகவும், நன்னிலம் - நாகபட்டினம் பேருந்துப் பாதையில் நன்னிலத்திலிருந்து 10 கிலோ மீட்டரிலும் அமைந்துள்ளது. இறைவன் பெயர் ஸ்ரீ அக்னீஸ்வரர். இறைவி பெயர் ஸ்ரீ சூளிகாம்பாள். இறைவனுக்கு கோணப்பிரான், சரண்யபுரீஸ்வரர் போன்ற நாமங்களும் இறைவிக்கு ஸ்ரீ கருந்தார்குழலி அம்பிகை என்ற நாமமும் இருந்து வருகின்றது. சமயக்குரவர் நால்வரில் மூவர் பாடிய தலமாகும். ஸ்ரீ நாவுக்கரசர் இறைவனோடு இரண்டறக்கலந்த தலமும் இதுவே. நாவுக்கரசருக்கு பெரியதொரு திருவிழா சித்திரை மாதத்தில் சதய நட்சத்திரத்தை பத்தாம் நாளாகக் கொண்டு 10 தினங்கள் நடத்தப்படுகின்றது. இத்திருவிழாவில் கடைசி மூன்று தினங்களில் திருமுறை மாநாடு ஒன்றும் தமிழக திருக்கோயில்களின் ஓதுவார்களைக்கொண்டு மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. மேலும் வைகாசி விசாகத்தைப் பத்தாம் நாளாகக்கொண்டு இறைவனுக்கு 10 தினங்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. இவைகளைத் தவிர மற்ற மாதாந்திர உற்சவங்களும் முறையே சீரும் சிறப்புமாக செய்து வரப்படுகின்றன. நஞ்சை நிலங்களிலிருந்துதான் இத்திருக்கோயிலுக்கு வருமானம் அதிகமாக வருகின்றது. ஆறுகால பூசைகள் செவ்வனே நடத்தப்படுகின்றது. ஆகம பாடசாலை ஒன்றும், சித்த வைத்தியசாலை ஒன்றும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூபாய் 17,500 செலவில் நடத்தப்படுவதுடன் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு (சுமார் 80) மதியம் உணவும் அரசு மான்யம் பெறுது பல ஆண்டு காலமாக நடைபெறுகின்றது. இத்திருக்கோயிலின் தலைவர் சந்நிதிக்கு வடபால் ஸ்ரீ வர்த்தமானீஸ்வரர் சந்நிதி ஒன்றும் தனியாக அமைந்துள்ளது. இறைவி பெயர் ஸ்ரீ மனோன்மணி. இது ஒரு தனித்தலமாகவே இருக்கிறது. திருப்புகலூரிலேயே அவதரித்து இறைவனுக்கு புஷ்பத்தொண்டு செய்து முக்திபெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய ஸ்ரீ முருகநாயனாருக்குத் தனிச்சந்நிதி அமைந்திருக்கிறது. இவ்வாலயத்திற்கு சொந்தமாக மற்றோர் சிவத்தலமும் திருப்புகலூரிலிருந்து ஒன்றரைகல் தொலைவில் இருக்கிறது. அந்த ஊரின் பெயர் இராமநந்தீஸ்வரம். அங்குள்ள இறைவன் பெயர் ஸ்ரீ இராமநாதர். இறைவி பெயர் ஸ்ரீ சூளிகாம்பாள்.

இந்த புராதன பெரிய சிவத்தலத்தைக்காணவரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. இதுகாறும் தரிசிக்காதவர்கள் ஒருமுறை தரிசனம்செய்து இருமைப்பயனையும் அடைய விரும்புகிறோம்.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதிகள்**
பரம்பரை அறங்காவலர் (வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்)
சி. சுப்பிரமணிய பிள்ளை, பி. ஏ., பி. எல்., (பொருளாளர்)

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ மாணிக்கியநாதசுவாமி திருக்கோயில்

## திருநீலக்குடி

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

மாணிக்கியநாதசுவாமி என வழங்கும் நீலக்குடி அரன்தன் கோயில் தென்னல்குடி என வழங்கும் திருநீலக்குடியில் அமைந்து உள்ளது. இவ்வூர் ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து தென்பால் நான்கு கி. மீட்டர் தொலைவிலுள்ளது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ - ல - ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் நிருவாகத்திற்குட்பட்டது. இந்தத் தலத்துக்கு அப்பர் சுவாமிகளது திருப்பதிகம் ஒன்று உண்டு. மேற்படி திருப்பதிகத்திலே,

''கல்லினோடெனைப் பூட்டி அமண் கையர்
ஒல்லைநீர் புக நூக்க என் வாக்கினால்
நெல்லுநீள் வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே''

என்ற தேவாரம் அப்பரது வரலாற்றுக்கு ஓர் அகச்சான்று போல் அமைந்து உள்ளமை அறிஞர்கள் சிந்தனைக்குரியது. இந்தத் தலத்தில் வருணனும் தேவகன்னியரும் இங்குள்ள இறைவனைப் பூசித்ததாகப் புராணம் கூறும். மூலவரான லிங்க மூர்த்திக்கு எண்ணெய் அபிஷேககாலத்தில், அந்த எண்ணெயில் பாதியளவு லிங்கத்தில் சுவர்வது ஒரு தனி விசேஷம். அன்பர்கள் திருநீலக்குடி அரனைத் தரிசித்து திருவருள் பெறுவார்களாக.

தருமை ஆதீனம்

**ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானம்**

ஆச்சாள்புரம் [தஞ்சை மாவட்டம்

" காதலியைக் கைப்பற்றிக்கொண்டு வலங்கொண்டருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞானசம்பந்தர்
நாதன் எழில் வளர்சோதி தண்ணியதன் உட்புகுந்த "

சிறப்பு மிக்க தலம் இது!

அண்ணல்: சிவலோகத் தியாகராஜர்
அம்மை: திருவெண்ணீற்றுமை

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற 'திருவெண்ணீற்றுமையம்மைப் பிள்ளைத்தமிழ்' இத்தலத்திற்கு உண்டு. இத்தலம் கொள்ளிடம் மகேந்திரப்பள்ளிப் பேருந்து வழியில் கொள்ளிடத்திற்குக் கிழக்கே 4 கல் தொலைவிலுள்ளது. யாத்ரீகர் தங்குவதற்கு விடுதி கட்டப்பெற்றுள்ளது.

தருமை ஆதீனம்

குமரக்கட்டளை

**ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்**

குமரக்கட்டளை, மாயூரம்

மாயூரம் நகரில் ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலில் உள்ள இந்த முருகப் பெருமான் திருக்கோயில் தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டதாகும்.

"மாயூரநாதப்பெருமானை" வழிபட்டே "முருகப்பெருமான்" சூரசம்காரத்திற்குச் செல்ல எழுந்தருளினர் என்பது கந்தபுராணத்தால் அறியப்படுகிறது. கந்தபுராணத்தில் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருளி வந்து பாடியிறங்கிய தலமாகக் குறித்த நிலையில் முருகப்பெருமான் வில்லேந்திய வேலனைக் காலில் வீரக்கழலுடன் நிற்கும் எழில் வடிவில் திகழ்கின்றன்.

இங்கே ஐப்பசி "கந்தசஷ்டிப் பெருவிழா"வில் முருகப்பெருமான் பேரழகுக்கோலம் பூண்டு வழிபடும் அன்பர் மனக்கவலைகளை அறவே அழித்து அருள் வழங்குபவன். மாதக்கார்த்திகை அபிஷேகவிழா மிகச் சிறப்பானது. தங்கும் விடுதி திருக்கோயில் அருகில் இருக்கிறது.

# திருப்பாசுரப் பேருரை விளக்கம்

"வாழ்க அந்தணர்"

தேவார இசைமணி - சா. சங்கரநாராயணன்,
திரு ரத்தினகிரீசுவரசுவாமி திருக்கோயில், திருமருகல்.

'மதுரை நகரின்கண் திருஞானசம்பந்தர் எழுந்தருளி யிருந்தார். மதுரைநகர் மன்னன் உடல் நலமின்றியிருந்து தேறியிருந்தான். சமணமுனிவர் பலர் கூடிக்கொண்டு திருஞானசம்பந்தரோடு வாது புரிந்தனர். வேந்தனுடைய வெப்புநோய் நீக்கத்தில் தோல்வியுற்றசமணமுனிவர் அனல்வாதத்திலும் அவ்வாறே வெற்றிபெருதொழிந்தனர். இறுதியாகப் புனல் வாதம் உண்டாயிற்று. அக்காலே, திருஞானசம்பந்தர் பாடியருளிய பாசுரம் எழுதிய ஏடு வையையாற்றில் எதிரேறிச்சென்று ஏடகப்பதியில் கரையடைந்து இயற்கை நெறியாகிய சைவத்துக்கு வெற்றி தந்தது' என்ற வரலாற்றைக் கேட்டிருக்கிறோம். வையைப் பெருக்கில் எதிரேறிச் சென்ற ஏட்டில் எழுதப்பெற்ற பாசுரம்தான் இங்கு நாம் பொருளாகக்கொண்ட திருப்பாசுரம். அப்பாசுரத்தின் முதல் திருப்பாட்டு "வாழ்க அந்தணர்" என்று தொடங்குவதாகும்.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டுக்களைப் பொதுவாகத் திருப்பதிகம் என்று நூல்களிலும், திருப்பதியம் என உலகியல் வழக்கிலும் சொல்லுவது மரபு. திருப்பதிகம் ஓதுவதெனவும் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதெனவும் சான்றோர் நெறிப்படுத்துரைப்பது சைவநெறி. இத்திருப்பதிகங்களின்வகையுள் இப்பாசுரமும்சேர்ந்ததாயினும், இதனைத் திருப்பதிகம் என்றோ திருப்பதியமென்றோ குறிக்காமல் "திருப்பாசுரம்" என்று சொல்வதுதான் முறையும் வழக்குமாக இருந்து வருகிறது. பாசுரம் என்ற பெயர் திருஞானசம்பந்தராலேயே வழங்கப் பெற்றது. சம்பந்தன் தமிழ், சம்பந்தன் பாடல், சம்பந்தன் சொல், சம்பந்தன் உரை, சம்பந்தன் பத்து என்றெல்லாம் தம் பாடல்களைப் பெயர் குறித்துவந்த ஞானசம்பந்தப் பெருமான் இதன் திருக்கடைக்காப்பில் "பல்லார்களும் மதிக்கப் பாசுரம்சொன்ன பத்து" என்று குறித்திருக்கின்றார். அவர்க்குப் பின் வந்த சான்றோர் பலரும் இத்திருப்பதிகத்தைப் பாசுரம் என்ற பெயராலே உரைக்கலாயினர். நம்பியாண்டார் நம்பிகள் "நோக்கரிய பாசுரம் பல்லத்து" என்று சிறப்பித்தார்; சேக்கிழார் சுவாமிகள், 'பாசுரம் பாடலுற்றார் பரசமயங்கள் பாற' என்று புகழ்ந்தோதினர். இன்றும் இதற்குத் திருப்பாசுரம் என்ற சிறப்பே இருந்து வருகிறது. பாசுரம் என்பதன் பொருள் பலரும் நன்கு மதித்து ஓதும் பாடல் என்பது; "ஈசனை ஏத்து பாடல், பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்" என்பதனால் இப்பொருள் உணரப்படுகிறது.

இத்திருப்பாசுரத்துள் திருக்கடைக்காப்பும் உடன்கூட்டிய வழிப் பன்னிரண்டு திருப்பாட்டுக்கள் உள்ளன. ஞானசம்பந்தப்பெருமான் அருளிய திருப்பதிகங்கள் வழக்கம் போல் திருக்கடைக்காப்பு நீங்கலாகப் பப்பத்துத் திருப்பாட்டுக்களே உடையவையாயினும், திருப்பாசுரத்துள் திருக்கடைக்காப்பு நீங்கலாகப் பதினொரு பாட்டுக்கள் உள்ளன. 'பாசுரம்சொன்ன பத்தும்' என்று அருளியிருப்பதால் "அரிய காட்சியராய்" எனத் தொடங்கும் திருப்பாட்டு முதலாகவுள்ள பத்தும் "பாசுரம் சொன்ன" பத்து என அடங்குவது காணப்படும்; படவே, முதற்கண் நின்ற "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாட்டு இத்திருப்பாசுரத்

துக்கு நூன்முகமாகிய மங்கலவாழ்த்து என நிற்பது துணியப்படும். நூன்முகப்பில் மங்கல வாழ்த்தும், இறுதியில் திருக்சடைக் காப்பும் பெற்று இடையில் "எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்" ஆகிய "பல்லார்களும் மதிக்கச்" சொன்ன "பாசுரம் பத்தும்" நிற்பது அறிஞர் கண்டு இன்புறத் தகுவதொன்று. இங்ஙனம், "வாழ்க அந்தணர்" என்பது மங்கல வாழ்த்தாக நின்று மாண்புறுப்பது இடைக்காலச் சான்றோர் உள்ளத்தில் நன்கு தோன்றியிருக்கிறது. கோவிந்தபுத்தூர் என இந்நாளில் வழங்கும் ஊர், முன்னாளில் திருவிசயமங்கை என்ற பெயருடன் விளங்கிற்று. சோழவேந்தர் நாளில் கல்வெட்டொன்று அங்கே பொறிக்கப்பட வேண்டியிருக்கையில் சான்றோர் அதற்கு மங்கலமாக "வாழ்க அந்தணர்" என்ற இத்திருப்பாசுர மங்கல வாழ்த்தையே பொறித்திருக்கின்றனர். பின்னர், மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்துக்குப் பேருரைகாணத் தொடங்கியபோது மாதவச் சிவஞானமுனிவர், பேருரையின் மங்கலமாக இதனையே எழுதிக்கொண்டது சைவ உலகு நன்கு அறிந்தது. சைவத் திருமுறைகளை ஓதத் தொடங்கும்போது, "திருச்சிற்றம்பலம்" சொன்னதும், "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாசுர மங்கலத்தைச் சுத்தாங்கமாக ஓதிப் பின்பு திருமுறை ஓதுக என்பது "தொண்டைநாட்டுத் திருவிடையூர் மரபு" என்று வரும் வழக்காறும் நாடறிந்த செய்தியாகும். இவ்வாற்றால், புறச்சமயப் புயலால் காய்ந்திருந்த சைவத்தை நேர்பட நிறுத்திய திருஞான சம்பந்தப்பெருமான் வழங்கி அருளிய சிவஞானத் திருப்பாசுரத்தின் பெருமை எத்துணை உயர்ந்தமுறையில் சைவ நன்மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளது என்பது இனிது விளங்கும். சைவத் திருமுறைகளையும் அவற்றின் வரலாறு காட்டும் திருத்தொண்டர் புராணத்தினுடைய நலத்தையும் கண்ட வைணவப் பெரும் புலவர் ஒருவர் ஒரு சொற்பொழிவின்கண். "இவை எங்கள் சமயப் பெரியார் கைப்பட்டிருக்குமாயின், அவர்கள் எவ்வளவோ சிறந்த முறையில் பேருரை கண்டு உலகம் உள்ளளவும் வற்றாத பேரின்பம் நுகரச் செய்திருப்பார்கள்" என்றார். இன்றுதான் சைவவுலகு திருவாசகத்துக்கும் திருத்தொண்டர் புராணத்துக்கும் சீர்த்த உரைகாணும் முயற்சியைத் தொடங்கியுள்ளது.

திருமுறைகட்கு உரைகாண்பவர் வெறுங் கலையறிவு மட்டும் நிரம்பியிருத்தல் அமையாது; சைவத்திருவருட்கலையறிவும் நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது சைவவுலகு மேற்கொண்ட கருத்து. கலையறிவு போல அருட்கலையறிவு பிறர் அளந்து காணும் தகுதியதன்று; அருட்கலையுடையவரைத் திருவருள்தான் அறிந்து நமக்கு அறிவிக்க வேண்டுமேயன்றி வேறுவழியில்லை; ஆகவே அருணூல்கட்கு உரைகாண்பது நமக்கு அடாது என்றஞ்சியே இடைக்காலச் சைவர்கள் ஒடுங்கினர்; அதனால் சைவத் திருமுறைகள் எழுத்துப் பிழைக்கும் ஏடெழுதுவோரும் எடுத் தோதுவோரும் செய்த பிழைக்கும் இரையாய் இருந்து வருவனவாயின. திருமுறைகள் பலவற்றின் கருத்தையும் பொருளையும் சேக்கிழார் பெருமான் பன்னெடுநாட்களுக்குமுன்பே உரைத்துக் காட்டியும், சைவவுலகு ஏனைசைவப் பெருமக்களைப்போல நலம் செய்துகொள்ளும் நல்லருளும் நற்பேறும் இன்றி ஒளிகுன்றி நிற்பது பெரிதும் வருந்தத்தக்கது. இடைக்காலச்சைவவுலகுபெருந்தவம்புரிந்த பெருமையுடையது. அந்தப் பெருமையால் சேக்கிழார்பெருமான் தோன்றித்திருமுறைச் செல்வங்களை வழங்கிய திருத்தொண்டர்களின் உண்மை வரலாறுகளை வரலாற்று நெறிநின்று வடித்துத் தந்து அருளினார்கள்; திருமுறைகள் பலவற்றின் கருத்துக்களையும் பொருளையும் ஆங்காங்கு உரைத்துச்சென்றார்கள். அவர் காட்டியவற்றுள் திருப்பாசுரத்திற்குக் காட்டியருளியபேருரை அறிவுடையோர் என்றும் போற்றி இன்புறுதற்குரியதாகும். "நகுபாசுர முதல் உரை செயுமதனால் நவிலுரையாசிரியன்" என்று சைவத் திரு. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சேக்கிழாரைப்பற்றிப் பாடி மகிழ்ந்துள்ளார்கள்.

இத்திருப்பாசுரப் பேருரைக்குச் சுருங்கியவிளக்கம் தரவேண்டியே முதற்திருப் பாட்டின் பேருரையை மட்டும் சேக்கிழார் பெருமான் காட்டியநெறியில் நின்றுவிளக்குகிறேன். இத்திருப்பாசுரத்திற்கண்ட திருப்பாட்டுகளைச் சேக்கிழார் பெருமான் தொகுத்துச்சுட்டல், வகுத்து மெய்ந்நிறுத்தல் என்ற உத்திவகையில் சிறுசிறு அதிகரணங்களாக வகுத்து உரைக்கின்றார். சேக்கிழார் பெருமான் வகுத்த பிரிவுகள் சிவஞானபோதப் பேருரையிற் காணப்படும் அதிகரணங்களையும் சூர்ணிகைகளையும் நினைவுறுத்துகின்றன.

சேக்கிழார்பெருமான், தாம்மேற்கொண்ட பேருரையின் தொடக்கத்தில் பாசுரம் நுதலிய பொருள் கூறுவாராய், உலகில் நிலவும் சமயநெறிகள் பலவற்றுள்ளும் மெய்ந்நெறியாவது சிவநெறியே என்று மொழிகின்றார். சிவநெறியோடு அந்நாளில் வேதநெறியென ஒன்று நாட்டில் நிலவிற்று. அந்நாளில் வேத நெறியோடு மாறுபட்டு எழுந்த பௌத்தம் ஆருகதமாகிய சமணம் என்ற இரண்டும், அவ்வேத நெறியைத் தகர்த்தெறியும் நோக்கத்துடனே இருந்தன. வேதநெறியிற்கண்ட பல தெய்வக் கொள்கையும் கொலை வேள்விகளும் அந்தப் பௌத்த சமணங்களின் எதிர்ப்புக்கு இலக்காயின. ஆயினும் வினையுணர்வும் மறுபிறப்பும் அருள் ஒழுக்கமும் இயல்பிலே கொண்ட சைவநெறியின் முன் பௌத்த சமணங்களின் மறுப்புப் பயன்படாது போயிற்று. மழை, நீர், நெருப்பு, காற்று, காடு, மலை முதலிய யாவும் உலகியல் வாழ்வுக்கு வேண்டுவன வாதலால், அவற்றை வழிபடும் வேதநெறி உலகியல் ஒழுக்கத்துக்கு ஒத்ததாகத் தோன்றினமையின், சைவம் வைதிக நெறியைத்தழுவிக்கொண்டு சென்றது. வைதிகம் உலகியல் ஒழுக்கத்துக்கும், சைவம் வீடு பேற்றின்பத்துக்கும் படிமுறையில் அமைந்திருப்பதை அச்சமணர்கள் காணவில்லை; அவரைப் பின்பற்றிய பாண்டிய வேந்தனும் அறியவில்லை; அதனால் ஞானசம்பந்தப் பெருமான் திருப்பாசுரத்தின் வாயிலாக அவர்கட்கு அறிவுறுத்துகின்றார்.

"உலகியல் வேதநூல் ஒழுக்க மென்பதும்
இலகுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவாய் அமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவன் அறியும் பான்மையால்"

என்று எடுத்து மொழிகின்றார். இனி, திருப்பாசுரத்தின் மங்கல வாழ்த்தாக நிற்கும் "வாழ்க அந்தணர்" என்ற திருப்பாட்டினை, 6 அதிகாரங்களாக வகுத்துக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் முறையே பேருரை வகுக்கின்றார்.

1. 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' - என்பது முதலதிகரணம். "அந்தணர்; தேவர், ஆனினங்கள் வாழ்க" என்பது இதன்பொருள்; இஃது எடுத்தோத்து; இதனை மேற்கோள் என்றும் பிரதிக்ஞை என்றும்கூறுவர். இதனை வற்புறுத்தும் ஏது: "உலகம் இன்புற, சந்தவேள்விகள் முதல் சங்கரர்க்கு முன்வந்த அர்ச்சனை வழிபாடு மன்ன" ஆகலான், என்பது. மங்கல மொழியால் வாழ்த்துதற்கு உரியவர் நிறைமொழி மாந்தராகலின், அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயனைப் பயக்கும் பெருமொழி வேந்தராகலின், ஞானசம்பந்தர் வழங்கிய இந்த வாழ்த்தினைச் சேக்கிழார் பெருமான், இந்த "மெய்ம்மொழி" என்று குறித்தருளுகின்றார். அறமுதலிய உறுதிப் பொருள்கூறி மழை முதலியன வேண்டி வேள்விகளை முன்னின்று நடத்துதலால் அந்தணர்களால் உலகம் வேண்டுவன பெற்று இன்புறுவது ஒருதலை; அதனால் 'உலகம் இன்புற' என்றார். அந்தணர் எடுக்கும் வேள்விக்குரிய ஆவுதியை ஏற்று விழையும் பொருளை நல்குவதால் தேவர்களையும் வாழ்த்துவது முறையாயிற்று. இதுகாறும் வைதிகம். இனி நெய்யும் பாலும் தயிருமாகிய பொருள்கள் சிவநெறிக்கண் சிவபரம்பொருட்கு அருச்சனை புரியவேண்டியிருத்தலால், ஆனினங்களை வாழ்த்துதல் இன்றியமையாததாயிற்று. இவ்வண்ணம், அந்தணர் தேவர் ஆனினங்களின் வாழ்த்து வேள்வியாதி உலகியலாகிய வைதிகத்துக்கும் சிவார்ச்சனையாகிய சைவத்துக்கும் பொதுப்படவேண்டியிருப்பதைத் தொகுத்த மொழியால், "சந்த வேள்விகள் முதல் சங்கரர்க்கு முன்வந்த அர்ச்சனை வழிபாடு மன்னவாம்" என்று ஆசிரியர் உரைத்தருளுகின்றார்.

2. 'வீழ்க தண்புனல்' - இரண்டாவது அதிகரணம். தண்புனல் 'பொழிக' என்னாது, 'வீழ்க' என்றது உலகில் வாழுகிற உயிர்வகை யாவுமே யன்றி, தேவரொடு ஒப்ப நிலவும் முனிவர்களும் தேவர்களும் விரும்பும் மேன்மையுடைமையால் என்றற்கு; 'வீழ்புனல்' என்று ஆசிரியர் இக்கருத்தைச்

சுட்டிக் காட்டுகின்றார். அந்தணர் முதலியோரை வாழ்த்தியபின் மழையைக் கூறியது, வேள்வியால் விளையும் நற்பயன் மழை என்பதுபற்றி. மழைகூறியது உலகியலாகிய வைதிகம்; அது விளங்க, 'வேள்வி நற்பயன் வீழ்புனலாவது' என்றார். சைவ நெறிக்குரிய இயைபு காட்டுதற்கு 'நாளும் அர்ச்சனை நல்லுறுப்பாதலால்' என்று ஆசிரியர் உரைக்கின்றார். சிவார்ச்சனைக்கு நீர் இன்றியமையாத சிறந்த பொருள் என்றற்கு 'நல்லுறுப்பு' என்பது காண்க.

3. "வேந்தனும் ஓங்குக" - மூன்றாவது அதிகரணம். வேந்தனும் என்றது உம்மை வேந்தனோடு கூடிய சுற்றமும் மனையும் நாடும் நன்மக்களும் உளப்படுத்துவதற்கு. ஆளும் மன்னன் என்றார், சமணரொடு கூடிநின்று நாடாண்ட பொழுது சைவ மங்கையர்க்கரசியாரின் கணவனாய் மீண்டும் சிவநெறிக் காவலனாகும் சிறப்புப் பற்றி. பாண்டியன் பின்பு தானும் சிவநெறி மேற்கொண்டு சிவார்ச்சனை புரிந்தொழுகியதோடு பிறரும் இதனை மேற்கொண்டு ஒழுகுங்கால் அவர்களுக்குக் காவல்புரிந்த சிவத்தொண்டை வியந்து, 'இவை காக்கும் முறைமையால்' என்றார். இவை யென்றது வைதிகம், சைவம் என்ற இரண்டையும் அடக்கி நிற்பது குறிக்கத்தக்கது.

4. "ஆழ்க தீயது" — நான்காவது அதிகரணம். தீயது என்றது வேற்றுச் சமயங்களான பர சமயங்களின் நெறியை. வைதிக சைவங்களின் அயலாய்த் தீயவொழுக்கம் கொண்டதுபற்றித் தீயது என்று குறிக்கப்படுகிறது.

5. "எல்லாம் அரன் நாமமே சூழ்க" ஐந்தாவது அதிகரணம். எல்லாம் என்றது தீநெறிப்பட்டவற்றின் 'வேறாகிய' எல்லாம்; அதனால் ஆசிரியர் வேறு எல்லாம் என்று குறிக்கின்றார். எல்லாம் என்றது "தொல்லுயிர்யாவையும்" குறிக்கும். உயிர்கள்யாவும் உணரும் தன்மையுடையவை ஆகலின், அரன் திருநாமத்தை உன்னுதற்குரியவை. மக்களுயிர் யாவும் அரன் திருப்பெயரை ஓதி உய்தல்வேண்டும் என்பதற்கு 'அரன் நாமம் சூழ்க' எனத் திருஞானசம்பந்தர் அருளினார் என்பது. எண்ணிறந்த திருநாமங்களை உடையவனாகலின் அரன் நாமமென்றது நமச்சிவாய என்ற திருநாமம் என்பதற்காக, 'அஞ்செழுத்து' என்றார். பிற பெயர்கள் திருவைந்தெழுத்தினை உறுப்பாக உடையவல்ல என்பது தோன்ற திருஞானசம்பந்தர் நாம'மே' எனப் பிரிநிலை ஏகாரம் பெய்து கூறி அருளினமை காண்க. 'வாழி' அஞ்செழுத்து என்றது, ஆசிரியர் தம் மனத்தால் எண்ணி நாவாற் சொல்லிக் கையால் எழுதிப் பரவுகின்றாராகலின், சூழ்தல் நினைத்தலும் தமர்சூழ வளர்தலுமாகலின், அஞ்செழுத்து ஓதி என்றதோடு நில்லாது "வாழி அஞ்செழுத்து ஓதி வளர்கவே" என்றார்.

6. "வையகமும் துயர்தீர்க" - ஆறாவது அதிகரணம். வையகம் என்றது, இகமும் பரமுமாகிய வாழ்விடம். 'துயர் தீர்க' என்றதனால், இகத்திலும் பரத்திலும் மக்கள் துயரத்தில் ஆழ்ந்து கிடப்பதும், அவர்களை அத்துயரத்திலிருந்து மாற்றி இறவாப் பேரின்பத்திலிருத்துதல் ஞானாசிரியர்களின் சிவஞானத் திருப்பணி என்பதும் உணரப்படுவதால் 'இகபரத்தில் துயர் மன்னிவாழ் உலகத்தவர் மாற்றிட' என்று ஆசிரியர் பேருரை வகுக்கின்றார். "ஞானசம்பந்தர் 'முன்னர்' மொழிந்தனர்" என்றதனால், திருப்பாசுரத்தின் நான்முகமான மங்கல வாழ்த்தில் இவற்றை உரைத்தருளுகின்றார் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு சொல்லும் திருப்பாசுரத்திற்குச் சேக்கிழார் பெருமான் உரைத்த பேருரை இது; இதுபற்றி யான் இதுகாறும் கூறிவந்தவை விளக்கம்.

வாழ்க திருமுறைகள்!

தருமை ஆதீனம்

# ஸ்ரீ சட்டைநாதசுவாமி

# தேவஸ்தானம்

## சீர்காழி

தஞ்சை மாவட்டம்

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரும் வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய்ச் சிரபுரம்முன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

எனப் பன்னிரண்டு திருப்பெயர் பெற்றிலங்கும் இப்பழம்பதி

"திருஞானசம்பந்தப் பிள்ளையார்"

திருவவதாரஞ் செய்த சிறப்பு மிக்கது!
தோணியப்பர் திருக்காட்சி கண்டு, அம்மை சிவஞானப் பாலுண்டு

"தோடுடைய செவியன்"

என்ற தெய்வத் தமிழைப் பாலருவாயர் பாடிய அரும்பதி!

இறைவர் : பிரமபுரீசுவரர்    இறைவி : திருநிலைநாயகி
இறைவன் சட்டைநாதத் திருமேனிகொண்டு மலைக்கோயிலுள் அருள் வழங்கும் சிறப்பு உண்டு.

சித்திரைத் திருவிழாவில் இரண்டாம் திருநாள் அன்று திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் அருளப்பெற்ற விழா மிகச் சிறப்பானது.

சட்டைநாதர் பலருக்குக் குலதெய்வமாகத் திகழ்வது ஆண்டுக்கு ஒருமுறை எழுந்தருளல் நடைபெறும்.

# ஸ்ரீ மாரியம்மன் கோயில்

## வலங்கைமான்

பாபநாசம் வட்டம் — தஞ்சாவூர் மாவட்டம்

பூக்கள் சுமந்து அமைதியுடன் பாய்ந்து வற்று வளம் பெருக்கும் குடமுருட்டியின் தென்கரையிலே வலங்கைமானிலே கோயில் கொண்டுள்ளாள் சீதாளதேவி என்னும் மாரியம்மன்.

அவள் கருணை வடிவமானவள்; கலிதீர்க்கும் திருநிலைநாயகி; அருளொழுகும் கண்களால் அகிலம் காப்பவள்; படித்தோர், பாமரர், குழந்தைகள், சிறுவர், ஆடவர், பெண்டிர் அனைவருடைய நெஞ்சங்களையும் ஆட்கொள்ளும் அன்னை; வேண்டியன தந்து வையம் காக்கும் வள்ளல் பெருந்தேவி; பெருவீறும், திருவருளும் துலங்க ஒளிரும் சக்திக்கனல்; ஞாயிற்றில் நல்லருளும் வெள்ளியிலே எண்வகைச் சித்திகளையும் இனிதுவந்து வழங்கும் தெய்வம்.

அவள் திருக்கோயில் திக்கற்றோரின் புகல்; கலங்குவோர் பிணி தீர்க்கும் மாமருந்து; விழவருத மாட்சியுடைய தேவதானம்; தம்மைக் காத்தோரை உயிருடன் பாடை ஏறும் அளவிற்கு உணர்வூட்டும் தேவியின் திருவருள் ஒளிரும் இடம்.

**திரு. K. நடராஜன்**
தக்கார்

# ஸ்ரீ அம்புஜவல்லி சமேத
# ஸ்ரீ ஆதிவராகப்பெருமாள் திருக்கோயில்

## கும்பகோணம்

இந்த ஆலயம் மிகவும் தொன்மையானது. ஸ்ரீ வைகுண்டநாதன், ஒரு கால விசேஷத்தில் ஸநகாதி யோகிகளின் சாபத்தால், ஜய, விஜயர்கள், ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்ற அசுரர்களாகப் பிறந்து, தபஸ்செய்து, வரதானம்பெற்று, பூமிதேவியைப் பாதாளத்திற்குக் கொண்டுபோன அளவில் அவனைக்கொன்று, பூமிதேவியை எடுத்துக்கொண்டு, இந்த பாஸ்கர க்ஷேத்திரத்தில் உயரக்கிளம்பி சேவை சாதித்தார். இந்த சரிதம் கும்பகோணம் ஸ்தல மகாத்மியம் 57 ஆவது அத்தியாயத்தில் கூறப்படுகிறது. இப்பெருமானை வணங்குபவர்கள் சகல நன்மைகளையும் பெற்றுய்வர்.

**S. சுப்பிரமணியன்**
தக்கார்

தருமை ஆதீனம்

# ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி
# தேவஸ்தானம்

## திருவையாறு

(தஞ்சை மாவட்டம்)

" யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் "

என்று போற்றும்படி
அப்பரடிகளுக்குத் தென்கயிலாயத் திருக்காட்சி அருளிய தலம்.

திருநந்திதேவர் திருவவதாரஞ்செய்த சிறப்புடையது.

சுந்தரர் சேரருடன் இத்தலத்திறைவனை வழிபட எழுந்தருளியபோது
காவிரி வழிவிட்ட அற்புதங்கண்ட தலம்.

பெருமான் ஐயாறதனில் சைவனாகி மகேஸ்வர பூஜை
நிகழ்த்தியருளிய பெருந்தலம்
சப்தஸ்தானப் பெருவிழாச் சிறப்புடையது.

இறைவர் : ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் இறைவி : தர்மசம்வர்த்தினி

சிறப்புத் திருமேனியாக ஆட்கொண்டார் திருக்கோலம்
அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் அருளிய
தித்திக்கும் தெய்வத்தமிழ் இத்திருத்தலத்திற்கு உண்டு.

கர்நாடக சங்கீத வல்லுநர் தியாகையர் போன்ற பெருமக்கள்
வாழ்ந்த பெருந்தலம் இது.

திருக்கோயில் முழுதும் புதுப்பிக்கப்பெற்றது. 31—3—71 அன்று
மிகச் சிறப்பாக மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

## திரு இராஜகோபால சுவாமி ஆலயம்

பெரிய கடைத்தெரு – கும்பகோணம்

பிருந்தாவனத்தில் கண்ணன் மாடு மேய்ப்பதைப்போல கலியுகத்தில் குடந்தையிலே கண்ணன் பசுவுடன் இராஜகோபால சுவாமியாக காட்சி தந்து வேண்டுவோருக்கு வேண்டிய வரம் தந்து; இவ்வுலகம் செழிக்க; அருள் புரிந்துகொண்டிருக்கின்ருர். அப்பெருமானை வழிபட்டு அருள் பெறுவீர்.

கொத்தா. வே. வெங்கட்ரமணன்
நிர்வாக அறங்காவலர்

## ஸ்ரீ அம்பிகா விருப்பாக்ஷிதேவர் மடம்

மேலத்திருப்பூந்துருத்தி — தஞ்சை வட்டம்

ஷை நிர்வாகம் பரம்பரை தர்மகர்த்தாவால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. மடத்தில் தினந்தோறும். ஸ்ரீ சுப்பிரமணியர் விக்கிரகத்துக்கு பரம்பரை தர்மகர்த்தா அவர்களால் பூஜை நிவேத்தியம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மடத்தின் முன்ஞேர்களான பரம்பரை தர்மகர்த்தா சமாதிகளுக்கும் குருபூஜை ஆராதனை செய்யப்பட்டு வருகிறது.

ஷை மடம் தஞ்சாவூர் - அகரப்பேட்டை பஸ் ரூட்டில் திருகண்டியூருக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

மாணிக்கம் ஆச்சி
பரம்பரை தர்மகர்த்தா

## இராசகோபாலப் பெருமாள் கோயில்

தண்ணிலப்பாடி

நாகைக் கூற்றம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் - திருப்பூண்டி பேருந்து வழித்தடத்தில் உள்ளது. இவ்வாலயப் பெருமாளின் நின்ற திருக்கோலம் காண கண்கொள்ளாதது.

பெருமாளை சேவித்து பேரின்பம் பெற்றுய்ய வேண்டுகின்ருேம்.

ஆ. குப்புசுவாமி க. இ. ச. இ.
நிர்வாக அதிகாரி

நிர்வாக அறங்காவலர்கள்:

மு. இராமசாமி (தலைவர்)
சா. மணித்தேவர் — கா. பொன்னுசாமி
இரா. இராதாகிருட்டினன் — சு. வரதராசன்

தருமை ஆதீனம்

# ஸ்ரீ தியாகராஜசுவாமி

## தேவஸ்தானம்

திருக்குவளை

தஞ்சை மாவட்டம்

சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

விடங்கன்: அவனிவிடங்கர், நடனம்: பிருங்கநடனம்.

கோளிலியாகப் பெருமான் எழுந்தருளியிருப்பதால் "நவக்கிரக தோஷங்கள்" எனப்படும் குற்றங்கள் இத்தலத்தை வழிபட்டால் நீங்கப்பெறும்.

'ஆளில்லை எம்பெருமான் அவை
அட்டித்தரப்பணியே' — என

குண்டையூரில் பெற்ற நென்மலையைச் சுமக்க சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆள் வேண்டி வழிபட்டுப் பெற்ற அருள் தலமிது.

திருவாரூர் - தலைஞாயிறு பேருந்து வழியில் அருள் கொழிக்கும் இத்தலம் அமைந்துள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ ஆத்மநாதசுவாமி திருக்கோயில்

## திருப்பெருந்துறை

### (ஆவுடையார்கோயில்)

பாண்டிய நாட்டு முதலமைச்சராயிருந்த திருவாதவூரரை சிவபெருமான் குருமணியாக எழுந்தருளி வந்து மூவகை தீட்சையும் முறையே புரிந்து ஆட்கொண்டருளி மாணிக்கவாசகப் பெருமானுக்கிய திருத்தலம் திருப்பெருந்துறை எனும் திருத்தலமேயாம்.

சைவ சமய பரமாச்சாரியர்கள் நால்வரில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய மூவரும் கோயில் கட்டியதாகத் தெரியவில்லை. மணிவாசகப் பெருமான் ஒருவர்தாம் சமயமும் கலையும் மிளிர ஒரு கோயிலை நிர்மாணித்தார்கள். அத்திருக்கோயில் திருப்பெருந்துறை எனும் ஆவுடையார்கோயிலேயாம்.

இத்திருக்கோயிலைப் பராமரித்துவரும் திருவாவடுதுறை ஆதீனத்தில் தற்போது குருமணியாகத் திகழும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் திருவுள்ளப்படி, பன்னூறு ஆண்டுகளான மையால் காலகதியில் ஏற்பட்ட பழுதகற்றி குறை களைந்து திருச்சுற்றுக்கள், மண்டபங்கள், தளங்கள், விமானங்கள், கோபுரங்கள் ஆகிய அனைத்தையும், அழகுபொலிய முறைப்படி திருத்தியும், திருவாசகம் முழுவதையும் திருச்சுற்றுச் சுவர்களில் மிளிரச்செய்தும் திருப்பணியாற்றி நிறைவேற்ற வேண்டுமென எண்ணி திருக்கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது.

# ஸ்ரீ கண்ணாயிரமுடையார் தேவஸ்தானம்

## திருக்கண்ணார்கோயில் என்ற குறுமாணக்குடி

இத்தலம் மாயூரம் - சீர்காழி பேருந்து மார்க்கத்தில் கதிராமங்கலம் பஸ் ஸ்டாப்புக்கு கிழக்கே ஒரு மைல் தொலைவிலுள்ளது. சம்பந்தர், சேக்கிழார், இராமலிங்க அடிகள் ஆகியோரால் பாடல் பெற்ற திருத்தலம். இறைவன் கண் ஆயிரம் உடையார் என்னும் திருநாமம் பெற்றுள்ளார்.

இந்திரதீர்த்தத்தில் நீராடி திருக்கண்ணாயிரநாதருக்கு அர்ச்சனை செய்தால் தோஷங்கள் நிவர்த்தியாகி திருமணம் நடைபெறும். பள்ளி அறையில் பால் பழம் நிவேதனம்செய்து விநியோகித்து தம்பதிகள் அருந்தினால் மறு ஆண்டு புத்திர சந்தானம் ஏற்படும்.

தெ. அரு. சித. கரு. ராம. ராமநாதன் செட்டியார்
அறங்காவலர்

# ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரசுவாமி திருக்கோயில்

## கும்பகோணம்

இத்திருக்கோயில் கி. மு. 7 ஆவது நூற்றாண்டுக்கு முற்பட்ட தலமாகவும், சோழ அரசர்களாலும், நாயக்க மன்னர்களாலும் திருப்பணிகள் பல செய்யப்பெற்று அகில இந்திய புகழ்வாய்ந்த திருக்கோயிலாகவும் திகழ்கிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல்பெற்ற சிறப்புடையதாய் மிளிர்கின்றது. இறைவனுக்கு "அமுத கும்பேஸ்வரர்" என்றும், இறைவிக்கு "மங்களநாயகி" என்றும் பெயர் அமைந்துள்ளது. தம்மைத் தொழுவாருக்கு திவ்ய மங்களத்தை அருள்வதால் மங்களநாயகி என்ற பெயரும், சக்தி பீடங்களுள் ஒன்றாகிய மந்திரபீடத்தில் விளங்குவதால் "மந்திரபீடேஸ்வரி" என்ற பெயரும், தம்மை வணங்குவோரின் பல நோய்களையும் போக்குவதால் "பல நோயறுக்கும் பரை" என்ற பெயரும் வழங்குகின்றன.

இத்திருக்கோயிலில் நவராத்திரி, மாசிமகம், தெப்பத்திருவிழா, சப்தஸ்தானம், திருக்கல்யாணம் ஆகிய திருவிழாக்கள் முக்கியமானவைகளாகும். 12 ஆண்டுக்கொரு முறை நடைபெறும் மகாமக பெருவிழா இத்தலத்தின் சார்பில் நடைபெறுவதொன்றாகியபடியால் இத்தலத்தின் மகிமையைச் செப்பவும் வேண்டுமோ; ஆண்டுதோறும் வருகின்ற மாசிமகதீர்த்தவாரி அன்றும், 12 ஆண்டுக்கொருமுறை குரு சிம்மராசியிலும் சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசிமக நட்சத்திரத்தில் பௌர்ணமி கூடிய நன்னாளில் நடைபெறும் மகாமகத் தீர்த்தத்தின்போதும் மகாமகக்குளத்தில் தீர்த்தமாடி ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரசுவாமியையும், ஸ்ரீ மங்களாம்பிகையையும் வழிபடுவோர் எல்லா நலன்களும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் புண்ணியங்கள் பல பெறும் பேற்றினை அடைவர்.

நா. ஈஸ்வரமுத்து எம். ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

சு. பத்மநாபன் (தலைவர்) சி. திருவேங்கடம்

## ஸ்ரீ மத்தியார்ச்சுனசுவாமி ஆலயம்

மாயூரம் வட்டம் இலுப்பூர் தஞ்சை மாவட்டம்

இத்தலம் செம்பனார்கோவில் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஏழு மைல் தொலைவில் உள்ளது. சுவாமிபெயர். மத்தியார்ச்சுனர். அம்பாள்பெயர் மரகதவல்லி. இவ் ஆலயத்திற்கு மேற்கே ஒருகல் தொலைவில் கொல்புலித்தோல் நல்லாடை என வழங்கும் ஆலயமும், கிழக்கே அரை மைலில் முனிவனங்குடி என்ற ஊரில் ஓர் சிவாலயமும் ஹரிஹரன் கூடல் என்ற ஊரில் சிவவைணவ கோவில்கள் இரண்டு எதிர் எதிராகவும் உள்ளன. மத்தியார்ச்சுனஸ்வாமி கோவில் மத்தியில் உள்ளதால் இவ் பெயர் இருக்கலாம் என்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.

M, கணபதிசுப்பு பிள்ளை
தர்மகர்த்தா

## ஸ்ரீ சோடசமகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம்

குடந்தை மாநகர்க்கு மாண்பினைத் தருவது மாமகத் தீர்த்தம். கங்கையாதி நதிகளும் வந்து நீராடி வினை தீர்த்துக் கொள்கின்றன.

மகாமகக்குளத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள பிர்ம்மதீர்த்தேச்சுரர், முகுந்தேச்சுரர், தனேச்சுரர், இடபேச்சுரர், பாணேச்சுரர், சோனேச்சுரர், தினேச்சுரர், பைரவேச்சுரர், அகத்தீச்சுரர், வியாசேச்சுரர், உமாபாகேசர், நைருதீச்சுரர், பிர்ம்மேச்சுரர், கங்கேச்சுரர், முக்தேச்சுரர், க்ஷேத்திரபாலேசர் என்னும் சோடச (பதினாறு)லிங்கமூர்த்திகள் தெரிசித்து இன்புறுவதற்குரியனவாகும். பதினாறு லிங்க மூர்த்திகள் அமைந்து இருப்பதால் அதற்கு சோடச மகாலிங்கசுவாமி எனப் பெயர் பெற்றது.;

என். இராஜகோபாலன்
நிர்வாக அதிகாரி

## திருவலம்புரிநாதசுவாமி திருக்கோயில்

### திருவலம்புரம்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - காவேரிப்பட்டினம் நெடுஞ்சாலையில் மேலையூர் கடை அணையிலிருந்து ஒரு கல் தொலைவிலுள்ளது. சைவ சமயக் குரவர்கள் நால்வரில் மூவரால் பாடப்பெற்ற இத்திருக்கோயில் சுமார் 720 ஆண்டுகட்கு முன்பு "கழுமலமுடைய ஆடல் வல்லான் பிள்ளை ஆழ்வானான திருவீதி திருவலம்புர நம்பி" என்பவரால் கட்டப்பட்டதாக கல்வெட்டு கூறுகின்றது.

ஆர். சடகோபன்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ கரும்பாயிரம்பிள்ளையார் கோவில்

கும்பகோணம் தஞ்சை மாவட்டம்

இக்கோவில் கும்பகோணம் கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதியிலுள்ளது. இந்த விநாயகருக்கு ஆதியில் வராகவிநாயகர் எனப்பெயர். ஒரு வியாபாரி விற்பனைக்கு ஆயிரம் கரும்புகளை ஏற்றிவர விநாயகர் சிறுவனாக வந்து ஒரு கரும்பு கேட்டார். வியாபாரி மறுக்கவே விநாயகச் சிறுவன் ஒரு கரும்பை உறுவி கொண்டு கோவிலுக்குள் சென்று விட்டார். வியாபாரி கோவிலுக்குள் சென்று பார்க்க சிறுவனைக்காணாது வெளியில் வந்தான். வண்டியிலிருந்த கரும்புகளும் சாறற்று சக்கையாகக் கிடந்தன. வியாபாரி சிறுவனாக வந்தவர் விநாயகர் எனத் தெரிந்து வழிபட கரும்புகள் மீண்டும் சாறு உள்ளனவாக மாறின. அன்று முதல் இவ்விநாயகருக்கு கரும்பாயிரவிநாயகர் எனப்பெயர் வழங்கலாயிற்று.

M. A. V. கணபதி சாஸ்திரிகள்
அறங்காவலர்

## ஸ்ரீ கரைவீரநாதசுவாமி ஆலயம்

நன்னிலம் வட்டம் கரைவீரன் தஞ்சை மாவட்டம்

ஆரூர் - குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரிலிருந்து சுமார் பத்து கிலோமீட்டர் தொலைவில் சாலையின் ஓரமாக அமைந்துள்ள இத்தலம் சம்பந்தர், நாவுக்கரசர் பாடியுள்ள திருத்தலங்களில் ஒன்றாகும். இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராசரைத் தரிசிக்க வேண்டியது அவசியம்.

ஆர். கோவிந்தராஜன்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ திருமூலநாதசுவாமி கோயில்

ஒரத்தநாடு வட்டம் கண்ணுக்குடி மேல்பாதி தஞ்சை மாவட்டம்

தஞ்சாவூர் to பாப்பாநாடு, மதுக்கூர் வழியாக அதிராம்பட்டினம் செல்லும் வழியில் கண்ணுக்குடி மேல்பாதி கிராமத்தில் அமைந்துள்ளது.

பக்தர்களின் துயர் துடைக்கும் வல்லமை பொருந்திய சிவாலயம். இவ் கோயில் புண்ணியதீர்த்தத்தில் நீராடி சிவனைத் தரிசித்து வலம்வருவோர் எல்லா நலன்களையும் அடைந்துய்ந்து வருவது திண்ணம்.

வெளியூர் பக்தர்கள் இவ் சிவனைத் தரிசித்து நலம் பெற விழைகிறோம்.

மு. தங்கப்பன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
சு. அய்யாவு இரா. சமுத்திரவேல் மு. சிதம்பரம் ; V. P. முருகையன்

## பெரிய நாயகி உடனுறை கயிலாயநாதர் கோயில்

### செம்பியன்மாதேவி

நாகைக்கூற்றம் — தஞ்சை மாவட்டம்

இறைவன் : கயிலாயநாதர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : நான்மறைப்பொய்கை
கற்றளிகண்டார் : செம்பியன்மாதேவி

இத்திருக்கோயில் நாகை - பாலக்குறிச்சி, திருவாரூர் - திருப்பூண்டி பேருந்து வழித்தடத்தில் உள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் திருக்கோயிலுக்கு வந்து வணங்கி இறையருள் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

ஆ. குப்புசுவாமி க. இ., ச. இ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
செ. கி. கோவிந்தராசலு (தலைவர்)
பா. வாசுதேவநாயுடு பி. சுப்பிரமணியன்

## ஸ்ரீ சாட்சிநாதசுவாமி திருக்கோயில்

### அவளிவணல்லூர்

பாபநாசம் வட்டம்] [தஞ்சை மாவட்டம்

சிவவேதியர் ஒருவர், வைசூரி நோயால் உருமாறிய தம்முடைய மனைவியை அடையாளம் காணமுடியாது, மனைவியின் சகோதரியை தன் மனைவி என நினைத்து மயங்கியபொழுது இறைவன் விண்மிசைத்தோன்றி, நீ அந்நாள் மணங்கொண்ட அவள். இவள் எனக் காட்டி சாட்சியாக நின்று அருள்பாலித்ததால் ஸ்ரீ சாட்சிநாதரெனப் பெயர்கொண்டு இறைவன் வீற்றிருக்கும் ஆலயம் இது. அப்பர் சுவாமிகளாலும், திருஞானசம்பந்த சுவாமிகளாலும் பாடல்பெற்ற இத்தலம் அம்மாப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

A. K. எழிலரசு B.A.,
நிர்வாக அதிகாரி

# இராசராசனும் கற்கோயிலும்

கி. தியாகராசன், நிர்வாக அதிகாரி,
திரு இரத்தினகிரீசுவரசுவாமி திருக்கோயில், திருமருகல்.

கோயில் வழிபாட்டினால் மனிதன் தன் மன அமைதி பெறுகிறான், மகிழ்ச்சியிலும் மூழ்குகிறான், சிந்தையும் செம்மையாகிறது. சமுதாயத்தில் வெறுப்பு இல்லாமல் அன்போடு வாழ்கிறான். இப்படி ஒவ்வொருவரும் பலனை அடைவதால் தானாகவே சமுதாயம் நல்ல சிந்தை உடையவர்களைப் பெற்று ஓங்கி வளர்கின்றது. கோயில்கள் ஏற்பட்ட தத்துவத்தினைக் கவனித்தால் சமுதாய நலத்திற்காகவே அவை உண்டானவை என்பது புலனாகின்றது. சமுதாயத்திற்கு அருள்பாலிக்குமிடம் கோயில். கோயில் பூசைகளை அதற்காகவே வகுத்தார்கள். அப்பூசைகளின் இறுதியிலே மழை பெய்யவும், வனங்கள் நிரம்பவும், அரசு ஓங்கவும், தீயவை மாயவும், பக்தி எங்கும் நிறையவும், உயிர்கள் இன்ப வாழ்வு வாழவும் பிரார்த்தனைகள் அமைவதைக் காண்கிறோம்.

தஞ்சைப் பெருங்கோயில் இராசராச சோழரால் கட்டப்பட்டது. பத்தாம் நூற்றாண்டிலிருந்த சோழமன்னர்களின் வரிசையில் அவர் முன்னிற்பவர். அவர் காலத்தில் சோழவம்சம் மிக உன்னத நிலையில் விளங்கியது. வீராதிவீரரான அவர் அநேக நாடுகளை வென்றார் எனினும் அந்த நாடுகளெல்லாம் அவர் வமிசத்தாரிடம் இல்லை. அவ்வமிசமும் இல்லை. என்றாலும் இறை வழிபாட்டிற்கென அவரால் கட்டப்பெற்ற தஞ்சைப் பெருங்கோயில் அவர் புகழை இன்றும் பறை சாற்றிக்கொண்டு வியப்பையும், விழிப்பையும் உண்டாக்கி வருகிறது. இவர் சிறந்த சிவபக்தர். தாம் வழிபடும் இறைவனுக்கு பெரியதாக லிங்கம், அம்மை, நந்தி, ஆலயம், கோபுரம் ஆகியவற்றை அமைத்தார். தமது போர் வெற்றிச் செல்வக் குவியல்களை எல்லாம் காணிக்கையாக வழங்கினார். பெருவுடையார் கோயிலில் சிற்பக்கலைகள் சீருடன் திகழவும், வண்ணக்கலை உயர்ந்து விளங்கவும், இலக்கியம் வளரவும், தேவாரப் பதிகங்கள் ஓதப்பெறவும், ஆடல் பாடல்களும் ஏனைய பல கலைகளும் செழிக்கவும் ஏற்பாடுசெய்தார். அவற்றிற்கு நிவந்தங்களை வழங்கினார். மக்கள் வாழ்விற்கு, உயிர் உணர்ச்சி செம்மையாயிருப்பதற்கு, கலைப் பண்பாட்டிற்கு, காட்சி அழகுக்கு சமுதாய நல்வாழ்வு வளர்ச்சிக்கு நடுநாயகமாக இந்நாட்டில் கோயில்களே அமைவன என்பதனை இராசராசன் நன்கு அறிந்து உணர்ந்தவர்; அதனால்தான் சமுதாய நலனுக்காக இந்தப் பேரெடுப்பான செயலைச் செய்தார்.

தமிழர் சமய மறுவாழ்வு சோழப் பெருமன்னர் காலத்து இடையீடின்றித் தழைக்கலாயிற்று. இக்காலப் பகுதிதான் தமிழரின் கோயிற்காலமும், பொருளாதார வளப்பக் காலமும் ஆகும். இக்காலத்தில்தான் தமிழர்கள் காலினும் கலத்தினும் சென்று நாற்றிசையும் வெற்றிமேல் வெற்றிகள் கண்டதும், படைகளைக் குவித்துக் கீழைக்கடலிலும், மேலைக்கடலிலும் கப்பலோட்டி சென்றதிசை எங்கும் கோயில்கள் எடுத்துக்

கலை வளர்த்துத் தமிழ் மணம் பரப்பி வாணிபம் பெருக்கித் திரைகடல் ஓடித் திரவியம் ஈட்டி, தமிழகப் பொருளாதார வளர்ச்சியைக் கண்டனர். இத்தகைய வளரும் சூழ்நிலையில் நாட்டின் பொருளாதார வாழ்வின் உயிர்நிலையாகப் பெருங்கோயில்கள் விளங்கி வந்தன. புதைந்துக்கிடந்த பொன்னும் பொருளும் திரண்டு வெளிவருவதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் இக்கோயில் திருப்பணிகள் பெருந்துணை புரிந்தன. உழைப்பால் தரிசுகள் பசுமை நிலங்களாக மாறின. காடுகள்படர்ந்த கரும் பாறைகள் கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் அழகுக்கலை மாளிகைகளாகமாறின. அவற்றைச்சூழ்ந்து மன்னர்கள் தம் அரண்மனைகளையும், மக்கள் தம் குடியிருப்புக்களையும், வணிகர் தம் அங்காடிச் சாலைகளையும் அமைக்கலாயினர். இதனால் மக்கள் வாழ்வில் புத்தம் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. கலைபயில் வாழ்வு எங்கும் மலர்ந்தது. கோயில் திருப்பணிகள் அவர்களுக்குத் தொழில் வாய்ப்பினை நல்கிக் கொண்டிருந்தன. உழைப்பையுண்ட கலையெல்லாம் கலையாயின; பொருளாயின; கதை பேசின. கலை வல்லுநர்முதல் கல் சுமக்கும் சிற்றாள்வரை பல்கிவந்த தொழிலாள மக்கள் வாழ்க்கை வளம்பெற்றனர். இங்ஙனமாக, கோயில் திருப்பணிகள் பெருநிலை அடைந்தநிலை சோழரின் ஆட்சிக் காலத்திலேயே! தஞ்சைப் பெரியகோயில் இன்றும் அதன் வரலாற்றை இறுமாந்து பேசிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் ஓவியக்கலையின் சிறந்த பகுதியைச் சோழர் காலத்தில்தான் காண்கிறோம். சோழர் காலத்து ஓவியச் சிறப்பை எடுத்து விளக்குபவை தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருப்பக்கிருகத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் காணப்படும் ஓவியங்களே. இவை கோயில்கட்டிய இராசராச சோழன் காலத்திலேயே, அதாவது பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே எழுதப்பட்டவை. மேற்குச்சுவரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்ச்சிகள் ஓவியப்படுத்தப்பட்டிருக்கிறது. மணப்பந்தரில் இருந்த சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட காட்சி இவற்றுள் ஒன்று. நடுவில் கிழ வேதியரும் மணமகனான சுந்தரரும் எதிரெதிராக நிற்கின்றனர். வேதியர் ஒருகையில் குடை, மற்றக்கையிலே ஓலை. கூட்டத்தாரின் முகங்களில் வியப்பு, நயம், கோபம் முதலிய உணர்ச்சிகள். கூட்டத்தின் வலப்பக்கம் திருவருட்டுறைக்கோயில். கோயிலினுள்ளே சிலர் விரைந்து செல்லுகின்றனர். கதையின் நாடகப்பண்பு ஒரு சிறிதும் சுவை குன்றாது இந்த ஓவியத்தில் தீட்டப்பெற்றிருக்கிறது. இந்த ஓவியத்தைப் பார்த்துத் தானே தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலின் கல்லிலே சிற்பி இந்த நிகழ்ச்சியைச் செதுக்கினான்?

கருங்கல்லே காண இயலாத தஞ்சைப் பகுதிக்கு எங்கிருந்தோ கற்களைக் கொண்டு வந்து இத்துணைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்தான் என்றால் ராசராசனை வியவாதிருக்க முடியுமோ? இவ்வாறாக கற்கோயில்களை எடுத்த மன்னன் சிவபாதசேகரன் எனப் புகழப்பெற்றான். 'சிவனது பாதங்களைத் தாங்கியவன்' என்பது இதன்பொருள்.

இராசராசசோழன் மனிதரில் உயர்ந்த மாமேதை; மன்னர் மன்னன்; குடிதழுவிய ஆட்சிமுறைக்குக் கால்கோள் செய்தவன்; பத்திமை நெறிக்குப் பகலவன்; பயிலும் கலைகளுக்கு ஓர் கொழுகொம்பு; தமிழ் நெறிக்கு ஓர் அரண்; சமயநெறியைக் காத்து நின்றவன்; வள்ளுவத்துக்கு இலக்கியமாய் வந்தமைந்த அரசன்; வெற்றி வேந்தன்; தமிழ்ப்பெரு மண்டலம் கண்டவன். இராசராசனது வாழ்க்கை பல மன்னர்களைப்பற்றி படித்து அறிந்திருக்கின்றோமே அத்தகையதல்ல. அவன் சோழநாட்டுக் குடிமக்கள் அனைவரது உடலினிடத்தும், உயிர் என இடம்பெற்றவன்; சீலத்தில் சிறந்தவனாக விளங்கினான்; எதிலும் உயர்ந்த நோக்கு உடையவன். அதனை அவன் எடுத்த தஞ்சைப் பெருங்கோயிலே பறை சாற்றுகிறது. தமிழகத்தின் புகழுக்கு தஞ்சைப் பெரிய கோயில் ஓர் அணி. காலம் கருத்தை மறந்தாலும் வரலாறு இராசராசனை மறந்தாலும் தமிழகத்தின் கலையுலகம் ராசராசனை மறக்காது; மறக்கமுடியாது. ஓயாது உலகத்தை உருமாற்றும் இயல்புடைய கால தேவதைக்குக்கூட அவனுடைய கலைக்கோயிலை உருமாற்ற முடியாது.

அதுமட்டுமன்றி தில்லையிலே உள்ள ஓர் அறையிலிட்டுச் சிறைப்படுத்திய "திருமுறைச் செல்வத்தை மீட்டுத் தமிழகத்தின் சமயநெறியை அரண்செய்த பெருமை ராசராசனுக்கே உண்டு.

வாழ்க ராசராசப் பெருமன்னன் புகழ் பெயர்!


## திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

**எண்கண்**

**நன்னிலம் வட்டம்** **தஞ்சை மாவட்டம்**

திருமுருகப்பெருமான் சிறுவனாக இருக்கும்போது சிருஷ்டிகர்த்தா பிர்மாவுக்கு 'ஓம்' எனும் பிரணவ மந்திரம் தெரியாததால் சிருஷ்டித் தொழிலையும் வாங்கிக் கொண்டு சிறையில் அடைத்துவிட்டார். சிவபிரானுக்கே மந்திரம்போதித்து தகப்பன் சுவாமியானார். தனது கருணை விழியால் பிர்மாவை விடுதலைசெய்தார். பிர்மா சிருஷ்டித் தொழில் கிடைக்கவேண்டி தவம்செய்ய இவ்வூரில் சகல ஆன்மாக்களும் உய்யும் பொருட்டு வந்த எம்பிரான் பிர்மாவுக்கு சிருஷ்டித்தொழிலளித்து பிரமபுரீஸ்வரர் ஆனார். சிக்கலில் கட்டைவிரலையும், எட்டுக்குடியில் கண்ணையும் இழந்த சிற்பியினால் வடிக்கப்பட்ட மயிலேறும் வேலவன் சிலா விக்ரகம் பூர்த்தியாகும்போது சிற்பிக்கு கண்திறந்த மாபெறும் பெருமை படைத்தது இத்தலம். ஸ்ரீ அருணகிரிநாதரால் பாடல்பெற்றது.

M. கிருஷ்ணசாமி
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ ஆமருவிப்பெருமாள் திருக்கோயில்

**தேரழுந்தூர் (திருவழுந்தூர்)**

*மாயூரம் வட்டம்* *தஞ்சை மாவட்டம்*

இத்தலம் 108 திருப்பதிகளில் ஒன்றாகும். கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவதரித்த தலமாகும். ஸ்ரீ ஆமருவியப்பனுக்கு "கோஸிகன்" தேவாதி ராஜன் என்னும் திருநாமங்களும் உள. கருடனும், அகஸ்தியரும், காவேரித்தாயாரும் மார்க்கண்டேயர், பிரகலாதன் எழுந்தருளி இருப்பதும், கம்பர் சிலை கோயிலில் எழுந்தருளி இருப்பதும் புராண வரலாறாகும்.

S. சுப்பையா
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
T. S. அழகப்பன் (தலைவர்) G. ராமச்சந்திரன்
S. இராமமூர்த்தி M. தங்கையன் M. பெரியசாமி

## ஸ்ரீ தாளபுரீஸ்வரசுவாமி ஆலயம்

சீர்காழி வட்டம் திருக்கோலக்கா தஞ்சை மாவட்டம்

இறைவன் பெயர் : தாளபுரீஸ்வரர்
இறைவி பெயர் : ஓசைநாயகி

இத்திருத்தலம் சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கி. மீட்டர் தென் கிழக்கில் உள்ளது. திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் அளித்தும் அந்த தாளத்திற்கு இறைவியார் ஓசை உண்டாக்கியும் தந்தருளிய தலம் மூவராலும் பாடல் பெற்றது.

சித. இராமநாதன் செட்டியார், M. A., B. com.
அறங்காவலர்

## திருச்சாய்க்காடுடையார் கோயில்

காவிரிப்பூம்பட்டினம் (அ. நி.) சாயாவனம் சீர்காழி வட்டம்

மாயூரத்திலிருந்தும், சீர்காழியிலிருந்தும் பன்னிருகல் தொலைவில் உள்ள இத்தலம் புகழ்பெற்ற பூம்புகாரின் ஒரு பகுதி. காசிக்கிணையானது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர் பாடியது. அறுபத்து மூவருள் ஒருவரான இயற்பகை நாயனர் விடுபேறடைந்த தலம். இங்கு எழிலுடன் வீற்றிருக்கும் வில்லேந்திய வேலவரை வாழ்வில் ஒருமுறையேனும் அனைவரும் வந்து வணங்கி வழிபட பிறவிப்பயன் எய்தலாம்.

சிலம்பும் மேகலையும் சிறப்புடன் போற்றும் காவல் தெய்வமான ஸ்ரீ சம்பாதி அம்மன் திருக்கோயில் இத்தலத்தின் தென்பாலுள்ளது.

இறைவன் திருநாமம் : ரத்னச்சாயாவனநாதர். இறைவி திருநாமம்: கோஷாம்பாள்.

கி. கஸ்தூரிரங்கன் பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
K. V. சுப்பிரமணியம் B.Sc., Hon's (தலைவர்) டி. பி. சுப்பிரமணிய பிள்ளை
அ. செங்குட்டுவன் எஸ். சம்பந்தம் பிள்ளை எம். ராமசாமி

## ஸ்ரீ பல்லவனேசுவரசுவாமி கோயில்

காவிரிப்பூம்பட்டினம் ( அ. நி. ) பல்லவனம் சீர்காழி வட்டம்

சீர்காழியிலிருந்தும் மாயூரத்திலிருந்தும் பன்னிருகல் தொலைவில் உள்ள இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. இறைவன் திருநாமம் பல்லவனநாதர். இறைவி திருநாமம் சௌந்திரநாயகி. திருக்குளம்: ஜானவி தீர்த்தம். அகத்திய முனிவரால் தோண்டப்பட்டதாக வரலாறு. காலவரிஷி பூசித்ததலம். திருபட்டினத்தாருக்காகத் தனி சன்னதி இங்குள்ளது. ஆடித்திங்களில் அவருக்கெடுக்கப்படும் விழா மிக்க சிறப்புடையது.


கி. கஸ்தூரிரங்கன் B. A.,
நிர்வாக அதிகாரி,

அறங்காவலர்கள் :
N. கணேசன் (தலைவர்) வே. இராமானுஜம்
வி. ராம. சோம. கருப்பன்செட்டியார்

திருவாவடுதுறை ஆதீனம்

## ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில்

மாயூரம் தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி சந்திப்பிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல்பெற்றது. இறைவன் பெயர் மயூரநாதர். இறைவியின் பெயர் அபயாம்பிகை. பார்வதி மயிலுருக்கொண்டு சிவனைப் பூசித்த இடம் இத்தலம். ஆண்டவனும் மயிலுருக்கொண்டு அருளிய இடம். இங்கு துலா ஸ்நானம் செய்தல் மிகவும் விசேடமானது.

ஆண்டுதோறும் வைகாசித்திங்களில் வசந்தோற்சவமும் ஐப்பசி 30 நாட்களிலும் துலா உற்சவமும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின்கீழ் உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ வடவாரண்யேசுவரர் திருக்கோயில்

## திருவாலங்காடு

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம்—கும்பகோணம் பெரு வழியில் மாயூரத்திலிருந்து 10கல் தொலைவிலும், மாயூரம்-கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் நரசிங்கன் பேட்டை நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவிலும் உள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தை வைப்புத் தலமாக வைத்துப் பாடியுள்ளார். ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகபரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சிக்கு உட்பட்டது.

இக்கோயில் சிறியதாயினும் மிகுந்த இயற்கை எழிலோடு பொருந்தி அடியார்களைக் கவர்ந்து ஈடுபடுத்தக்கூடிய சிறப்பு வாய்ந்ததாகும்.

# ஸ்ரீ பார்வதீஸ்வரசுவாமி திருக்கோயில்

## இஞ்சிக்குடி

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்த திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப் பாதையில், பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே அரைகல் தொலைவில் உள்ளது. சந்தனமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டுள்ள இத்தலத்தைக் குறித்து அருணகிரிநாதரும், இரட்டைப் புலவர்களும் பாடியுள்ளார்கள். சந்தன மரங்கள் நிறைந்திருந்ததால் இவ்வூருக்கு ''கந்தவனம்'' என்ற மறு பெயருமுண்டு. பார்வதிதேவியார் பரமேஸ்வரனைக்குறித்து தவக்கோலத்தில் இங்கு அமர்ந்திருக்கும் காட்சி வெகு அழகுடையதாக இருக்கிறது.

இத்தலத்தில் சிவபெருமானை வேண்டி தவமிருந்த வேடுவருக்கு சிவ ராத்திரி நாலாம் காலத்தில் சுவாமி ரிஷபாரூடராய் காட்சி கொடுத்தருளியிருக்கிறார். இங்கு வைகாசி விசாகத் திருவிழா பிரம்மோற்சவமாக ஆண்டு தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மாயூரம் - திருவாரூர் - நன்னிலம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதியும் உண்டு.

சி. வி. சிகிவாகனன் நாயர் பி. எஸ்ஸி,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

எஸ். நடராஜன் (தலைவர்) எஸ். இராமநாதன்
கவி. தமிழ்நேசன் என். இராமநாதன் ஜி. கிருஷ்ணமூர்த்தி

# பிறவி மருந்தீசப்பெருமான் திருக்கோயில்

## திருத்தருப்பூண்டி

தஞ்சை மாவட்டம் (தொலைபேசி எண் 392)

பெரியநாயகி அம்மையுடன் அருள் வழங்கும் பிறவி மருந்தீசப்பெருமான். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெரும் சிறப்புக்களுடன் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். திருத்தருவாகிய ''வில்வம்'' தலமரமாக அமைந்துள்ளதால் திருத்தருப்பூண்டி என்ற பெயருடன் இத்தலம் இலங்குகிறது. இத்திருக்கோயிலில் அமைந்துள்ள தியாகராசப்பெருமான், மரகதலிங்கம், பஞ்சமுகவாத்தியம் முதலியவைகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவைகளாகும். சித்திரைத் திங்களில் ஆண்டுதோறும் மிகச் சிறப்புடன் பெருந் திருவிழா நீண்ட நெடுங்காலமாக நிகழ்ந்து வருகின்றது.

பொதுமக்களின் நன்மைக்காக, திருமண மண்டபம் ஒன்று சிறந்த முறையில் கட்டப்பெற்று குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மேல் நிலை நீர்த்தொட்டி கட்டுவிக்கப்பட்டு, குடிநீரும் வழங்கப்படுகிறது.

கே. வைத்தியநாதன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

என். வெங்கடாசல ராஜா (தலைவர்) டி. எஸ். கல்யாணசுந்தரம்
என். தர்மலிங்கம் என். குப்புசாமி B A., B. L., ஆர். தர்மலிங்கம்

## ஸ்ரீ சந்தானராமசுவாமி வகையரு ஆலயம்

மன்னார்குடி வட்டம் — **நீடாமங்கலம்** — தஞ்சை மாவட்டம்

நீடாமங்கலம், தஞ்சை - நாகூர் இருப்புப்பாதையிலுள்ளது. தஞ்சை, குடந்தை, திருவாரூர், மன்னார்குடி முதலிய இடங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு.

தஞ்சையை ஆண்டுவந்த ராஜராஜ ஸ்ரீ பிரதாபசிம்ம மகாராஜாவுக்கும், யமுனாம்பாள் பாய் சாகேபுக்கும் புத்திரனில்லாக் குறையைப் போக்கியமையால் 'ஸ்ரீ சந்தானராமன்' என்கிற சிறப்புப் பெயர்கொண்ட தலம். புத்திரப்பேறு வேண்டுபவர் இங்குள்ள திருக்குளத்தில் நீராடி பக்தியுடன் வழிபட்டால் புத்திரப்பேறு உண்டாகும். ஷை மன்னரால் இவ்வாலயமும், இதற்கு வடகிழக்கே ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயமும் கி. பி. 1761-ல் கட்டப்பட்டன. இங்குள்ள பாணலிங்கம், வடநாட்டுத் துறவி ஒருவரால் நர்மதையிலிருந்து கொண்டு வரப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ சந்தானராமசுவாமிக்கு ஸ்ரீராமநவமி பிரம்மோத்சவமும், ஸ்ரீ காசி விசுவநாதசுவாமிக்கு வைகாசி விசாக உற்சவமும் நடைபெறுகின்றன.

இக்கோவிலில் திருமணமண்டபம் புதிதாக கட்டப்பட்டு திருமண நாள் 1-க்கு ரூபாய் 25. கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**கோ. சஞ்சீவி**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
ந. சோமசுந்தரம் M. L. A., (தலைவர்)
ஆ. சுப்ரமணியன் சே. சந்தானராமன்

## ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம்

**நீடாமங்கலம்**

மன்னார்குடி வட்டம் — தஞ்சை மாவட்டம்

தஞ்சை, கும்பகோணம், திருவாரூர், மன்னார்குடி இவைகளிலிருந்து பஸ் வசதியுள்ள தலம் நீடாமங்கலம். இந்த ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வூர் நாயுடு வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு என்பவரால் கட்டப்பட்டு நிலம், வீடு முதலியவைகளும் பராமரிப்புக்காக விடப்பட்டுள்ளது. இது தென்கலை சம்பிரதாயம் உள்ள ஆலயம். மூலவர் ஸ்ரீ லட்சுமிநாராயணர் உத்ஸவர் ருக்மணி, சத்யபாமையுடன் கூடிய ஸ்ரீ ராஜகோபாலர்.

ஐப்பசி மாதத்தில் மூல நட்சத்திரத்தில் ஸ்ரீ மணவாள மாமுனிகள் உற்சவமும், சித்திரைமாதம் அட்சய திருதியையும் விசேஷமானது. மற்றப்படி நவராத்திரி, தனுர்மாத விழா முதலியவைகளும் உண்டு.

**கோ. ஸ்ரீநிவாசன்**
பரம்பரை தர்மகர்த்தா

**கோ. சஞ்சீவி**
நிர்வாக அதிகாரி


# திருப்பந்துருத்திக் கல்வெட்டுச் செய்தி


கு. வேலாயுதம்,
புலவர், மூன்றும் ஆண்டு மாணவர், தருமையாதீனத் தமிழ்க்கல்லூரி,
தருமபுரம், மாயூரம்.


இத்திருக்கோயிலில், பிற்காலச் சோழ மன்னர்களில் முதலாம் ஆதித்தசோழன், முதலாம் பராந்தகன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், திரிபுவனச் சக்கரவர்த்தி, இராச இராசசோழன் இவர்கள் காலங்களிலும் பாண்டிய மன்னரில் சடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவர் காலத்திலும், விசயநகர பரம்பரையினரில் வீரபூபதி உடையார், விசயராச மகாராயர், அச்சுததேவர்காராயர் இவர்கள் காலங்களிலும், மதுரை நாயக்கரில், விசுவநாத நாயக்கர் மகன் வீரப்ப நாயக்கர் காலத்திலும், தஞ்சை நாயக்கரில் அச்சுதப்பநாயக்கர் காலத்திலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

**இறைவரின் திருப்பெயர்கள் :**

இந்தக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர், திருத்துருத்தி மகாதேவர், பொய்யிலி ஆண்டார், புஷ்பவனப்பெருமான், திருப்பூந்துருத்தி நாயனார், புஷ்பவனநாதர் என்னும் திருப்பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர். இப்பெயர்களுள் திருத்துருத்தி மகாதேவர் என்பது முதலாம் ஆதித்தன், முதற் பராந்தகன் இவர்கள் கல்வெட்டுக்களிலும்; பொய்யிலி ஆண்டார் என்பது முதலாம் இராசராசன் கல்வெட்டிலும், புஷ்பவனப்பெருமான் என்பது சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவர் காலத்துக் கல்வெட்டிலும், திருப்பூந்துருத்தி நாயனார் என்னும் பெயர் சகம் 1844-ல் ஏற்பட்ட விசயராச மகாராயர் காலத்துக் கல்வெட்டிலும், புஷ்பவனநாதர் என்னும் பெயர், தஞ்சாவூரை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் காலத்துக் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

**இறைவியாரின் பெயர் :**

இறைவியார், திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் என்னும் திருப்பெயரால் மூன்றும் குலோத்துங்கசோழன் கல்வெட்டிலும், அழகாலமர்ந்த அம்மை என்ற திருப்பெயரால் தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் கல்வெட்டிலும் குறிக்கப் பெற்றுள்ளனர்.

**திருவீதிக்கு எழுந்தருளும் இறைவர் இறைவியாரின் திருப்பெயர்கள் :**

இறைவர், நாயகர் என்னும் திருப்பெயராலும், இறைவியார், மரகத நாச்சியார் என்னும் திருப்பெயராலும் கூறப்பெற்றுள்ளனர். இச்செய்தி, சுந்தரபாண்டிய தேவர் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

**அறியப்படும் திருமேனிகள் :**

முப்புரங்களை எரித்த கோலத்துடன் இருக்கும் திரைலோக்கிய சுந்தரம், அமரகண்யார்ச்சிதர் என்பவைகளாம். இவைகளுள் திரைலோக்கிய சுந்தரத்தைப்பற்றி மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மரின் இருபதாம் ஆண்டுக் கல்வெட்டும், அமரகண்யார்ச்சிதரைப்பற்றி மேற்குறித்த பரகேசரிவர்மரின் முப்பத்துமூன்றும் ஆண்டு கல்வெட்டும் தெரிவிக்கின்றன. அமரகண்யார்ச்சிதர் வெள்ளியால் செய்யப்பெற்றவர். இவரை இக்கோயிலில் எழுந்தருளுவித்துப் பொய்கை நாட்டு பிர்மதேயம் கூத்தன்குடி

சபையாரிடம் நிலம்வாங்கி, அத்தேவர்க்கு உச்சியம்போது வழிபாட்டிற்கு அளித்தவர் பரகேசரி மூவேந்த வேளாராகிய பெருமான் பள்ளி என்பவராவர்.

**திருவிழா :**

கார்த்திகைத்திருவிழா; சந்திவிழா என்பன. கார்த்திகைத் திருவிழா என்பது திருத்துருத்தி மகாதேவர்க்குக் கார்த்திகை மாதத்தில் நடைபெற்றுவந்த விழாவாகும். தென்கரைப் பாம்புணிக் கூற்றத்து அரசூருடையான் ஈராயிரப்பல்லவரையனாகிய மும்முடி சோழப் பேரரசன் இவ்விழாக் கொடியேற்றத்திற்கும் இவ்விழாவிற்கு வரும் சிவயோகிகளுக்கும், தபசிகளுக்கும் உணவளித்தற்கும் ஆகத் திருத்துருத்திச் சபையாரிடம் முதலாம் இராசராச சோழன் காலத்தில் வேண்டும் பொருள் கொடுத்து இருந்தான்,

**சந்திவிழா :**

இறைவியார்க்கு நடந்தருளிய இவ்விழா வைப்பற்றிப் பரகேசரிவர்மரின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

**இவ்வூரைத் தன்னகத்தே கொண்டுள்ள நாடு :**

இவ்வூர் முதற் பராந்தகன் காலத்தில் ஆர்க்காட்டுக் கூற்றத்துத் தேவதானம் திருத்துருத்தி என்றும். முதலாம் இராசராசசோழன் காலத்தில் பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பிர்மதேயம் திருத்துருத்தி என்றும், சுந்தர பாண்டியதேவர் கல்வெட்டில் பாண்டி குலபதி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்துத் திருத்துருத்தி என்றும் கூறப்பெற்றுள்ளது. பாண்டிகுலாசனி என்பது பாண்டியர் குலத்திற்கு இடியை ஒத்தவன் என்றுபொருள். இது முதலாம் இராசராசனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்று.

**பிறகுறிப்புக்கள் :**

திருப்பூந்துருத்தி என்னும் இவ்வூர் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், சுந்தரசோழனாகிய இரண்டாம் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் குலோத்துங்கன், முதலான சோழ மன்னர்கள் காலங்களில், திருத்துருத்தி என்றே குறிக்கப்பெற்றுள்ளது. கோச்சடைய பன்மரான திரிபுவன சக்ரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர்காலத்துக் கல்வெட்டில்தான் முதன் முதல் திருப்பூந்துருத்தி என்னும் பெயர் காணப்படுகிறது. இங்குள்ள விசயநகர வேந்தர் முதலானோர் கல்வெட்டுக்களிலும் திருப்பூந்துருத்தி என்ற பெயரே காணப்படுகின்றது இவ்வூரில் சுந்தரபாண்டிய தேவன் காலத்தில் ஏழுலகமுடையார் திருவீதி என்ற பெயரால் புதிதாக ஒருவீதி ஏற்படுத்தப்பட்டது. நாயர் மண்டபத்து அருகாலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு அம்மண்டபம், விசுவநாதநாயக்கர் மகன் வீரப்ப நாயக்கரின் நன்கொடையாக சகம் 1487 குரோதன ஐப்பசி மாதத்தில், சிங்கப்பரால் கட்டப்பெற்றுள்ளதை உணர்த்துகின்றது, ஒரு அளவு கருவிக்கு இராசகேசரி என்னும் பெயர் வைக்கப்பெற்றிருந்தது. ஆர்க்காட்டுக்கூற்றத்தில் சிற்றரசூர் என்னும் ஊர் இருந்தது. இப்பூந்துருத்தி உடையார் கோயிலின் முதற்கோபுரக் கல்வெட்டுப் பகுதி, இராசராச விசயம் படிப்பதற்கு நாராயணன் பட்டாதித்தனுக்கு நிலம் அளந்ததைக் குறிப்பிடுகிறது. இந்நூல் இதுபொழுது கிடைத்திலது. இது தஞ்சைப் பெரிய கோயிலில் நடிக்கப்பட்டுவந்த இராசராசேச்சுவர நாடகத்தினும் வேறுபட்டதாகும். இந்த ராஜராஜ விசயம், முதலாம் இராசராச சோழன் காலத்தில் அவனுடைய ராணுவ படையின் அருஞ் செயலைப்பற்றியது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

இக்கோயிலுக்கு நுந்தா விளக்கின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் திருத்துருத்திச் சபையாரிடமே கொடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறாகத் திருப்பூந்துருத்திக் கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

வாழ்க சோழ மன்னர்கள் தம்புகழ்.

---


தருமை ஆதீனம்

# ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

**வைத்தீஸ்வரன்கோயில்,** தஞ்சை மாவட்டம்.

" பிரிவிலா அடியார்க்கு என்றும்
வராத செல்வம் வருவிப்பான் " என்றும்

" மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் " என்றும்

**அப்பர்பெருமானால் சிறப்பித்துப்பாடப்பெறும் சிவபெருமான்
வைத்தியநாதராக வீற்றிருக்கும் பெருந்தலம்.**

அம்மை : தையல்நாயகி
தீர்த்தம் : சித்தாமிர்தம்
முருகன் : செல்வமுத்துக்குமாரர்
தலவிருட்சம் : வேம்பு அங்காரகத்தலம்

**திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய
தெய்வத்தமிழ் பெற்றதலம்**

தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்
சிவஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள், குமரகுருபரர்,
படிக்காசுப் புலவர் மூவரும் பாடிய
பக்தி இலக்கியங்கள் இத்தலத்திற்கு உண்டு

**முழுதும் புதுப்பிக்கப்பெற்றது**

**2-7-69-ல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்விக்கப்பெற்றது**

# திருவாஞ்சிநாதசுவாமி

# திருக்கோயில்

## திருவாஞ்சியம்

நன்னிலம் வட்டம்

தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்ருகும். திருமகளை வாஞ்சித்து (அடைய விரும்பி) திருமால் பூசித்த தலமாதலால் இத்தலம் 'திருவாஞ்சியம்' எனப் பெயர் பெற்றது. நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 6கல் தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே 4கல் தொலைவிலும் இத்தலம் உள்ளது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் பாடல்பெற்றது இத்திருக்கோயில். இத்தலத்து முருகனை அருணகிரியார் பாடியுள்ளார். இறைவன் பெயர்: வாஞ்சிநாதர்; இறைவியின் பெயர்: வாழவந்தமங்களநாயகி. இங்கு 27கல்வெட்டுக்கள் உள்ளன. காலனுக்கு (எமன்) தனிச்சந்நிதி இங்கு பார்க்கவேண்டியது.

ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் 6ந்தேதி முதல் 9ந்தேதிமுடியவும் பங்குனி மாதத்தில் 6ந்தேதி முதல் 9ந்தேதி முடியவும் இறைவன் திருமேனியில் காலைக்கதிரவன் ஒளிவிழுவது குறிப்பிடத்தக்கது. கார்த்திகை ஞாயிறு (ஒவ்வொரு ஞாயிறும்) பக்தகோடிகள் குப்தகங்கையில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்வது மிகவும் சிறப்பானதொன்று.

கு. கல்யாணம் M. A.
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

E. G. பாலசுப்பிரமணியம்
வி. கோபாலகிருஷ்ணன்
பொ. கிருஷ்ணமூர்த்தி
N. சாம்பசிவசர்மா

---

தருமை ஆதீனம்

# ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி

# தேவஸ்தானம்

## திருப்பனந்தாள்

(தஞ்சை மாவட்டம்)

'தாடகை' என்ற சிவபூசைச் செல்வியின் திருமாலையை முடிசாய்த்து ஏற்ற முதல்வன் அருணஜடேசப் பெருமான். பின்னர், எண்ணற்ற படைகளுக்கெல்லாம் தலைநிமிராமல்

'குங்குலியக்கலய நாயனர்'
பேரன்பிற்குத் தலைநிமிர்ந்த அருளாளன்!

இறைவன் : செஞ்சடையப்பர் இறைவி : பெரியநாயகி
தலவிருட்சம் 'பனை' என்பதனுல் 'பனந்தாள்'
எனப்பெயர் பெற்றது.

திருஞானசம்பந்தர் தெய்வத்தமிழ் பெற்றது.

இத்தலம்
கும்பகோணம் — அணைக்கரைப் பேருந்துப் பெருவழியில்
உள்ளது.

## திரு கொழுந்தீஸ்வரர் ஆலயம்

மன்னார்குடி வட்டம் கோட்டூர் தஞ்சை மாவட்டம்

இந்த ஆலயம் மன்னார்குடி திருத்துறைப்பூண்டி கற்சாலையில் 14 கிலோ மீட்டரில் உள்ளது. சுவாமி பெயர்: திருக்கொழுந்தீச்வரர். அம்பாள் பெயர்: தேனம்பிகை. ஸ்தல விருட்சம்: வன்னிமரம். சந்நிதி: ஆலயமும், சிவதீர்த்தமும் மேற்கு நோக்கியும், அம்பாள் கிழக்கு நோக்கியும் உள்ளது. தீர்த்தமும், மூர்த்தமும் சிறப்புடையது. தேவாரப் பதிகம்: திருஞானசம்பந்தர் அருளியது. ஊர்த்தொகை: ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், உமாபதி சிவாச்சாரியார், சேக்கிழார் முதலியோர்களால் ஊர்த்தொகையில் பாடப்பெற்றுள்ளது.

சிறப்பு: சித்திமுத்திகளில் சிறந்த இடம் வன்னிவனம் (கோட்டூர்) என்று காசிப முனிவர், உரோமேசர், நாரதர் முதலியோர் கூறியுள்ளனர். பிர்மா, இந்திரன், ஐராவதம், அரம்பை முதலியோர்கள் தெரிசித்து அருள் பெற்ற இடம்.

ஆ. சுவாமிநாதன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

கு. பாலகிருட்டினன் M. L. A. (தலைவர்)
V. நடராஜன் மா. அண்ணாமலை
இரா. கிருட்டினமூர்த்தி S. கோவிந்தராதமான் சுத்தியார்

## ஸ்ரீ ஹரசாபவிமோசனப்பெருமாள் திருக்கோயில்

கண்டியூர் - தஞ்சாவூர் வட்டம்

சிவன் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் பிரமன் கோயிலை அடுத்துத் தஞ்சை திருவையாறு பெருஞ்சாலையை ஒட்டிக் கிழக்குப் பார்த்த சந்நிதியையுடைய இத்திருக்கோயில் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. பிண்டியார் மண்டை ஏந்திப் பிறர் மனை திரிதந்து உண்ணும் உண்டியான் சாபம் தீர்த்து ஹர சாப விமோசனப் பெருமானாகத் திருமால் காட்சி வழங்குகிறார். சிவன் கோயிலுக்கு வெகு பிற்பட்ட காலத்திலேயே எடுக்கப்பட்ட இக்கற்றளி செய்யப்பட வேண்டிய திருப்பணிகள் சிலவற்றை எதிர்நோக்கியுள்ளது. பாடல் பெற்ற விண்ணகரமும் சிவாலயமும் பிரமன் கோயிலை இடையே கொண்டு அருகு அருகே இருத்தல் கண்டியூரின் தனிச்சிறப்பாகும்.

K. கந்தசாமி
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ பக்தவத்ஸலப்பெருமாள் திருக்கோயில்

### திருக்கண்ணமங்கை

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

*108 திவ்யத் தலங்களில் இத்திருத் தலமும் ஒன்றாகும். ஆரூர் - குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரில் இருந்து மேற்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வாலயத்தின்கண் உள்ள பட்சிராஜன் மிகுந்த வரப்பிரசாதி. திருமங்கையாழ்வார் இவ் வாலயத்தின் எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் என்பவரும் இவ்விறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.*

*இங்கு கோயில் கொண்டு கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானின் மூலத்தானத்திற்குப் பெரும்புறக் கடல் என்பதும் உற்சவ மூர்த்திக்கு பக்தர் - ஆவி, பக்தவத்ஸலன் என்பதும் திருநாமங்களாகும்.*

எம். ஆர். சங்கரன் பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி திருக்கோவில்

கும்பகோணம் ✳ தஞ்சை மாவட்டம்



சோழமன்னர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் மிக வனப்புடையது. வைணவத் திருத்தலங்களான 108 திருக்கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாகும். பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய எழுவரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் திருமழிசையாழ்வார், வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி உத்தானசயனத்தில் சேவை சாதிக்கிறார்.

சித்திரை மாதத்தில் சைத்ரோத்சவம், வைகாசி மாதத்தில் வசந்த உற்சவம், ஆடி மாதத்தில் ஜேஷ்டாபிடேகம், மார்கழி மாதத்தில் திரு அத்யாயன உத்சவம், மாசிமாதம் மக உத்ஸவமும் தெப்பத்திருநாளும், பங்குனிமாதம் ஸ்ரீ கோமளவல்லித் தாயார் பிரமோத்சவமும் சிறப்புற நடை பெறுகின்றன, ஆலய நிதியில் இருந்து ஏழைகளுக்கு தயிரன்னம் வினியோகம் உண்டு. கோயிலின் சார்பில் ஒரு பிரபந்த பாடசாலையும் நடைபெறுகிறது.

M. செல்லப்பெருமாள் B. COM., F.S.A.A. (India.)
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

கே. ராகவச்சாரியார் (தலைவர்) கே. சுவாமிநாதய்யர்
நவநீதகிருஷ்ணன் B.A., B.L., R. மாதவராவ்

# திரு பிரமபுரீசுவரசுவாமி ஆலயம்

## அம்பல்

நன்னிலம் வட்டம் : : தஞ்சை மாவட்டம்

முன்பொருசமயம் " யானே பிரமம் " எனப்பிரமனும், விட்டுணுவும் ஒருவரோடொருவர் வாதிட்டுக்கொண்டனர். இவர்கள் செருக்கை அடக்க சிவபெருமான் " நீவிர் என் அடி முடிகளைக்கண்டு வருவீராயின் பூசனைக் குரியவர்களே " எனப் பகர்ந்தார். விட்டுணு பன்றியுருக்கொண்டு பாதாள உலகம் சென்று அடிகாணாது நாணித்திரும்பினார். பிர்மா அன்னப்பறவை உருவெடுத்து முடிகாண வானத்தில் பலகாலம் பறந்து சிவன் சென்னி காணாது உபாயத்தால் வெல்லக்கருதி. திரும்பி வந்து " உம்முடியைக் கண்டேன் " எனக்கூறி சிவன் தலையினின்று நழுவி கீழ்நோக்கி வந்து கொண்டிருந்த தாழம் பூவை பொய் சாட்சியம் சொல்லச்செய்தார். உண்மை உணர்ந்த அரன், பிரமன் கொண்ட அன்னவுரு நீங்காதிருக்கச் சபித்தார். அதனால் நான்முகன் அகந்தை நீங்கி அரனைத்துதித்து சாப விமோசனம் வேண்டினார். மனமுருகி எம்பெருமான் பிரமனிடம் புவியின் கண் அமைந்த புன்னாகவனத்தை (திருஅம்பர்) அடைந்து தவம் செய்ய அருளினார். அதன் படி அயனும் புன்னாகவனம் அடைந்து பதினாயிரம் தேவவருடம் தவம்செய்ய சிவபெருமானும் காட்சி தந்தார். அன்ன வடிவம் கொண்ட பிரமன் பொய்கை ஒன்றை ஏற்படுத்தி நீராடி பரிவாரங்களோடு கூடிய இறை வனையும், இறைவியையும் பூசித்து வணங்கி அன்ன வடிவம் நீங்கி பழைய வடிவம் பெற்று மகிழ்ந்தார். இது தலவரலாறு.

திருஞானசம்பந்தப் பெருமானின் பாமாலை கொண்டதும், சோமாசி மாற நாயனார் அவதரித்ததுமான இத்தலம் திருமுறையில் 55 வது திருத்தல மாக வைக்கப்பெற்றிருக்கிறது.

கோச்செங்கட்சோழன் இங்கு இறைவனுக்கு மாடக்கோயில் அமைத் தான். மாயூரம் - திருவாரூர் புகைவண்டி வழியில் பூந்தோட்டம் நிலையத்தி னின்று கிழக்கே 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அழகிய சூழலில் அமைந்துள்ள ஆலயத்திற்கு வந்து வம்புவனப் பூங்குழலாளுடன் இயைந்து அருள்புரியும் பிரமபுரீசனை வணங்குவோர் என்றும் மன அமைதியும் பிறவிப்பயனும் பெறுவர்.

சுவாமி வேங்கடாசலம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

S. குருமூர்த்தி (தலைவர்) து. கனகசபைபிள்ளை,
பி. மணிவண்ணன், K. பக்கிரிசாமி, எம். சிவராமன்.

# ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்

## வீரசிங்கம்பேட்டை

### தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் தஞ்சையை ஆண்ட சோழ மன்னன் திரு. ராஜேந்திரனால் கட்டப்பட்டது. இது குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் ஏகாந்தமான இடத்தில் அமைந்துள்ளது. மேலும் சப்தஸ்தலம் என்று புகழ்பெற்ற ஏழு ஊர்களின் இடையில் அமைந்துள்ளது. இதன் கிழக்கே நால்வரில் மூவரால் பாடப்பெற்ற சப்த ஸ்தலங்களில் சிறப்பான ஸ்தலமாகிய திருச்சோற்றுத்துறையும், மேற்கே அட்டவீரட்டத்தில் ஒன்றானதும் சப்தஸ்தலத்தில் ஐந்தாவது இடத்தைப் பெற்றதுமான கண்டியூரும் அமைந்துள்ளது. இது திருவையாறு பாபநாசம் பஸ்மார்க்கத்தில் மூன்றுவது மைல் தொலைவில் உள்ளது. தஞ்சையிலிருந்து டவுன் பஸ் வசதியும் உண்டு.

இது ஒரு பிரார்த்தனை ஸ்தலமாகும். இதற்கு மார்கழி மாதம் மூன்று நாட்கள் தனி உற்சவமும் பங்குனிமாதம் பத்து தினங்கள் சிறப்பான உற்சவமும் நடத்தப்பெறும். ஆவணிமாதம் ஞாயிற்றுக்கிழமைகள் விசேஷ நாட்களாகும். பக்தகோடிகள் எப்பொழுதும் வந்து சென்று அம்பாளின் அருளைப் பெற்றவண்ணமிருப்பார்கள்.

V. சுந்தரராஜன் M. A.
*நிர்வாக அதிகாரி*

# திரு நவநீதேசுவரர் ஆலயம்

**சிக்கல்** தஞ்சை மாவட்டம்

| | |
|---|---|
| இறைவன் : | திரு நவநீதேசுவரர் (பால்வெண்ணைநாதர்) |
| இறைவி : | திரு சத்தியாதாட்சி (வேல்நெடுங்கண்ணி) |
| சிறப்பு மிக்கவர் : | திரு சிங்காரவேலவர் |
| தலவிருட்சம் : | மல்லிகை |
| தீர்த்தம் : | க்ஷீரபுஷ்கரணி (பாற்குளம்) |

இத்திருக்கோயில் திருவாரூர் - நாகபட்டினம் பெருவழியிலுள்ளது. கோச்செங்கட்சோழனால் 4ம் நூற்றுண்டில் கட்டப்பெற்ற மாடக்கோயில். அருணகிரிநாதர், சம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்றது இத்தலம்.

தில்லைத்தலம்போல் இக்கோயிலின் வடக்குப்பிரகாரத்தில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பெருமாளின் பெயர்: திரு கோலவாமனப் பெருமாள். பிரகாரம் வலம் வருவோர் சிவன் விஷ்ணு இரு சந்நிதிகளையும் கண்டு தரிசித்துவர ஏதுவாய் அமைந்துள்ளது ஒரு சிறப்பு.

இத்தலத்தில் ஐப்பசி மாதத்தில் சிறப்பு உற்சவம் கந்தர் சஷ்டி விழாவும், சித்திரையில் பிர்மோற்சவமும், வைகாசி விசாகத்தில் தெப்பத் திருவிழாவும், பெருமாளுக்கு மார்கழியில் 'பகல் பத்து இராப் பத்து', வைகுண்ட ஏகாதசி உற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சஷ்டி விழாவில் வேல்வாங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாம். இவ்விழாவில் வேலவருக்கு முகத்தில் வியர்வை அரும்பும் காட்சியைக் காண வருவோர் பல்லாயிரம்; அவரருள் பெறுவோர் பல்லாயிரம்.

குறிப்பு: யாத்திரீகர்கள் தங்கி வழிபடுவதற்கு சகல வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள் குறைந்த வாடகையில் உள்ளன.

லெ. சங்கரகுத்தாலம்
*நிர்வாக அதிகாரி.*

*அறங்காவலர்கள் :*

கே. ஏ. அம்பலவாணன் (தலைவர்)
அழ. மாணிக்கஞ்செட்டியார் N. மாரிமுத்து
S. தென்கோவன் திருமதி S. R. மீனுட்சிசுந்தரத்தம்மாள்

# ஸ்ரீ பாலைவனநாதசுவாமி

## திருக்கோயில்

## திருப்பாலைத்துறை

பாபநாசம் வட்டம்

தஞ்சை மாவட்டம்

இத்தலம் தஞ்சை மாவட்டம் பாபநாசம் பிரிவைச் சார்ந்தது. கும்பகோணம் தஞ்சை கற்சாலையையொட்டி எழிலுடன் விளங்குகிறது. கும்பகோணம் தஞ்சாவூர் இருப்புப் பாதையில் பாபநாசம் புகை வண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கில் அரைக்கல் தொலைவில் உள்ளது.

தலப்பெயர் திருப்பாலைத்துறை. இப்பெயரைக் கேட்ட அளவில் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் பாலை என்ற திணையில் உள்ள தலம் என்று எண்ணலாம். பாலை என்பது ஒருவகை படர்செடி. அது இத்தல மரமுமாகும்.

"பாலைவனநாதர்" என்பது இறைவனின் திருப்பெயர். "தவள வெண்ணகைமங்கை" என்பது இறைவியாரின் திருப்பெயர். இவ்வூரார் அம்மையைத் "தவளாம்பாள்" என்றும், இக்கோயிலை "தவளாம்பாள் கோயில்" என்றும் வழங்குவர்.

அட்டதிக்குப் பாலகர்கள் நீராடி வழிபட்ட எட்டு குளங்களும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அவற்றில் தற்போது வசிட்ட தீர்த்தம், இந்திர தீர்த்தம், இமய தீர்த்தம், காவிரி தீர்த்தங்கள் தாம் உள்ளன.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் மூவராலும் பாடல்பெற்ற தலம்.

எம். சுந்தரராஜன்
நிர்வாக அதிகாரி

# இராசராசன் - சைவ ஒளி விளக்கு

வித்துவான் அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்.
தமிழ்த்துறைத் தலைவர்,
பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

தமிழகத்தில் ஆட்சி புரிந்த இடைக் காலச் சோழ வேந்தர்களில் ஒப்பற்று விளங்கிய மாமன்னன் இராசராசனுடைய அரசியல் வெற்றியால் ஏற்பட்ட புகழினும், சமயம், கலைகள் ஆகியவற்றிற்கு ஆற்றிய தொண்டால் விளைந்த புகழ் விழுமியதாகும். காடு மலை கடந்தும், கடல் கடந்தும் அவன் பெற்ற வெற்றியும் ஆட்சிச் சிறப்பும், தமிழக வரலாற்றுப் பொன்னேட்டின் சில பக்கங்களை ஒளிர்வித்துக்கொண்டுள்ளன. அவன் ஆற்றிய சமய, சமுதாயக் கலைப்பணிகள் இன்றும் நம் கண்காண விளங்கித் தமிழ் மக்களின் பண்பாட்டினை உலகிற்குணர்த்தும் ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. சைவ உலகிற்கு அவன் ஆற்றிய தொண்டினை, இங்கு மதிப்பிட்டுக் காண்போம்.

இளவயதில் இராசராசன், முதற்கண்டராதித்த சோழரின் மனைவியாரும், தன் தந்தை வழிப் பெரிய பாட்டியாருமாகிய செம்பியன் மாதேவியாலும், தன் தமக்கை குந்தவைப்பிராட்டியாலும் வளர்க்கப்பட்டவன். அதனால் அவ்விருவர்பாலும் மிக்க அன்பும் மரியாதையும் கொண்டொழுகி வந்தான். அவ்விருவரும் ஆழ்ந்த சைவ சமயப் பற்றுடையவரேனும், வைணவம், புத்தம், சமணம் முதலிய பிற சமயங்கள் பால் காழ்ப்புக் கொள்ளாமல் சமயப் பொறைகொண்டு விளங்கியதற்குக் குந்தவை விண்ணகரம், குந்தவை ஜினாலயம் என்னும் ஆலயங்களும், பிற சமய ஆலயங்களுக்கு அவர்கள் வழங்கிய நிவந்தங்களும் சான்று பகர்கின்றன. (1) அவர்தம் அன்பில் வளர்ந்த இராசராசனும் சைவ சமயப் பற்று மிக்கவனாயிருந்தாலும், பிற சமய உணர்வுகளைப் பொறுத்து மதிக்கும் பொறைமிக்கவனாகத் திகழ்ந்தான். நாகபட்டினத்தில் கட்டப்பெற்ற புத்த விகாரத்திற்கு இராசராசப் பெரும்பள்ளி எனத் தன் பெயரிட்டழைக்க உடன்பட்டமையாலும், அதற்கு நிவந்தமாக ஆனைமங்கலமென்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாக அளித்தமையாலும் இவன் எடுத்த தஞ்சை பெருங்கோயிற் சுவர்களில் புத்தப்படிமங்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும், சயங்கொண்ட சோழ விண்ணகரம். இரவிகுலமாணிக்க விண்ணகரம் என்ற பெயரில் திருமால் கோவில்கள் அமைக்கப்பட்டமையாலும், இவனுடைய சமயப்பொறை நன்கு புலனாகின்றது. (2) கேட்டார்பால் சிவ பக்தியைப் பெருக்கும் தேவாரப் பதிகங்களைக் கேட்டு அவற்றின்பால் ஈடுபாடு மிகக் கொண்ட இராசராசன் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு; தில்லைக் கோயிலின் அறையொன்றில் அடைபட்டுக்கிடந்த மூவர் தேவாரத்தையும் வெளிக்கொணர்ந்து, பண் அமைக்கச் செய்து சைவத் திருமுறைகளாக வகுத்தமைத்தான் என்று சிலர் கருதுகின்றனர். (3) இச்செய்தியினைத் திருமுறை கண்ட புராணம் முதன் முதலாகக் கூறுகின்றது. (4) இதன்கண் "இராசராச மன்னனான அபயகுலசேகரன்" என்று அரசன் குறிக்கப்படுகிறான். இராசராசனுடைய சிறப்புப் பெயர்களில் அபயகுலசேகரன் என்பது இல்லாமை கொண்டும் பிற காரணங்கள் கொண்டும் திருமுறை கண்ட சோழன்

இராசராசன் அல்லன் எனக் கருதுவாருமுளர். (5) இராசராசன் திருமுறை வகுத்தமைபற்றி வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை இருந்தாலும், தேவாரத் திருப்பதிகங்கள்பால் இவனுக்கிருந்த ஈடுபாட்டிலும் அவற்றைத் தன்னாட்டுக் கோயில்களில் பாடுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியிலும் யாரும் ஐயங்கொள்வதற்கில்லை.

இராசராசன் தன்னாட்சிக் காலத்தில் தன்னாட்டகத்தும் தான் வெற்றிகொண்ட நாடுகளிலும் பலசிவன்கோயில்களை எழுப்பி, அவற்றின் நாள் வழிபாட்டிற்கான நிவந்தங்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளான். இவன் ஈழநாட்டை வென்றகப்படுத்திய பின்னர் அதன் தலைநகரான பொலன்னருவா என்னுமிடத்தில் சிவபெருமானுக்கு இருதளக்கற்றளிஒன்று எடுத்தான். (6) சித்தூர் மாவட்டத்தில் இப்போது 'லட்டிகம்' என்று வழங்கப்பெறும் கோயட்டூரில் இருங்கோளீச்சுரம் என்ற கற்கோயிலை எடுத்துள்ளான். (7) அம்மாவட்டத்து வீரநாராயணபுரம் என்ற மேல்பாடியில், காலஞ்சென்ற தன் பாட்டனான அரிஞ்சயனை அடக்கம் செய்தவிடத்தில் அரிஞ்சிகை ஈச்வரம் என்னும் பள்ளிபடைக் கோயில் ஒன்றைக் கட்டினான். (8) மேலும் இவன் தன்னாட்டகத்துள்ள பல செங்கற் கோயில்களைக் கற்றளிகளாக அமைத்துள்ளான். இவன் காலத்தில் இவன் பாட்டியும், தமக்கையும் பற்பல சிவாலயங்களையும் பிறசமயக் கோயில்களையும் கட்டியுள்ளனர். இராசராசன் தான் அமைத்த கோயில்களுக்கும் தன் பாட்டியும் தமக்கையும் எடுத்த கோயில்களுக்கும் பொன்னும் மணியும் நிரம்ப வழங்கியதோடு அவை தொடர்ந்து மக்கட்குப் பயன்பட்டு வருவதற்குவேண்டிய நிவந்தங்களையும் ஏற்படுத்தியுள்ளான். இவனைப்போல இவன் பட்டத்தரசியருள் முதன்மையான உலோகமாதேவியார் எனப்படும் தந்தி சக்தி விடங்கியும் திருவையாற்றுக் கோயிலின் வடக்கு வெளிச் சுவற்றில் உலோகமாதேவீசுரம் என்னும் பெயரில் திருக்கோயில் எடுத்துள்ளார். இவனுடைய மைந்தன் முதலாம் இராசேந்திரனும் தன்னாட்சி காலத்தில் தந்தையைப் பின்பற்றிக் கங்கைகொண்ட சோளீச்சுரம் என்னும் ஆலயத்தை எழுப்பினான். இவ்வகையில் இராசராசனது குடும்பத்தினர் எல்லாருமே சமய ஈடுபாடு மிகக்கொண்டு சிவம் பெருக்கும் சீலர்களாய்த் திகழ்ந்துள்ளனர்.

திருவாரூர்த் தியாகேசன்மேல் அளவுகடந்த பக்திகொண்டொழுகிய அரசகுடும்பத்தில் தோன்றிய இராசராசன் எடுத்த ஆலயத் திருப்பணிகளி லெல்லாம் தலைசிறந்து விளங்கி அவனுடைய புகழையேயன்றித் தமிழ் இனத்தின் சமயகலைப் பண்பாட்டு மேன்மையையும் இன்றும் தரணிக்குணர்த்திநிற்பது தஞ்சைமாநகரில் அவன் அமைத்துள்ள இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெருங்கோயிலேயாகும். கற்பாறைகளைக் காண்பது அரிதாக விளங்கும் தஞ்சைத் தரணியில், இன்றைய ஆலய அமைப்பிற்குக் கலைவல்லுநர்களும் வியக்குமாறு கட்டிடக்கலை நுட்பமும், சிற்ப ஓவியக் கலை நுட்பங்களும் செறிந்த ஒரு கலைக் கருவூலமாக அக்கோயிலை அமைத்துள்ளான். இராசராசனுடைய உள்ளத்தின் உயர்ச்சியையும், பெருமையையும் போலவே மிக உயர்ந்த கோபுரத்தையும், பெருவுடையாரையும், திருநந்தியையும் அக்கோயிலில் காணலாம். (9) இராசராசேச்சுரம் எனத் திருவிசைப்பா இசையால் திசைபோகிய அவ்வாலயத்திற் கோயில் கொண்டுள்ள பெருவுடையாருக்குச் சிறப்பும் பூசனையும் சிறந்த முறையில் நடைபெற்று வருவதற்காக இராசராசனும் அவனுடைய குடும்பத்தினரும், அளித்துள்ள நிலக்கொடையும், அணிமணிக் கொடையும் அளப்பரியனவாகும். அவற்றையெல்லாம் அந்தத்திருக்கோயிலின் சுற்றுச்சுவர்கள் கல்வெட்டுச் செய்திகளாக உணர்த்தி நிற்க, அதனை உணர்வோர் உள்ளத் திரையில் பசுமைமிக்க பழங்காலக் காட்சிகள் தோன்றிமறைய வியப்பும் வேதனையும் மீதூரக் காணலாம். கன்னடப் பகுதியில் இட்டஜி என்னுமிடத்தில் மகாதேவருக்காகக் கட்டப்பெற்றுள்ள ஆலயத்தினை இங்குள்ள கல்வெட்டு ஒன்று 'தேவாலயச் சக்ரவர்த்தி' என்று குறிப்பிடுகின்றது. (10) இராசராச மாமன்னன் அமைத்த இப்பெருங்கோயிலும் தமிழகத்து ஆலயங்களுக்கு எல்லாம் சக்ரவர்த்தியாக விளங்குகின்றது என்றுகூறுவது பொருத்தமாகும்.

தஞ்சைக்கெனத் தனித் தேவாரப் பதிகம் இல்லை. ''தஞ்சைத் தளிக்குளத்தார்'' என அப்பர் தேவாரத்தில் தஞ்சை ஒருவைப்புத் தலமாகவே பேசப்படுகின்றது. இராசராசன் தான் தஞ்சையில் அமைத்த ஆலயத்தைப் புதியதாகவே அமைத்தான் என்றும், பழைய சிறுகோயில் இருந்த இடத்தில் அதனையும் நீக்கிப் புதியப் பெருங்கோயில் அமைத்தான் என்றும் கருதுவார் உளர். (12) அக்கோயிலிலுள்ள பெரிய லிங்கத் திருமேனியும், திருநந்தியும் இராசராசனால், புதிதாக அமைக்கப்பட்டனவாக அறியப்படுவதாலும், பழைய கோயில் மூர்த்தம் பாடல் பெற்றதாக இருக்குமாயின் அதனை அகற்றிப் புதிய திருமேனியைக் கொள்வது நேரிதன்றாகலாலும் அவ்வாலயம் புதிதாக நிர்மாணிக்கப் பட்டதாகவே கொள்ளுதல் வேண்டும். தஞ்சைத் தளிக் குளத்தார் எனத் தேவாரங்குறிக்கும் மூர்த்தி, அக்கோயிலின் அருகே பிறிதோரிடத்திலுள்ள மூர்த்தியேயாதல் வேண்டும்.

தேவாரப் பாடல்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றபின் ஆங்காங்குள்ள சிவாலயங்களில் தேவார முதலிகள் மூவர் திருமேனிகளை எடுக்கச் செய்து, வழிபாடு செய்யும் வழக்கம் தோன்றலாயிற்று. தேவார ஆசிரியர்களில் தனித்தனி ஒருவர் அல்லது இருவர் திருமேனிகளை எழுந்தருளச் செய்ததோடு மூவர் திருமேனிகளையும் அமைத்து வழிபடும் முறை பலவிடங்களிலும் அமைந்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத்தொகையை வகுத்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியாகப் பாடியபின் நாயன்மார்கள் அறுபத்துமூவரின் புகழும் சைவ உலகில் பரவவே அவர்கள் அனைவரையும் திருக்கோயில்களில் எழுந்தருளப்பண்ணி மக்கள் வழிபட்டுவருவாராயினர். தொடக்க காலத்தில் ஒவ்வொரு நாயன்மார்களின் வாழ்க்கையிலும் அமைந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியைக் காட்சியாக்கிக் கற்சுவர்களில் வரிசையாகப் பொறித்துவைத்தனர்.

குடந்தைக்கருகில் உள்ள தாராசுரத்திலும், மேலைக்கடம்பூரிலும் உள்ள ஆலயச் சுவர்களில் இத்தகைய நாயன்மார்கள் படிம வரிசை காணப்படுகின்றது. (13) பின்னர் இவ்வமைப்பு பல கோயில்களிலும் மேற்கொள்ளப்படவே, அறுபத்து மூவர்களையும் ஒரே அளவிலான தனித்தனி உருவமாகக் கல்லிலோ, உலோகத்திலோ அமைத்து ஆலயச்சுற்று வழிகளில் நிரல்பட நிறுவும் வழக்கம் தோன்றலாயிற்று. இராசராசன் தான் எடுத்த பெருங்கோயிலில் தேவாரம் பாடிய மூவருக்கும் கனமாக செப்புப்படிமம் அமைக்கச் செய்து, அவற்றிற்கு அணியும், மணியும் நல்கி, நித்திய நைமித்திகம் நடைபெற்றுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அக்கோயிலில் ஸ்ரீ கார்யம் பார்க்கும் தன் அதிகாரியான 'பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனானதென்னவன் மூவேந்த வேளான்' வாயிலாக நிறைவேற்றினான்(14). தான் கட்டிய தஞசைப் பெருங் கோயிலின் நடைமுறைக்கு தன்னாட்டில் நிலக்கொடை வழங்கியதோடு அன்றித் தான் வென்று கொண்ட இலங்கை நாட்டிலும் சிலவூர்களை நிவந்தமாக அளித்துள்ளதாகத்தெரிகிறது.

தமிழகத்தில் மூவர் தேவாரமும் தோன்றிச் சைவ சமய மறுமலர்ச்சி விளக்கமுற்ற காலத்தில், தேவாரப் பாடல் பெற்ற தலங்களிலுள்ள ஆலய வழிபாட்டின் போது அவ்வத்தலங்களின் திருப்பதிகங்கள் ஓதப்பெறும் வழக்கம் தோன்றிற்று. பாடல் பெறாத ஊரிலுள்ள ஆலயங்களிலும் தேவாரப் பாடல்கள் ஓதப்பெறும் வழக்கம் ஏற்பட்டதுடன், அவ்வாறு தேவாரமோதுபவர்களுக்கு வேண்டிய நிவந்தங்கள் ஏற்படுத்தும் வழக்கமும் உண்டாயிற்று. இராசராசன் காலத்திற்கு முன்னரே, திருஎறும்பியூர், திருப்பழுவூர், திருவாவடுதுறை, திருத்தவத்துறை அல்லூர், குமார வயலூர், அந்துவநல்லூர் திருமுட்டம் முதலிய ஊர்க்கோயில்களில் திருப்பதிகம் ஓதப்பட்டனவாகக் கல்வெட்டுக்களால் உணரலாம். (16) மூவர் தேவாரமும் ஒருங்கு தொகுக்கப்பட்டிராமையால் அக்காலத்தில் ஓதுவார்கள் தங்கள் ஊர் அல்லது ஒரு வகையில் தமக்குத் தொடர்புள்ள ஊர்களின் பதிகங்களையே அறிந்திருப்பாராயினர். திருமுறை கண்ட சோழன், தன்பால் எய்திய பதிகம் ஓதுபவர்கள், ஒவ்வொரு பதிகமே ஓதக் கேட்டு எல்லாப் பதிகங்களையும் கேட்டறிய வேண்டும் என்னும் ஆர்வங்கொண்டான் எனக் கேட்பதனால் இதனை ஊகிக்கலாம்.

(17) இராசராசன் தான் அமைத்த பெருங்கோயிலிலும் தேவாரப் பதியம்ஓத விரிவானதொரு ஏற்பாட்டினைச் செய்துள்ளான். தமிழகத்தின் பலவிடங்களிலிருந்தும் திருப்பதிகம் ஓதுபவர்களை வரவழைத்துப் பாடச் செய்துள்ளான். அவ்வாறு வந்த ஓதுவார்கள் (பிடாரர்கள்) நாற்பத்து எட்டு பேராவர் என்றும், பதிகம் பாடுங்கால் நிலையாக உடுக்கை வாசிக்கவும் நிலையாகக் கொட்டி மத்தளம் வாசிக்கவும் இருவர் அமைக்கப்பட்டனர் என்றும் அறிகிறோம். அத்திருப்பதிகம் இசைக்குழுவினர் ஐம்பது பேரும் தினந்தோறும் பெறவேண்டிய நெல்அளவு குறித்தும் இராசராசன் ஏற்பாடு செய்திருந்த செய்தியினை அவன் ஆட்சி இருபத்தொன்பதாம் ஆண்டில் தோன்றிய கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. (18) நியமிக்கப்பட்ட ஐம்பதின்மரின் பெயர்களும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. அவர்களில் இறந்தோ, விட்டுவிட்டோ ஒருவர் செல்வாராயின் அவ்விடத்தை நிரப்புவதற்காக அரசன் நினைந்து, அக்கல்வெட்டில் செய்திருக்கும் ஏற்பாட்டினால் இத்திருப்பதிய இசைக்குழுவின் தொண்டில் அவனுக்கிருந்த பேரார்வம் புலனாகின்றது. அக்கல்வெட்டில், "ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு இருபத்தொன்பதாவது ஆண்டு வரை உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 29 ஆண்டுகள் ஆட்சி புரிந்த (கி. பி. 985—1014) இராசராசனுடைய இறுதி ஆண்டில் எழுந்த இக்கல்வெட்டில், தேவாரம் ஓதும் செயலைத் "திருமுறை விண்ணப்பம் செய்ய" என்று குறிப்பிடாமல் "திருப்பதியம் விண்ணப்பம் செய்ய" என்று குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். இராசராசன் திருமுறை கண்டிருந்தால் அந்நிகழ்ச்சி இக்கல்வெட்டு தோன்றியதற்கு முன்னர்த்தான் நிகழ்ந்திருக்கவேண்டும். தேவாரப் பதிகங்களை அரிதின் முயன்று தேடித் "திருமுறை" எனத் தொகுத்திருந்தால் "திருமுறை விண்ணப்பஞ் செய்ய" என்று குறிப்பதே இயற்கையாகும். இதனாலும் திருமுறை கண்டவன் இராசராசனல்லன் என்பார் கூற்று வலிவு பெறுகின்றது. வழிபாட்டின்போது ஐம்பது பேருமாக எழுப்பிய, புனிதப் பதிக இசை மெய்யன்பர்களின் சிந்தைகளை உருகுவித்திருக்கும் என்பதில் ஐயமின்று. இவர் எடுத்த கோயில், கோபுரம், இலிங்கம், நந்தி ஆகியவற்றின் பெருமையைப் போலவே, இவன் அமைத்த தேவார இசைக்குழுவும் பெருமை மிக்கதாக விளங்கியது.

இராசராசப் பெருவேந்தன் தஞ்சைப் பெருவுடையார் உலாப் போங்காலத்தும் பிறவிழாக் காலத்தும், பாடி ஆடுவதற்காகத் தமிழகத்தின் பலக்கோயில்களிலும் சிறந்து விளங்கிய நடனமாதர்கள் 400 பேர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்திருந்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்துப் புரந்துவந்தான். (19) அவர்கள் நிகழ்த்திய ஆடலும் பாடலும், பக்தி உணர்வைத்தூண்டும் தெய்வீகக்கலை விளக்கங்களாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பெருவுடையார் கோயிலின் உள்ளறையின் புறச்சுவர்களில், பழங்காலத்தில் தீட்டப்பட்டனவாகக் கருதப்பெறும் வண்ண ஓவியங்கள் திகழ்கின்றன. அதன் மேலைப்புறச் சுவர்மீது காணப்படும் ஓவியங்களில், சிவபெருமான் கயிலையில் இருத்தல், இறைவன் சுந்தரரை ஆட்கொள்ளல், சுந்தரரும் சேரமானும் முறையே யானை குதிரைமீதிலமர்ந்து கைலை செல்லல் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். (20) இவ்வோவியங்கள் ஆலயத்தைக் கட்டிய இராசராசன் காலத்தைச் சார்ந்தனவேயென்று அறிஞர்கள் காட்டியுள்ளனர் (21).

தன் சைவசமயஈடுபாட்டினாலும் தொண்டினாலும் சிறந்து, 'சிவபாதசேகரன்" என சிறப்புப்பெயர் கொண்டு திகழ்ந்த இராசராசன் கட்டிடம், சிற்பம், இசை, நடனம், ஓவியம் முதலிய பல கலைகளுக்கும் புகலிடமாக விளங்கத்தக்க வகையில் தன் ஆலயத் தொண்டினை அமைத்துள்ளான். இராசராசன் அமைத்த பெருங்கோயில் அவனுடைய சமயப் பணிகளி லெல்லாம் தலை சிறந்ததாய்க் கலைமணிகள் ஒளிவீசும் மகுடமாக விளங்கித் தமிழ்ச் சமுதாயத்தின் கலைமாட்சியினை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

# தஞ்சைக் கோயில் விழாக்கள்

புலவர். அ. அறிவொளி, M. A.,
பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, பூம்புகார்.

பெருவேந்தன் முதலாம் இராசராசன் புகழ் பரவி, சிலையெடுத்து மக்கள் நெஞ்சில் அப்பேரரசனைப்பற்றிய ஆர்வத்தைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அதற்கு அணிசெய்யும் வகையில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையும் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தஞ்சையில் ஐப்பசிச் சதயநாளாகிய இம் மன்னன் பிறந்தநாளைத் தவறாமல் கொண்டாடி மலர் வெளியிட்டுச் சிறப்புச் செய்து வருகிறது.

காலப் புழுதியில் மறைந்த நமது புகழ் வெளிப்படும் இந்த நேரத்தில் தஞ்சை மண்ணில் தலைநிமிர்ந்த அக்கோயிலைப்பற்றியும், இராசராசனைப்பற்றியும் வரலாற்று அடிப்படையில் ஆய்ந்து பிறர்க்கு வெளிப்படுத்துவது இம்மறுமலர்ச்சிக்காலத்தில் மிகவும் தேவையானது. ஆகவே இக்கட்டுரை கல்வெட்டுக்களின் துணையால்மட்டும் ஆராய்கிறது.

**சதய நாள் விழா :**

ஐப்பசிச் சதயமே இம்மன்னன் பிறந்த நாளென்பது முடிவு. கேரளத்திலுள்ள திருநந்திக் கரையிலுள்ள கோயிலுக்கு நிலம் வழங்கி அங்குச் சதயவிழாக் கொண்டாடச் செய்துள்ளான் இவ்வரசன். "திருநந்திக் கரை மாதேவர்க்குப் பெருமாள் ஐப்பிசைச் சதையத்திநாள்" என்று கல்வெட்டில் ஒரு தொடர் வருகிறது. (Travancore Archaeological Series, Vol. P. 292). இதனுள் வரும் பெருமாள் என்பது நம் இராசராசனைக் குறிக்கும். மேலும் திருவெண்காட்டு இறைவர்க்கும் ஆண்டுதோறும் ஐப்பசித் திங்களில் ஏழுநாட்கள் சதய நாள்விழா நடைபெற்றதாக அக்கோயில் கல்வெட்டால் அறிகிறோம். "சதய நாள்விழா உதியர்மண்டிலம் தன்னில் வைத்தவன்" என்று கலிங்கத்துப்பரணி இம்மன்னனைப் புகழ்கிறது. இவைகளால் இராசராசன் ஐப்பசித் திங்கள் சதயநாளில் பிறந்தவன் என்பது உறுதியாகிறது. மன்னன் பிறந்தநாளை மாதேவர்க்குச் சிறப்பு நாளாக்குவது சமய மரபாதலின் இவ்வாறு இவ்விழாக்கள் நடந்துள்ளன.

இம்மன்னன் தான் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோயிலிலும் இவ்விழா நடந்திருக்கிறது. இப்பெரிய கோயில் கல்வெட்டொன்றில் [S. I. I. Vol. II. 26] "திருச்சதைய திருவிழாப் பன்னிரண்டும்" என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலும் "உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருச்சதையத் திருவிழாப் பன்னிரண்டுள்ளிட்ட திங்கள் திருவிழா என்றும் [S. I. I. Vol. II. 28] குறிக்கப்பட்டுள்ளது. எனவே திங்கள்தோறும் வரும் சதய விண்மீன் நாளில் பெரிய கோயிலில் இவ்விழா நடந்திருக்கிறது. அத்திருநாட்களில் "திரு

விழா எழுந்தருளும் திருமேனிகளை'' நகரில் புறப்பாடு செய்திருக்கின்ருர்கள். இதைப் போலவே இவன் மனைவியார் திருவையாற்றில் கட்டிய உலோகமாதேவீச்சுரத்திலும் திங்கள்தோறும் சதயநாள் விழாக் கொண்டாடப்பட்டுள்ளதாக அறிகிறோம். ஆகவே திங்கள்தோறும் தஞ்சைக் கோயிலில் சிறப்பாகவும் ஐப்பசித் திங்களில் மட்டும் வெகு சிறப்பாகவும் இவ்விழா நடந்திருக்கவேண்டும். இத்திருவிழாக் காலங்களில் சிவபெருமானும் பார்வதி தேவியாரும் எழுந்தருளினர் என்றும் அறியலாகும்.

கார்த்திகைத் திருநாள் :

பெரிய கார்த்திகை எனப்படும் கார்த்திகைத் திங்களில்வரும் கார்த்திகைவிழாவும் கொண்டாடப்பட்டுள்ளது. இது சிவபெருமானுக்குரிய நாளாவதும், இந்நாளில் நடராசப்பெருமான் எழுந்தருளுவதும் இன்றும் மரபாகும். இராசராசன் காலத்தில் நடராசமூர்த்தியின் திருமேனி மிகப் பொலிவுபடச் செய்யப்பட்டது என்றும், கலைநுட்பம் மிகுந்து நிறைந்தது அந்தக்காலமே என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் வியந்து எழுதுகின்றனர். அத்தோடு ஆடவல்லான் என்ற நடராசர்க்குரிய அழகிய திருப்பெயரை மரக்கால், நிறுக்கும் கல் முதலிய அளவுப் பொருள்களுக்கு வைத்து வழங்கினன் இவ் வேந்தன். அதனுல் அளவுப் பெயர்களைச் சொல்லுகின்ற பொழுதும், எழுதுகின்ற பொழுதும் நாட்டிலுள்ள அனைவரும் இறைவன் பெயரைச் சொல்லி இன்புற வேண்டுமென்றும், பயன்பெற வேண்டுமென்றும், அப்பூதி அடிகளார் செய்தாற்போல் இம்மன்னனும் செய்யத் தலைப்பட்டான். இதனுல் இவன் காலத்தில் ஆடவல்லார் என்னும் பெயரும் திருமேனியும் மிகச் சிறப்பு வாய்ந்திருந்தன. கார்த்திகைத் திருநாளிலும் இவரே எழுந்தருளியிருக்க வேண்டும். இக்கோயில் கல்வெட்டொன்றில் [S. I. I. Vol. II. 25] "ஆடவல்லார் எழுந்தருளும் நாளின்று" என்று காணப்படும் தொடராலும் உண்மை அறியலாகும்.

பெரிய திருவிழா :

"ஆட்டைப் பெரிய திருவிழா" எனும் கல்வெட்டுத் தொடரால் ஆண்டுதோறும் ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழா இங்கு நடந்ததை அறியலாம். இது எந்தத் திங்களில் நடந்ததென்று தெரியவில்லை.

கொடித் திருநாள் :

பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்றும் நாள் மட்டுமே தனி விழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. எனவே பெரிய திருநாள் மொத்தம் 10 நாட்கள் நடந்ததாக அறியலாம். இந்நாட்களும் அம்மையும் அப்பரும் சேர்ந்தே எழுந்தருளுவர் என உய்த்தறியலாம்.

பொங்கல் விழா :

"உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையாரும் தக்ஷிண மேருவிடங்கரும் சங்கராந்தி ஞான்று ஆடியருளும்" என்ற கல்வெட்டுப் பகுதியால் சங்கராந்தியாகிய பொங்கலில் திருமுழுக்கு உண்டென்றுணரலாம். ஏனைய சங்கிரமங்களிலும் திருமுழுக்கு உண்டு. எனவே சங்கராந்தி மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

"ஸ்ரீ ராஜராஜதேவர் திருச்சதையத் திருவிழா உள்ளிட்ட திங்கள் திருவிழாப் பதின்மூன்றும், ... ... நாள் எழுந்தருளும் திருவிழா ஒன்றும், ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குத் திருக்கொடியேற்ற வலஞ்செய்யும் நாள் எழுந்தருளும் திருவிழாவொன்றும் ஆட்டைத்திருவிழா எழுந்தருளுநாள் ஒன்பதும் ஆகத் திருவிழா எழுந்தருளுநாள் இருபத்துநாலு' இந்தக் கல்வெட்டுப் பகுதியில் சிதைந்த பகுதி யாதென்று தெரியவில்லை. சதயத் திருவிழாவுடன் கார்த்திகைத் திருவிழா ஆகப் 13 நாட்கள் திங்கட் திருவிழா ஆகையால் சிதைந்த பகுதி ஆண்டுத் திருவிழாவாகவே இருத்தல்வேண்டும். சதய நாள் வரும் ஐப்பசியையும் கார்த்திகை வரும் கார்த்திகைத் திங்களையும் அடுத்தடுத்து வைத்ததால் இனி வருவது தைத் திங்களாக இருத்தல்வேண்டும். சோழர்கள் ஆரிய குலத்தினர் ஆகையாலும், திருமால் அவதாரமாகக் கருதப்படுபவர் ஆகையாலும், சங்கிரமம் தோறும் இறைவனுக்குத் திருமுழுக்காட்டுவதாலும் இந்தச் சிதைந்த பகுதி சங்கராந்தியாகிய பொங்கல் திருநாளாகவே இருத்தல்வேண்டும்.

இது தைமாதமாகையால் அடுத்துக் குறிக்கப்படும் பெரிய திருவிழா பங்குனி உத்திரமாகவே இருக்கவேண்டும். சுந்தரர் காலத்திலேயே பங்குனி உத்திரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாலும், சுந்தரர் விழா நடத்திய திருவாரூர்க் கோயிலில் இராசராசனுக்கு ஆத்மார்த்தமான பற்றுண்டு ஆகையாலும், திருவாரூர்க் கோயில்போலவே தஞ்சையில் கோயில், எழுப்பினுனென்ற மரபுக்கதை இருப்பதாலும் இப்பெரிய திருவிழாவும் பங்குனி உத்திரமேயாகும்.

இத்திருவிழாக்கள் 24 நாளிலும் சிவனடியார்க்கு அமுதூட்டியதும், பிறநாளில் இறைவர்க்கு அமுது படைத்ததும், திருமஞ்சனநீரில் வாசனைப் பொருட்கள் சேர்க்கப்படுவதும், திருப்பறை அறைவோர் சிறப்பும். இன்ன பிற சமயச் சடங்குகளும் கல்வெட்டுக்களில் கண்டு அக்காலச் சமய உணர்வையும் மக்கள் ஒழுக்கத்தையும் நன்கறியலாம்.

இவை யாவும் மீண்டும் நடக்கவும் அக்கோயில் மீண்டும் பொலிவுபெற்றுச் சிறக்கவும் பொதுமக்கள் தங்களது ஆர்வத்தை ஆற்றலாக்கவேண்டும். இது நாம் இராசராசனுக்குச் செய்யும் நன்றிக்கடனுகும்.


## திரு மெய்கண்டமூர்த்தி திருக்கோயில்

குமரக்கோயில் — நாகபட்டினம்

நாகை நகரின் மையத்தில் அமைந்துள்ள இந்த ஆலயம் அருணகிரிநாதரால் பாடல் பெற்றது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னுல் திரு ஆனந்தரெங்கம் பிள்ளை என்பவரால் கட்டப்பட்டுள்ளது. திரு அழகமுத்துப் புலவர் முருகனை நேரில் கண்டு தனது பிறவி நோயை தீர்த்துக்கொண்ட வரலாற்றுச் சிறப்புடைய ஆலயம். இத்திருக்கோயிலுக்கு பின்புறம் ஓர் திருமணமண்டபம் நவீன முறையில் கட்டப்பட்டுவருகிறது.

**இந்தத் திருமுருகனைக் காண வாரீர்! வாரீர் என அழைக்கிறோம்!**

சு. பன்னீர்ச்செல்வம்
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

நன்னிலம் வட்டம் திருவிற்குடி தஞ்சை மாவட்டம்

இத்தலம் அட்ட வீரட்டத்தலங்களில் ஒன்ருகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியமூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை உடைய தலம். மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச் செய்த திருவாசகத் திருச்சாழலில் இத்தலம் பற்றிய பதிகம் ஒன்றும், அருணகிரிநாதரின் திருப்புகழ் ஒன்றும் இத்தலத்திற்கு உள்ளது. திருவிற்குடி எனும் இத்தலம் திருவாரூர் - திருப்பயத்தங்குடி பேருந்து மார்க்கத்தில் உள்ளது.

M. S. M. மெய்யப்ப செட்டியார்
அறங்காவலர்

# மெய்க்கீர்த்தி

திரு. T. V. கோபாலய்யர், திருவையாறு.

மெய்க்கீர்த்தி என்ற தொடர் மெய்யாய புகழ் என்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகைத்தொடராய், அம்மெய்யாய புகழைத் தெரிவிக்கும் பாடல் என அத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம். மெய்யாய புகழுடைய அந்தணர், வணிகர், வேளாளர் என்பார் திறத்துப் பாடப்படும் பாடல்கள் மெய்க்கீர்த்தி எனப்படா; வேந்தன் புகழ் விளம்பும் பாடலே மெய்க்கீர்த்தியாதல் மரபுபற்றி வந்ததொன்றும்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறை என்று வைக்கப்படும்'

'ஆங்(கு) அமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்(து) அமைவு இல்லாத நாடு'

'உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்'

என்று கொண்ட மக்கள் அரசன் பிறப்பால் மனிதனாயினும் சிறப்பால் அவனை இறைவனோடு ஒப்பவைத்து எண்ணினர். அரசனுக்குத் தெய்வங்களை உவமம் கூறும் மரபு,

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை'

என்று தொல்காப்பியத்தில் பேசப்படுகிறது. இதனை உட்கொண்டு அரசர்களைத் தெய்வங்களோடு ஒப்பிட்டுப் பாடிய பாக்கள் பல புறநானூற்றில் காணக் கிடக்கின்றன.

கோயில் என்ற சொல்லமைப்புக்கு இலக்கணம்

'இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்'

என்று தொல்காப்பியத்துள் பேசப்படுகிறது.

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்'

என்றாற்போலத் தெய்வங்கள் உகந்தருளியுள்ள இடங்கள் கோயில்கள் என்ற பெயரால் வழங்கப்படுமாறுபோல, அரசனுடைய இருப்பிடமும் 'நளிமலைச் சிலம்பின் சிலம்பும் கோயில்' என்றாற்போலக் கோயில் என்ற பெயரால் வழங்கப்பட்டது.

'சான்றோர் புகழும் முன்னர் நாணும்'

'தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்துஞ்ச'

என்றாற்போலக் கூறும்வகையின், தம்மைப் புகழ்ந்து கூறுதலை நாணும் சான்றோர் உலகத்து அருகியே காணப்படுவர்.

அரும்படை தாங்கும் ஆற்றலும், இடையில் வண்புகழ்க் கொடையும் உடைய மன்னர்கள் புலவரால் பாடப்படுதலை விரும்பினர்.

'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பில்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்து'

என்று கருதினர். தன்னைப் பரவலும் புகழ்தலும் விரும்பும் ஆண்டகையின் பண்புகளையும் செயல்களையும் சுட்டவே, புறத்திணையியற்பாடாண் படலம் எழுந்தது.

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்(கு) ஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்'

ஆதலின், அப்புகழுக்குத் தேவையான கொடைச் செயலுக்குப் பொருள் இன்றி அமையாதது.

'உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'

ஆதலின், வேந்தனுக்கு எஞ்சாமண் நசையானே மாற்றுவேந்தனை அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தலும், மைந்துபொருளாக வந்த வேந்தனைச் சென்றுதலையழித்தலும் உரிய தொழில்களாக அடைந்தன. அவ்வரசனுடைய அறச்செயல்களையும் மறச்செயல்களையும் புகழ்ந்து பல புறத்திணைச் செய்யுள்கள் பாடப்பட்டன.

கூதிர் வேனில், என்றுஇரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்
பெரும்படை தாங்கும் வேலி னானும்
அரும்படை தாங்கும் ஆற்ற லானும்
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்
சிறந்த நாள் அணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்,
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்,
நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்

என்ற தோல்காப்பிய நூற்பாப் பகுதிகள் அரசனுடைய பலவகைக் கீர்த்திகளைச் சுட்டுதல் காண்க.

வையங்காவலர் வழிமொழிந்தொழுகப் போகம்வேண்டிப் பொதுச் சொல் பொருத மன்னர்கள் தம்பெயரோடு குடிச்சிறப்பு வெற்றி முதலிய வற்றைக் கூறிக்கொள்வதில் பெருவிருப்புற்றனர்.

'பல்லவ குலதிலக பாரத்வாஜகோத்ராலங்கார பதியாகிய ஸ்ரீ தந்திவர்ம மகாராசர்க்கு வர்ஷவர்த்தனம் யாண்டு பன்னிரண்டாவது'

'மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மற்கு யாண்டு முப்பத்துமூன்றாவது'

முதலிய கல்வெட்டுத் தொடர்களை நோக்குக.

முதல் இராசராசன் காலம்முதல், மங்கலமொழியில் தொடங்கும் பாடலால் அரசன் வெற்றிச்சிறப்பைக்கூறி அவன் ஆட்சியாண்டினைச் சுட்டிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்படுவனவாயின. இத்தகைய பாடல்கள் மெய்க்கீர்த்தி எனவும், மெய்க்கீர்த்தி மாலை எனவும் இருவகையாகப் பெயரிடப்பட்டு, இலக்கணமும் வரையப்படுவனவாயின.

இப்பாடல்களின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்ததீபிகை, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

இவற்றுள் மெய்க்கீர்த்தி மாலையாவது.

'சொற்சீர் அடியெனும் கட்டுரைத் தொடர்பால்
குலமுறை ஆற்றிய கீர்த்தியைக் கூறல்
மெய்க்கீர்த்தி மாலையாம் விளம்புங் காலே' — மு. வீ.

'சொற்சீரடி கட்டுரைப்பாக் குலமுறை கீர்த்தி புகலல்
மெய்க்கீர்த்தி மாலை' — நவ. பாட்.

'சொற்சீர் அடியால் தொழிற்படு கீர்த்தியைப்
பொற்புற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலை' — இ. வி.

எனபனவற்றை நோக்க, அரசனுடைய பரம்பரைப் புகழைக் கட்டுரைச் செய்யுளாகப் பாடப்படும் பிரபந்தம் என்பது பெறப்படும். வேள்விக்குடிச் செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு போன்றவை மெய்க்கீர்த்தி மாலைக்கு எடுத்துக் காட்டுக்களாம்.

'கொல்யானை பலஓட்டிக் கூடாமன்னர் குழாம்தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி எனும் பாண்டியாதிராசனால்
நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டுஅலம்பும்
பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டு'

என்றுதொடங்கும் வேள்விக் குடிச்சாசனம் கட்டுரைத் தொடர்பாய் அமைந்து கடுங்கோன் முதல் நெடுஞ்சடையன் ஈறுகிய பாண்டியகுல மன்னர்களின் கீர்த்தியை நவில்வதனையும்.

'திருவொடும் தெள்ளமிர்தத்தொடும் செங்கதிரொளி கௌஸ்துபத்
[தொடும்
அருவிமத களிறென்றெரும் தோன்றிஅரன் அவிர்சடைமுடி
வீற்றிருந்த வெண்திங்கள் முதலாக வெளிப்பட்டது
நாற்றிசையோர் புகழ்தர நானிலத்தில் நிலைபெற்றது'

என்று தொடங்கும் இராசசிங்க பாண்டியனுடைய சின்னமனூர்ச் சாசனமும் கட்டுரைச் செய்யுளாய் பராங்குசன் முதலாக இராசசிங்கன் ஈறுகிய பாண்டிய மன்னர்களின் கீர்த்தியை நவில்வதனையும் நோக்குக.

இவை சொற்சீரடிச் செய்யுட்களெனினும் அடிதோறும் நான்கு சீர்கள் அமைய ஈரடி எதுகைத்தொடை அமைய இயற்றப்பட்டமையும் நோக்குக. இவை அவ்வவ்வரசருடைய குலத்தாரின் மறத்திறன் அறத்திறன் இரண்டனையும் நுவல்வன.

இனி, மெய்க்கீர்த்திக்குக் கூறப்படும் இலக்கணத்தை நோக்குவோம்.

'சொற்சீர் அடியால் தொழிற்படு புகழை
வேந்தன்பால் கூறின் மெய்க்கீர்த்தி யாகும்'

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல். இலக்கண விளக்கப் பாட்டியல் வரைந்தவரே அதற்கு உரையும் வரைந்துள்ளார். சொற்சீரடியாலே காரியப்புகழை மன்னனிடத்துக் கூறுதல் மெய்க்கீர்த்தியென்னும் பெயரினைப் பெறும் என்பது அவர்கூறும் உரை.

'சொற்சீர் அடியால் தொழிற்படு கீர்த்தியைப்
பொற்புற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலை'

என்பதும் அப்பாட்டியல் நூற்பா. அதற்கு 'சொற்சீரடி' என்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையில் செய்த கீர்த்தியை அழகுற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலையாம் என்பது அவர் கூறும் உரை.

இவற்றை நோக்கக் கட்டுரைச் செய்யுளால் அரச பரம்பரையின் சிறப்பை விரித்துரைப்பது மெய்க்கீர்த்தி மாலை என்பதும், தனி அரசனுடைய புகழை விரித்துரைப்பது மெய்க்கீர்த்தி என்பதும் அவர்காலத்தில் கருதப்பட்டமை புலனாகிறது. நவநீதப் பாட்டியல் முதலியனவும் மெய்க்கீர்த்திக்குக் கட்டுரைச் செய்யுளையே குறிப்பிடுகின்றன. தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் மெய்க்கீர்த்தி மாலைக்கே இலக்கணம் கூறுகின்றன.

சிதம்பரப் பாட்டியல் 'வேந்தர்க்கு உண்மை திகழ்கீர்த்தி' உரைப்பது மெய்க்கீர்த்தி' என மெய்க்கீர்த்திக்கே இலக்கணம் வகுக்கின்றது. பாட்டியல் நூல்களில் முற்பட்டதாகிய பன்னிரு பாட்டியலும் மெய்க்கீர்த்திக்கே இலக்கணம் வகுக்கிறது.

'சீர்நான் காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்

அவளுடன் வாழ்கஎனச் சொல்லியும் மற்றுஅவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டுஎனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி'

'நிலைபெறும் சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்
உரையாய் முடியும் எனஉரைத் தனரே'

'மதிபுரை வெண்குடைக் கீழ்அரி யணைமிசை
விதிஇனிது இருந்தென மெய்பெற நாட்டே',

என்பன பன்னிரு பாட்டியல் நூற்பாக்கள்.

'வேந்தன் மெய்ப்புகழ் ... ... வரலாறு சொல்லியும்'

என்ற தொடருக்கு 'அரசனுடைய பரம்பரைப் புகழைச் சொல்லி அப்பரம்பரையில் வந்த அவ்வரசன் வரலாற்றை இறுதியில் குறிப்பிட்டு' என்று பொருள் கொள்ளுதற்கும் சொற்றொடர் இடம் தருகிறது. சின்னமனூர்ச் சாசனம் போல்வன உரைச் செய்யுளாயினும் சீர்நான்காகி இரண்டடித் தொடையாய் உள்ளன. அச்சாசன இறுதியடி 'ராஜ்ய வர்ஷம் இரண்டாவதின் எதிர்பதிறுன்காம் யாண்டில்' என உரையாய் முடிகிறது.

மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் சீர்நான்காகி அமையும் இரண்டடிகள் பெரும்பான்மையும் ஒரு தொடையாய் அமையப் பாடப்படவில்லை. அந்தத்து அவன் வரலாறு சொல்லுவதனையும் மெய்க்கீர்த்தியில் காண இயலவில்லை. இயற்பெயர் என்பது இருமுதுகுரவர் இட்டபெயர். அரசன் அரியணையேறிய பின் கொண்ட பெயரே மெய்க்கீர்த்தியில் காணப்பெறுவது. இவற்றை நோக்கப் பன்னிரு பாட்டியல் மெய்க்கீர்த்திக்குக் குறிப்பிடும் இலக்கணம் மெய்க்கீர்த்தி மாலைக்கே பெரிதும் பொருந்துவதாக அமைகிறது. மெய்க்கீர்த்திகள் பெரும்பாலும் பொழிப்பெதுகையோ, பொழிப்பு மோனையோ கொண்ட ஆசிரிய அடிகளாக அமைந்திருக்கவும், பாட்டியல் வரைந்தார் பலரும் மெய்க்கீர்த்தி சொற்சீரடிகளால் அமைவது என்று கூறுவதன் அடிப்படை புலனாகவில்லை. எனவே, காலந்தோறும் சிற்சில புனைவுகளை மேற்கொண்டு வெளிவந்த மெய்க்கீர்த்தி என்ற சிறு பிரபந்தத்தின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் காட்டும் இலக்கணத்தைக்கொண்டு அறிவதனைவிட, இலக்கியமாக அமைந்த அவற்றை, முதல் இராசராசன் காலம்முதல் பிற்பட்ட பாண்டியர் காலம் வரை அவை அமைந்த திறம் நோக்கிப் பட்டாங்கு அறிதலே ஏற்புடைத்தாகும். முதல் இராசராசனுக்கு முற்பட்ட காலத்துச் சில சொற்றொடர்களாலேயே அரசர் புகழ் கூறப்பட்டதாகவும், அவன்காலத்திலேயே ஒரு பாடல் வடிவில் அப்புகழ் கூறப்பெறுவதாயிற்று. அவன் மெய்க்கீர்த்தியில் அவன் வென்ற நாடுகளின் பட்டியலையே காணலாம்.

'வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்'

என்பது முதல் இராசராசனுடைய மெய்க்கீர்த்திப் பகுதி.

முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியும் பெரும்பாலும் வென்ற நாடுகளின் பட்டியலைத்தரினும், சிற்சில விளக்கங்களோடு, வென்ற நாடுகளைப் பொழிப்பெதுகை நயம்பட அடைகொடுத்துக் காட்டுகிறது.

'பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவன் பக்கல் தென்னவன் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்திரை ஈழ மண்டலம் முழுதும்
பூசுரர் சேர்நல் கோசல நாடும்
வண்டுறை சோலை தண்ட புத்தியும்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்

முதலிய பகுதிகளை நோக்குக.

முதல் இராசாதிராசன் மெய்க்கீர்த்தி, அவன் செங்கோல் ஓச்சிக் கருங்கலி கடிந்து உறவினர்களை மண்டலிகர்களாக அமர்த்திய செய்தியோடு அவன் பகைவர்களை வென்ற திறத்தை இலக்கியச் சுவைபடப்பேசி அவன் மனுநெறி நின்று அசுவமேதம் செய்து அரசு வீற்றிருந்த பெருமையையும் இயம்புகிறது.

'அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையும் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத்து இழந்துதன்
முடிவிழத் தலைவிரித்து அடிதளர்ந் தோடத்
தொல்லை முல்லையூர் துரத்தி'

'விளங்குமுடி கவித்த வீரஉலா மேகன்
போர்க்களத்து அஞ்சித்தன் கார்க்களி றிழந்து
கௌவையுற் றோடக் காதலி யொடும்தன்
தவ்வையைப் பிடித்துத் தாயைமூக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும் வந்து வாட்டொழில் புரிந்து
வெங்களத் துலந்தஅச் சிங்களத் தரசன்'

என்பன அவன் மெய்க்கீர்த்தித் தொடர்கள்.

விசயராசேந்திரதேவன் மெய்க்கீர்த்தி, அவன் உறவினர்க்கு வழங்கிய பட்டப்பெயர்களையும் அவன் போரிட்ட திறத்தையும் விரித்துரைப்பதோடு, அவன் போர்க்களத்தில் கைப்பற்றிய பொருள்களை,

'கால்பரிந்து ஓடி மேல்கடல் பாயத்
துரத்திய பொழுதுஅச் செருக்களத்து அவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன் மூல
பத்திர சாதி பகட்டரசு அநேகமும்
எட்டுநிரைப் பரிகளும் ஒட்டக நிரைகளும்
வராகவெல் கொடிமுதல் இராசபரிச் சின்னமும்

| | | | |
|---|---|---|---|
| ஒப்பில்சத்தி | யவ்வைசாங் | கப்பைஎன் | றிவர்முதல் |
| தேவியர் | குழாமும் | பாவையர் | ஈட்டமும் |
| இனையன | பிறவும் | முனைவயின் | கொண்டு' |

என்ற தொடர்களால் விளக்கிக்கூறுகிறது.

வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தி மேற்கூறிய செய்திகள் பலவற்றோடு பகைவரை வெருட்டிய திறத்தை,

| | | | |
|---|---|---|---|
| 'முதலி | யான | மதுவணன் | ஓட |
| விரித்த | தலையொடு | விக்கலன் | ஓட |
| செருத்தொழில் | அழிந்து | சிங்களன் | ஓட |
| அண்ணல் | முதலியர் | அனைவரும் | அமர்போர்ப் |
| பண்ணிய | பகடுஇழிந் | தோட | நண்ணிய |
| ஆகவ | மல்லனும் | அவர்க்குமுன் | ஓட |
| வேகவெங் | களிற்றினை | விலக்கி | வாகைகொண்ட |

செய்தி முதலாகிய பல போர்ச்செயல் நிகழ்ச்சிகளையும் விரித்துரைக்கிறது. அதிராசேந்திரன் மெய்க்கீர்த்தியே முதன் முதலாக அவன்தேவி யோடு அரியணையில் அமர்ந்திருந்த செய்தியை

'வீரமும் தியாகமும் ஆரமெனப் புனைந்து'

வீரசிம்மாசனத்து உலக முழுதுடையா ளொடும் வீற்றிருந்தருளிய மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி வர்மரான உடையார் அதி ராசேந்திர தேவர்' என்று குறிப்பிடுகிறது.

முதல் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகள் பல. அவற்றுள் விரிவா னது 'புகழ்சூழ்ந்த புணரி' என்பது. அது முன் கூறப்பட்ட மெய்க்கீர்த் திகள் கூறும் செய்திகளோடு, அம்மன்னன் சிவனைப்போலிருக்க, அவன் தேவிமார் இருவரும் உமையும் கங்கையும்போல இருந்தனர் எனவும், அவருள் ஒருத்தி திருமாலைப் பிரியாத திருமகள் போல அவனோடு அரி யணையில் இருந்தாள் எனவும்,

| | | | |
|---|---|---|---|
| 'சிவனிடத்து | உமையெனத் | தியாக | வல்லி |
| உலக | முடையாள் | இருப்ப | அவளுடன் |
| கங்கைவீற் | றிருந்தென | மங்கையர் | திலதம் |
| ஏழிசை | வல்லபி | ஏழுலகு | முடையாள் |
| வாழி | மலர்ந்தினி | திருப்ப | ஊழியும் |
| திருமால் | அகத்துப் | பிரியாது | என்றும் |
| திருமகள் | இருந்தென | வீரசிம் | மாசனத்து |
| உலகமுடை | யாளொடும் | வீற்றிருந் | தருளின' |

என்ற தொடர்களால் குறிப்பிடுகிறது.

விக்கிரமசோழதேவன் மெய்க்கீர்த்தி, நிலமகள் - திருமகள் - கொற் றவை - கலைமகள் என்பவர்கள் அவனிடம் தங்கியிருந்த செய்தியைக் கவிதை நயம்படக்கூறி, அவன் வெற்றிகளைச்சுட்டி, அவன் நல்லாட்சியை விரித்துப்பேசி, அவன் தில்லைத் திருப்பணியை மிகவிரித்து, அவன் தேவியருக்குப் பல அடைமொழிகள் வகுத்து அவன் தேவியரோடு அரிய ணையில் வீற்றிருந்தவாற்றை வெளிப்படுக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 'தெரிவையர் | திலதம் | தியாக | பதாகை |
| புரிகுழல் | மடப்பிடி | புனிதகுண | வனிதை |
| திரிபுவனம் | முழுதுடையாள் | எனஉடன் | இருப்ப |
| மாதர் | மடமயில் | பூதலத்து | அருந்ததி |
| அரணியல் | கற்பின் | தரணிமுழு | துடையாள் |
| இவன்திரு | மார்வத்து | அருளொடும் | இருப்ப |
| செம்பொன் | வீர | சிம்மா | சனத்துத் |
| திரிபுவனம் | முழுதுடை | யாளொடும் | வீற்றிருந்தருளிய' |

என்ற பகுதியை நோக்குக.

இவ்வாறு சோழர்தம் மெய்க்கீர்த்தி சிறிது சிறிதாக விரிந்தமை கண்டோம். இனி, பாண்டியர்தம் மெய்க்கீர்த்தியை நோக்குவோம்.

பராந்தக பாண்டியன் மெய்க்கீர்த்தி, திருவளர சயம்வளரத் தென் னவர் தம் குலம் வளர வேதம் வளர உலகுதுயர் நீங்க அவன் மதுரையில் அவதரித்தான் எனவும், அளவைகளுக்கு முத்திரை பொறித்தான் என வும், கோயிலுக்குப் பத்து மணிவிளக்குக் கொடுத்தான், அறச்சாலை நிறுவினான் எனவும், பலவெற்றிகள் பெற்றான் எனவும் கூறுவதோடு,

'தேவேந் திரனோடு இனி திருந்து
மன்னர்பிரான் வழுதியர்கோன் வடிம்பலம்ப நின்றருளி
மால்கடலை எறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்து'

ஆண்டான் எனப் புராணகாலச்செய்திகளையும் அவன் கீர்த்தியாகச் சேர்த்துப் பேசுகிறது.

வீரபாண்டியனுடைய மெய்க்கீர்த்தி, பெரும்பாலும் புராணகாலப் பாண்டியர் பெருமையையே அவன் பெருமையாகக் கூறுவதைத்

'தென்மதுராபுரி திருவிளையாட்டத் திற்கண்டு
மாபாரதம் பொருத மன்னர்க்குத் தூதுசென்று
தேவாசுர மதுகைதரித்துத் தேனருமறையுங் கொண்டருளி
வடவரையில் கயல்பொறித்து வானவர்கோன் ஆரம்பூண்டு
திடவாசகக் குறுமுனிபால் செந்தமிழ்நூல் தெரிந்தருளி'

என்ற தொடர்களில் காணலாம். திருமாலுடைய அவதாரச் செய்தியும் இவனுக்கு இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி, அவனுடைய கல்வி நலன் ஆற்றல் செங்கோற் சிறப்பு ஆகியவற்றைத் தொடக்கத்தில் விரித்துரைத்து, இடையே அவன் வெற்றிகளைக்கூறி, அவன் திருவரங் கப்பெருங் கோயிலுக்குச்செய்த திருப்பணியை விளக்கி, அரியணையில் உலகுமுழுதுடையாளொடும் வீற்றிருந்த செய்தியோடு நிறைவுறுகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி,

'ஒருகுடை நீழல் இருநிலம் குளிர
மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியும் செய்வினை இயற்ற
அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ
எண்டிசை யளவும் சக்கரஞ் செல்ல'

அவன் நாடாண்டதிறம், அவன் சோழநாட்டை அழித்ததிறம், வீராபிடேகம் செய்துகொண்டு தில்லைத்திருநடங்கண்ட செய்தி, சோழனுக்கு நாட்டை மீட்டும் அளித்த செய்தி, உலகமுழுதுடையாளொடும் அரியணையில் அமர்ந்த செய்தி ஆகியவற்றை விரித்துரைக்கிறது.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் மெய்க்கீர்த்தி, அவன், செல்வம், கல்வி, வீரம், இருமொழிப்புலமை, சிவபக்தி, நல்லாட்சி இவற்றைச் சுட்டி அவன் வெற்றிகள் சிலவற்றைக் குறித்து, அவன் பிரமதேயங்கள் ஆகிய சதுர்வேதி மங்கலங்கள் அமைத்தமை, திருநெல்வேலி குற்ருலம் ஆகியவற்றிற்குச் செய்த அறச்செயல்கள் என்பனவற்றை விளக்கி தென்காசிப் பெருங்கோயில் திருப்பணியை விளக்கிச்செல்கிறது.

இம்மெய்க்கீர்த்தி, அரசர் திறமை குறையக்குறையச் சுருங்கி, பழங்கால அடைமொழி வடிவை மீண்டும் பெருவதாயிற்று.

16-ஆம் நூற்ருண்டின் இடையில் வாழ்ந்த பராக்கிரமபாண்டிய தேவன் "ஸ்ரீ புவனேசவீர சந்த்ரகுல ப்ரதீப கோஜடிலவர்ம திரிபுவன சக்ரவர்த்தி கோநேரின்மை கொண்டான் பெருமாள் அபிராம பராக்ரம பாண்டியதேவர் நந்தனரான பராக்ரம பாண்டியதேவன்" என்று புனைந்துரை சிவணிய அடைகளால் குறிப்பிடப்படுகிருன்.

இவ்வாறு சங்க காலத்தில் பரவலும் புகழ்ச்சியும் வேண்டிய மன்னர் திறங்களை இறையவரோடு ஒப்பிட்டுப் பூவை நிலையாகப் பாடப்பட்டும் புறத்துறைச் செய்திகள் பல அடுத்து யாக்கப்பட்டும் அமைந்த பாடல்கள், இடைக்காலத்தில் குலச்சிறப்பைச் சுட்டும் உரைநடை அடைமொழிகளாகக் குறுகிப் பிறகு இராசராசன் காலத்துக்குமுன் குலப்பெருமைகளை கிரல்படக்கூறும் சாசனங்களாக விரிந்து மெய்க்கீர்த்தி மாலை என்ற பெயருக்கு உரியனவாகி, பின் இராசராசன் காலம் தொட்டு, வென்ற நாடுகளின் பட்டியலோடு மெய்க்கீர்த்தி என்ற பெயரில் புத்துயிர் பெற்றுச் சிறிது சிறிதாக வளர்ந்து இலக்கிய நயம்பெற ஆட்சிச் சிறப்பு - போர்த்திறம் - அறச்செயல்களின் விளக்கம் - இவற்றைக்கூறும் பெரும் பாடல்களாகி, மீண்டும் பழைய அடைமொழி யளவில் சுருங்கி, அரசனுடைய பட்டப்பெயரோடு ஆட்சியாண்டினைக் குறிப்பதால், வரலாறு உணர்தற்கு இன்றியமையாத கருவிகளாக அமைந்து பயன்படுகின்றன என்பதை ஓராற்ருன் உணரலாம். இலக்கியங்களாகிய மெய்க்கீர்த்திகளை நோக்க அவற்றிற்கு இலக்கணம் வரைந்த நூற்பாக்கள் நிரம்பிய இலக்கணத்தன அல்ல என்பதும் பெறப்படும்.

இனி, மெய்க்கீர்த்தியின் இலக்கணத்தை,

'முதலில்மங் கலச்சொல் முறையுளிச் சிவண
இதமுறு மன்னனின் இயல்நலன் சொல்லி
வென்ற பிறபுலம் விதியுளிக் கிளந்தும்
ஒன்றிய அவற்றின் உயர்சிறப் புரைத்தும்
போர்க்கள நிகழ்ச்சியைப் புகன்றுநனி விளக்கியும்
போர்க்களம் கவர்பொருள் புரையறப் புகன்றும்
பகைவர்க்கு அருளிய பலசெயல் பகர்ந்தும்
நகைவர்க்கு வழங்கும் நலன்பல நாட்டியும்
அறச்செயல் பலவும் அமைவுற அறைந்தும்
மறச்செயல் தமையும் மாண்பெனக் கிளத்தியும்
உறவினர்க்கு உதவும் உயர்ச்சியைச் சுட்டியும்
ஏற்றமிகு செங்கோல் போற்றிப் பேசியும்
புராணச் செய்தியைப் புரவலர்க்கு ஏற்றியும்
முன்னவர் செயல்களைப் பின்னவர்க்கு இசைத்தும்
தேவியர் நலன்கள் மேவின புகழ்ந்தும்
முட்டறு சிறப்பின் பட்டத் தரசியொடு
அரியணைப் பொலிவதைத் தெரிவுறச் சாற்றியும்
மன்னவன் பட்டம் மரபுளி தெரித்தும்
ஆட்சி யாண்டினை அமைவுற ஓதியும்
நாற்சீர் அடியான் நவிலும் செய்யுளில்
இவற்றில் சிலவும் பலவும் தெரித்து
அமைதல்மெய்க் கீர்த்தி அமைவா கும்மே'

என்று ஓராற்ருன் கூறலாம்.


## ஸ்ரீ சுந்தரேசுவரஸ்வாமி ஆலயம்

### நன்னிலம் வட்டம் காட்டூர் தஞ்சை மாவட்டம்

ஆரூர் - குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரிலிருந்து மேற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மேற்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயத்திலுறையும் ஆண்டவனின் பெயர் சுந்தரேசுவரர், இறைவி அபிராமி அம்மன்; ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயத்திற்கு மேற்கே ஸ்ரீ நீலமேகப் பெருமாள் ஆலயமும் ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி ஆலயமும் அமைந்துள்ளன. இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் திருமண மண்டபம் ஒன்று நிறுவ ஏற்பாடாகி வருகிறது.

M. R. சங்கரன் பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

# இராசராச மாமன்னன் கீர்த்தி

மறைத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்
சிவராஜயோக மடம், பூம்புகார், மேலையூர்.

*எண்சீரடி ஆசிரியவிருத்தம்*

மாநிலத்தில் உயிர்க்குழவி தனைமுன் பெற்றாள்
மன்னியசெந் தமிழ்த்தாயென் றறிஞர் சொல்வார்
வானுறவோங் கியவரையும் கடலும் எல்லாம்
மன்னியசெந் தமிழகத்தின் தொன்மை செப்பும்
கானகத்து விலங்கென்னப் பச்சூன் தின்று
காசினியோர் திரிந்தலைந்த கடைநாள் தன்னில்
நானிலமாம் பெருமனைமீ தெங்கும் சென்றே
நாகரிக விளக்கேற்றி வைத்தாள் என்தாய். 1

ஆயிரம்பல் லாயிரம்ஆண் டுகட்கு முன்னே
அருந்தமிழ்மா நிலமாண்ட மூவர் தம்மில்
தூயபுகழ்ச் சோழர்குலம் விளக்க வந்த
சுடர்ப் பகுதி யெனத்தழைத்த ராசராசன்
பாய்புலிசேர் கொடிஉயர்த்திப் பகரும் ஆத்திப்
பைந்தாரும் செம்பொன்மணி முடியும் சூடி
மாயிருஞா லம்காணு மன்னர் மன்னன்
மாவீரன் தமிழகத்தே வாழ்ந்தான் மன்னோ. 2

வளநாடும் கூற்றமும்சிற் றூரும் என்ன
மாநிலத்தைப் பிரித்தங்கே தேர்தல் வைத்தான்
களவுமுதற் குற்றமுளோர் தேர்தல் தன்னில்
கலந்திடவே கூடாதென் றொதுக்கி வைத்தான்
விளைநிலமும் பாலாகும் பொன்னும் மற்றை
விளங்கிழையும் கோயில்தொறும் மிகுத்து வைத்தான்
குளிர்நிழலோ டகன்றநெடுஞ் சாலை கோலிக்
குவலயத்தை அளந்தறிந்தே இறைவி தித்தான், 3

காவிரியின் கரையெடுத்தும் கால்கள் தொட்டும்
கடும்புனலார் நீத்தத்தைத் தேக்கி வைத்தும்
தீவிரமாம் சாகுபடித் திட்டம் தன்னைச்
செந்தமிழ்முன் னாட்சோழன் தொடங்கி வைத்தான்
பூவிரியும் வளமறியாப் பொட்டல் எல்லாம்
பொன்போலும் விளைநிலமாம் புரட்சி செய்தான்
காவிரிப்பூம் பட்டினத்தை உலகு சூழும்
கணிப்பிலதோர் வாணிபகேந் திரமாக் கண்டான். 4

கண்ணிலராய் உறுப்பிலராய் வினையைக் காட்டிக்
கடவுள்கெடுத் தாரையெலாம் வாழ வைத்தான்
புண்ணியத்தொண் டவர்கள்செயப் புதுமை செய்தான்
பூதலத்தி லிவனைப்போல் யாரே செய்தார்
பண்ணமரும் இன்மொழியார் பாடி ஆடிப்
பத்திமையா லிறைவழிபா டாற்ற வைத்தான்
நண்ணரிய கடல்கடந்து கொற்றம் கொண்டான்
நாவசைய நானிலமன் றசைந்த தம்மா. 5

பொறியியலார் பேரறிவின் முதிர்ச்சி கண்டோம்
பொங்குமெழிற் கலைச்செல்வப் புதுமை கண்டோம்
மறிவிரவு திருக்கரத்தான் எனையாட் கொண்ட
மணிமிடற்றான் திருவருளின் வாய்மை கண்டோம்
பறையொலியும் சங்கொலியும் முறைதே வாரப்
பண்ணொலியும் நாதசுர ஒலியும் கேட்டோம்
தரைபுகழும் ராசரேச் சுரமாம் கோயில்
தனிலந்த மாமன்னன் உள்ளம் கண்டோம். 6

இரக்கத்தால் வீரத்தால் ஆற்றல் தன்னால்
ஏறுயர்த்த பெருமானை போல்வான் அந்நாள்
உருக்கத்தால் திருமுறைகள் தன்னைத் தேடி
உலகமெலாம் பயன்பெறுமா செய்தான் அம்மா
முருக்கம்பூ தனைநிகர்மெல் லிதழ்ச்செவ் வாயின்
மொய்குழலார் மறுகுதொறும் மறுகச் செய்தான்
குருக்கத்தி வளர்பொழில்சூழ் தஞ்சைக் கோயில்
குவலயத்தே தமிழ்க்கொடியை உயர்த்தும் கோயில். 7

பொருள்வளத்தால் கல்வியினால் நாளும் நாளும்
புதுமைதரும் விஞ்ஞான முதிர்ச்சி தன்னால்
மருவலார் தமைப்பெருக்கும் பதவி தன்னால்
மனத்தமைதி ஒருபோதும் காண மாட்டார்

தெருள்வளரும் மனத் தமைதி வேண்டுவார்கள்
திருவருளே கதியாவார் என்னும் உண்மை
குருமணிசேர் முடிசூடி உலகம் ஆண்ட
கொற்றவனுர் வாழ்வெடுத்துக் கூறும் அம்மா. 8

அறவாணன் பேரரசன் ஒழுக்கம் குன்று
அருங்கலைஞன் அருளாளன் அனைத்தும் ஆன
திறலாளன் அவன் பிறந்து சிறந்த நாட்டில்
சிற்றடியோம் பிறந்ததனுல் பெருமை பெற்ருேம்
மறவாதே திருவருளை வணங்கி வாழ்த்தி
மடிமையையும் அடிமையையும் வெட்டி வீழ்த்தித்
திறலாளன் தமிழ்மகனென் றுலகம் போற்றச்
செந்தமிழ்சேர் மக்களெலாம் சிந்தை செய்யீர். 9

காவிரிசூழ் வளநாடு தந்த செம்மல்
கன்னிச்செந் தமிழன்னை தவப்பு தல்வன்
நாவலம்கொண் டேத்தொண்ணு மன்னர் மன்னன்
நாம்பரவு புகழ்ச்சோழன் ராச ராசன்
பூவலம்செய் கதிரவன்போல் மதியம் போலப்
பொன்னெடும்கோட் டிமயம்போல் பொலிந்து வாழ்க
பாவிரிசெந் தமிழ்வாழ்க தமிழர் வாழ்க
பரமசிவன் திருவருளால் வாழ்க ஞாலம். 10


## சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதி அம்பாள் திருக்கோயில்
### திருநெல்வேலி

பாண்டி நாட்டில் பதினுன்கு சிவஸ்தலங்களில் ஒன்ருனதும் 14 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளதும் 5 கோபுரங்கள், 23 விமானங்களைக் கொண்டதுமான இப்பழம்பெரும் கோயில் திருப்பணிக்கு உதவுங்கள்.

வி. டி. ஏ. சேவுகபாண்டியன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
ப. இலக்குமணன் (தலைவர்)
எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை
எஸ். எம். ஏ. நயினுர்
பி. சித்திரைப்பாண்டியன்
வாமசுந்தரம் அம்மையார்


# தேடி எடுத்துத் திருமுறை அளித்தோன்


ப. பக்கிரிசாமி,
வெற்றிவேல் பிரஸ், தஞ்சை.


*‘சிலமுறை கேட்டுப் பலமுறை ஓதத்*
*திருமுறை தந்தோன் தீந்தமிழ் நாட்டின்*
*சீர்மிகு வேந்தன் சிவபாத சேகரன்’.*

நற்றமிழ் நாட்டினைச் சிறப்பும் கீர்த்தியும் மிகப் பல்லாண்டுகள் ஆண்ட சோழ மன்னர்கள் பலராவர். அவர்தம் புகழ் ஏட்டிலும், கல்வெட்டுக்களிலும்தான் இடம் பெற்றுள்ளது. தமிழன் எனத்தக்கோன் ஒவ்வொருவனுடைய உள்ள ஏட்டிலும், உறையும் வீட்டிலும், கலைகள் போற்றும் நாட்டிலும் இராசராசனுடைய குன்ருப் புகழே இடம் பெற்று மிளிர்தலைக் காண்கின்ருேம்.

இராசராசனுக்கு இவ்விறவா நற்புகழ் வந்தது எதனுல்? பற்பல்கால் பகைவரை வென்று வாகை சூடிய அதனுல் வந்ததா? நீதியும் நேர்மையும், பாசமும், பற்றும் தர்மமும் நற்கருமமும் சிறக்க நாடாண்டு நல்லாட்சி செய்த அதனுல் வந்ததா? அலைகடல் நடுவுள் பல கலம் செலுத்தி முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் வென்று ஆள்பவர் கலக்குறுத்த அலைபெற்ற அப்பகுதிகள் பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டினையாது காத்த அதனுல் வந்ததா? இம்மன்னற்கு இறவாப் புகழ் வந்தது இவைகளால் அன்று. இப்பெருமைகள் யாவும் இம் மன்னற்கு மன நிறைவை அளிக்கவில்லை.

ஊழ்வினை வயத்தால், தெய்விகப் பாடல்கள் சிலவற்றைச் சான்ருேர் சிலர் வாயிலாகக் கேட்கும் வாய்ப்பினை இம் மன்னன் பெற்ருனுக. அவ் வாய்ப்பு இவன் உள்ளத்தில் சலனங்கள் சிலவற்றை உருவாக்கியது.

*‘ஒருமை பெண்மையுடையன் சடையன்*
*விடையூரும் இவனென்ன*
*அருமையாக உரை செய்ய அமர்ந்தென*
*துள்ளங்கவர் கள்வன்*
*...................பெம்மான் இவனன்றே*

ஞானசம்பந்தப் பெருமானுடைய குருவருட் பாடலாகிய இவ்வாரமுதைச் செவிமடுத்த அரசன், உள்ளம் நெகிழ்ந்து தளையவிழ்ந்து தாமரைபோல் மலர, அப்பாடலை விண்ணப்பித்த சான்ருேரை அணுகி ‘சான்றீர்! இப்பாடல் எப்போது யாரால் எங்கே பாடப்பட்டது?’ என்று வினவினுன்.

அரசற்கு மறுமாற்றம் தரும் முகத்தான் அச்சான்றவர் ‘வேதநெறி தழைத்தோங்க, சைவத்துறை விளங்கக் கவுணியர்குல தீபமாய்த் தோன்றிப் பரமனருள் பெற்றுப் பார்ப்பதியால் பொற்கிண்ணத்தில் ஞானப் பால் அளிக்கப் பெற்று, அப் பாலை உண்ட பாலகன் பாலருவாயனுகிய ஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாடல் இது’ என்று தொடங்கி அவர்தம் வரலாற்றை விரித்து உரைத்தார்.

தன்னைப் புகழும் மெய்க் கீர்த்தியையே கேட்கும் வாய்ப்பினை இதுகாறும் பெற்றிருந்த மன்னன், சிவபெருமானுடைய திருவருட்பெருக்கால் வெளிப்பட்ட தீந்தமிழ்த் திருப்பதிகங்களும் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது. மேலும் ஒரு பாடலானது அவன் சிந்தையைக் குளிர்வித்தது.

‘நாளாய போகாமே
நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்
மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும்
கேடுபடாத் திறம்அருளி
கோளாயநீ.................’

ஓதக் கேட்ட மன்னன் உள்ளுருகிக் கண்ணீர் வடித்து இப் பாடலைத் தன் உள்ளத்துப் பதியச் செய்தான். பல்லாண்டுக்

காலம் பாரகம் முழுவதும் ஆண்ட செல்வத்தால் ஏற்பட்டிராத மன நிறைவை இவ்வருட் பாடல்களால் பெற்ற மன்னன் ஆனந்தப்பட்டான். மன்னன் பிரமபுரம் நோக்கி வந்து இப்பாடல்கள் பற்றி உசாவினான்; பயனில்லை.

சின்னாட்களில் மன்னன் மீண்டும் சில பாடல்கள் கேட்கும் வாய்ப்பினைப்பெற்றான்.

'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்து அறியேன்
வஞ்சம் இதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
... ... ... ...

தூண்டு தவவிளக்காம் திலகவதியார் திருவைந்தெழுத்தோதி, திருவாளன் திருநீற்றைக் கொடுக்கவே, பெருவாழ்வு வந்தது எனப்பெற்று அங்கு உருவார அணிந்து, சமண இருள் அகலச் சிவநெறி நின்று சிவானந்தவாரியில் திளைத்த நாவுக்கரசர் வரலாற்றையும் மன்னன் அறிந்தான். தன்னை மறந்த நிலையில் மன்னன் இப்பெருமை சேர் பாடல்களைப் பாடி ஆனந்தக் களிப்பெய்தினான்.

திருவாரூர் சென்று தியாகேசப் பெருமானை வணங்கிய மன்னன் செவியில் தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் பாடல்கள் சில சார்ந்தன.

'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தியெழும் பழைய வல்வினை மூடாமல்
சிந்தை பரா...........'
'தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்'

என்ற தொடரை அடியொற்றித் திருத்தொண்டத்தொகை பாடியளித்த திருநாவலூராளி சரிதவகையதனை அறிந்த மன்னன், இம்மூவர் தந்த செந்தமிழ் முழுதும் காணாத வரையில் பசிநோக்கானாய்க் கண்துஞ்சானாய் முயன்று வந்தான்.

இந்நாளில், திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையாரின் திருவருள்பெற்று இலங்கிய நம்பியாண்டார் நம்பியின்பெருமையைப் பலரும் கூறக்கேட்டு, அவரை முன்னிட்டு விநாயகப் பெருமான் அருளால் மூவர் தமிழும் பெறலாம் என்ற துணிவோடு, எண்ணிலடங்காப் பண்ணிகாரங்களும் பழவகைகளும் கொணர்ந்து, நம்பியை வேண்டி, விநாயகப் பெருமானுக்குப் படைத்து, அப்பெருமான் அருளால் மூவர் தமிழும் தேடித் தந்தருளுமாறு பெருமன்னன் அந்த அடியாரின் அடிபணிந்தான்.

நம்பியும் தடைகளுக்குத் தடைசெய்யும் விநாயகப்பெருமான் திருவருளால் தில்லைக் கோயிலின் திருவறையில் மூவர் தமிழும் உள்ளவாற்றை அறிந்து மன்னனிடம் கூறினார்.

மன்னனும் தில்லைபோந்து முதல்வன் தாள் பணிந்து, மூவராம் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் படிவங்களைப் பல்லக்கில் அலங்கரித்து, திருமுறைகள் திருக்காப்பிடப்பட்ட திருவறையின்முன் பல்லக்கை நிறுத்தி, 'எம்பெருமானே! சித்தமெலாம் உருக்கு தமிழ்பாடிய மூவர் வந்துள்ளனர். கதவம் திறந்தருள்செய்க' என்று வேண்டினனாகக் கதவம் திறந்தது. மூவர் தேவாரங்களில் இக்கலியுகத்துக்குப் போதுமான அளவே கிட்டியது. முழுதும் கிட்டவில்லையே என்ற மன்னன் மன மறுக்கத்தை 'இக்கலியுகத்திற்கு இவை போதுமானவை' என்ற அசரீரிச் சொல் அகற்றியது. நம்பியின் அடிபணிந்த மன்னன் கூத்தப்பிரான் சந்நிதிக்கு சென்று ஆநந்தக் கூத்தாடினான்.

ஈசன் திருவருள் முன்நிற்க, பாணர் குலப் பெண்ணொருத்தியால் தேவாரப் பாடல்களுக்குப் பண்கள் அமைக்கப்பட்டன.

மன்னன் தஞ்சையில் தான் கண்ட தக்ஷிணமேருவிடங்கர் திருமுன்பு நாடோறும் திருப்பதியங்கள் விண்ணப்பம் செய்ய நாற்பத்தெண்மரையும், நிலையாக உடுக்கை வாசிப்பான் ஒருவனையும், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனையும் நிறுவி, இப்பேரறம் நிலைத்திருக்க ஏற்பாடு செய்தான்.

இப்பெருமைசேர் மன்னன் சிவபாதசேகரனுடைய பிறந்தநாள் பிரகதீசுவரரின் திவ்விய அபிடேகதினமாகக் கொண்டாடப்பெறுகிறது.

'ஆழ்க தீய எலாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.'

# தேவாரத்திருமுறைகளின் சிறப்பு

ந. மு. கோவிந்தராய நாட்டார்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. இவற்றில் தேவாரத் திருமுறைகள் முதல் 7. இவற்றில் திருஞானசம்பந்தர் இயற்றியவை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் இயற்றியவை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் இயற்றியவை ஏழாந் திருமுறையாகவும் ஆன்றோரால் வகுக்கப்பட்டு உள்ளன. இவர்களுடைய திருப்பதிகங்களின் எண்ணிக்கை முறையே 384, 307, 100 ஆகும்.

நம்பியாண்டார் நம்பியின் உதவியால் சோழப் பேரரசன் இராசராசன் தில்லையில் தேவாரத் திருவேடுகளை எடுத்தஞான்று செல்லால் அழிந்தவை போக எஞ்சியிருந்தவையே இவை. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய திருமுறை கண்ட புராணத்தில் திருஞானசம்பந்தர் இயற்றிய பதிகங்கள் 16000 எனவும், திருநாவுக்கரசர் இயற்றிய பதிகங்கள் 49000 எனவும், சுந்தரர் இயற்றியன 38000 எனவும் கூறப்பட்டுள்ளன.

சுந்தரர் திருநின்றியூர்த் திருப்பதிகத்தில், "இணைகொள் ஏழெழு நூறிரும்பனுவல் ஈன்றவன் திருநாவுக்கரையன்" எனக் கூறி இருத்தலால் இவ் வரலாறு உண்மையாக இருக்கலாமோ என்ற ஐயம் எழுகின்றது. எனினும் இத் திருப்பதிகத்தில் கூறப்பெற்றுள்ள எண்ணிக்கைக்கும் உமாபதி சிவாச்சாரியார் கூறியுள்ள எண்ணிக்கைக்கும் பெரிய வேறுபாடு காணப்படுகிறது.

உமாபதி சிவாச்சாரியார் கூறியுள்ளவற்றை உண்மையெனக் கொள்வோமாயின் மூவரும் இயற்றிய பாசுரங்களின் எண்ணிக்கை: முறையே ஏறக்குறைய 176000; 496000; 380000 ஆகும். கம்பர் இராமாயணத்தின் பாடல்களின் எண்ணிக்கை பதினாயிரத்தில் அடங்கியது. மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடல்கள் ஒரு நூறாயிரம் ஆகும் எனத்தமிழறிஞர் வியப்புடன் கூறுவதுண்டு. மூவர்பாடல்களின் எண்ணிக்கையைச் சற்று குறைவாக மதிப்பிட்டாலும், இவற்றுடன் ஒப்பிட்டால், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடல்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்ததேயாகும்.

தில்லையில் மூவர் தேவாரத் திருவேடுகளை, மூடியிருந்த மண்மலையைக் கண்டு இராசராசன் கவன்றபோது, "மூவர் பாடல், வேய்ந்தனபோல் மண்மூடச்செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என்ற வானொலி எழுந்தது' எனத் திருமுறைகண்ட புராணம் கூறும். இதனைக் கேள்வியுற்ற வேந்தன் சோர்வு நீங்கினான். "வேண்டுவன வைத்தோம்" என்பதும் இக்காலத்திற்கு வேண்டாக் கூற்றாக எமக்குத் தோன்றுகின்றது. ஏனெனில் இக்காலத் தமிழ்ப் புலவர்களில் எஞ்சியுள்ள மூவர் தேவாரம் முழுதும் படித்துணர்ந்தோர் எத்துணையோர்? தேவாரம் பாடும் ஓதுவார்களும் சிற்சில பதிகங்களில் முதல் ஒன்று அல்லது இரண்டு பாசுரங்களையும் இறுதிப் பாசுரத்தையும் மாத்திரமே மனப்பாடஞ்செய்து பாடுகின்றனர். சில பதிகங்களையாவது முழுதும் பாடுவோர் உளரோ?

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்

எனத் தொல்காப்பியம் சாற்றும். உண்மையில் மூவர் தேவாரமும் முதல் நூல்கள் என்று சொல்லத்தக்க மாண்புடையன. ஏனெனில், இவை இறைவன் ஆணையிற் பிறந்தவை. உமைப்பால் உண்டமையால் அன்றே திருஞானசம்பந்தர் உவமைவி

லாக் கலேஞானத்தையும் சிவஞானத்தையும் பெற்ருர். "முன்பெனேப் பித்தன் என்றே மொழிந்தனே ஆதலாலே, என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்'' எனச் சிவ பெருமான் அருளியதாலன்ருே சுந்தரர் பித்தா என்று தொடங்கிப் பாடினுர். செந்தமிழின் சொல்வளம் பொருந்திய பதிகத் தொடை பாடியதனுலன்ருே சிவபெருமான் மருணீக்கியாருக்கு நாவுக்கரசு எனும் பெயரைச் சூட்டினுர். சம்பந்தர், சுந்தரர் பாடல்களே நாவுக்கரசர் பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நாவுக்கரசர் பாடல்களில் வடசொல் அருகியிருத்தலேக் காணலாகும். ஆதலின் 'செந்தமிழ்த்தொடை' என்பது மிகப் பொருத்தமானதே. திருஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகம் ஒவ்வொன்றின் திருக்கடைக்காப்புப் பாசுரமும், 'ஆணே நமதே'

" சம்பந்தன் சொன்ன கலேகள்
இவைவல்லார் கவலேகழிவாரே "

' சம்பந்தன் அடிஞானம் வல்லார்
அடிசேர் வார்களே'

' சம்பந்தன் சந்தம் இவைவல்லார்
தடுமாற் றறுப்பாரே'

' நலமிகுஞான சம்பந்தன் சொன்ன
பலமிகு தமிழவை பத்தும்வல்லார்
உலகுறு புகழிஞே டோங்குவரே'

போன்ற சொற்ருெடர்களால் முடிக்கப்பெற்றிருப்பதனுல் இவை இறைவன் ஆணேயிற் கூறப்பெற்றவை என்பது போதரும். சுந்தரரும் இவ்வாறே கூறிச் சென்றுள்ளார்.

இனி இறைவனுல் அருளப்பெற்றவை என்ற வடமொழி வேதங்களேப் பற்றி, திருமதி சகுந்தலாராவ் சாஸ்திரி கூறியிருப்பதனே இவற்றிஞேடு ஒப்பு நோக்குவோம். இப்பெண்மணி வடமொழியிலும் ஆங்கிலத்திலும் M. A. பட்டம் பெற்றவர். ஆக்சுபோர்டு பல்கலேக் கழகத்தின் B. LITT. பட்டம் பெற்றவர். கல்கத்தா அரசினர் சமஸ்கிருத கல்லூரியின் 'சாஸ்திரி' 'வேத தீர்த்தா' என்ற பட்டங்களேயும் பெற்றவர். நான்கு வேதங்களேப்பற்றியும் சிறந்த பன்னிரு உபநிடதங்களேப்பற்றியும் இவர் எழுதியுள்ள நூலில் வேதங்கள் இறைவனுல் அருளப்பெற்றன என்ற கொள்கையை மறுத்து இவை பல முனிவர்களால் பல காலங்களில் பாடப்பெற்றவை என்பதனே அகச்சான்றுகள் பலகாட்டி நிறுவியுள்ளார். இவ்வேதப் பாடல்கள், இந்திரன், அக்கினி, வருணன், வாயு, எமன், சூரியன், சோமா, பிரசாபதி, விட்டுணு, உருத்திரன் ஆகியோரை உள்ளிட்ட முப்பத்துமூன்று தேவர்களேப் பற்றியன என்றும் சகுந்தலாராவ் சாஸ்திரி எழுதியுள்ளார். இவ்வொப்புநோக்கினுல் ஒரே இறை வணக்கம் கூறும் திருமுறைகளுக்கும் பல தெய்வ வணக்கம் கூறும் வேதங்களுக்கும் உள்ள பெருமை சிறுமைகளே உணர்வது அறிஞர் கடனுகும்.

திருமுறைகள் யாப்பிலக்கணம் வழுவாத பல்வகை இசைப்பாவினங்களும், உவமை, உருவகம், சிலேடைபோன்ற அணி நலங்களும், இயற்கை வருணனே முதலிய இலக்கிய நயங்களும், உயிர்க்கு உறுதி பயக்கும் சான்ற அறிவுரைகளும் நிறைந்தவை. இவற்றிற்குத் தனித்தனி எடுத்துக்காட்டுகள் கொடுப்பின் இக்கட்டுரை மிக விரியுமாகலின் ஒரு சிலவே கீழே தருகின்ருேம்:

யாப்பியல் : சுந்தரர் தேவாரம் கலிவிருத்தங்களும், கொச்சகக்கலிகளும், கலிநிலேத்துறைகளும், கட்டளேக் கலித்துறைகளும், அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களும் நிறைந்தவை.

திருநாவுக்கரசர் பாசுரங்கள் பண்வரையறை செய்யப்பெற்றவை. கலிவிருத்தம், கலிநிலேத்துறை, கொச்சகக் கலிப்பா, அறுசீர்விருத்தம் ஆகிய பாவினங்களேச் சார்ந்தவை. குறுந்தொகைப் பாசுரங்கள் கலிவிருத்தங்களாகும். நேரிசைப் பாசுரங்கள் அறுசீர் விருத்தங்களாகும். திருவிருத்தப் பாசுரங்கள் கட்டளேக் கலித்துறைகளாகும். திருத்தாண்டகப் பாசுரங்கள், அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்கள். திருஞானசம்பந்தர் பாசுரங்கள் எல்லாம் பண்வரையறை செய்யப் பெற்றவை. சில பாசுரங்கள் நான்கசை வஞ்சிப்பாக்களாயமைந்துள்ளன. சில பாசுரங்கள் நான்குசீர், முச்சீர், நான்குசீர், முச்சீர்களாலாய நாலடிப் பாடல்களாயுள்ளன. சில பாசுரங்கள் நாலடிமேல் ஈரடி வைப்பாயுள்ளன. சில பதிகங்கள், யமகமாகவும், மாலே மாற்றுக்களாகவும், சக்கர மாற்றுக்களாகவும், கோமுத்திரிகளாகவும் அமைந்துள்ளன. புலமை மிக்க தமிழறிஞர்கள் இவற்றைப் படித்தறிந்து திருஞானசம்பந்தரின் செய்யுளியற்றும் சதுரப்பாட்டை உணர்வார்களாக.

## இயற்கை வருணனே :

*திருஞான சம்பந்நர்*

'கொங்காளப்பொழில் நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல்நீங்கிச்
செங்கால்நல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே.'
' இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி இரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே.'
' தாழையிள நீர்முதிய காய்கமுகின்
வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே.'

## நெஞ்சறிவுறூஉ :

'பவனமாய்ச் சோடையாய் நாவெழாப்
பஞ்சுதோய்ச் சட்டவுண்டு
சிவனதாள் சிந்தியாப் பேதைமார்
போலநீ வெள்கிஞயே'
' நீதியால் வாழ்நிலே நாள்செலா
நின்றன நித்தநோய்கள்
வாதியா ஆதலால் நாளும்நாள்
இன்பமே மருவிஞயே'
'செடிகொள் நோயாக்கையம் பாம்பின்வாய்த்
தேரைவாய்ச் சிறுபரவை
கடிகொள் பூந்தேன் சுவைத்தின்புற
லாமென்று கருதிஞயே'

## அறிவுரை :

' ஆட்பாலவர்க ளுக்கருளும்
வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லே
கிளக்க வேண்டா
கோட்பாலனவும் விலேயுங்
குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித்
தலேநின்றிவை கேட்கதக்கார்,'

' ஏதுக்களாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன்
எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர்
மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள்மிக் கீர்இறையே
வந்து சார்மின்களே.'

## அறிவுரை :

*திருநாவுக்கரசர்*

' குறிகளும் மடையாளமுங் கோயிலும்
நெறிகளும் மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
குறியிலீர்மன மென்கொல் புகாததே.'

' நெக்குநெக்கு நிலேபவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்ஞர் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்குநிற்பர் அவர்தம்மை நாணியே.'

' ஒன்றியிருந்து நிலேமின்கள்
உந்தமக் கூனமில்லே
கன்றியகாலனேக் காலாற்
கடிந்தான் அடியவர்க்காச்
சென்றுதொழு மின்கள்தில்லேயுட்
சிற்றம்பலத்து நட்டம்
என்றுவந்தா யென்னு
மெம்பெரு மான்றன் திருக்குறிப்பே.'

மூவர் நிகழ்த்தியனவும், மூவர்பொருட்டு நிகழ்ந்தனவுமாகிய அற்புதச் செயல்களுக்கு அகச்சான்றுகள் சில கீழே தரப்படுகின்றன.

*திருஞானசம்பந்தர்*

(உமை தமக்கு பொற்கிண்ணத்தில் பால் கொடுத்தது)

' போதையார் பொற்கிண்ணத்
தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தானெனே யாண்டவன்.'

(தாம் பாலனுந் தன்மையினேச் சுட்டியன)

' பாலனுந் தொண்டுசெய்து
பண்டும் இன்றும் உன்னேயே.'
' பால்நல் வாயொரு பாலன்
ஈங்கிவன் என்று நீபரிவெய்திடேல்'

(திருஞானசம்பந்தருக்கு இறைவன் தாளம் ஈந்ததைச் சுந்தரர் சுட்டியது)

' நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனே.'

(சம்பந்தருக்கு ஆயிரம்பொன் அருளியதனை நாவுக்கரசர் சுட்டியது)

‘காயிரும் பொழில் சூழ்ந்த
கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறையனரே’

(மறைக்கதவை தாம் திறக்கவும் திருஞானசம்பந்தர் அடைக்கவும் பாடிய வரலாற்றை நாவுக்கரசர் சுட்டியது)

‘திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தாருந் நின்ருர்’

(பாண்டியன் வெப்புநோய் தீர்த்தது)

‘தேற்றித் தென்னன் உடலுற்ற
தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல் பத்தும் வல்லார்
நல்லவர் தாமே.’

(தேவார ஏட்டினைத் தீயிலிட்டது)

“கொற்றவன் எதிரிடை
எரியினிலிட இவைகூறிய”

**திருநாவுக்கரசர் :**

(நஞ்சுகலந்த பாற்சோறு அமுதமாகியது)

“வஞ்சனைப் பாற்சோருக்கி
வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுதாக்கு வித்தார்
நனிபள்ளி அடிகளாரே”

(கல்லிற் பூட்டி கடலில் விட்டது)

“கல்லினே டெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லைநீர்புக நூக்க வென்வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக்குடியரன்
நல்லநாமம் நவிற்றி யுய்ந்தேனன்றே”

**சுந்தரர் :**

(ஆவணங்காட்டித் தடுத்தாட் கொண்டது)

“வெண்ணெய்நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங்காட்டி
யடியனுவென்னை ஆளதுகொண்ட”

(தோழமை கொண்டதும்
பரவையாரிடம் தூதனுப்பியதும்)

“அடியேற்கு எளிவந்த தூதனைத்தன்னைத்
தோழமை யருளி”

(சங்கிலிக்காக சுந்தரர்
கண்ணை அளித்தமை)

“சங்கிலிக்கா வென்கண் கொண்ட பண்ப”

(சுந்தரர்க்குச் சேரமான் பெருமாள்
கொடுத்த பொருள்களை சிவபூதங்கள்
திருடர்களாக வந்து
கொள்ளை கொண்டபோது
பாடிய பாசுரங்களில் ஒன்று)

“வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினு லெறிந்திட்டு மோதியுங்
கூறை கொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர்வாய்
எல்லைக்காப்ப தொன்றில்லை யாகில்நீர்
எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே”

(முதலையுண்ட பாலனை
மீட்டுத்தர வேண்டியது)

உரைப்பாருரை யுகந்துள்க வல்லார்
[தங்களுக்கியாய்
அரைக்காடரவா ஆதியுமந்தமும் ஆயினய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு
[காலனையே,

அற்புதச் செயல்கள் குறித்த அகச் சான்றுகள் மிகப் பலவாகலின் இவற்றுடன் இவற்றை நிறுத்திஞேம். மூவரும் அருளிய பல நூருயிரம் பாசுரங்கள் மறைந்துவிட்டமையின் இன்னும் எத்தனை எத்தனை அற்புதங்கள் நிகழ்ந்திருக்கக் கூடுமோ யாமறியோம். எம் மொழிக்கும் இல்லாத அருளாற்றலும் உறைப்பும் தமிழுக்கு உண்டு என்பதனை

“செந்தமிழ்த் திறம் வல்லிரோ செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே”

என இறைவனைக் குறித்து சுந்தரர் கூறியிருப்பதிலிருந்தும்,

“திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தாருந் நின்ருர்”

என நாவுக்கரசர் கூறியிருப்பதிலிருந்தும் உணரலாகும்.

இவ் வற்புதங்கள் நிகழ்ந்திருக்கக் கூடுமோ என ஐயங்கொள்வோர், திருத்தொண்டர் புராணத்தில் வரும் சுந்தரர் வரலாற்றையும், அவருடைய 100 பதிகங்களையும் உளக் கோட்டமின்றி ஆழமாகப் படித்து ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காண்பார்களாக.

பிறமொழியாளர்களாகிய மேல்நாட்டு அறிஞர்கள் தமிழ்த்திருமுறைகள் முதலானவற்றைப் படித்து இன்புற்று அவற்றிற்குத் தம் நெஞ்சைப் பறிகொடுத்துள்ளனர் என்பதனைவிட இவற்றின் சிறப்புக்களைப்பற்றிச் சொல்ல வேண்டுவன மேலும் உளவோ? டாக்டர் G. U. போப் திருவாசகத்தை மொழிபெயர்த்ததேன்? அறிஞர் பெருமக்கள் சிந்திப்பார்களாக. டாக்டர் L. D. பார்நெட் என்பார் ‘இந்தியாவின் நெஞ்சம்’ என்ற தமது நூலில், ‘இவற்றிற்கு இணையான இனிய நடையும், நெஞ்சையுருக்கும் உணர்வும், கற்பனை ஊற்றமும் உள்ள பக்திச் சுவைததும்பும் இலக்கியம் வேறு எச்சமயமும் தோற்றுவித்திலது’ என நம் தெய்வத் திருமுறைகளைப்பற்றிக் கூறியிருப்பதனைத் தமிழ் மக்கள் உற்றுணர்வார்களாக.

**முடிவுரை :**

மூவர்கள் காலத்தில் தமிழகம் எங்கும் தேவார இன்னிசை முழங்கிக் கொண்டிருந்தது. இராசராசன் காலத்திலிருந்து கோயில்கள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தருமசிவன், ஞானசிவன், சதாசிவன் முதலியோர் அடங்கிய நாற்பத்தெண்மர் தக்க பக்க வாத்தியங்களுடன் தேவாரம் ஓதி வந்தனர். இவர்களுக்கு நிறைந்த நிவந்தங்களையும், சிறந்த பட்டங்களையும் வழங்கி இராசராசன் ஊக்கி வந்தான். இந்நிலைமையை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க என்மனம் ஒருப்படவில்லை. ஏனெனில், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பப்பட்டு வந்த தமிழகத்தில் எங்கும் பிறமொழிச் சங்கீதமே கேட்கப்படுகிறது. பொருள் விளங்காத இம்மொழிப் பாடல்களைப் பாடுவோருக்கு நிறைந்த ஊதியம் கிடைக்கின்றது. ஆனுல் தேவார ஓதுவார்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகமிகக் குறைவு. இந்நிலையில் பாடல்பெற்ற பல கோயில்களுக்கு ஓதுவார்களே இல்லை. இறந்தாரை எழுப்பும் அருளாற்றல் பெற்ற மூவர் தேவாரங்களைப் பாடும் நிலைமை இவ்வாரு இருக்க வேண்டும்? என்றுதான் தமிழகம் எங்கும் தேவார இன்னிசை கேட்குமோ? என்றுதான் சமயாசாரியார்களுடைய நாட்கள் மிகப்பெரும் திருவிழாக்களாக நடைபெறுமோ? இந்து சமயக் கோயில்களின் வருமானம் சுமார் எட்டுக்கோடி ருபாய்கள் என கேள்விப் படுகிறேம். இந்து சமய அறநிலைய ஆட்சியாளர்கள் தேவார ஓதுவார்களின் ஊதியங்களை உயர்த்த நடவடிக்கை எடுப்பார்களாக.

SC
V211CC
N72

84374

# இந்துக்களது விக்கிரக ஆராதனையின் தத்துவம்

மதுரை ஆதீனம் 291-வது ஆதீனகர்த்தர், திருவருள்தவயோக
ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளியது

தமிழகத்திலுள்ள எல்லா இந்துக்கோயில்களும் விக்ரக ஆராதனை உடையவை. அவற்றுள் எல்லா முக்கிய கோயில்களும் கலைஞானங்களில்தேர்ச்சிபெற்ற சேர, சோழ பாண்டிய மன்னர்களால் வழிபடப்பெற்றவை. மெஞ்ஞானிகளாகத் திகழ்ந்த திருஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகப் பெருமான் முதலியோரும் நாயன்மார்களும், ஆழ்வார்களும், பிற அருளாளர்களும் காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்கிப் பாடிப் பரவிப் போற்றிய கருவூலங்கள். அவை, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற தனிச் சிறப்புப் பெற்றவை.

இந்துக்கள் வழிபடுகின்ற கோயில்களில் உள்ள விக்ரகங்கள் எல்லாவற்றிலும், மேலுலகங்களில் அன்றும், இன்றும், என்றும் இருந்து நம்மை ஆண்டு வருகின்ற ஆட்சியாளர்கள் வீற்றிருந்து, நாம் செய்கின்ற வழிபாடுகளை அறியவும், விண்ணப்பிக்கின்ற விண்ணப்பங்களைக் கேட்கவும், ஏற்கவும், அவ்வவற்றிற்குரிய உதவிகளைச் செய்யவும் முடிகிறதென்ற பேருண்மையை பெரும்பாலோர் உணராது இருக்கிறார்கள். நம்மை ஆளுகிற இந்திய அரசாங்கம் ஒன்றாக இருந்தாலும், அந்த அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை அமுல் நடத்துகிறவர்களும், நமது விண்ணப்பங்களை ஏற்று, பரிசீலித்துத் தீர்ப்புக் கொடுக்கிற அதிகாரிகளும், பலராக இருந்து பரிபாலனம் செய்கிறார்கள் அல்லவா? அதுபோல, அருவ நிலையில் கடவுள் அல்லது பரம்பொருள் ஒருவராகவே இருக்கிறார், ஆனால், அவரது அதிகாரங்களைப் பெற்ற அதிதெய்வங்கள் மேலுலகங்களில் பலராக இருந்து நம்மை அருளாட்சி செய்துவருகிறார்கள்.

நமது உடலைத் தூக்கித்திரிகின்ற உயிரானது, பாரமில்லாததாம். கண்ணுக்குத் தெரியாது அருவமாய் உடம்பெங்கும் ஊடுருவியிருக்கின்ற சிற்றறிவுடைய சிற்சத்தி என்பதும், உடலில் நடக்கிற காரியப்பாடுகள் அனைத்தையும், அந்த உயிர் அறியக்கூடியதாக இருக்கிறதென்பதும் யாவரும் அறிந்ததே. நூற்றுக்கணக்கான ஆட்கள் ஏறிய அதிகப் பாரமுள்ள மின்சார வண்டிகளை இயக்குவது, கண்ணுக்குத் தெரியாத, பாரமில்லாத அருவமாயுள்ள, அறிவில்லாத மின்சார சக்தியே என்பதையும் யாவரும் அறிவர். அதுபோல, அண்டங்களையெல்லாம் இயங்கும்படிச் செய்கின்ற பரம்பொருளும் கண்ணுக்குத் தெரியாத பெரிய ஆற்றல் வாய்ந்த அருவமான, முற்றறிவு உடைய சக்தியாக இருத்தல் வேண்டும் என்பதையாவரும் ஊகித்து, அனுமானித்து அறிந்துகொள்ள முடியும். உருவமில்லாத உயிர்களுக்கு கடவுள் பெற்றோர்களைக் கொண்டு பாரமுள்ள மேல் உடலைக்கொடுக்கும்படி செய்திருக்கிறார். அதற்குள்ளே இருக்கும் பாரமில்லாத சூக்கும உடல்களை (உள்ளுடல்களை) கடவுளே படைத்துக் கொடுக்கிறார். நமக்கு வேண்டிய உருவத்தை நாம் எடுத்துக் கொள்ளவும் முடியாது. பெற்றோர்களும் அவர்கள் நினைத்த உருவத்தை நமக்குக் கொடுக்கவும் முடியாது. ஆனதால், பிறவுயிர்களுக்குப் பல்வேறு உருவங்களைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த பரம்பொருளுக்கு, தனக்கு வேண்டிய உருவத்தைத் தானே எடுத்துக் கொள்ள முடியும் என்பதை யாரால் மறுக்க முடியும்?

கடவுளது உருவத் திருமேனிகள் யாவும் அழியாத அருள்வடிவங்களேயன்றி, அழிக்கக்கூடிய மாயா காரிய வடிவங்கள் அன்று. கடவுள் உருவத் திருமேனி தாங்கிச் செய்கின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் அவர் உயிர்கள்மீது கொண்டுள்ள கருணையின் காரணமாக புரிகின்ற தன்னலமற்ற அருட் செயல்களேயாகும். இவ்வுலகத்திலே செயற்கரிய செயல்கள் செய்த மகாத்மா காந்தி, அறிஞர் அண்ணா, போன்றவர்களுக்கு அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதோ, அல்லது இறந்த பின்னரோ, அவர்களது உருவத்தில் சிலைகள் செய்து அதற்கு மரியாதைகள் செய்து வருகிறோம் அல்லவா? சில வருஷங்கள் வாழ்ந்து, சில நன்மையான காரியங்களைச் செய்த மனிதர்களுக்கே சிலை செய்து வைத்து, அந்த சிலை மூலம் அந்த நபரை நினைத்து அவருக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தி வருகிறோம் அல்லவா? அதே போல, இறவாமலும், பிறவாமலும் என்றும் நிரந்தரமாக வாழ்ந்து நல்லவர்களுக்கு நல்லருள் பாலிப்பதற்காகவும், கொடுமை புரிந்தவர்களைத் தண்டித்து நல்வழிப் படுத்துவதற்காகவும் கடவுள் மேலுலகங்களில் எடுத்துக் கொண்ட மூர்த்தங்கள் அல்லது திருமேனிகள் என்ன என்ன என்பதையும், எந்தெந்தத் திருமேனி கொண்டு என்னென்ன காரியங்கள் செய்தார் என்பதையும், இந்துக்கள் தெரிந்தே, அந்தந்த மூர்த்திக்குரிய சிலைகளையோ, படங்களையோ வைத்து அந்தந்த மூர்த்தத்தில் அவர் செய்த நற்காரியங்களை நினைத்து அவருக்கு நன்றியும் வணக்கமும் பிரார்த்தனையும் செய்து வருகிறார்கள், அதுபோல் வேறு மதத்தவர் யாரும் செய்யவில்லை.

மனிதன் ஓரிடத்தில் இருக்கும்பொழுது, அதே சமயம் மற்றொரு இடத்திலும் இருக்க முடியாது. ஆனால், நம்மை ஆளுகின்ற அத் தெய்வங்களோ ஒரே சமயத்தில் எத்தனையோ இடங்களில் நடக்கிறவற்றை அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மனிதன் கண்டுபிடித்திருக்கிற வானொலிக் கருவி, ஓர் இடத்தில் பேசுவதை உலகிலுள்ள எல்லா இடங்களிலும் கேட்குமாறும், டெலிவிஷன் கருவி, ஓர் இடத்தில் நடப்பதை எல்லா இடங்களிலும் பார்க்குமாறும் செய்கின்றன. இரண்டரை லட்சம் மைலுக்கு அப்பாலுள்ள சந்திரமண்டலத்திலிருந்து பேசுவதையும், அங்கு நடப்பதையும் பூமியிலிருந்துக் கேட்குமாறும், பார்க்குமாறும், அவற்றைப் பதிவு செய்யுமாறும் சிற்றறிவுடைய, சிறு ஆற்றல் உடைய மனிதன் செய்திருக்கிறான் அல்லவா? அப்படியானால், முற்றறிவும் முடிவில்லாத ஆற்றலும் உடைய அதிதெய்வங்கள், யார் எத்தனை இடங்களிலிருந்து என்ன செய்தாலும் அத்தனையையும் அறியவும், பதிவுசெய்யவும் தீர்ப்பு செய்யவும் முடியும் என்று உணர்ந்திருத்தல் வேண்டும்.

இங்கிலாந்தில் உள்ள எலிஸபெத் ராணியை, இந்தியாவிலுள்ள எல்லோரும் நேரே கண்டுகொள்ளமுடியாது அல்லவா? ஆனால் அவரைப் பார்த்தவர்கள் போட்டோ பிடித்து அவரது உருவத்தைப் படத்தில் காணுமாறும், அல்லது ஒரு சிலை செய்து, அவரது தோற்றத்தைத் தெரிந்துகொள்ளுமாறும் செய்யலாம் அல்லவா? மேல்நாடுகளில் போட்டோ பிடிக்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டது சென்ற நூற்றாண்டிலேதான். ஆனால், இந்து மதத்தில் உள்ள அறுபத்துநான்கு கலைஞானங்களில் ஒன்றான சிற்ப சாஸ்திரம் என்பது பல்லாயிரம் வருஷங்களுக்குமுன் இந்துக்கள் கண்டு பிடித்த கலையாகும். இதில், மேல் உலகங்களில், அன்றும் இன்றும் என்றும் இருந்து அந்த உலகங்களை ஆட்சிபுரிந்து வருகின்ற அதிகாரிகளாகிய அதிதெய்வங்களின் உருவங்களுக்குரிய அளவுப் பிரமாணங்கள் சொல்லப் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கொண்டு, சதுரக் கோடுகள் உள்ள ஒரு நோட்டில் *(Groph Note)* அந்த உருவத்தைச் சித்திரமாகவும், அதன்பின் கல்லிலோ செம்பிலோ சிலையாகவும் சிற்ப சாஸ்திரம் தெரிந்தவர்கள் அமைத்துவிடுவார்கள்.

எவ்வாறு போட்டோ படத்தைப் பார்த்தவுடன் அதற்குரிய ஆள் ஒருவர்

உண்டு என்று நிச்சயமாக உணர்ந்து கொள்ளுகிறோமோ, அதேபோல ஆலயங்களில் வழிபாட்டுக்காக பிரதிஷ்டை செய்யப்பெற்று எந்தெந்த மூர்த்திகளுக்கு பூஜைகள் நடத்தப் பெறுகின்றனவோ, அவற்றில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள், மேல் உலகங்களில் இருந்து கொண்டும், அந்தந்தச் சிலைகளில் அமர்ந்து கொண்டும், நாம் செய்கிற பூஜைகளை ஏற்றுக் கொண்டும், நாம் செய்த பிரார்த்தனைகளைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்று நிச்சயமாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

பஞ்சாங்கங்களில் கூறப் பெற்றிருக்கும் கொண்டாட்டங்களில் தெய்வம் சம்பந்தப்பட்டக் கொண்டாட்டங்கள் எல்லாம், அந்தந்தத் தேதிகளில் மேலுலகங்களில் தேவர்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்ற வைபவங்கள் என்ற பேருண்மையை இறந்தவர்களில் அருள் பகுதியில் உள்ளவர்களெல்லாம் உறுதிப்படுத்துகிறார்கள். மேலும், நம்மை நிரந்தரமாக ஆட்சி புரிந்துவரும் சிவபெருமான் எந்த மூர்த்தம் கொண்டாலும் திருநீறு அணிந்திருப்பதாகவும், மகாவிஷ்ணு திருநாமம் போட்டிருப்பதாகவும் தேவர்களெல்லோரும் அவரவரது சின்னங்களை அணிந்திருப்பதாகவும் இறந்தவர்கள் நேரில் கண்டு கூறுகிறார்கள். அருளாளர்களும் கூறி இருக்கிறார்கள். அதனைப் பாராதவர்கள் இவ்வுண்மையை மறுக்கலாமா? இந்துக்களது பல தெய்வ வழிபாட்டின் மேலான தத்துவத்தைக் குறித்து உண்மையை அறிய வேண்டும் என்று விரும்பிய ஆங்கிலேயர்கள் பலர் இறந்தவர்களோடு இது சம்பந்தமாகப் பேசி அறிந்த உண்மைகளைப் புத்தகங்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள். லண்டனில் (College of Psychic Science) மனோதத்துவ அறிவியல் கல்லூரி என்ற பெயரால் 1884-ம் வருடத்திலிருந்து ஒரு கல்லூரி நடைபெற்று வருகிறது. அதில். இறந்தவர்களுடன் பேசும் முறையை மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்கப் பெறுகிறது. அந்தக்கல்லூரியில் இறந்தவருடன் பேசுகிற விஷயமாக 11,000 புத்தகங்கள் இருக்கிறதாக வெளியிட்டிருக்கிறார்கள். இதன் முழு விபரமும் 26—5—69 "சண்டே ஸ்டாண்டர்டு" பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

நாம் வெளியிட்டிருக்கிற "இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்" என்ற அரிய ஆராய்ச்சி நூலில், நாம் இறந்தவர்களோடு பேசி உணர்ந்த இருபத்தொரு அனுபவங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்து, அதில் சொல்லியிருக்கிறபடி முயற்சி செய்து, வெற்றிபெற்ற பலர், இந்தியாவிலும், மலேயாவிலும், இலங்கையிலும் இருக்கிறார்கள். இறந்தவர்கள் இவ்வுலகில் உள்ள சுய அறிவுடையவர்களின் மீடியம் சக்தியைத் துணையாகக் கொண்டு பேச வேண்டி இருப்பதால், இறந்தவர்களது ஆற்றலையும், மீடியமாக இருக்கப்பட்டவரின் ஆற்றலையும் பொறுத்து வருகிற செய்தி 100க்கு 100 தூய்மையாகவும் இருக்கலாம். அல்லது, சிறிது கலப்படமாகவும் இருக்கலாம். ஆனால், ரேடியோ மூலமாக ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவித்தால், அந்த ரேடியோ கருவி அறிவற்ற ஒன்றாதலால் பேசுகின்றவருடைய கருத்து மாறுபாடாக வரமுடியாது.

சமீபத்தில், ஜெர்மனியில் டாக்டர் கான்ஸ்டான்டைன்ரேடிவ் என்பவர் ஹிட்லர் முதலிய இறந்தவர்களது குரலை டேப் ரிக்கார்டு எடுத்து பத்திரிகையாளருக்கு நிரூபித்திருப்பதாக ஒருசெய்தி வந்துள்ளது. அவருக்கு நாம் 29—5—70ல் கடிதம் எழுதி இருக்கிறோம். டேப் ரிக்கார்டு மூலமாக, அறிஞர் அண்ணா அவர்களது மாறுபடாத சுய குரலை யாவரும் கேட்டுக்கொள்ளுமாறு செய்யவே இம்முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இது சம்பந்தமாக தமிழக அரசு தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டால், காலஞ்சென்ற அறிஞர் அண்ணா அவர்களது விண்ணக அறிவுரைகளை, தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும், பிற உலக நாடுகளுக்கும் தெரியும்படியாகச் செய்ய உதவியாக இருக்கும் என்று கருதுகிறோம். அவ்வாறு செய்தால், அது மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கை நிலையைப்பற்றி மதங்களுக்குள் ஏற்பட்டுள்ள சச்சரவுகளைத் தீர்க்கவும், தற்கொலையும், பிறர் கொலையும், யுத்தங்களும் தூல உடம்பை சிதைக்குமே தவிர உண்மையான, பாரமில்லாத உள் உடம்புடன், இறந்தபின் தொடர்ந்து வாழுகின்ற மனிதர்களைக் கொல்ல முடியாது என்ற பேருண்மையையும் மறுக்க முடியாத வகையில் நிலைநாட்டவும், பெரிதும் உதவும் என்றும் கருதுகிறோம். இந்தப் பேருண்மை நிரூபிக்கப் பெற்றால் இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்களுக்கே இறந்தபின் தொடர்ந்து வாழக்கூடிய உடம்பு ஒன்று இருக்கிறது என்று யாவரும் ஒத்துக்கொள்ளுமாறு ஏற்பட்டுவிடும்.

அப்படிப்பட்ட உடம்பு சாதாரண மக்களின் கண்களுக்குத் தெரியாதவை என்பதை உணர்ந்துகொண்டால் நம்மை ஆட்சி புரிகின்ற மேலுலக அதிதெய்வங்களின் உருவங்களையும், சாதாரணமானவர்கள் கண்டு கொள்ள முடியாது என்ற பேருண்மையையும் யூகித்து உணர்ந்துகொள்ள முடியும். அல்லாமலும், சாதாரணமானவர்கள் காண முடியாத ஆவி உடலோடு விண்ணுலகத்தில் வாழ்ந்து வருகின்ற இறந்தவர்கள், நாம் பேசுவதைக் கேட்கவும், இங்கு செய்கின்ற காரியங்களைப் பார்த்துக்கொள்ளவும் நமக்கு வேண்டிய அறிவுரைகளை ஆற்றவும் முடியும் என்ற பேருண்மையை, அறிஞர் அண்ணா அவர்களது விண்ணுலக அறிவுரையும், மற்றும் இறந்தவர்கள் கூறும் அருளுரைகளும் உறுதிப்படுத்துகின்றன. இந்த அனுபவம் ஒருவருக்கு வந்துவிட்டால் கடவுளை நோக்கி யார் எந்த உருவத்தில் எவ்வித வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் செய்தாலும், அவற்றை அந்தந்த அதிதெய்வம் அறிந்து, அவற்றிற்குச் செய்ய வேண்டிய காரியங்களைத் தவறாமல் செய்ய முடியும் என்ற உறுதியும், ஆர்வமும், பக்தியும் தானாகவே ஏற்பட்டுவிடும். மேலும், இறந்தவர்களுக்குப் படைக்கின்ற உணவுப் பொருள்களை ஏற்றுக்கொள்ளவும், அவற்றின் ருசியை அறிவிக்கவும், கோடித் துணிமணிகளையும், பூமாலைகளையும், பிற உபசாரங்களையும், கொண்டாட்டங்களையும் ஏற்றுக்கொள்ளவும், அவற்றின் சூக்குமப் பொருள்களைத் தங்களுடைய உடல்களில் அணிந்து கொள்ளவும், அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடையவும் முடிகிறது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இதை அனுபவத்தில் உணர்ந்தவர்களுக்கே, ஆலயங்களில், விக்ரகங்களில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்ற மூர்த்திகளுக்குச் செய்கின்ற பலவித அபிஷேகங்களும், நைவேத்தியங்களும், 16விதமான சோடச உபசாரங்களும் எவ்வளவு அர்த்தமுடையன; எவ்வளவு பிரீதியை உண்டுபண்ணுவன; எவ்வளவு நற்பயனைத் தரத்தக்கன என்ற பேருண்மையை உணர்ந்து கொள்ளவும், நம்முடைய ஆன்றோர்களது ஆழ்ந்தகன்ற அறிவையும், அவர்கள் செய்துவைத்திருக்கின்ற ஏற்பாடுகளின் உண்மைத் தத்துவங்களையும் புரிந்துகொள்ள முடியும்.

சிறு உதவிகள் புரிந்து சின்னாள் வாழ்ந்தவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடன் சிலைகள் செய்து தினந்தோறும், ஆண்டு விழாக்களிலும் பாமாலைகளும் பூமாலைகளும் சூட்டிப் போற்றிப் பாராட்டுகின்ற அரசாங்கத்தலைவர்கள், நமக்கு எந்நாளும் வாழ் முதலாயிருந்து பேருபகாரம் செய்துவரும் கடவுளுக்கும், அவரது அதிகார மூர்த்திகளுக்கும் தினந்தோறும் விழாக்காலங்களிலும் அருளாளர்கள், பாடி அருளியிருக்கிற பாமாலைகளைப் பாடிப் பரவிப் போற்றிவர வேண்டியது இன்றியமையாத நன்றிக் கடப்பாடாகும். ஏனென்றால் நமது உயிர்கள் அனுபவ அறிவு பெறுவதற்கான உள்ளுடலாகிய பாரமில்லாத, சொப்பனத்தில் தொழில்படுகின்ற ஆவிஉடலையும் அதற்கே கனத்த சட்டைபோன்ற பாரமுள்ள வெளி உடலையும், அவற்றில் உள்ள அறிகருவிகளான தோல், நாக்கு, மூக்கு, கண், காது முதலிய ஐந்தையும், தொழிற் கருவிகளான கால்கள், கைகள், வாய், கருவாய் (ஜலதாரை), எருவாய் (மலதாரை) ஆகிய ஐந்தையும், அவற்றை இயக்குவிக்கும் பத்துவித வாயுக்களையும், அவற்றைப் பதித்து வைத்து முடிவுசெய்யும் மனம், புத்தி, சித்தம் அகங்காரம் ஆகிய உட்கருவிகளையும் கடவுளே தந்து அருளியிருக்கிறார். ஆவி உடலுக்குப் பெயரிட்டவரும் கடவுளே, அப்பெயரையே பெற்றோர்களைக் கொண்டு பாரமுள்ள உடலுக்கு இடும்படிச் செய்து வரும் கடவுளே. இந்த ஊரில், இந்தப் பெற்றோருக்கு, இத்தனையாவது சூலில், இந்த விநாடியில். ஒவ்வொருவர் கைகளிலும் பொறித்திருக்கிற நவக்கிரகங்கள் கூடுகிற நிலையில், ஆணாகவோ, பெண்ணாகவோ அவரவருக்கு விதித்த விதிப்படி இவ்வுலகில் பிறக்கவும், வாழ்ந்திருக்கவும், இன்ப

துன்பம் அனுபவிக்கவும், பதவிகளில் ஏற்றி வைக்கவும், நீக்கிவைக்கவும், முடிவில் இறக்கவும் செய்வதும் கடவுளே. இந்த உண்மைகளைத் தமிழகத்திலுள்ள நாடி சாஸ்திரங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி, சாதிபேதமின்றி உறுதிப்படுத்துகின்றன.

நாம் வாழ்வதற்கு இன்றியமையாத காற்று, தண்ணீர், நிலம், விளைபொருள்கள். நெருப்பு, சூரியன், சந்திரன், முதலியவற்றைத் தந்து நம்மை உண்மையில் வாழ்விக்கின்றவரும் கடவுளே. இயற்கையாக இருக்கின்ற சக்திவாய்ந்த கடவுளுக்கு இயற்கை என்பதும் ஒரு பெயர் என்பதை அனுபவம் இல்லாதவர்கள் அறியாதிருக்கிறார்கள். கடவுள் செய்து வருகிற மேற்சொல்லிய பேருபகாரங்களில் கோடியில் ஒருபங்கு உபகாரம் செய்த மனிதர்களுக்குக் கொண்டாட்டங்கள் நடத்துகின்ற அரசியல் வாதிகள், கடவுள் வழிபாட்டிலும், விழாக்கள் கொண்டாட்டங்களிலும் ஈடுபடாதிருப்பதற்கு மூலகாரணம் மக்களுக்குள்ள மேல்நாட்டு விஞ்ஞானத்தில் மோகமும் நம் நாட்டுஆன்மீக மெஞ்ஞானத்தில் ஆராய்ச்சியின்மையுமேயாகும். இந்த அவலநிலை மாறுவதற்கு தமிழகம் உலகத்திற்கு வழிகாட்டியாக அமைதல் வேண்டும். அதற்கு வேண்டிய ஆற்றலையும் மெய்யுணர்வையும் தமிழக மக்கள் பெற்றுத்திகழ, திருவருள் பாலிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானை பிரார்த்தித்து வருகிறோம்.

# திரு அரங்கநாதப்பெருமாள் திருக்கோயில்

## வடரெங்கம்

*சீர்காழி வட்டம் — தஞ்சாவூர் மாவட்டம்*

இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்த சீர்காழிக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் உள்ளது. பெருமாளுக்குரிய திருக்கோலங்கொண்டு விளங்கும் திருவரங்கம் எனும் தென்னரங்கத்தைப்போல் விளங்குவதும், உத்திர காவேரி என்னும் கொள்ளிடத்திற்கும், தென்ராஜ நதிக்கும் இடையில் அமர்ந்துள்ளதும், நாகமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டதும், சங்க தீர்த்தத்தால் மகிமை பெற்றதும், வசிஷ்ட முனிவருக்கு அருள்புரிந்ததும், திருஜெம்புநாதர் ஆலயத்தைத் தன்னருகே பெற்றதுமாகிய பஞ்ச அரங்கங்களிலே ஒன்றாகியது.

இவ்வளவு சிறப்பும் ஒருங்கே பெற்ற இவ்வாலயத்தில் மஹாமண்டபமும் திருமதிற்சுவரும் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணிக்கு உதவ அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

**V. தங்கவேலு M. A., B. L.,**
நிர்வாக அதிகாரி.

## ஸ்ரீ நடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

**ஆவராணி — புதுச்சேரி P. O.**

நாகபட்டினம் தாலூகா

இத்தலம் சிக்கல் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்மேற்கே மூன்று கல் தூரத்தில் உள்ளது. சுயம்புலிங்க க்ஷேத்திரம். தத்துவஞானன் என்ற அந்தணச் சிறுவனால் பூஜிக்கப்பட்டது. வசிட்டமுனிவரால் சுவாமியை அணைத்த பாவனையாக லிங்கம் நீண்டசதுரமாக உள்ளது. ஸ்ரீ பத்ரகாளியம்மன் விசேஷ மூர்த்தியாக இருக்கிறது. ஆண்டு தோறும் தை வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்குச் சிறப்பு உற்சவங்களும், வைகாசி விசாகம் பிர்மோற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**பொ. இராமச்சந்திரன் Bsc.,**
நிர்வாக அலுவலர்.

## அருள்மிகு இரேணுகாதேவி அம்மன் திருக்கோயில்

**விசயபுரம் (திருவாரூர்)**

இத்திருக்கோயிலின் சிறப்பு அம்பாளின் தலையகம் மட்டுமே உள்ளது. இத்திருக்கோயில் ஆரூர் சங்கீதமும்மூர்த்திகளில் ஒருவரான திரு. முத்துசாமி தீட்சிதரால் பாடப்பெற்ற தலமாகும். இத்திருக்கோயில் அம்பாள், பரசுராமமூர்த்தியின் தாயார் என்று வழங்கப்படுகிறது. இத்திருக்கோயில், விசயபுரம் கடைவீதியின் இதயம்போல் மையத்தில் அமைந்துள்ளது. திருவாரூர் புகைவண்டி நிலையத்திலிருந்து 1 பர்லாங்கு தொலைவில் உள்ளது.

அறங்காவலர்கள் :
திரு. முருகுபாண்டியன் (தலைவர்)
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. டி. ஆர். சந்திரன்

நிர்வாக அதிகாரி
சி. கலியபெருமாள்

## ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

**திருக்கொள்ளிக்காடு**

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இது மாயூரம்-காரைக்குடி மார்க்கத்தில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்துக்கு தென்மேற்கே 2½ கல் தொலைவில் உள்ளது. திருவாரூரிலிருந்து 12 கல் தொலைவில் அமைந்து உள்ளது. அக்கினி வழிபட்ட தலமென்பதால் (அக்கினி - கொள்ளி) இப்பெயர் பெற்றது. இறைவன்: அக்னீஸ்வரர். இறைவி: பஞ்சின்மெல்லடியாள். திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. திருநள்ளாற்றில் இருப்பது போலவே திருச்சந்நிதி இங்கே சிறப்புற்று விளங்குகிறது. 2½ ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்குச் சனிப்பெயர்ச்சி விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

**திரு. க. மீ. துரைசாமி**
நிர்வாக அறங்காவலர்

**திரு. P. நாகரத்தினக்கோன் B. A.,**
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

**திருவிடைக்கழி**

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

சரித்திர புகழ் பெற்ற வள்ளியம்மை நகருக்கு அருகில் இவ்வூர் உள்ளது. திருவிடைக்கழி என்றும் மகிழாரண்யம் என்றும் திருப்பெயர்பூண்டது. இவ்வூர் குமரக்கடவுள் வீற்றிருக்கும் தலங்கள் பலவற்றுள் சிறப்புடைய ஒன்றாகும். பன்னிருதிருமுறைகளில் 9-ம் திருமுறையாகிய திருவிசைப்பாவும், இத்தலம் வாழும் முருகன் பெருமையைப்பற்றி அருணகிரிநாதர் 8 திருப்புகழும், மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றிய பிள்ளைத் தமிழில் 100 பாக்களும் பாடப்பெற்றுள்ளன.

**K. M. சுப்பிரமணியம்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
T. R. முத்தையன்
M. சண்முகம்

★

# ஸ்ரீ சக்திவனேஸ்வரசுவாமி திருக்கோயில்

## திருச்சக்திமுற்றம் (பட்டீஸ்வரம்)

கும்பகோணம் வட்டம்] [தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் தாராசுரம் புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ள பட்டீஸ்வரத்தைச் சேர்ந்த திருச்சத்திமுற்றத்தில் உள்ளது. சத்திமுற்றப் புலவர் வாழ்ந்த இடம் இதுவேயாகும். இத்தலம் இயற்கை வளத்துடன் இயங்குகிறது. திருநாவுக்கரசரால் பாடல்பெற்றது. ஒவ்வொரு வருடமும் தைமாதம் சப்தமியில் ரதசப்தமி என்னும் பெருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

K. நடராஜன்
இறைபணியாளர்

# ஸ்ரீ வெங்கடாசலபதி பெருமாள் ஆலயம்

## தில்லைவிளாகம்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இந்த பிரசித்தி பெற்ற புராதன ஆலயம் மாயூரம் - காரைக்குடி இருப்புப் பாதையில் தில்லைவிளாகம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கிலும், பிரசித்தி பெற்ற தில்லைவிளாகம் ஸ்ரீ வீரகோதண்டராமஸ்வாமி ஆலயத்திற்கு மேற்கில் 1¼ கல் தொலைவிலும் உள்ளது. பெரிய உருவில் ஸ்ரீ தேவி பூதேவி சமேதராக காட்சியளிக்கும் ஸ்ரீ வெங்கடாசலபதி பெருமாளின் தோற்றம் காண்போரை திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதி பெருமாளின் திருத்தோற்றத்தை நினைவூட்டி களிப்படையச்செய்யும் வகையில் சிறப்புடையது. அனைவரையும் தெரிசித்துப் பயனடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சாமி. வெ. சாமியப்பக்கோனார்
பரம்பரை அறங்காவலர்

# திரு சூட்சமபுரீசுவரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் திருச்சிறுகுடி தஞ்சை மாவட்டம்

இறைவன் : சூட்சமபுரீசுவரர். இறைவி : மங்களாம்பிகை.
பாடல்கள் : திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது.
பூசித்தவர் : சூரியன், அங்காரகன்.
புகைவண்டி நிலையமும் தூரமும் : பேரளம் சந்திப்பு - மேற்கே 8. கி. மீ.

அறங்காவலர்கள் :

திரு. எல். இராமையாபிள்ளை (தலைவர்)
,, என். ரெங்கசாமிபிள்ளை
,, டி. இராமையாபிள்ளை

எம். ஆறுமுகம்
நிர்வாக அதிகாரி.

# சூரியனார்கோயில்

இது சூரியன் மூல மூர்த்தியாகவும், பிறகோள்கள் பரிவார தெய்வங்களாகவும் அமைந்துள்ள நவக்கிரக தலம்.

மாயூரம் - கும்பகோணம் இருப்புப் பாதையில் உள்ள ஆடுதுறையில் இருந்து வடக்கே 2 கிலோமீட்டர் தூரத்தில், திருமங்கலக்குடி என்னும் சிவத்தலத்திற்கு அருகில் உள்ளது.

சனி முதலிய கோள்களால் நேரும் இன்னல்கள் தீர மக்கள் வந்து வழிபடும் பிரார்த்தனைத் தலம். கோயிலும் நவக்கிரகங்களின் வடிவங்களும் காணத்தக்கவை. கோள் தீர்த்தவிநாயகர் இங்குள்ள விக்னேஸ்வரர் பெயர்.

இக்கோயில் முதற்குலோத்துங்கனால் (கி. பி. 1170—1178)-ல் கட்டப்பெற்றது என்பர். சூரியபகவானை மார்த்தாண்டதேவன் என அழைத்துள்ளான் அவ்வரசன்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது அருளாட்சியின் கீழ் இக்கோயிலின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

## திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ பிராணவரதேசுவரர் திருக்கோயில்

## திருமங்கலக்குடி

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணம் - திருக்கோடிக்காவல் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. ஆடுதுறைக்கு வடக்கே காவிரிக்கு வடபாலுள்ள தலம். சுவாமியின் பெயர் பிராணவரதேசுவரர். அம்பாளின் பெயர் மங்களநாயகி. அரசிறைப்பொருளை ஆலயத்திருப்பணிக்கு உபயோகித்து அரசனுக்கு அஞ்சி உயிர்விட்ட ஒரு சிவபக்தருக்கு உயிர் கொடுத்த திருத்தலம். நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பாடல்கள் பெற்றது. மாகாளி, சூரியன், பிர்மா, விஷ்ணு, அகஸ்தியர் இவர்கள் பூசித்து பேறுபெற்றது.

# ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில்

## வழுவூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப் பாதையில் இலந்தங்குடி நிலையத்திலிருந்து 1 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. தேவாரம் பாடிய மூவராலும் பதிகங்களில் பெயர்மட்டும் குறிக்கப்பெற்றவை. வைப்புத் தலங்கள் எனப்படும். இப்பகுதிகளில் 249 தலங்கள் உள்ளன. இவைகளில் வழுவூர் ஒன்று.

இத்தலம் அட்ட வீரட்டானங்களில் யானையை உரித்த தலமாகும். அமாவாசைதோறும் தீர்த்தவாரி நடைபெறுகின்றது. மாசிமாதம் மகநாளில் பௌர்ணமியன்று உதய காலத்தில் பெருமான் யானையை சம்ஹாரம்செய்து நடனக் காட்சி தருகிறார். மார்கழி மாதத்திலும் திருவாதிரை நாளில் உதய காலத்தில் கோயிலுக்குள் யானை உரித்த பெருமான் நடனம் நடைபெறும். திருவாதிரைக்கு முன் தினம் இரவில் யானை உரித்த பெருமான் வெண்மை அலங்காரத்துடன் காட்சி தருவார். இதர விழாக்களில் ஆனித்திருமஞ்சனம், ஆடிப்பூரம், நவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்புடையன. இந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது.

எஸ். சுப்ரமணியம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

சி. இராசகோபாலன் பி எஸ்ஸி., பி. எல்., (தலைவர்)
எம். பழனிவேலு
எம். மாணிக்கம் பி. ஏ., பி. எல்.,

# திரு பிரம்புரீசுவரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம்] திருச்சாத்தமங்கை [தஞ்சை மாவட்டம்.

இத்தலம் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருநீலநக்க நாயனார் பிறந்தருளிய சிறப்பு பெற்றது. இந்நாயனாரை "சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்" என்று சுந்தரரும் திருத்தொண்டத்தொகையில் போற்றுகிறார். மார்கழி திருவாதிரை நாளில் தூய பூசனைபுரியும் சமயம், அயவந்திநாதர் மீது ஒரு சிலந்திப்பூச்சி விழுந்து விட்டது. அதனைக் கண்ணுற்ற அவர்தம் மனைவி மங்கையர்க்கரசியார் வாயால் ஊதி அகற்றினார். தூய்மையான பூசையில் மாசு பட்டுவிட்டது. ஆகவே இனி 'நீ என்னுடன் வரத்தக்கவள் இல்லை' என்று கடிந்துகொண்டு அம்மையாரைக் கோயிலிலேயே விட்டு வந்துவிட்டார். இரவில் நாயனார் கனவில் தோன்றிய இறைவன் வாயால் ஊதித்துமிந்த இடந்தவிர மற்ற இடமெல்லாம் சிலந்தியின் கொப்புளம் எனக் காட்டியருளினார். அறிந்த நாயனார் கோயிலுக்குச் சென்று அம்மையாரை அழைத்து விபரம் கூறி வாழ்ந்தனர்.

சுவாமி பெயர் : அயவந்திநாதர். அம்பிகை பெயர் : இருமலர்க்கண்ணி. தீர்த்தம் : சந்திரதீர்த்தம், தலவிருட்சம் : கொன்றை. சம்பந்தர் பாடல்பெற்றது. நான்குகால பூசைகள் நடைபெறுகிறது. ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தில் ஒரு நாள் விழா சிறப்பாக நடைபெறுகிறது.

கி. தியாகராஜன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

சி. சுந்தரமுதலியார் A. R. சௌந்தரராஜன் ப, ராசகோபால் பிள்ளை
K. R. ராமச்சந்திர நாயுடு M. உலகநாதன்

# ஸ்ரீ சௌந்தரேசுவரசுவாமி ஆலயம்

## பேட்டை — முத்துப்பேட்டை

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோவில் மாயூரம் - காரைக்குடி இருப்புப்பாதையில் முத்துப்பேட்டை நிலையத்தில் இருந்து தெற்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த தலத்திற்கு மேற்கேயுள்ள திருவுசாத்தானமெனும் கோவிலூருக்கு ஸ்ரீ இராமனும் இலக்குவனும் வசிஷ்டரிடம் மந்திர உபதேசம் கேட்க வந்தனர். அவர்களுடன் தீரா நட்புக்கொண்டு உடன் பிறப்பாகவும் ஆகி "குன்று சூழ்வான் மகனோடும் அறுவரானோம்" என்று இராமன் வாயிலாகக் கம்பரால் பாராட்டப் பெற்ற சுக்ரீவன் தானும் சிவபூஜை செய்ய எண்ணி இத்தலத்திற்கு வந்து சிவலிங்கத்தையும், அம்மையையும் சிவாகம விதிப்படி நிறுவி வழிபட்டு, மெய்ம்மறந்து, இறைவன் அருட்குணங்களைத் தோத்தரிக்கின்றவன் "திருமேனியழகனே" என்று கூறினான். அது முதல் இறைவன் திருநாமம் திருமேனியழகர் என்றும் அம்மை திருநாமம் வடிவழகி என்றும் வழங்கப்பெற்றது. இவ்வாலயத்தில் பூஜைகள் காமீக ஆகம விதிகளின்படி நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்திற்கு நஞ்சை, புஞ்சை நிலங்களும், மற்றும் தோப்புகளும் உள்ளன.

இரா. கோவிந்தராஜன் பி. எஸ்சி.,
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள் :

AN. ST. S. சோமசுந்தரதேவர் (தலைவர்)
K. S. சிவராமுத்தேவர் PR. N. NA. தேவராஜன் செட்டியார்

## ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில்

### செம்படவன்காடு

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

ஒதியடிக்காடு என விளங்கும் சிற்றூரில் தேவர் மரபில் தோன்றிய ஒருவர்க்கு கனவில் தோன்றி வரமளித்த ஸ்ரீ வரதராஜப்பெருமாள் இரு மருங்கிலும் ஸ்ரீ இலக்குமி ஸ்ரீ பூமிதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கும் திருத்தலமாகும் இது. எம்பெருமான் இயற்கையில் பூமியிலிருந்து சுமார் 70 ஆண்டுகளுக்குமுன் கிடைக்கப்பெற்றது. திவ்ய மங்கள ஸ்வரூபமான திருக்கோயில். நீர்வளம் செழிக்கச் செய்யும் பாமணியாறு மேற்கிலும், கோரை ஆறு கிழக்கிலும் ஓடுகின்றன. இதற்குக் கிழக்கே சுமார் 2 கல் தொலைவில் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையமும், சுமார் மூன்று பர்லாங் தூரத்தில் சுந்தரம் புகைவண்டி நிலையமும் இருக்கின்றன.

V. பூரணலிங்கம் — நிர்வாக அதிகாரி

N. ராமசுவாமி — பரம்பரை டிரஸ்டி

---

## அருள்மிகு இராசகோபாலசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி — தஞ்சை மாவட்டம்

தொலைபேசி எண் 276] [புகைவண்டி நிலையம் மன்னார்குடி

குலோத்துங்க சோழமன்னராலும் நாயக்க மன்னராலும் கட்டப்பெற்ற இத்திருக்கோயில் தஞ்சை மாவட்டத்தில் புகழ் பெற்ற வைணவ பெருங்கோயில்களில் ஒன்றாகும். இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் சிறப்புடையது. இறைவர் மூலவர் வாசுதேவபெருமாள். இறைவி மூலவர் செண்பகவல்லித்தாயார்.

பெருமாளுக்கு எல்லா மாதங்களிலும் திருவிழா நடைபெற்று வருகின்றது. சிறந்தது பங்குனி மாத பெருவிழா 18 நாட்கள் நடைபெறும்.

இரா. செயசந்திரன் — நிர்வாக அதிகாரி

D. முருகையயாகோனார் — அறங்காவலர்

---

## ஸ்ரீ மாதலீஸ்வரஸ்வாமி, ஸ்ரீ அச்சம்தீர்த்த பெருமாள்கோயில்

### மாதிர்வேளூர்

### ஸ்தல புராணம்

இத்தலம் கொள்ளிடம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 5 மைல் தூரத்தில் இருக்கிறது. தேவேந்திர சாரதியாகிய மாதலியினால் பிரதிஷ்டை செய்து பூசிக்கப்பட்டதினால் இந்த ஊருக்கு மாதலீபுரம் என்ற பெயர் வந்தது. சுவாமியின் பெயர் ஸ்ரீ மாதலீஸ்வரர். சுவாமி சன்னதிக்கு வலது பாகத்தில் அம்பாள் சன்னதி இருக்கிறது. அம்பாளின் பெயர் ஸ்ரீ சுந்தரநாயகி. ஸ்தல விருக்ஷம் பாதிரிமரம். இது அம்பாள் சன்னதிக்குத் தெற்கில் இருக்கிறது. பட்டுப்போகும் தருவாயில் கீழ்க்கிளை உற்பத்தியாகி இடையறாமல் இருந்து வருகிறது. இதற்கு உத்தர ஹாலாஸ்யம் (வடமதுரை) எனப் பெயர் வழங்குகிறது. சுவாமி சன்னதியின் வலப் பக்கத்தில் அம்மன் சன்னதி இருப்பதால் இதுவும் மதுரை கோயில் கட்டிய பாண்டிய அரசராலேயே கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று ஒருவாறு அறியலாம். அம்பாள் சன்னதிக்கு எதிரில் பொற்றாமரைக்குளம் உள்ளது. வடக்கில் கொள்ளிடம் ஜீவநதியாக ஓடுகிறது.

### ஸ்ரீ அச்சம்தீர்த்த பெருமாள் ஸ்தல புராணம்

கொள்ளிடம் ஜீவநதி. இத்தீர்த்தக்கரையில் பர்க்கர் என்ற ரிஷி தியானம் செய்துவந்தார். அப்பொழுது கொள்ளிடநதியில் வெள்ளப் பிரவாகம் எடுக்க மகரிஷி பயந்து மகாவிஷ்ணுவை துதிக்கலானார். மகாவிஷ்ணு அவர்முன் தோன்றி அபயம் அளித்து அவர் பிரார்த்தனைக்கிணங்கி மாதலி புரத்தில் திருக்கோயில்கொண்டிருக்கின்றார். ஆபத்திற்கு அச்சத்தைத்தீர்த்த படியால் ஸ்ரீ அச்சம் தீர்த்தபெருமாள் என்று பெயர் வந்தது. பெருமாளின் வலது பக்கத்தில் தாயார் சன்னதி இருக்கிறது.

திரு. V. தங்கவேலு M. A., B. L., — நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

திரு. V. சுப்பராய அய்யர் (தலைவர்)

திரு. C. சிவலோக முதலியார்

திரு. N. முத்தையா பிள்ளை.

## ஸ்ரீ குமரர் கோயில்

### திருவிடைமருதூர்

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருவிடைமருதூர் திருக்கோயிலின் மேற்குக் கோபுர வாசலில் மேற்கு முகமாக அமர்ந்து; வேண்டிய அடியவர்களுக்கு வேண்டியன அளித்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியை வழிபட்டு சகல சம்பத்தும் அடையவேண்டுகிறேன்.

என். தியாகராஜன் பி. காம்.,
அறங்காவலர்.



## திரு விருத்தபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

அறந்தாங்கி வட்டம் **திருப்புனவாயில்** தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் மாயூரம் - காரைக்குடி புகைவண்டிப் பாதையில் உள்ள அறந்தாங்கி புகைவண்டி நிலையத்திலிருந்து தென்மேற்கே 26 கல் தொலேவிலும், முகவை மாவட்டத்திலுள்ள திருவாடாணேயிலிருந்து வடகிழக்கே 11½ கல் தொலேவிலும் உள்ளது. சுவாமியின் பெயர் பழம்பதிநாதர். அம்பாளின் பெயர் பெரியநாயகி. இவ்வாலயத்திலுள்ள குடவறைக் காளியென்ற தெய்வம் மிகவும் சக்திவாய்ந்தது. இவ்வாலய லிங்கம் தஞ்சைக்கு அடுத்து இரண்டாவது பெரியதாகத்திகழ்ந்து மக்களே பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளேக்கச் செய்கின்றதெனின் இவ்வாலயத்தின் பெருமைதனேப் பேசவும் வேண்டுமோ! இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் வைகாசி விசாகப் பெருவிழா மிகவும் சிறப்புடையது.

இத்தலம் பாண்டி 14 தலங்களுள் இரண்டாவதாகத் திகழ்கின்றது. சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இருவரால் பாடல்பெற்றது.

கு. வேலுச்சாமி பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
S. இராமநாதன் பி. ஏ., பி. எல்., (தலேவர்) M. துரைராசு அம்பலம்,
AL. SP. PL. ST. PL. சுப்பிரமணியன் செட்டியார்.



## ஸ்ரீ சுவேதாரணியசுவாமி

### திருக்கோயில்

திருவெண்காடு — தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் சீர்காழி புகைவண்டி நிலேயத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தொலேவில் உள்ளது. காசிக்கு சமமாக கருதப்படும் இத் திருத்தலம் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. பட்டினத்தார் ஞான உபதேசம் பெற்றதும், சிறுத்தொண்டர் மனேவி வெண்காட்டு நங்கை பிறந்ததும் இத்திருத்தலத்தில்தான்.

இங்குள்ள முக்குள தீர்த்தங்களில் மூழ்கி வழிபடுவோர் பிள்ளேப் பேற்றுடன் மற்றெல்லாப் பேறும் பெற்று மகிழ்வர் என்பது திரு ஞானசம்பந்தரின் திருவாக்காகும். மெய்கண்டார் வரலாறு இதற்குச் சான்ருகும்.

இத்தலத்தில் சுவேதவனப்பெருமாள், பிரும்மவித்தியாம்பிகை, அகோரமூர்த்தி, நடராஜர், துர்க்கை, காளி, முருகன் இவர்கள் வரமளிக்கும் தெய்வங்களாய் விளங்குகின்றனர். புதனுக்குத் தனி ஆலயமுண்டு. அதிலும் மிககம்பீரமாய் எட்டுத்திருக்கரங்களுடனும் தாங்கிய சூலத்தோடும் திகழும் அகோரமூர்த்தி மருத்துவாசுரனே வதைத்து தேவர் குலத்துக்கு அருளினுர்.

A. A. வெங்கடாசலம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

டி. வி. சம்பத் (தலேவர்)
டி. பி. எஸ். செல்வரெத்தினம்
R. ராஜசேகரன்
K. சின்னேயன்
M. நாகப்பன்

# திரு தியாகராஜசுவாமி ஆலயம்

## திருவாய்மூர்

நாகை - வட்டம் தஞ்சை - மாவட்டம்

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்குத் தியாக ராஜசுவாமி என்று பெயர். தியாகராஜருக்கு இரத்தின சிம்மாசன நீலவிடங்கன் என்ற பெயரும் உண்டு. இது ஸப்தவிடங்கன் ஸ்தலங் களில் ஒன்று. மூலவர் திருவாய்மூர் நாதர், திருவேதாரண்யேஸ்வரர். அம்பாள் திருபாலினும்நன்மொழியாள். ஸ்தல விருட்சம் பலாமரம். தீர்த்த விசேடம் கோவிலுக்கு எதிரிலுள்ள 'சூரிய தீர்த்தம்'.

இத்திருக்கோயில் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் ஆகியோரால் பாடல்பெற்ற ஸ்தலமாகும். இத்திருக்கோயிலி லிருந்து பள்ளிச்சிறுவர்களுக்குத் தினமும் பகல் உணவு அளிக்கப்படு கிறது. மேலும் திருத்துறைப்பூண்டி டாக்டர் C. லெனின் அவர்களின் பெரும் முயற்சியால் இலவச மருத்துவமனை இக்கோயிலிலிருந்து நடத்தப்படுவதன் மூலம் இவ்வூர் மக்களும், பக்கத்து ஊரிலுள்ள மக்களும் வந்து நல்லமுறையில் பயன்பெறுகின்றனர். இந்தத் திருக் கோயிலுக்கு அருகாமையில் திருநெல்லிக்காவல் என்னும் சிற்றூரில் புகைவண்டி நிலையம் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் நாக பட்டினம், திருவாரூருக்கு 18 மைல் தூரத்திலும், திருத்துறைப் பூண்டிக்கு 12 மைல் தூரத்திலும் அமைந்துள்ளது.

திரு. சு. துரைசாமி பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

திரு. K. ரெத்தினசபாபதி (தலைவர்)
திரு. R. திருஞானசம்பந்தம்

# திரு வேங்கடாசலபதிசுவாமி திருக்கோயில்

## ஒப்பிலியப்பன்கோயில்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ வைணவத் திருத்தலங்கள் 108-ல் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். திருவிண்ணகர், தென்னகத் திருப்பதி என வணங்கி வழிபட்ட திருத்தலம். ஆழ்வார்கள் நால்வரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. பேயாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் திரு மேனி வடிவழகும், நம்மாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் திருவருள் புரியும் தன்மையும், திருமங்கையாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் வீரமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. பல்வகையி லும் இப்பெருமாள் நிகரில்லாமல் இருப்பதால் ஒப்பு இல்லாதவன், ஒப்பிலியப்பன் என நம்மாழ்வார் புகழ்ந்து இத்திருநாமம் சூட்டி யுள்ளார். திருப்பதிக்கு முன்னலேயே பெருமாள் வைகுந்தத்திலிருந்து இங்கு எழுந்தருளியதால் திருப்பதிக்கு முந்திய தலமாக கருதப்படு கிறது. மாமுனிவர் மார்க்கண்டேயரின் பிரார்த்தனைக்கு இணங்கி உப்பு இலாத உணவை உகப்பாக ஏற்றுக்கொண்டதால் உப்பிலி யப்பன் என்ற பெயரும் உண்டு.

பிரார்த்தனை, திருக்கல்யாணம், கருடசேவை, தர்பார் உத்சவம் ஆகிய உத்சவங்களை நித்தியப்படியில் பெருமாளுக்கு செய்வித்து சேவார்த்திகள் மகிழ்கின்றனர். புரட்டாசி, பங்குனி மாதங்களில் பிரம் மோத்சவமும், ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாண உத்சவமும் ஒவ் வொரு மாதமும் சிரவண உத்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது.

வழிபடுவோர் வசதிக்காக சத்திரங்களும் தங்கும் அறைகளும் திருமண மண்டபமும் உள்ளன. கும்பகோணத்திலிருந்து டவுன்பஸ் வசதியும் உண்டு. தமிழில் அர்ச்சனை நன்கு செய்விக்கப்படுகிறது.

N. தியாகராஜன் B. Com.
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

S. V. துரைராஜன் (தலைவர்) V. ஜனார்த்தனம்
S. சம்பந்தம் D. ஆதிமூலம்
R. நரசிம்ம அய்யங்கார் B. A., B. L.,

# ஸ்ரீ நாகநாதசுவாமி திருக்கோயில்

## திருக்களாச்சேரி

மாயூரம் வட்டம்

தஞ்சை மாவட்டம்

இறைவனின் திருநாமம்: ஸ்ரீ நாகநாதசுவாமி. இறைவியின் திருநாமம்: ஸ்ரீ சிவகாமி அம்பாள். இருப்பிடம் : திருக்களாச்சேரி அஞ்சல் நிலையம் திருக்களாச்சேரி. ரயில் நிலையம்: பொறையார். ரஸ்தா மார்க்கம்: பொறையார் (மங்கநல்லூர் மார்க்கத்தில் உள்ளது) ஸ்தல விருக்ஷம்: திருக்குராமரம். தீர்த்தங்கள்: ஞான தீர்த்தம் சந்திரபுஷ்கரணி. வழிபட்டு பேறு பெற்றோர்: அம்பிகை திருக்குராமரமாகவும் மகாவிஷ்ணு ஸர்பரூபமாகவும் இறைவனை வழிபட்டு சாபம் தீரப்பெற்றனர். ஆலயச் சிறப்பு : மகப்பேறு வேண்டியும், பிணிகள் நீங்க வேண்டியும் புற்றுசூழப்பெற்ற ஸ்ரீ ஆதிநாகநாதரை வழிபட்டு பலர் பலன் பெற்றுளனர்.

---

# ஸ்ரீ மாசிலாநாதசுவாமி திருக்கோயில்

## தரங்கம்பாடி

மாயூரம் வட்டம்

தஞ்சை மாவட்டம்

## திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

குலசேகரபாண்டியனால் கட்டுவிக்கப்பட்ட கடற்கரையில் உள்ள பழமையான இவ்வாலயம் கடல் அரிப்பினால் பெரும்பகுதி இடிந்துவிட்டது. இரண்டு லட்சரூபாய் திட்டத்தில் புதிதாக ஸ்ரீ மாசிலாநாதர் ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோயில்கள் ஒரே இடத்தில் நிர்மாணிக்கும் வேலை நடக்க இருக்கின்றது. ஆலய நிர்வாகிகளும் ஆஸ்திக அன்பர்களும் திருப்பணிக்குப் பொருள் உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

K. நடராஜன்
நிர்வாக அதிகாரி.

# ஸ்ரீ பண்ணாரி மாரியம்மன் தேவஸ்தானம்

## பண்ணாரி அஞ்சல்

கோபி வட்டம் — கோவை மாவட்டம்

[தொலைபேசி எண் – 89, சத்தியமங்கலம்]

கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள புகழ்மிக்க தேவாலயங்களில் ஒன்று. தீராத நோய் தீர்த்தருளும் உமையம்மை அன்னை பராசக்தி மாரியம்மனாக காட்சி அருளுகிறாள். சுயம்பு வடிவானவள். அண்டினவருக்கும், அடியார்களுக்கும் அருளை அள்ளி வழங்குகிறாள். பங்குனி குண்டம் திருவிழா மிகவும் விசேடம்.

சத்தியமங்கலத்திலிருந்து 8 கல் தொலைவில் மைசூர் நெடுஞ்சாலையில் உள்ளது.

ப. இராமசாமி.
செயல் அலுவலர்.

பரம்பரை தர்மகர்த்தர்கள் :

சி. பி. வீரப்ப கவுடர் (தலைவர்)
என். பழனியப்ப கவுடர்
சி. டி. வெங்கட்ராம நாயுடு
வெ. வீரப்ப கவுடர்
சி. ஆர். தங்கவேல்
உ. இராமசாமி கவுண்டர்

# ஸ்ரீ சத்குணநாதசுவாமிகோயில்

## இடும்பாவனம்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இக்கோயில் திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல் பெற்றது. கோயிலிலுள்ள பிரமதீர்த்தத்தில் மூழ்கினல் மரண பயம் தீரும். நான்முகன், இன்றியமையாத பிரமகர்ப்ப சக்தியை இறைவனை வேண்டி பெற்றதும் இத்தலத்தில்தான். இடும்பன் இடும்பி பழைய வினை நீங்கி முக்தி அடைந்துள்ளார்கள். அகஸ்திய முனிவருக்கு திருமணக்கோலகாட்சி கொடுத்த இடங்களில் இத்தலமும் ஒன்ருகும். இத்தலம் பாண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 4 கல்தொலைவில் உள்ளது. வேதாரண்யம், முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை பஸ் மார்க்கத்தில் அமைந்துள்ளது.

**ந. தருமலிங்கம்**
நிர்வாக அறங்காவலர்
மாவட்ட நூலக ஆணைக்குழுத்தலைவர்

**சி. ஆர். குஞ்சிதபாதம்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

**வே. மீ. சு. வேம்பையன்**

**தாழை மு. கருணாநிதி**
சட்டப்பேரவை உறுப்பினர்.

# ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி ஆலயம்

## கொரநாட்டுக் கருப்பூர் (திருப்பாடலவனம்)

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் பாதையில் 2 கி. மீ. தொலைவில் உள்ளது. குடந்தைப் புராணத்தில் கூறப்படும் சுவாமிமலை முதலான பஞ்ச குரோசத் தலங்களுள் ஒன்று. இங்குள்ள பிரம தீர்த்தத்தில் நீராடுவோர் பல யாகங்களைச் செய்த பயனைப் பெறுவார்.

இவ்வாலயத்தில் பெட்டிக்குள் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தர மகா காளியம்மன் சக்தி வாய்ந்தது; புகழ்பெற்றது. குபேரன், இந்திரன், சோமகேது என்ற வடநாட்டரசன் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம்.

**A. விநாயகமூர்த்தி**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

**கோ. வி. நாராயணசாமி** (தலைவர்)
**சி. இராமமூர்த்தி**
**கு. சுப்பையன்**

## ஸ்ரீ அபயவரதேஸ்வரசுவாமி திருக்கோயில்

### அதிராம்பட்டினம்

பட்டுக்கோட்டை வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் பட்டுக்கோட்டைக்கு தென்கிழக்கில் 7 மைல் தூரத்தில் அதிராம்பட்டினம் என்னும் கடற்கரைப் பகுதியில் அமைந்து உள்ளது. இவ்வூர் அதிவீரராமபாண்டிய மன்னனுல் அமைக்கப்பெற்றது ஆகும். இக்கோயிலின் மூலவர் பெயர், ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி ஆகும். அம்மன் பெயர் ஸ்ரீ சுந்தரநாயகி ஆகும். இக்கோயிலுக்குரிய மரம், வன்னி ஆகும். இங்கு நான்கு கால பூஜைகளும் முறைப்படி செய்யப்பட்டு வருகின்றன. பங்குனி உத்திரம் பிரமோற்சவமாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றது. இக்கோயிலில் சிதைந்த சில கல்வெட்டுச் செய்திகளும் உண்டு.

திரு. சி. தெட்சணுமூர்த்தி பி. ஏ.,
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள் :

திரு. V. சரவணன் B.A.,B.L., (தலைவர்)
திரு. K. R. நாடிமுத்து திரு. V. ராமச்சந்திரன்

## திரு சேடபுரீசுவரசுவாமி கோயில்

### திருப்பாம்புரம்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இறைவன் : சேடபுரீசுவரர் இறைவி : வண்டுசேர் குழலி
பாடல்கள் : திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது.
புகைவண்டி நிலையமும் தூரமும் : பேரளம் சந்திப்பு-மேற்கே 7 கி. மீ.
பூசித்தது : ஆதிசேடன்.

எம். ஆறுமுகம்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

திரு. சீ. கிருட்டிணமூர்த்தி (தலைவர்)
,, எஸ். இராமநாதன்
,, எஸ். கண்ணையன்
,, ந. செல்வராசன்
,, கோ. செல்வராசன்.

## ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

### பெரம்பூர்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – திருவாரூர் பெருவழியிலுள்ள மங்கநல்லூரிலிருந்து 5 கி. மீ. தொலைவில் உள்ளது. மாயூரத்தில் இருந்து டவுன்பஸ் வசதி உண்டு.

மயிலுக்கு உபதேசம் செய்த திருத்தலம். இங்கு விநாயகசதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை முதலான திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

N. கோபால்
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள் :

S. சந்திரசேகரம் பிள்ளை (தலைவர்)
G. கிருஷ்ணன்
K. சுப்பிரமணியம்

## ஸ்ரீ சிவலோகநாதசுவாமி திருக்கோயில்

திருப்புன்கூர்

சீர்காழி வட்டம் — தஞ்சை மாவட்டம்

**திருப்பணி – கும்பாபிஷேகத்திற்கு நிதி அளிக்க வேண்டுகோள்.**

இவ்வாலயம் சென்ற 1908-ம் ஆண்டு திருப்பணி முடிந்து கும்பாபிடேகம் செய்விக்கப்பெற்ற பிறகு 64 ஆண்டுகள் ஆகியும், திருப்பணிசெய்து கும்பாபிஷேகம் செய்யப்படாமல் இருப்பதை முன்னிட்டு, ராஜகோபுரம், மற்ற கோபுரங்கள், விமானங்கள் முதலியவைகள் திருப்பணிசெய்து மகா கும்பாபிஷேகம் செய்ய திட்டமிட்டிருப்பதால், அன்பர்கள் பொருள் உதவிசெய்ய வேண்டுகின்றோம்.

K. கிருஷ்ணமூர்த்தி முதலியார்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:
வெ. மகாலிங்கம் (தலைவர்)
L. சிதம்பரம் B. E. — த. இராமசாமி

---

## ஸ்ரீ இரஜதகிரீஸ்வரசுவாமி திருக்கோயில்

திருத்தேங்கூர்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் மாயூரம் – காரைக்குடி புகைவண்டி மார்க்கத்தில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே முக்கால் கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் தேவாரத்தில் "தெங்கூர்" என்றே காணப்படினும் இக்காலைத் "திருத்தங்கூர்" என்றே வழங்கப் பெறுகின்றது. இறைவர் : வெள்ளிமலைநாதர். இறைவி : பெரியநாயகி. இலக்குமி தேவியும் நவக்கிரகங்களும் பூசித்த தலமிது. திருச்சுற்றில் 9 இலிங்கங்கள் உள்ளன. இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. இத்தகைய தலத்தைத் தெரிசிப்பவர்கள் சர்வசிவாலயங்களையும் தெரிசித்தவராவார்கள்.

P. நாகரெத்தினக்கோன் B. A.,
நிர்வாக அதிகாரி.

---

## ஸ்ரீ அண்ணன்பெருமாள் தேவஸ்தானம்

சீர்காழி வட்டம் — அண்ணன்கோவில் — தஞ்சை மாவட்டம்

தென்திருப்பதி எனவும் திருவெள்ளக்குளம் எனவும் வழங்கப்பெறுவது. திருப்பதிக்கு இணையான பிரார்த்தனைஸ்தலம். திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. திருமணம், முடிஇறக்கல், காதுகுத்தி உபநயனம் முதலிய காரியங்கள் செய்துகொள்ள சிறப்புமிக்க இடம். புரட்டாசி மாதத்தில் பிரம்மோத்சவமும், தைமாத அமாவாசை கருடசேவையும் சிறப்புத் திருவிழாக்கள் ஆகும். சீர்காழி to ஆக்கூர் பஸ் மார்க்கத்தில் உள்ளது.

A. தனபாலன் B. A.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
நாராயணசாமி (தலைவர்) — சேதுராமன் — ரா. ராதாகிருஷ்ணன்
இரா. முத்துக்குமாரசாமி — V. காளிமுத்து படையாச்சி

---

## ஸ்ரீ கோணேஸ்வரசுவாமி ஆலயம்

நன்னிலம் வட்டம் — திருக்குடவாயில் — தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் கும்பகோணம் - திருவாரூர் பெருவழித்துறையில் உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம். திருநாவுக்கரசரின் தேவாரத்தில் அடைவுதிருத்தாண்டகத்தில் 7வது பாடலில் இத்தலம் இடம் பெற்றுள்ளது. கோச்செங்கட்சோழனல் கட்டப்பெற்ற 27 மாடக்கோயில்களில் இத்தலமும் ஒன்று. இக்குடவாயில் சோழப்பேரரசின் சிறைக்கோட்டமாக இருந்தது என்றும், இவ்வூரின்கண் சீரத்தனர், நல்லாதனர் போன்ற புலவர்கள் பிறந்தனர் என்றும் சங்ககால இலக்கியங்களிலிருந்து அறியலாம். இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணியசுவாமியைத் துதித்து அருணகிரிநாதர் இரண்டு பதிகம் திருப்புகழ் பாடியுள்ளார். மாசிமாதத்தில் இவ்வாலயத்தில் பெருந்திருவிழா நடைபெறும்.

S. குருமூர்த்தி,
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள் :
K. S. ராமசாமி (தலைவர்)
K. K. பாலு — M. தங்கவேலு
N. சுவாமிநாதன் — S. முத்து பிள்ளை

---

## அருள்மிகு அமர்ந்தாளம்மன் துர்க்காபரமேஸ்வரி திருக்கோயில்

சேந்தங்குடி — மாயூரம்

இத்திருக்கோயில் காவிரி நதியின் வடபால் கல்லணை : காவிரிப்பூம்பட்டினம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மாயூரம் பேருந்து நிலையத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அம்பாள் அடியவர் வேண்டும் வரனை வேண்டியபடி அருள்பாலித்து வருகிறாள்.

இத்திருக்கோயிலில் 5-9-1971 அன்று திருப்பணி தொடங்கப்பட்டு சுமார் ரூ. 30,000/- செலவில் நடைபெற்று வருகிறது. இதற்கு அன்பர்கள் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கி அம்பாளின் அருளுக்குப் பாத்திரமாக வேணுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

அறங்காவலர்கள் :
ஆர். நாராயணசாமி, பி. கோவிந்தசாமிபிள்ளை, என். சுப்பிரமணியன்.

## ஸ்ரீ சக்கரபாணிசுவாமி தேவஸ்தானம்

### கும்பகோணம்

திருக்குடந்தை நகரின்கண் பெரியகடைத்தெருவின் வடகோடியிலும் காவிரிநதிக்குத் தென்கரையிலும் அமைந்துள்ளது.

**ஸ்ரீ சக்கரபாணிசுவாமியின் உருவத்தோற்றம் :**

மூன்று கண்கள், ஜுவாலாகேசம், எட்டுக் கைகள், அவைகளில் எட்டு ஆயுதங்கள், மும்மூர்த்திகளின் சொரூபம். ஸ்ரீ சக்கரபாணிசுவாமியின் பின்புறம் ஸ்ரீ நரசிம்ஹனின் சொரூபம் இருப்பதால் சுவாமி மிகவும் உக்கிரமூர்த்தியாய் விளங்குகிறார். மண்டலக்கணக்கில் பகவானை வலம் வந்தால் எல்லா அனுகூலங்களும் உண்டாகும்.

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னருக்கு வயிற்றுவலி நீங்கியதின் காரணமாக அன்னாரின் வெண்கல உருவச்சிலை சுவாமிசன்னதியில் உள்ளது. திருமழிசை ஆழ்வாரால் பாடப்பெற்றது.

**வி. ராமையா முதலியார்**
அறங்காவலர்

**ஆர். ராமையா**
நிர்வாக அதிகாரி

---

## ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

### செம்பொன்னார்கோயில்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் — தரங்கம்பாடி புகைவண்டிப் பாதையில் செம்பொன்னார்கோயில் நிலையத்திலிருந்து கிழக்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது. சமயக்குரவர்களில் இருவரான சம்பந்தரும் நாவுக்கரசரும் இத்தலத்தைப் பாடியுள்ளார்கள். ஒவ்வொருவருடமும் சித்திரை மாதம் 7-ந்தேதி முதல் 18-ந்தேதி முடிய 12 நாட்கள் கதிரவனின் கிரணங்கள் மூலத்தான மூர்த்தியின்மேல் விழுவதால் அந்நாட்களில் விசேட பூசைகள் செய்து பெருந்திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

**T. ஞானப்பிரகாசம்**
நிர்வாக அதிகாரி

**அறங்காவலர்கள் :**

**க. திருஞானசம்பந்தம்** (தலைவர்)
**V. மதிவாணன்** **க. உத்திராபதி**
**ஆர். வீரபாண்டியன்** **ஜி. சம்பந்தம் பிள்ளை**

---

## ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி கோயில்

### மூவலூர்

**மாயூரம் வட்டம்** **தஞ்சை மாவட்டம்**

இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 1½ கி. மீட்டர் தொலைவில் கும்பகோணம் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. திருநாவுக்கரசர் திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில் இத்திருக்கோயிலைப் போற்றுகிறார். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடமும் பெற்றது. இத்தலம் பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரால் பூஜிக்கப் பெற்றதால் 'மூவரூர்' எனப் பெயர் பெற்று, பின்னர் 'மூவலூர்' எனத் திரிந்து வழங்கிவருகிறது. சுவாமி கோயிலின் உட்பிரகாரத்தில் பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் வணங்கும் கல்வெட்டுச் சிற்பம் அமைந்துள்ளது. அம்பாள்களின் பெயர்கள் மங்களாம்பிகை, சௌந்தரநாயகி. மகிஷாசுரமர்த்தினி தன்கோர ரூபத்தை இத்தலத்தின் தீர்த்தத்தில் போக்கி, சௌந்தரநாயகியாக காட்சி அளிக்கிறாள்.

திருஞானசம்பந்தர், இத்திருக்கோயிலின் கீழ்ப்புறத்தில் அமைந்துள்ள சித்தர்க்காடு ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்திலிருந்து வழித்துணைநாதரை (மார்க்கசகாயர்) நோக்கி கை கூப்பி வணங்குவது விசேடமாகும்.

**டி. பாஸ்கரசேதுராஜ் பி. காம்.,**
நிர்வாக அதிகாரி

**அறங்காவலர்கள் :**

**ஆர். சேதுராமன் (தலைவர்)** **எம், எஸ். சண்முகம்**
**எஸ். ராதாகிருஷ்ணன்** **சி. சண்முகம்**

## ஸ்ரீ வேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில்

### வேதாரண்யம் (திருமறைக்காடு)

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இத்தலம் அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகிய மூன்று சமயக் குரவர்களால் பாடல்பெற்றது. இங்கு ஆடி தை மாத அமாவாசைகளிலும், அர்த்தோதயம் மகோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும், சமுத்திர ஸ்நானம் செய்வது விசேடபலனை அளிக்கும். வேதங்களால் பூசித்துப் பூட்டப்பட்டதும், அப்பர் சுவாமிகளால் பாடப்பட்டு கதவுதிறக்கப்பட்டதும், அகஸ்தியமாமுனிவருக்கு ஈஸ்வரனும் பார்வதியும் திருமணக்கோலத்தில் காட்சி அளித்ததும் இத்தலத்தில் முக்கிய அம்சங்களாகும்.

இவ்வாலயத்தில் ஸ்ரீ துர்க்காபரமேஸ்வரி சன்னதி தெற்கு நோக்கி உள்ளது. இது சக்தியுள்ள தெய்வம். அன்பர்கள் வந்து ஸ்ரீ வேதாரண்யேசுவர சுவாமியையும் ஸ்ரீ துர்க்காபரமேஸ்வரியையும் தரிசித்து அருள் பெறவேண்டுகிறோம். இத்திருக்கோயில் நிதியிலிருந்து சித்த வைத்திய மருத்துவமனை ஒன்று இலவசமாக நடத்தப்பட்டு வருகிறது.

இயாழ்ப்பாணம் வரணி ஆதீனம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ ச. கதிர்காமபண்டாரசந்நதி**
பரம்பரை தர்மகர்த்தா.

**கே. என். சொர்ணம்**
நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் திருக்கோயில்

திருத்துறைப்பூண்டி வட்டம் கோவிலூர் (ஆதிச்சிதம்பரம்) தஞ்சை மாவட்டம்

இறைவன் : ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் இறைவி : பெரியநாயகி

இத்தலம் ஞானசம்பந்தரால் பதிகம் பாடப்பெற்றது. ஒன்பது பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளது. தலவிருட்சம் : மாமரம்.

இராமன் அணை கட்டுவதற்காக வேதாரண்யம், மணல்மேல்குடி முதலிய தலத்தில் முயற்சித்து கைகூடாததால் இத்தலத்து இறைவனிடம் உபதேசம்பெற்று சேதுவில் அணை கட்டி முடித்ததாக வரலாறு கூறுகிறது. உபதேசம் செய்வதற்காக இடப்பக்கம் சற்று சாய்ந்துள்ள லிங்கத்திருமேனி. காலன் வீசிய பாசக்கயிற்றினால் ஏற்பட்ட கருமேகம்போன்ற வடுக்கள் தீர தீர்த்தத்தில் மார்க்கண்டேயர் நீராடி வழிபாடு செய்ததினால் வடுக்கள் மறைந்ததாக வரலாறு கூறுகிறது. ஆதிசேடன் இத்தலத்தைத் திருப்பணி செய்ததாக வரலாறு. முதலாம் விக்கிரமன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜேந்திரனாகிய சோழ அரசர்களது கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றில் இத்தலம் பறங்கரம்பை நாட்டுக்(கோயிலூர்) என குறிக்கப்பெற்றுள்ளது.

சித்திரை மாதத்தில் 10 நாள் திருவிழா, சித்திரை பௌர்ணமியில் தீர்த்தவாரியுடன் சிறப்பாக நடத்தப்பெறுகிறது. இத்திருக்கோயில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி நடத்தி வருகிறது. ரூ. 1½ லட்சம் செலவில் வெளியூர் மாணவிகள் வந்து போக ஒரு பேருந்து வாங்கியுள்ளது. இக்கோயிலில் ஒரு சித்த வைத்தியசாலையும் உள்ளது.

ப. முத்துச்சாமி
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
திரு. R. K. மாரியப்பதேவர் (தலைவர்) S. ராஜகோபால் பிள்ளை
M. தண்டாயுதபாணி பிள்ளை A. K. சுப்பையா M. L. A., ந. தருமலிங்கம்

# ஸ்ரீ வாகீஸ்வரசுவாமி

## திருக்கோயில்

மாயூரம் வட்டம் **பெருஞ்சேரி** தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் மாயூரம் — திருவாரூர் புகைவண்டிப் பாதையில் மங்கநல்லூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது. மாயூரத்திலிருந்து வடக்கில் 6 கல் தொலைவில் அமைந்திருக்கின்ற சிவத்தலமாகும்.

நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் இங்கு வசித்ததால், இவ்வூருக்கு பெருஞ்சேரி எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. தேவதாருவனம், தாருவனம், பிருஹத்சிரேணி என்ற மறு பெயர்களும் உண்டு.

இறைவர் திருநாமம் : வாகீஸ்வரர்.

இறைவியின் திருநாமம் . சுவாந்தரநாயகி.

பிரமதேவன் மனைவி சரஸ்வதி இந்த இறைவனை பூசித்து, தக்கனது யாகத்தில் அறுபட்ட மூக்கினை மீண்டும் பெற்றாள். வியாழபகவான் இந்த இறைவனை நோக்கி பூஜைசெய்து வேண்டிய வரங்களைப் பெற்றார். மற்றும் தேவி பக்தனாகிய தத்தசோழன், வியாழன் மனைவி தாரை, சந்திரன் ஆகியோரும் வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்றனர்.

மாசிமகத் திருவிழா பிர்மோற்சவமாக 10 தினங்கள் கொண்டாடப்படுகின்றது.

**P. சேதுராமன்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
R. கிருஷ்ணமூர்த்தி (தலைவர்)
S. ராஜாங்கம் P. சுப்பிரமணியம்

## ஸ்ரீ எழுத்தறிநாதர் ஆலயம்
### திருஇன்னம்பூர்

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருவைகாவூர், திருவிசையமங்கை, சுவாமிமலை, திருப்புறம்பியம், திருக்குடமூக்கு, கொட்டையூர், பட்டீச்சுவரம், பழையாறை, வடதளி முதலிய தலங்களுக்கு நடுநாயகமாகத் திகழ்வது திருஇன்னம்பூர். அகத்தியமுனிவர் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு இலக்கணம் வகுத்ததால் எழுத்தறிநாதர் என்று இறைவனுக்குப் பெயர். இவ்வாலயத்தில் திருநாவுக்கரசர் 4 திருப்பதிகங்களும், திருஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகமும் பாடி இறைவனை ஏத்தியுள்ளனர். ஐராவதம், சூரியபகவான் ஆகியோர் வழிபட்டு பேறுபெற்ற தலம் இது. இந்த இறைவிக்கு இரண்டு கோயில்கள். விமானம் கஜபிரஷ்ட விமானம்.

A. விநாயகமூர்த்தி
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

D. விசயராகவன் (தலைவர்)
சி. அண்ணுசாமி    R. வெங்கடேசன்

## ஸ்ரீ கோதண்டராமசுவாமி தேவஸ்தானம்
### பட்டீச்சரம்

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருக்குடந்தையை அடுத்த பட்டீச்சரம் என்ற கிராமத்தில் தாராசுரம் புகைவண்டி நிலையத்திற்கு தென்மேற்கே 2 கல் தொலைவில் உள்ள ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கே அமைந்துள்ள இவ்வபிமான ஸ்தலம் மிகப் பழமையானது.

வாலியைக் கொன்றதனுல் ஏற்பட்ட சாயஹத்தி தோஷம் நீங்கப் பெற தன் வில்லின் முனையால் கோடி தீர்த்தத்தை ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத்தில் தோற்றுவித்து இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ளார். இந்தத் தலத்தை அடைய நகரப் பேருந்து எண் 8-ம் 11-ம் உள்ளன.

K. அய்யாதுரை
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

R. நாகசுந்தரம் (தலைவர்)
V. S. ராஜகோபால் நாயுடு    V. R. வரதராசன்.


# வள்ளுவர் வழியில் இராசராசன்


பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி M. A.,
திருப்பனந்தாள்


சோழப் பேரரசின் காலம் மிகத்தொன்மையுடையது; சிறப்புடையது. எனினும் இவ்வாட்சி கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வலிகுன்றியிருந்தது. அவ்வீழ்ச்சியைத் தடுத்து மீண்டும் உயருமாறு செய்யவித்திட்டவன் விசயாலயன் ஆவான். அவனுக்குப் பிறகு வந்த அரசர்கள் பலரும் அதற்கு நீரூற்றித் தழையுமாறு செய்தனர். எனினும் அப்பேரரசாம் பயிர் முழுமையாக வளம்பெற்று, உரம் பெற்று, களையெடுக்கப்பட்டு தழைத்துப்பெருமரமாக அதுவும் பயன் மரமாகப் பெரிதும் பயன்படச் செய்தவன் நம் இராசராசனே யாவான்.

'மன்புகழ் மரபின் நுங்கள்
மரபினர் புகழ்கள் எல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்
உயர்குணத் துரவுத் தோளாய்'

எனக் கம்பர் கூறுமாறு, சோழ மரபினர் புகழ்கள் எல்லாம் தன்புகழாக்கிக்கொண்டு தழைத்து வளர்ந்தவன் நம் இராசராசனே யாவன். இவ்வாற்றான்,

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று'

என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவனாகின்றான்.

இனித் திருவள்ளுவர் ஒரு பேரரசன் எப்படி இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார் எனப் பார்ப்போம். திருவள்ளுவர் தம் அரசியலில் தொடங்கும் பொழுதே முழுமையான நிறைவுடைய அரசனையே கூறிவிடுகின்றார்.

'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு'

என்பது அவர் திருக்குறள்.

எனவே ஒரு பேரரசன் என்றால் அவனுக்கு முதற்கண் நல்ல படைபலம் இருத்தல்வேண்டும் எனத்தெரிகிறது. நம் இராசராசன்மெய்க்கீர்த்தியோ,

'திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிர முந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்'

எனக்கூறுகிறது. இத்தகைய வெற்றிகளைக் கொள்ள இவனிடத்தும் படைச்செருக்கும் படைப்பெருக்கும் நிறைந்திருந்தமை புலனாகின்றது.

அடுத்துக் குடியாகும். குடி என்பது குடி மக்களைக்குறிக்கும், மக்கள் பசியும்பிணியும், பகையுமின்றி வாழ்ந்தும் அங்ஙனம் வாழ்தற்கேற்ப ஒண் பொருள் (கூழ்) அமைந்தும் மதிநுட்பம் நூலோடுடைய அமச்சர்களை இனமாகக் கொண்டும் இடுக்கண் களையும் நட்பினரைச் சுற்றமாகப்பெற்றும் கொளற்கரியதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார் நிலைக்கெளிதாகிய அரணைப்பெற்றும் இராசராசன் காலத்து சோழப் பேரரசு விளங்கி வந்தது. இவ்வாற்றான் இவ்வாறுமுடைய ஏறாக விளங்கினன் நம் இராசராசன் என்பது புலனாகும்.

ஒரு அரசன் தனது குடிகளிடத்து முறையாக வாங்கும் வரியே இறைப்பொருள் எனப்படும், அங்கனமின்றி அலை மேற்கொண்டு அல்லவை செய்து மக்கள் இடத்து வரிப்பணம் வலியப் பெறின் அது வேலொடு நின்றான் வழிப்பறி செய்யுங்கால் தன் கருவி காட்டி இடு எனக்கேட்கும் கொடுமை போன்றதாகும். இத்தகைய கொடுங்கோன்மை வாராதிருக்கவே இராசராசன், சேனாபதி குரவன் உலகளந்தானை இராசராசமாராயன் என்பவனைக் கொண்டு சோழப் பேரரசின் கீழ் உள்ள நிலமனைத்தையும் அளந்து இது நன்செய், இதுபுன்செய் இதுகாடு என வரையறை செய்து அவற்றிற்கேற்ப வரிவிதித்தனன். இவ்வாற்றான் முறைசெய்து காப்பாற்றும் இறையாகின்றான்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட் கிறையென்று வைக்கப் படும்.

என்பது திருக்குறள்.

இத்தகைய அறிவும் ஆற்றலும் உடைய இராசராசன் ஒவ்வொருவரும் உறுதியாகப் பெறவேண்டிய இறையன்பையும் பெற்றிருந்தனன். இராசராசன் இளமையில் செம்பியன் மாதேவியார், குந்தவைப் பிராட்டியார் ஆகிய இருவர்தம் அரவணைப்பிலும் வளர்ந்தவனாதலின் இறைவன்பால் இயல்பாகவே ஈடுபாடுடையவனாக இருந்தனன். சிவபாதசேகரன் என்னும் சிறப்புப்பெயரும் அருள்மொழித்தேவன் என்னும் இயற்பெயரும் பெற்றதற்கேற்பத் தஞ்சையில் பெருங்கோயில் ஒன்றும் எடுப்பித்தனன். அந்தப் பெருங் கோயிலே இன்று இத்தகைய பெருவிழாக்கள் நிகழ்வதற்குக் காரணமாகவும் இடனாகவும் விளங்குகின்றது. அலகின் கலையின் பொருட்கெல்லை ஆடுங் கழலே, எனத் தெளியவேண்டும் என்பர் சேக்கிழார் கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பர் திருவள்ளுவர். இவற்றிற்கேற்பவே நம் இராசராசன் இக்கோயிலை எடுப்பித்தும் தான் பிறந்த ஐப்பசி சதயத்தில் அதற்கு நிபந்தங்கள் வழங்கியும் சிறப்பொடு பூசனைசெய்து பிறப் பென்னும் பேதைமை நீங்கினன். இவ்வாற்றான்,

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
செம்பொருள் காண்ப தறிவு.' [பென்னும்

என்னும் திருமறைக் கிணங்க வாழ்ந்தவன் ஆகின்றான்.

இங்ஙனம் வள்ளுவர் வழியில் வாழ்ந்து காட்டிய இராசராசனின் வரலாறும் தொண்டும் நம்மனோர்க்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

# இராசராசன் சதயத்திருநாள்

திரு. இரா. அர்ச்சுனன், பி. ஏ.,
உதவி ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, கும்பகோணம்.

### தமிழினத்தின் தனிச் சிறப்பு :

ஆன்மீக வளம் மிக்க நம் பாரத நாட்டின் திலகமாக விளங்கும் நம் தமிழ் நாடு தொன்றுதொட்டு வரும் பண்பாட்டுச் சிறப்புக்கள் மிக்கது. இங்கே பிறப்பதும் வாழ்வதும் எவ்வளவு பெருமை மிக்கது என்பதை இந்நாட்டின் சிறப்பு அம்சங்களை உணர்ந்தவர்களே ஓருவாறு நினைத்து மகிழ முடியும். இங்கே நீர்வளம் நிலவளம் மிகுந்திருப்பது போலவே மனிதனை மேனிலைப்படுத்தும் சமயவளமும் அன்றுதொட்டு செழித்தும் கொழிக்கின்றது. மனிதனின் வாழ்வு சிறக்கப் பொருள் வளம் மட்டும் போதாது. அருள் வளமும் அமைந்திருக்க வேண்டும் என்பதை அனுபவவாயிலாக அறிந்து அதனை மெய்ப்பித்துக் காட்டிய தமிழினம் தனது வழித் தோன்றல்களுக்கு விட்டுச் சென்றுள்ள சேமநிதி எண்ணற்றது. இலக்கியமும் வரலாறும் இன்னமும் நன்கு முழுமையாக அதன் அளவினை மாண்பினை பெருமைச் சிறப்பியல்புகளை விளக்க முயன்று கொண்டிருக்கின்றன. சங்ககாலம் முதலாக இந்நாள் வரையில் தமிழ்நாட்டின் மன எழுச்சி-ஆன்மீக உணர்வு-உள் அனுபவம் - அவ்வக் காலங்களில் வெளிப்படுத்த எழுந்த கலைச் சின்னங்களும் எண்ணற்றன. தமிழினத்தின் தலையாய தனிச் சிறப்பு அதன் கடவுட் கொள்கையேயாகும்.

### நம் கோயில்களின் சிறப்பு :

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்த பரிபூரணப் பொருளாகிய பேரருட்சக்தியாகிய இறைவனை உள்ளங்கை நெல்லிக் கனியாக திருக்கோயில்களில் வடிவமைத்து இறையருளைத்தானும் துய்த்துத் தன்னினமும் உய்த்துணர்ந்தின்புற வகையமைத்தத் தமிழினத்தை, ஆங்கிலக் கலைக் களஞ்சியம் குறிப்பிடும்போது "திருக்கோயில்களைக் கட்டுவதில் உலகத்திலேயே தலைசிறந்தவர்கள் தமிழர்கள்" என்று சிறப்பாகக் காட்டுகின்றது. திருக்கோயில்களை அவர்கள் அவ்வாறு ஏன் அமைத்தார்கள்? எவ்வாறு திருக்கோயில்கள் அன்று விளக்கம் பெற்றன? திருக்கோயில்கள் அன்று எந்த அளவிற்கு மக்கள் மனதில் இடம் பெற்றிருந்தன? திருக்கோயில்கள் அன்று ஆற்றிய பணிகள் என்ன? இடைக்காலத்தில் ஏன் திருக்கோயில்கள் அவ்வாறு பணியாற்ற இயலவில்லை? என்பன போன்ற வினாக்கள் தமிழக வரலாற்றை இனிது பயின்றோருக்கு எழுவது இயல்பேயாகும். சமுதாய அமைப்பு அவ்வக் காலங்களில் மாற்றம் பெறுவதும், அதனால் ஒவ்வொரு காலத்தில் சமுதாயத்தின் அச்சாக விளங்குபவை மாற்றம் பெறுவதும் உண்டு போலும் என்ற ஒரு கருத்தும் தெளிவாகின்றது.

### நம் கோயில்களின் பணிகள் :

அன்று தமிழ் நாட்டின் திருக்கோயில்கள் அறம் வளர்க்கும் அருள் நிலையங்களாகச் செயலாற்றின. இறைவன் உவந்து வீற்றருளும் திருக்கோயில்கள், கல்வி நிலையங்களாகவும், இசை, கூத்து போன்ற கவின் கலைக் கல்லூரிகளாகவும், மன்னர்கள் தங்கள் பிறந்த நாட்களைக் கொண்டாடும் அரங்கங்களாவும், முடி சூட்டிக் கொள்ளும் அவைகளாகவும், சமுதாயத்தில் அனைத்து மக்களுக்கும் பயன் தரும் பொது நிலையங்களாகவும், வறுமையுற்றவர்க்கு உதவும் அறச் சாலைகளாகவும், அனாதை விடுதிகளாகவும், கடன் வழங்கும் வங்கிகளாகவும், கிராமச் சபைகளும், பொது அறக்கட்ட[illegible]

குரிய குழுக்களும் கூடும் அவைகளாகவும், அவற்றின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் அலுவலகங்களாகவும், பொது ஆவணக் களரிகளாகவும் உடல் நோய் நீக்கும் மருத்துவ நிலையங்களாகவும் இவ்வாறு சமுதாயத்தின் ஜீவநாடியாக அன்றைய திருக்கோயில்கள் விளங்கின என்பதைப் பல கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் மெய்க்கீர்த்திகளும் சாசனங்களும் இலக்கியச் செய்திகளும் இனிது புலப்படுத்துகின்றன.

ஒரு சரித்திர ஆசிரியர், அக்காலத்தில் திருக்கோயில் சமுதாயத்தில் பெற்றிருந்த பங்கினைத் தொகுத்துக் கூறும் போது, As landowner, employer, and Consumer of goods and services, as bank, school and museum, as hospital and therefore – in short as a nucleus which gathered round itself all that was best in the art of civilized existence and regulated them with the humaneness born of the spirit of Dharma the medieval Chola Temple has few parallels in the annals of mankind.

என்று அழகாகக் கூறுகின்றார்.

**சோழபரம்பரை :**

நம்பிக்கை மிக்க இடைக்காலத்தில் கோயில்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்கள் வாழ்வினை மலரச் செய்தன. இத்தகைய சிறப்பு மிக்க இடைக்காலத்தில் கி. பி. 850ல் பரகேசரி விஜயாலயமன்னன் (850—871) தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழப் பேரரசு ஒன்றைப் பாங்குற அமைத்தான். விஜயாலயனுக்குப் பிறகு இராஜகேசரி முதலாம் ஆதித்தனும் (871—907) பரகேசரி முதலாம் பராந்தகனும் (907-955) கண்டராதித்தனும் (949-957) அரிஞ்சயனும் (956—957) இரண்டாம் பராந்தகனாகிய மதுராந்தக சுந்தர சோழனும் (956—973) சோழப்பேரரசினைப் பேணிக்காத்தனர். இரண்டாம் பராந்தக சோழனின் மைந்தனாக வந்து தோன்றிய மாமன்னன் முதலாம் இராசராசனாவான் (985—1014).

**இராசராசனின் முன்னோர் கோயில் பணிகள் :**

இராசராசனின் முன்னோர்கள் சைவ சமயகாவலர்கள். அறம்வளர்த்த அண்ணல்களாகச் செங்கோல் செலுத்தியவர்கள். இம்மன்னர்கள் பல திருக்கோயில்களைக் கட்டியவர்கள். தஞ்சையில் நிசும்பசூதனி கோயிலும், நார்த்தமலையில் விசயாலய சோழீச்சுரம் கோயிலும், திருப்பூர் சோழீச்சுர முடையார் கோயிலும், காளியாபட்டி பனங்குடி சிவன் கோயில்களும் விசயாலயன் எடுப்பித்தவைகளாக வரலாறு காட்டுகின்றது. முதலாம் ஆதித்தன் எடுத்த பல கற்றளிகளில் திருப்புறம்பய ஆதித்தேச்சுரம், பண்டாரவாடையிலுள்ள திருச்சேலூர் தேவராயன் பேட்டைக் கோயில் புதுக்கோட்டைக் கண்ணனூர் சுப்பிரமணியர் கோயில், கார்குறிச்சிக் கற்றளி, திருஎறும்பியூர் கோயில் என்பன சிறப்பு மிக்கவை. முதல் பராந்தக சோழன் சிறந்த சிவபக்தனாக விளங்கினான். அவனை "சிவனது பாத தாமரையில் உறையும் வண்டு" என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. சிதம்பரம் கோயிலுக்குப் பொன்னோடு வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கிய பெருமன்னன் முதல் பராந்தக சோழனே ஆவான். இவன் கட்டிய கோயில்களுள் திருவாவடுதுறைக் கோயில், காட்டுமன்னார்குடிக்கு அடுத்துள்ள உடையார் கோயில், முசிறி தாலுக்காவிலுள்ள சீனிவாச நல்லூர் குரங்கநாதர் கோயில், எறும்பூர்க் கடம்பவனேஸ்வரர் கோயில் என்பன முக்கியமானவை. பராந்தகனின் முதல் மகனான இராசாதித்தன் திருநாவலூரில் இராசாதித்தேச்சரம் என்ற கோயிலை சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கட்டுவித்தான். வீரநாரயணன் ஏரியை அமைத்தவன் இவனே. காட்டுமன்னார்குடி அனந்தேசுவரர் கோயிலைக் கட்டியதும் இம்மன்னனேயாவான். ஆனால் பராந்தகனின் இரண்டாவது மகனான கண்டராதித்தன் சிறந்த சிவனடியாராகவும் புலவனாகவும் விளங்கினான். திருவிசைப்பா பாடிய ஆசிரியருள் கண்டராதித்தனும் ஒருவர். சிவஞானக் கண்டராதித்தர் என்று போற்றப்படும் இம்மன்னர் திருநாகேச்சரம், கண்டராதித்த சதுர்வேதிமங்கலம், கண்டராதித்தபுரம் திருக்கோயில்களை அமைத்தான். கண்டராதித்தனது மனைவியான செம்பியன் மாதேவியும் பல திருப்பணிகளைச் செய்தார். இவ்வம்மையின் திருப்பணிகளை விருத்தாசலம், திருவாரூர் அறநெறி, திருமணஞ்சேரி முதலிய இடங்களில் காணலாம். இம்மாதேவியாரது நீண்ட சைவ வாழ்க்கையே பின் தோன்றிய சோழ மன்னர்கள் பெருங்கோயில்களைக் கட்டுவதற்கு ஊக்கம் அளித்தது. இவரது மகன் உத்தமசோழன் ஆட்சியில் எடுப்பித்த கோயில்களுள் கோனேரிராசபுரம், திருமணஞ்சேரி தென்குரங்காடுதுறை, என்பன சிறப்பானவை. செம்பியன்மாதேவியார் தம் பெயரால் நாகபட்டினத்திற்குத் தென் மேற்கே சுமார் 8மைலில் செம்பியன் மாதேவி என்ற திருக்கோயிலமைத்த ஊரும் உள்ளது. இங்கே இம்மாதேவியாரது திருவுருவப் படிமத்தை நிறுவி கங்கைகொண்ட சோழனான முதலாம் இராசேந்திரன் பல நிபந்தங்களை வழங்கினான். செம்பியன் மாதேவியே நமது முதலாம் இராசராசனின் சமயப் பணிகளுக்குத் தூண்டுகோலாக விளங்கியவர்.

**இராசராசன் சிறப்புப் பெயர்கள் :**

தன் பாட்டன் பராந்தகனைப் போலவே முதல் இராசராசன் சைவ நெறியில் தலை நின்றான். இராசராசனுக்கு விளங்கிய சிறப்புப் பெயர்களாவன : சயங்கொண்ட சோழன், கேரளாந்தகன், பாண்டிய குலாசனி, மும்முடிச் சோழன், க்ஷத்திரிய சிகாமணி, நித்தவினோதன், அருள்மொழி வர்மன், சோளேந்திரசிம்மன், ஜனநாதன். நிகரிலாச் சோழன், சோழமார்த்தாண்டன். இராசாச்ரயன், இராசமார்த்தாண்டன், சிங்களாந்தகன், சிவபாதசேகரன், திருமுறை கண்டான் என்பன.

**இராசராசன் கோயில் அமைத்தது :**

இம்மன்னன் தனது முன்னோர்களைப் போலவே திருக்கோயிலமைக்கும் எண்ணம் கொண்டதில் வியப்பில்லை. தனது தலைநகரான தஞ்சையில் ஈடும் எடுப்புமில்லா இணையற்ற ஒரு கற்றளியை எடுக்கப்பெருந்திட்டம் வகுத்தான் ராசராசன். தனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் (கி. பி. 1003ல்) தஞ்சைப் பெரிய கோயிலை அமைக்கும் பணி தொடங்கி இருபத்தைந்தில் (கி. பி. 1009-ல்) இத்திருப்பணியை முடித்தான்.

> "பாண்டிய குலாசனி வளநாட்டுந் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்நாம் எடுப்பிச்ச திருக் கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரம்"

என்று சாசனத்தில் காணப்படுவதால் இப்பெரிய கோயிலுக்கு ராஜராஜீச்வரம் என்று பெயரிடப்பட்டது என்பது புலனாகின்றது. இக்கோயிலைப்பற்றி ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறும் போது "இந்தியாவில் மிகவும் அற்புதமான கோயில் தஞ்சாவூர்ப் பெரிய கோயில்தான்" என்று குறிப்பிடுகின்றது. இக்கோயிலின் விமானம் தட்சிணமேரு என்றும் உத்தம விமானம் என்றும் அழைக்கப்படுகின்றன. விமான உச்சியில் போடப்பட்டுள்ள 80 டன் எடையும் 25½ அடி சதுரமும் கொண்ட கருங்கல், சாரப்பள்ளம் என்ற கிராமத்திலிருந்து சாரம் போடப்பெற்று இச்சிகரத்தில் ஏற்றினார்கள் என்ற வரலாற்றுச் செய்தியும் இக்கோயில் கட்டுமானச் சிறப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

**கருவூர்த்தேவர் :**

"இக்கோயிலில் மூலத்தானமாக விளங்கும் பெருவுடையாராகிய சிவலிங்கத்தினை மருந்து சாத்திப் பந்தனம் செய்விக்க முயன்றபோது இயலாமற் போகவே இராசராசன் மனங்கவன்றான். போகநாதசித்தர் மன்னன் மனக்கவலையை நீக்கவேண்டி, ஒரு ஓலை எழுதி அதனை பொதிகையில் இருந்த கருவூர்த் தேவருக்கு அனுப்பினார். கருவூர்த் தேவரும் இவ்வோலையைக்கண்டு விரைந்து தஞ்சையை அடைந்து ஆவுடையாரைச் செவ்வனே நிறுத்தி பந்தனம் செய்வித்தார்.

இப் பெரியகோயிலுக்கு இராசராசன் ஏற்படுத்திய அறக்கட்டளைகள் பலவாம். இவ் வாலயத்திலுள்ள ஒரே கல்லிலமைந்த பெரிய நந்தி இந்தியாவிலுள்ள இரண்டாவது பெரிய நந்தியாகும். ஆந்திராவில் அநந்தப்பூர் மாவட்டத்திலுள்ள இந்துப்பூர் தாலூகா, லேபாக்ஷி வீரபத்ர சுவாமி கோயிலிலுள்ள நந்தி முதலாவதாகும்.

தஞ்சை பெரிய கோயிலில் இராசராசன் காலத்துக் கல்வெட்டுக்கள் பல உள்ளன.

"நாம் குடுத்தனவும், நம் அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் வெட்டுக" என்று இம் மன்னன் மொழிந்த முறைப்படி வெட்டப்பட்டுள்ளன. அவற்றுள் இராசராசனும் அவன் தமக்கை குந்தவையாரும் கொடுத்தன மட்டும் நடு விமானத்திலும், பெண்டிரும் பிறரும் தந்தவையாவும் மற்ற இடங்களிலும் காணப்படுகின்றன.

**திருமுறை கண்ட சோழன் :**

சிவபெருமான் மீது பாடப் பெற்ற தேவாரத் திருப்பதிகங்களைத் தில்லையில், நம்பியாண்டார் நம்பி என்பாரின் துணை கொண்டு, கண்டெடுத்து முறைப்படுத்தி இன்று நாம் பெற்றுள்ள திருமுறைத் தொகுப்புக்கு வகைசெய்த பெருமை இராசராச மன்னனையே சாரும். அதனால் திருமுறை கண்ட சோழன் என்னும் பட்டமும் இம் மன்னனுக்கு உரியதாயிற்று.

தஞ்சைப் பெருவுடையார் திருமுன் தமிழ் பாட பட்டாலகன்காமரபேரையன், அமுதன்காணி, வானராசிக்கூத்தன், அரையன் குற்றி என்ற நால்வரும் நியமிக்கப்பெற்றனர். இம் மாமன்னன் திருப்பதிகங்கள் பாடுவதற்கென்று ஒரு தனிக் குழுவையே அமைத்தான். மன்னன் இராசராசச்சரமுடையார் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிக்க திருப்பதியம் ஓதுவார்கள் ஐம்பதின்மரை நியமித்து, நாள்தோறும் வழிபாட்டின் அங்கமாக அவற்றை விண்ணப்பிக்க வழிவகுத்தான்.

**தஞ்சைக் கோயிலில் நிருத்தம் :**

ஆடல் உகந்த அழகனான சிவபெருமானுக்கு வழிபாட்டு அங்கமாக நிருத்தம் கருதப்பட்டது. பதினாறு வகை உபசாரங்களில் நிருத்தம் என்பது பதினைந்தாவது அங்கமாகும். ஆகவே இராசராசனும் இராஜராஜீச்வரமுடையார் திருக்கோயிலில் நித்தமும் நிருத்தமாகிய கூத்து நிகழ ஏற்பாடுகள் செய்தான். சுமார் 400 பெண்களை நிருத்தமாடுவதற்கு நியமித்தான். கூத்தாடுவதில் சிறந்த ஆடவர்களை நாட்டியம் புரிய பல நிருத்தாசாரியர்களையும் நியமித்தான்.

**கொட்டாட்டுப் பாட்டு :**

தஞ்சை திருக்கோயிலில் நிருத்தம். கீதம், வாத்தியம் என்ற மூன்றும் இசைக்கப் பெற்றன. கொட்டு ஆட்டு பாட்டு என்று குறிக்கும் இந்த மூன்று துறைகளிலும் சிறந்த நால்வரை இராசராசன் நியமித்தான். வீரசோழனான பஞ்சவன் மாதேவி நாடகமய்யன், மறைக்காடனான திருவெள்ளறைச் சாக்கை, ஒற்றியூரான் கணவதி, ஒற்றியூரான் இளங்காவன் என்போரே அந்த நால்வர்.

**இராசராசேச்சுவர நாடகம் :**

இராசராசன் இப்பெரிய கோவிலை எடுப்பித்து, கலைத் தொண்டுகள் பல செய்ததன் பயனாகக் குடிகள் இம்மன்னன் பால் மிக்க அன்பு பாராட்டி, அவனது காலத்திலேயே கோயிலில் வைகாசிப் பெருவிழாவில் இராசராசேச்சுவர நாடகம் என்னும் நாடகத்தை நடத்தி வந்தனர். இம்மன்னனது பிற்காலத்திலும் இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்திலும் இந்நாடகம் ஆடுவதற்கு ஒரு நாட்டியாசார்யன் நியமிக்கப்பட்ட செய்தியைக் கல்வெட்டுக் கூறுகின்றது. சாந்திக் கூத்தன் விசயராசேந்திர ஆசார்யன் என்ற அந்த நாடகாசார்யனும் அவனது வர்க்கத்தாரும் ஆண்டுதோறும் வைகாசி சதயத் திருவிழாவில் இந்நாடகத்தினை நடித்தனர் என்று அறிகின்றோம்,

**ஐப்பசி சதயநாள் விழா :**

இராசராச சோழனின் பிறந்தநாள் ஐப்பசி சதய நன்னாளாகும். இராசராசனின் பிறந்த நாளைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மிக அழகாகச் சிறப்பித்துள்ளன. சோழ மன்னர்கள் காலத்தில், மாதந்தோறும் இராசராசதேவர் திருச்சதய விழா என இராசராசனின் பிறந்தநாள் விழாப் பன்னிரண்டும், கார்த்திகை மாதக் கார்த்திகை நாள்விழா ஒன்றுமாகப் பதின்மூன்றும் நிகழ்ந்தன. திருவையாற்று உலோகமாதேவீச்சரத்தில் உடையார் "திங்கள் சதய விழா" எனவும், செங்கற்பட்டுத் திருவிடந்தை வராகப்பெருமாள் கோயிலில் ஆண்டுதோறும் ஐப்பசித்திங்கள் சதயநாள் தொட்டு. இராசராசன் திருவிழா என ஏழு நாட்களும் நடந்தன. சேரநாட்டில் திருநந்திக்கரை என்னும் ஊரிலுள்ள சிவன்கோயிலுக்குத் தாம் பிறந்த நாளாகிய திருவிழா நடத்துவதற்காக 'முட்டம்' என்னும் ஊரைத் தானம் அளித்தான் என்று அங்குள்ள கல்வெட்டுக்கூறும்.

ஆனால் பிற்காலத்தில் சோழராட்சி குன்றவும் இப்பெருவிழா நின்றுவிட்டது. மீண்டும் 1934 முதல் ஐப்பசி சதயத்திருநாள் மீண்டும் இப்பெரிய கோயிலில் திருக்கோயிலின் நிர்வாகத்தினரால் கொண்டாடப் பெறலாயிற்று. 1968-ம் ஆண்டில் இராசராசன் ஐப்பசி சதயப் பெருவிழாவினை மிகப் பெரிய அளவில் கொண்டாடத் திட்டமிடப் பெற்று 31-10-1968ல் தஞ்சை பெருவுடையாருக்கு அபிடேக ஆராதனைகளும், அச்சோழ மன்னன் காலத்தில் நிகழ்ந்தது போலவே 48 ஓதுவா மூர்த்திகளின் திருமுறைப் பாராயணமும், சமயக் கருத்தரங்குகளும் சீரிய முறையில் நிகழ்த்தப் பெற்றன. தொடர்ந்து நான்காண்டுகளாகச் சிறப்பாக நிகழ்ந்து வரும் இவ்விழா இவ்வாண்டு ஐந்தாவதாண்டு இராசராசன் ஐப்பசி சதயத்திருநாளாக 1972-ம் நவம்பர் 15, 16, தேதிகளில் சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

தஞ்சை நகருக்கு மட்டுமின்றித் தமிழ் நாட்டிற்கே தனிச்சிறப்பு நல்கும் இப்பெருங் கோயிலை அமைத்து தமிழ் நாகரிகத்தைக் கடல்கடந்த நாடுகளிலும் பரப்பி, சைவமும் தமிழும் தழைக்கப் பணி பல புரிந்து. கலைத் தொண்டுகள் பல செய்து, வரலாற்றில் தன்னேரில்லாதத் தகைமையும் சிறப்பையும் கொண்டு விளங்கும் இராசராச சோழ மன்னனை நினைவு கூர்வதன் மூலம் நமது பண்டைய கலாசாரத்தினையும், கலை வளத்தினையும் நாம் நினைவு கூர்ந்து நமது சீரிய பாரம்பரிய மேம்பாட்டினை எண்ணி, இப் பெருமைகளை எல்லாம் நமது வழித் தோன்றல்களும் அறிந்து இன்புற வகை செய்யும் பொருட்டு இப்பெருவிழா ஆண்டுதோறும் ஐப்பசி சதயநாளில் கொண்டாடப் பெற்று வருகிறது.

வாழி இராசராசன் திருநாமம்:
வாழி அவன் திருத்தொண்டு!